Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Special Commissioner and Commissioner of Stationery and Printing, Chennai-600 002.

D
V211,31'P01
P01.114. 2.
184812

வெளியீடு 10-8-2001 Issued 10-8-2001

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை ஜனவரி 30, 2001 – தொகுதி 114 – எண் 2

**Tuesday the 30th January, 2001 – Volume 114– No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George, Chennai-600 009**

விலை ரூ. *3.00*] [Price Rs. 3.00

353
2002

**30-01-2001**

**உள்ளடக்கம்**

*பக்கங்கள்*


**1. இரங்கல் தீர்மானம்—**

குஜராத் மாநிலத்தில் நில நடுக்கத்தினால் உயிரிழந்தோர் குறித்து .. .. 63-82

**2. அறிவிப்பு—**

தியாகிகள் தினத்தையொட்டி பேரவை அலுவல்கள் சிறிதுநேரம் ஒத்திவைக்கப்பெறுதல்.. .. 82

**3. வினாக்கள்—விடைகள்—**

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. 83-119

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் .. .. 119-267
(பட்டியல்கள் 5, 6, 7 மற்றும் 8)

**4. அறிக்கை அளித்தல்—**

பொது நிறுவனங்கள் குழு .. .. 267

**5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—**

(அ) தமிழ்நாடு நில மேம்பாட்டுச் செயல்திட்ட (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2001.. .. 268

(ஆ) தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை ஒழுங்கு முறைப்படுத்துதல் மற்றும் பணி நிபந்தனைகள்) திருத்தச் சட்டமுன் வடிவு, 2001 .. .. 268-269

| | பக்கங்கள் |
|---|---|
| **6. இடைக்கால வரவு–செலவுத் திட்டம், 2001–2002, பொது விவாதம்—** | 269-401 |
| டாக்டர் அ. செல்லக்குமார் .. .. | 270-289 |
| திரு. குழந்தை தமிழரசன் .. .. | 289-297 |
| * திரு. கே. சுப்பராயன் .. .. | 297-308 |
| திரு. செ. இராமலிங்கம் .. .. | 308-314 |
| திரு. ப. கோவிந்தன் .. .. | 314-319 |
| திரு. எ. தெய்வநாயகம் .. .. | 319-326 |
| திரு. பெ.சு. திருவேங்கடம் .. .. | 326-333 |
| * திரு. சொ. கருப்பசாமி .. .. | 333-343 |
| திரு. சி. ஞானசேகரன் .. .. | 344-345, 382-395 |
| திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் .. .. | 352-367 |
| திரு. மா. இராமச்சந்திரன் .. .. | 368-376 |
| டாக்டர் அ. மணி .. .. | 377-382 |
| **7. தகவல் கோரல்—** | |
| உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்பு.. .. | 270 |
| **8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. ..** | 334-339, 396-401 |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**தை 17, விக்கிரம - திருவள்ளுவர் ஆண்டு 2032**

**2001 ஜனவரி 30, செவ்வாய்க்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு."

அணிந்திருக்கும் உடை உடலைவிட்டு நழுவும்போது எப்படிக் கைகள் உடனடியாகச் செயல்பட்டு அதனைச் சரிசெய்ய உதவுகின்றனவோ அதைப்போல நண்பனுக்கு வரும் துன்பத்தைப் போக்கத் துடித்துச் செல்வதே நட்புக்கு இலக்கணமாகும்.

## 1. இரங்கல் தீர்மானம்

### குஜராத் மாநிலத்தில் நில நடுக்கத்தினால் உயிரிழந்தோர் குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குஜராத் மாநிலத்தில் நில நடுக்கத்தினால் உயிரிழந்தவர்களுக்கு இரங்கல் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் தீர்மானத்தை முன்மொழிவார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இறுதியாகப் பேசுவார்கள். எல்லாக் கட்சித் தலைவர்களும் சுருக்கமாகப் பேசுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"26-1-2001 வெள்ளிக்கிழமையன்று குஜராத் மாநிலத்தில் ஏற்பட்ட கடும் நில நடுக்கத்தினால் பெருமளவில் உயிரிழப்பும், பொருட்சேதமும் ஏற்பட்ட துயரச் செய்தியினால் இப்பேரவை மிகவும் அதிர்ச்சியும்,

வேதனையும் அடைகிறது. இந்திய நாடு முழுவதும் அதிர்ச்சி ஏற்படுத்திய இக்கொடிய நிகழ்வால் இன்னுயிரை இழந்துவிட்ட பல்லாயிரக்கணக்கான மக்களின் குடும்பத்தினருக்கும், இடிபாடுகளில் சிக்கிப் படுகாயமுற்று, துன்பங்கட்கு ஆளாகியுள்ளோருக்கும், பெரும் சேதத்திற்கு ஆளாகியுள்ள குஜராத் மாநில மக்களுக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த அதிர்ச்சியையும், இரங்கலையும், அனுதாபத்தினையும் தெரிவித்துக்கொள்கிறது."

நம்முடைய பாரதத் திருநாடு என்று போற்றப்படுகின்ற இந்தியாவில் ஏறத்தாழ குவட்டா பூகம்பம் ஏற்பட்டபோது எப்படிப்பட்ட அதிர்ச்சி நாட்டு மக்களுக்கெல்லாம் ஏற்பட்டதோ, அதைப்போல இப்போது ஒரு மிகக் கடுமையான, எல்லோரும் துயரப்படுகிற, எல்லோரும் வேதனைக்கு ஆளாகிற ஒரு நிகழ்ச்சியாக குஜராத்தில் பூகம்பத்தினுடைய விளைவு நில நடுக்கத்தினுடைய கொடிய விளைவு ஏற்பட்டுவிட்டது.

இது எதிர்பார்க்கக்கூடியதாகவோ அல்லது திட்டமிட்டு அறிந்து, முன்கூட்டியே பாதுகாப்பு தேடக்கூடியதாகவோ அமையாத ஒரு நிகழ்ச்சியாக இருக்கிறது. இயற்கையின் சீற்றத்தினுடைய எல்லையில்லாத அளவு தாக்குதலில், பல பகுதிகளிலேகூட அதிர்ச்சி ஏற்பட்டாலும்கூட, தமிழ்நாட்டில் சில பகுதிகளிலேயும், கர்நாடகத்திலேயும், வேறு பல பகுதிகளிலேயும் ஏற்பட்டாலும், அதனுடைய முழுத்தாக்கம், முழுவிளைவுகள், பாதிப்புகள், குஜராத்தை இன்றையதினம் தரைக்கடியில் ஆழ்த்திவிட்டது என்ற ஒரு நிலை இருக்கிறது. இதைக்குறித்து வருத்தம் தெரிவிக்காத உலகத் தலைவர்களும் இல்லை; நாடுகளும் இல்லை; உதவ முன்வருபவர்களும் பல பேராக இருந்தாலும்கூட, அந்த மக்களுக்கு உடனடியாகச் செய்யக்கூடிய பணிகளை நிறைவேற்றுவதில் ஏராளமான இடர்ப்பாடுகள் இருக்கின்றன. குறிப்பாக, இடிந்து விழுந்த கட்டடங்களுக்கு அடியிலே சிக்கியுள்ள மக்களை மீட்பது, காப்பது என்பது பெரும் முயற்சியாக, தொடர் முயற்சியாக் நீடிக்க வேண்டிய ஒரு நிலைமை இன்றைக்கு ஏற்பட்டு, துயரத்தை மேலும் மேலும் அதிகமாக்கிக் கொண்டிருக்கிறது.

தமிழக அரசு இதிலே மிகுந்த உணர்ச்சிபூர்வமாக, அந்த மக்களுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணத்தோடு, உடனடியாக 5 கோடி ரூபாயை தமிழக முதல்வர் அவர்கள் உதவி நிதியாக வழங்கியிருந்தாலும், ஒல்லும் வகையாலே எல்லாம் உதவ வேண்டிய ஒரு சூழ்நிலையில் நாம்

184812
சென்னை-600 008





இன்றைக்கு இருக்கிறோம். அந்த முறையில் அவர்களுக்கு நம்முடைய ஆழ்ந்த இரங்கலை, துயரத்தை, துன்பத்தைத் தெரிவித்து, உடன் இருந்து உதவ நேரடியாக முடியாவிட்டாலும், மனப்பூர்வமாக உதவ உறுதி கொண்டு இந்த அவை மூலமாக நாம் எல்லோரும் இந்த ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்க வேண்டும் என்று பேரவைத் தலைவர் அவர்கள் சார்பாக அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 9-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில நாட்களுக்கு முன்னால் குஜராத் மாநிலத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய நில நடுக்கம் என்பது கிட்டத்தட்ட ஒன்றரை இலட்சம் மக்களுடைய உயிர்களை பலி கொண்டிருக்கிறது என்று சொல்லக்கூடிய அளவிற்கு ஒரு மாபெரும் இழப்பை நம்முடைய நாட்டுக்கு ஏற்படுத்தியிருக்கிறது.

நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்கள் இந்தச் செய்தியைக் கேட்டவுடன் வேறு எந்த மாநிலமும் அறிவிக்காதபோது நம்முடைய தமிழகத்தின் சார்பாக ஐந்து கோடி ரூபாயை முதன் முதலிலேயே அறிவித்ததற்காக நிச்சயமாக நம்முடைய தமிழக அரசுக்கும், முதல்வர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நாம் பத்திரிகைகளில் வரக்கூடிய காட்சிகளைப் பார்க்கிறபோதும், தொலைக்காட்சியிலே வரக்கூடிய நிகழ்வுகளைப் பார்க்கிறபோதும் குழந்தைகள் கையிழந்தும் கால் இழந்தும், பெரியவர்கள் எல்லாம் கட்டடத்தினுடைய அடியிலே சிக்கிக்கொண்டும் தவித்து உயிரை இழந்து கொண்டிருக்கக்கூடிய நிலையைப் பார்க்கிறபோதும் இவ்வளவு பெரிய ஆபத்து நம்முடைய இந்தியத் திருநாட்டின் ஒரு பகுதியாக இருக்கக்கூடிய குஜராத்திற்கு ஏற்பட்டு விட்டதே என்கிற நம்முடைய எண்ணம் உண்மையிலே நம்மையெல்லாம் எங்கேயோ கொண்டு சென்று விடுகிறது. குஜராத்தோடு இந்தப் பிரச்சினை முடிந்து விடாமல், நம்முடைய தமிழகம், கர்நாடகம் போன்ற இடங்களிலேகூட அந்த நில அதிர்வுகள் என்பது இப்பொழுது ஏற்பட்டு அத்தகைய நிலைமை இங்கும் வந்துவிடுமோ என்கிற பீதி பல இடங்களில் இருந்து கொண்டிருக்கிறது.

[திரு. சி. ஞானசேகரன்] [2001 ஜனவரி 30

குறிப்பாக, இயற்கைக்கு எதிராக நம்முடைய மனித சமுதாயம் எதிர்நீச்சல் போடப்போட இப்படிப்பட்ட அழிவுகள் வந்து கொண்டிருக்கின்றனவோ என்கிற அச்சம் இருக்கிறது. இதை முன்கூட்டி அறியக்கூடிய வானிலை ஆய்வு மையம் இருக்கிறது; அதேபோல பூமி மையம் என்று வைத்திருக்கிறார்கள். இவ்வளவு இருந்தும்கூட, இந்தக் கணினி காலத்தில் அதைக் கண்டுபிடிக்க முடியாத ஒரு நிலை இருந்துகொண்டிருக்கிறது.

நம்முடைய தமிழ்நாட்டில் தருமபுரி, சேலம், தேன்கனிக்கோட்டை, அஞ்ஜெட்டி போன்ற பகுதிகளில் நில அதிர்வுகள் ஏற்பட்டிருக்கின்றன. எனவே இயற்கைக்கு எதிராக நாம் போராடுவதை விட்டுவிட்டு இயற்கையோடு இணைந்த வாழ்வை நம்முடைய சமுதாயம் அமைத்துக் கொள்ளக்கூடிய அளவிற்கும் நம்முடைய ஆளுகை இருக்கக்கூடிய ஒரு நிலையை உருவாக்கித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். குஜராத்தில் இன்னும் தங்களுடைய உயிரை இழந்து, உடைமைகளை இழந்து வாடக்கூடிய அத்தனை பேருக்கும், காயம்பட்டிருக்கிறவர்களுக்கும எங்களுடைய அனுதாபத்தை நாங்கள் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம். தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக எங்களுடைய மக்கள் தலைவர் ஐயா மூப்பனார் அவர்கள் ஏற்கெனவே ஐந்து இலட்சம் ரூபாயை நிவாரண நிதியாக வழங்கியிருக்கிறார்கள்.

என்னுடைய கருத்தாக நான் சொல்வது, எப்பொழுதெல்லாம் இதுபோன்ற நிகழ்வுகள் நம்முடைய இந்தியத் திருநாட்டை உலுக்குகிறதோ அப்பொழுதெல்லாம் நாம் உதவிக்கரம் நீட்டியிருக்கிறோம்—ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் ஒரு மாத சம்பளத்தை அளிப்பதோடு மட்டுமல்லாமல் யார் யாரெல்லாம் அரசுப் பணியிலே இருக்கிறார்களோ அவர்களெல்லாம்கூட நிதி உதவி செய்திட மாண்புமிகு முதல்வர் அவர்கள் கோரிக்கை வைத்து ஒரு மாத சம்பளத்தை இதற்குக் கொடுத்ததால் குஜராத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய இந்த ஆபத்துக்கு தமிழ்நாடு நேசக்கரத்தை நீட்டக்கூடிய முதல் மாநிலமாகத் திகழ்ந்தது என்ற பெயரைப் பெறலாம். கார்கில் போரிலே அதிக அளவிற்கு நம்முடைய தமிழ்நாடுதான் பங்களித்திருக்கிறது. அதேபோல இதிலும் நாம் பங்களிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குஜராத்தில் மாண்டு போன அத்துணைபேருக்கும் எங்களுடைய ஆழ்ந்த இரங்கலை தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாகத் தெரிவித்து அமைகிறேன்.



2001 ஜனவரி 30]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுகின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் சுருக்கமாகப் பேச வேண்டுமென்று வேண்டுகிறேன். அடுத்து திரு. கே. சுப்பராயன்.

*முற்பகல் 9-40*

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிகழ்ச்சியில் பேச வேண்டிய ஒரு துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது உண்மையிலே வேதனைக்குரிய ஒரு விஷயமாகும். இந்திய நாடு எவ்வளவோ வேதனைகளை தன்னுடைய வரலாற்றில் சந்தித்திருக்கிறது என்றாலும், தற்போது சந்தித்துள்ள இந்த வேதனை என்பது நீண்ட பல வருடங்களுக்கு வரலாற்றில் ஆறாத ரணத்தை விட்டுச் செல்கிற வேதனையாகத்தான் அமைந்து விட்டது. துயரத்திற்கு வார்த்தைகளால் சில நேரத்திலே அவர்களுக்கு ஆறுதல் அளிக்க இயலும். ஆனால், குஜராத்திலும், வேறு பல பகுதிகளிலும் அச்சத்தை ஏற்படுத்தியிருக்கிற இந்த பூகம்ப நிகழ்ச்சி உண்மையிலேயே ஆறுதல் சொல்ல முடியாத ஒரு வேதனையை ஏற்படுத்தியிருக்கிறது. இருபத்தொன்றாம் நூற்றாண்டில் நுழைந்திருக்கிற நாம் பல்வேறு துறைகளில் மிகப்பெரிய முன்னேற்றத்தை அடைந்திருப்பதுபற்றிப் பெருமைப்பட்டுக் கொண்டாலும்கூட, நிலத்திற்குள் ஏற்படுகிற மாற்றங்களை முன்கூட்டியே ஊடுருவிக் கண்டறிவதற்குரிய தொழில்நுட்ப ஞானத்தைப் பெறுவதில் நாம் மட்டுமல்ல, உலக அளவிலும் பின்தங்கிய நிலை ஏற்பட்டிருக்கிறது. பூகம்பம் நிகழ்வதை முன்கூட்டியே அறிந்து சொல்லுகிற ஆற்றலில் மனித குலம் முன்னேறி இருக்குமானால் இந்தப் பெரிய விபத்தைத் தடுத்திருக்க முடியும். ஆனால், இந்தத் தொழில்நுட்ப அறிவியலில் நாம் இன்னமும் வெற்றிபெறவில்லை. அதுகுறித்து உயர் முன்னுரிமை கொடுத்து நாம் பரிசீலிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்த பூகம்பம் ஏன் ஏற்படுகிறது என்பதைப் பற்றிய பல்வேறு விவாதங்கள் நடைபெறுவதில் ஒரு விஷயத்தை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். நிலத்தின் இயல்புத் தன்மையை, அதனுடைய சமச்சீரான இயல்பைச் சீரழிக்கிற நடவடிக்கைகள்தான் இத்தகைய இயற்கைச் சீரழிவுகளுக்கு வழி வகுக்கின்றன என்பது பரவலாகச் சொல்லப்பட்டு வருகின்ற குற்றச்சாட்டு என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது. இயற்கையின் இயல்புத் தன்மை எங்கே

சீரழிக்கப்படுகிறதோ அங்கே இயற்கை சீறுகிறது. இயற்கை சீறுவதற்குரிய ஓர் அடையாளக் குறியீடாகத்தான் இந்த பூகம்ப நிகழ்ச்சி அமைந்திருக்கிறது என்பதைத்தான் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இதிலே ஒரு விஷயத்தை நான் சொல்ல விரும்புகிறேன். இதே திருப்பூரிலே கடந்த நான்கு, ஐந்து வருடங்களாக டாக்டர் ஆனந்தன் என்ற ஒரு Scientist நில அதிர்வுகளை, நிலத்தில் ஏற்படுகிற பூகம்பங்களை முன்கூட்டியே சொல்ல இயலும் என்று அவர் தொடர்ந்து பத்திரிகைகளில் பேட்டி கொடுத்தார். நான்கூட அரசுக்குப் பல முறை மனுக்களைக் கொடுத்தேன். ஆனால், ஏழ்மைப்பட்ட நிலையில் உள்ள அவரால் அதற்குரிய ஆய்வுகளைச் செய்ய இயலவில்லை என்று சொன்னதும் பத்திரிகைகளில் செய்திகளாக வந்திருக்கின்றன. நேற்றைக்கு இந்த நிகழ்ச்சி நடந்ததற்குப் பின்னர் கடிதங்கள்கூட வந்திருக்கின்றன. நான் இந்த நிகழ்வைப் பயன்படுத்தி மாநில அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவது, ஓர் இளம் விஞ்ஞானி இந்த நில, பூகம்பங்களை முன்கூட்டியே ஆய்ந்தறிய இயலும் என்றும் அதற்குரிய வசதிகளை, வாய்ப்புகளைச் செய்துதர வேண்டுமென்றும் சொல்கிறார். எனவே, அந்த வேண்டுகோளை மாநில அரசு ஏற்று அதற்குரிய நடவடிக்கைகளைச் செய்வது பொருத்தமாக இருக்கும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்பட்டுவிட்ட இந்தப் பேரழிவுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் எங்களுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, எங்களுடைய கட்டமைப்பின் மூலம் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இத்தகைய நிவாரண உதவி நிதி வசூலித்து அனுப்புகிற நடவடிக்கைகளிலும் ஈடுபடும் என்பதையும் தெரிவித்து, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அலகாபாத்திலே ஒரு கும்ப மேளா, அங்கே மக்கள் மகிழ்ச்சிக் கடலிலே ஆழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், அகமதாபாத் நகரம் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறது. சென்ற 26 ஆம் தேதி வெள்ளிக்கிழமையன்று—அந்த வெள்ளிக்கிழமையானது இந்திய வரலாற்றிலே ஒரு கருப்புப் புள்ளியாக—அந்த நிகழ்ச்சி நடந்து விட்டது.



பத்திரிகையைப் படித்தாலும் சரி, தொலைக்காட்சியைப் பார்த்தாலும் சரி, வானொலியில் பேச்சைக் கேட்டாலும் சரி, 'குஜராத், குஜராத், குஜராத்,' என்று அந்த பூகம்ப நிகழ்ச்சியானது நம்மையெல்லாம் நெகிழ வைக்கின்றது. காந்தி பிறந்த மண்ணில், மக்கள் கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கிறார்கள். அங்கு இரத்த ஆறு ஓடிக்கொண்டிருக்கிறது. மனித நேயமிக்க உலகத் தலைவர் அனைவருமே அனுதாபப்பட்டு, உலக நாடுகள் அனைத்துமே வேறுபாடு இல்லாமல் இன்றைக்குப் பல கோடி ரூபாய் நிதியை அளித்துக்கொண்டிருக்கிறார்கள். இதிலே சொல்ல வேண்டுமானால், பள்ளிக் குழந்தைகள் 'கிட்டத்தட்ட 400 பேர் ஒரே இடத்திலே இறந்துவிட்ட நிகழ்ச்சி மேலும் நம்மை வேதனை அடையச் செய்துள்ளது. அங்கே பிணங்கள் எல்லாம் கட்டடங்களின் இடிபாடுகளுக்கிடையிலே சிக்கியுள்ளன. மோப்ப நாய்களை எல்லாம் வெளியிலே இருந்து வரவழைத்து பிணங்களைக் கண்டுபிடிக்கக்கூடிய சூழ்நிலையைப் பார்க்கும்போது, உண்மையிலேயே அந்த நிகழ்ச்சியை நாம் நேரிலே பார்த்தால் எப்படி இருக்கும் என்பது உள்ளபடியே வருத்தமடையச் செய்கிறது. அனைத்துக் கட்சிகளும் தங்களுடைய உதவியை அளித்திருக்கின்றார்கள். எங்களுடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக 6 இலட்சம் ரூபாயை நிதியாக அனுப்பியிருக்கின்றார்கள். மேலும் இறந்தவர்களைப் பிழைக்க வைப்பது என்பது கடினமான காரியம். அதேசமயத்தில் உயிருக்குப் போராடிக் கொண்டிருப்பவர்களைப் பிழைக்க வைக்க முடியும் என்ற காரணத்தால் பல்வேறு இடங்களிலே இரத்ததான முகாம்களை ஏற்படுத்தி, இரத்தத்தை எல்லாம் சேகரித்து, இங்கிருந்து குஜராத்திற்கு அனுப்புவதற்கு எங்களுடைய கட்சியின் சார்பாக, எங்களுடைய பொதுச் செயலாளர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதன்படி தமிழகத்தின் பல்வேறு இடங்களில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தோழர்கள் இரத்ததான முகாம்களை ஏற்படுத்தி, இரத்தத்தைக் கொடுத்து, அந்த இரத்தத்தை அங்கே அனுப்புவதற்கு நாங்கள் முன் வந்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்களுடைய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, டாக்டர் புரட்சித் தலைவியின் சார்பாக அங்கே உயிரிழந்த குடும்பங்கள், அங்கே இருப்பவர்கள் அனைவருக்கும் எங்களுடைய ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன்.

*முற்பகல் 9-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே.மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கடந்த சில தினங்களுக்கு முன்பு இந்தியாவில் பரவலாக ஏற்பட்ட நில நடுக்கத்தின் சமயத்திலே நம்முடைய உள்ளமெல்லாம் நிலைகுலையச் செய்யக்கூடிய வகையிலே குஜராத் மாநிலத்தில் ஏற்பட்ட நில நடுக்கம் என்பது பல்லாயிரக்கணக்கான உயிர்களைப் பலி கொண்ட நேரத்திலே பலர் கை, கால்களை இழந்து இன்னும் மீள முடியாத துயரத்திலே குஜராத் மாநிலம் இப்போது இருந்து கொண்டிருக்கிறது. இந்த மிக வேதனையான செய்தியைக் கேட்கின்ற நேரத்திலே இந்தியத் திருநாட்டிலே இருக்கக்கூடிய எல்லோருடைய உள்ளமும் பதை பதைத்துக் கொண்டிருக்கிறது.

இப்படிப்பட்ட நில நடுக்கம் ஏற்படுவதற்குக் காரணம் என்ன என்பதை அறிய முடியவில்லை. எப்போது வரும் என்பதை அறிய இயலாத நிலையில் இது விஞ்ஞானிகளுக்குக்கூட கேள்விக்குறியாக இருக்கக்கூடிய இந்த நேரத்திலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் சொன்னமாதிரி, இளம் விஞ்ஞானிகள் முன் வருவார்கள் என்று சொன்னால் அவர்களை ஊக்குவித்து அதை முன்கூட்டியே கண்டறிவதற்கான வாய்ப்பை நம்முடைய தமிழக அரசு ஏற்படுத்தித் தரவேண்டுமென்ற என்னுடைய பணிவன்பான வேண்டுகோளை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படி எங்கே உயிர்ச்சேதம் ஏற்படுகிறதோ, பொருள் சேதம் ஏற்படுகிறதோ, இயற்கைச் சீற்றத்தினாலே பேரழிவு ஏற்படுகிறதோ, அதேநேரத்திலே—அண்டை நாடுகளால் பேராபத்து விளையக்கூடிய நிலைகளை எல்லாம் கருதி—நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நிலைகுலைந்து போய் மனிதாபிமான அடிப்படையிலே நேசக்கரம் நீட்டி இருக்கிறார் என்ற செய்தியை நான் நினைத்துப் பார்க்கிறேன். அந்தவகையிலே கடந்த காலங்களிலே நம்முடைய இந்தியத் திருநாட்டின்மீது பாகிஸ்தான் படையெடுத்த நேரத்திலே மனிதாபிமானத்தோடு மொழி, இன உணர்வுகளை மறந்து கூடுதலான நிதியை வழங்கியவர் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்பதை இந்த நேரத்திலே பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



அதுமாத்திரமல்ல. முன்பு நடந்த கார்கில் போர் நிகழ்ச்சி நேரத்திலேயும் நம்முடைய இந்தியா சாதனை படைத்த நிலைகளை உணர்ந்து இந்தியத் திருநாட்டிலே இருக்கக்கூடிய எல்லா மாநிலங்களையும்விட அதிகமான நிதியை வழங்கி தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்த்தவர் என்பதால் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களை இந்த நேரத்திலே மிகுந்து பாராட்டவும் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்போது, குஜராத் மாநிலத்திலே ஏற்பட்ட இந்தப் பேரழிவை மனதிலே கொண்டு, தன்னுடைய உடல் நலம் குன்றியிருந்தாலும்கூட, தன்னுடைய மனதிலே இருக்கக்கூடிய ஆழமான வருத்தத்தை வெளிப்படுத்தக்கூடிய வகையிலே—இந்தியத் திருநாட்டிலே நம்முடைய தமிழகத்திற்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் குஜராத் மாநிலத்திலே இருக்கக்கூடிய கட்சிகளுக்கும் இடையில் கூட்டணியோ, நெருக்கமான உறவோ இல்லை என்று சொன்னாலும்கூட—மொழி, இன வேறுபாடுகளை மறந்து இந்தியத் திருநாட்டிலே எல்லா மாநிலங்களும் செய்த உதவியைவிட, 5 கோடி ரூபாயை முதல் தவணையாக வழங்கிய பெருமை நம்முடைய தமிழகத்திற்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் இருக்கிறது என்பதைக் கண்டு நான் மீண்டும் மீண்டும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படி நம்முடைய தமிழகத்தின் சார்பிலே வாரி வழங்குகின்ற கருணை உள்ளம் கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை, தாராளமாக நிதி வழங்கியதற்காக பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நான் மனதாரப் பாராட்டுகிறேன். நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்போது ஜப்பான், அமெரிக்கா, பெல்ஜியம் போன்ற பல்வேறு உலக நாடுகள் எல்லாம் தாராளமாக நிதியுதவி வழங்கியதோடு, அங்கே மீட்புப் பணியிலே ஈடுபடுவதற்கு குழுக்களை எல்லாம் அனுப்பியிருக்கின்றன. அந்த நாடுகளுக்கு, தமிழகத்தின் சார்பிலே, இம் மாமன்றத்தின் சார்பிலே நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 9-50*

நம்முடைய பாரதப் பிரதமர் வாஜ்பாய் அவர்கள் உடனடியாக அப் பகுதிகளுக்குச் சென்று நேற்று பார்வையிட்டிருக்கிறார்கள். அதற்காக அவர்களைப் பாராட்டுகின்ற நேரத்திலே, அங்கே பூர்த்தி செய்யப்படாத காசோலையை வழங்கியிருக்கிறார்கள். இது நம்முடைய

பிரதமருடைய பெருந்தன்மையை, பரந்த நோக்கத்தினை எடுத்துக்காட்டுவதாக இருக்கிறது என்பதை மீண்டும் இம்மாமன்றத்தின் சார்பிலே, தமிழக மக்களின் சார்பிலே பாரதப் பிரதமர் வாஜ்பாய் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியினைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்படி நம்மை எல்லா வகையிலும் உருக்குலையச் செய்த, நிலைகுலையச் செய்த இந்தக் கோரச் சம்பவம் என்பது மீள முடியாத துயரத்திலே நம்மை ஆழ்த்தியிருக்கிறது. இந்த வருத்தமான செய்தியை குஜராத் மாநில மக்களுக்கு, அங்கே தன்னுடைய பிள்ளைகள், குடும்பங்களை இழந்து தவிக்கின்ற அத்துணை பேருக்கும் தமிழக மக்களின் சார்பிலும், பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலும், எங்களுடைய நிறுவனத் தலைவர், சமூகநீதிக் காவலர் டாக்டர் அய்யா அவர்கள் சார்பிலும் ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம். நம்முடைய மத்திய அரசு மீட்புப் பணிகளிலே இப்பொழுது ஈடுபட்டிருப்பதைப்போல இன்னும் தீவிரமாக போர்க்கால அடிப்படையில் ஈடுபடவேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்குப் பேருதவியாக இருக்கக்கூடிய வகையிலே, நான் மாண்புமிகு உறுப்பினர் பெருமக்களைப் பணிவன்போடு வேண்டிக் கேட்டுக்கொள்வது, நம்முடைய ஒரு மாதச் சம்பளத்தை முதலமைச்சர் அவர்களிடத்திலே வழங்குவதோடு, விருப்பப்படக்கூடியவர்கள் அரசு ஊழியர்கள், மற்ற சங்கங்களெல்லாம் மனமுவந்து ஒரு மாதச் சம்பளத்தையோ அல்லது ஒரு குறிப்பிட்ட தொகையையோ வழங்குவதற்கு முன் வரவேண்டுமென்ற என்னுடைய வேண்டுகோளை வைத்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் திருநாடு கடந்த 26 ஆம் நாள் குடியரசு தினத்தை நாடெங்கிலும் கொண்டாடிக் கொண்டிருந்த அந்த நல்ல வேளையில், நமக்கெல்லாம் பேரிடியாக ஒரு நிகழ்ச்சி, எதிரிக்குக்கூட துன்பம் விளைவிக்கக்கூடாது என்று சொன்ன அண்ணல் காந்தியடிகள் பிறந்த குஜராத் மாநிலத்திலே ஆயிரக்கணக்கான மக்கள் உயிர் துறக்கின்ற அளவுக்கு ஒரு மிகப் பெரிய பூமி அதிர்ச்சியை அந்த குஜராத் மாநிலம் சந்தித்து, இன்று இந்திய மக்களை ஆற்றொணாத் துயரத்திலே ஆழ்த்தியிருக்கிறது. இன்றைக்குக்கூட அண்ணல் காந்தியடிகளுக்கு நினைவு அஞ்சலி செலுத்திக் கொண்டிருக்கிற இந்த நாளில் இப்போது





தமிழக சட்டமன்றம், அந்த மாநில மக்கள் ஆயிரக்கணக்கில் உயிர் இழந்ததற்கு நினைவாஞ்சலி செலுத்திக் கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட இக்கட்டான சூழ்நிலை. இன்றைக்கு விஞ்ஞான ரீதியாக எவ்வளவோ வளர்ச்சியைப் பெற்றிருந்தாலும்கூட, அவற்றிற்கெல்லாம் அப்பாற்பட்ட ஒரு நிகழ்ச்சியாக, நம்மால் உணர முடியாத ஒரு நிகழ்ச்சியாக இந்த பூகம்ப நிகழ்ச்சி நடந்து நம்மையெல்லாம் ஆற்றொணாத் துயரத்திலே, ஆழ்த்தியிருக்கிறது. இந்திய நாட்டினுடைய அன்புச் சகோதரர்களாக இருக்கின்ற அந்த மக்கள் உயிரிழந்து, பொருளிழந்து உடைமை இழந்து, உற்றார் உறவினரை இழந்து தவிக்கின்ற அந்தக் காட்சியைக் காணும்போது நாம் ஆற்றொணாத் துயரத்திலே ஆழ்ந்திருக்கிறோம்.

வள்ளுவன் சொன்னதைப்போல,

"அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கண்நீர் பூசல் தரும்."

என்பதைப்போல, தமிழகச் சட்டமன்றத்தின் வாயிலாக தமிழக மக்களுடைய உணர்வுகளைப் பிரதிபலித்து, அந்த மக்களுக்கு தமிழக மக்களுடைய கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதோடு, நம்மால் முடிந்த அளவுக்கு உதவிகளையும் மேற்கொள்ள வேண்டுமென்ற நோக்கத்தை நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம். நான் சார்ந்திருக்கிற அகில இந்திய பார்வார்டு பிளாக் இயக்கத்தின் சார்பிலேயும் எங்களால் முடிந்த அளவிலே நிதி திரட்டி, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்வதற்கு எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்வோம் என்று சொல்லி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குஜராத் மாநிலத்தில் 26-1-2001 வெள்ளிக்கிழமை அன்று ஏற்பட்ட நில நடுக்கத்தின் காரணமாக சுமார் ஒன்றரை இலட்சத்திற்கும் அதிகமானவர்கள் உயிர் இழந்தார்கள் என்ற துயரச் செய்தியை நாம் பார்க்கிறபோது, இந்தியாவினுடைய வரலாற்றில் இப்படி ஒரு நிகழ்ச்சியை நாம் சந்தித்திருக்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அதுபோன்று அதனுடைய பின்னணியில் உயிர்ச் சேதம் மற்றும் பொருட் சேதம் ஏற்பட்டு, பொருளாதாரமே இன்று ஸ்தம்பிக்கக்கூடிய அளவிலே நிலைமை சென்று கொண்டிருக்கிற இந்த நேரத்தில், உயிரிழந்துவிட்டவர்களுடைய உற்றார் உறவினர்களுக்கும் அது

சம்பந்தப்பட்ட மக்களுக்கெல்லாம் நான் சார்ந்திருக்கிற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே ஆழ்ந்த இரங்கலைச் சொல்வதோடு, எங்களுடைய இயக்கத்தின் சார்பிலே எங்களுடைய தொகுதியிலிருந்து இன்றையதினம் தெருக்களிலே சென்று வசூல் எடுத்து, பாரதப் பிரதமருடைய நிதிக்கு அளிக்கின்ற வகையில் அனுப்புவதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம். C.I.T.U ஸ்தாபனத்திலே உறுப்பினர்களாக இருக்கின்ற தொழிலாளர்கள் ஒரு நாள் சம்பளத்தை வழங்க வேண்டுமென்று ஒரு முடிவை எடுத்திருக்கிறார்கள். அந்த வகையிலே நம்முடைய தமிழ்நாட்டில் இருக்கின்ற அனைத்துப் பகுதி மக்களும் அதற்கு நிவாரணம் என்ற முறையில் நிதி வழங்குவது அந்த மாநிலத்திற்கு நாம் செய்கின்ற மிகப் பெரிய பேருதவியாக இருக்கும் என்பதைச் சொல்லி, அந்த மாநில மக்களுக்கும் ஆழ்ந்த இரங்கலைக் கூறி அமைகிறேன்.

*முற்பகல் 9-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 26ஆம் தேதி குஜராத்தில் நடந்த பூகம்பத்தால் கிட்டத்தட்ட 20 ஆயிரம் பேர் உயிர் இழந்திருக்கின்றனர். ஒரு இலட்சம் மக்கள் ஊனமுற்றிருக்கின்றனர். மூன்று இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் வீடுகளை இழந்து தவிக்கின்றார்கள். இந்த கோர சம்பவத்தைக் கேட்டவுடன் தமிழக முதல்வர் அவர்கள், மாநிலம் பலவாய்ப் பிரிந்திருந்தாலும் மக்கள் நாம் ஒன்று என்ற உணர்வை வெளிப்படுத்தக்கூடிய வகையில் உடனடியாக மற்ற மாநிலங்களுக்கு உதாரணமாகத் திகழக்கூடிய வகையில் 5 கோடி ரூபாயை தமிழக அரசின் சார்பில் கொடுத்து உதவியிருக்கிறார்கள். நாடுகளால் நாம் பிரிந்திருந்தாலும் மனித நேயம் என்பது அனைவருக்கும் ஒன்று என்பதை வெளிப்படுத்தக்கூடிய ஒரு நல்ல திசையை நோக்கி உலகம் சென்று கொண்டிருப்பதற்கு அறிகுறியாக; உலக நாடுகள் அனைத்தும்கூட உதவிகள் செய்தது மட்டுமல்லாமல் அங்கேயே வந்து முகாம் அமைத்து சேவை செய்யக்கூடிய பணிகளைப் பற்றியும் நாம் செய்திகள் வாயிலாக அறிந்துகொண்டிருக்கிறோம். எங்களது இயக்கத்தைப் பொறுத்தமட்டில் B.J.P. மற்றும் எங்களுடைய சக அமைப்புகள் சம்பவ இடத்திலேயே பல முகாம்கள் அமைத்து மருத்துவ உதவி, மீட்புப் பணிகள் போன்றவற்றைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உதவக்கூடிய வகையில்





தமிழகத்தின் சார்பாக எங்களது அனைத்து அமைப்புகளைச் சார்ந்தவர்கள் ஊர் ஊராகச் சென்று பணம், துணி மற்றும் அத்தியாவசியப் பொருட்களை வசூலித்து அங்கே முகாம்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கக்கூடியவர்களுக்கு அனுப்பி வைக்கக்கூடிய முயற்சியை மேற்கொண்டுள்ளார்கள் இந்தப் பணிகளின் ஆரம்பமாக, முதல் தவணையாக பல பொருட்கள் அனுப்பப்பட்டுவிட்டன. அதோடு எனக்கு முன்னால் பேசிய பல தலைவர்களும் ஒரு மாதச் சம்பளத்தைக் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். முடிந்தவர்கள் அனைவரும் அப்படிச் செய்வதோடு, தமிழகத்தில் மாத ஊதியம் பெறக்கூடிய அனைவரும், ஏழைகளாக இருந்தாலும் சரி, குறைந்தபட்சம் ஒருநாள் சம்பளத்தையாவது கொடுக்கக்கூடிய முயற்சியை எடுக்க வேண்டும். மேலும் சிறிய தொழிற்கூடங்களாக இருந்தாலும் சரி, அவர்களும் அப்படிப்பட்ட ஒரு முயற்சியை எடுத்து, இந்தப் பேரிழப்புக்கு மனித நேய அடிப்படையில் உதவ முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாரத நாட்டினுடைய பிரதமர் அட்டல் பிகாரி வாஜ்பாய் அவர்களும் உள்துறை அமைச்சர் எல்.கே. அத்வானி அவர்களும் மற்றும் பல அமைச்சர்களும் பூகம்ப சந்தர்ப்பத்தில் அங்கு செல்ல வேண்டாம் என்று பலர் வேண்டுகோள் விடுத்ததற்குப் பிறகும்கூட தாங்க முடியாத சூழ்நிலையில் அங்கு சென்று அந்த மக்களுக்கு ஆறுதல் கூறி, பலவிதமான நிவாரணப் பணிகளை முடுக்கிவிட்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதோடு உலக நாடுகள் அனைத்தும் இந்த நல்ல முயற்சியில் ஈடுபட்டு அங்கே பணியாற்றிக் கொண்டிருக்கின்றன. இந்தப் பணியில் ஈடுபட்டிருக்கக்கூடிய அத்துணை பேருக்கும் தமிழகத்தினுடைய சார்பிலும் நம் அனைவருடைய சார்பாகவும் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்வதோடு, இதில் பலியானவர்களுடைய குடும்பத்திற்கும், பாதிக்கப்பட்டவர்களுடைய குடும்பத்திற்கும் எங்களது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 26ஆம் தேதி அன்று குஜராத் மாநிலத்தில் ஏற்பட்ட பூகம்பத்தால் உயிரிழந்தவர்களுக்கு புதிய தமிழகம் கட்சியின் சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தையும் இரங்கலையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[டாக்டர் க. கிருஷ்ணசாமி] [2001 ஜனவரி 30

பூகம்பங்களை முன்கூட்டியே கண்டுபிடிக்கக்கூடிய சாதனங்கள் எதுவும் இன்றுவரையிலே உலக அளவிலே இல்லை. இருந்தாலும்கூட, பூகம்பத்தை எதிர்கொள்ளக்கூடிய அளவிற்குக் கட்டடங்களைக் கட்ட முடியும், பாதுகாப்பாக இருக்க முடியும் என்று உலக அளவில் ஜப்பான் நாடு நிரூபித்திருக்கிறது. குஜராத் மாநிலத்தில் மட்டும் பூகம்பம் வந்துவிடவில்லை. அதே பூகம்பம் அதே நாள், அதே நேரத்தில் தமிழ் மண்ணிலேகூட, சென்னையிலேகூட தாக்குதலை ஏற்படுத்தியிருக்கிறது. நேற்றும்கூட அந்தச் சம்பவம் நடந்திருக்கிறது. எனவே, இந்தச் சம்பவங்களிலேயிருந்து நாம் எத்தகைய பாடத்தைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்று சொன்னால், பூகம்பத்தைத் தாக்குப்பிடிக்கக்கூடிய கட்டடங்களைக் கட்டுவதிலே நாம் கவனம் செலுத்த வேண்டும் என்பதுதான்.

*முற்பகல் 10-00*

கடந்த 2 நாட்களாக பத்திரிகையிலே வரக்கூடிய செய்திகள் எல்லாம் என்ன சொல்கின்றன என்றால் நல்ல தரம் வாய்ந்த அடுக்குமாடி வீடுகளைக் கட்டாத காரணத்தினால்தான், அந்த வீடுகளிலே குடியிருந்தவர்களுக்கு மிகப் பெரிய பாதிப்பை உருவாக்கி இருக்கிறது என்பதாகும். குறிப்பாக நகர்ப்புறங்களிலே வாழக்கூடியவர்கள் குறைந்த செலவிலே வீடு கட்ட வேண்டுமென்று கருதி—கீழே கார்கள் நிறுத்தக்கூடிய இடங்கள், under-ground, First Floor இது போன்ற இடங்களை எல்லாம் விட்டுவிட்டு நான்கு பில்லர்களை மட்டும் நிறுத்தி, பெரிய பெரிய கட்டடங்களை எல்லாம் கட்டிவிடுகிறார்கள். இவை எல்லாம் சீட்டுக் கட்டுக்களைப் போல உதிர்ந்துவிடுகின்றன என்று சொல்லி இருக்கிறார்கள். எனவே, இந்தப் படிப்பினையைக் கருத்திலே கொண்டு நம்முடைய தமிழ்நாட்டிலேயும் எதிர்காலத்திலே இதுபோன்ற கட்டடங்களை எல்லாம் கட்டாமல், பொதுவாக பூகம்பங்களைத் தாங்கிப் பிடிக்கக்கூடிய அளவுக்கு, அந்தத் தாக்குதல்களை எதிர்கொள்ளக்கூடிய அளவுக்கு, ஜப்பானிலே, எப்படிப்பட்ட வீடுகள் கட்டப்படுகின்றனவோ, அந்தத் தொழில் நுட்பத்தை எதிர்காலத்திலே அனைவரும் பயன்படுத்தக்கூடிய அளவுக்கு நாம் கடைப்பிடிக்க வேண்டும்; அதை அரசு எல்லோருக்கும் அறிவுறுத்த வேண்டும்; அதை நடைமுறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

குஜராத் மக்களுக்கு போட்டி போட்டுக் கொண்டு எல்லோரும் உதவக்கூடிய மனப்பான்மைக்கு இங்குள்ளவர்கள் வந்து இருக்கிறார்கள்.



2001 ஜனவரி 30] [டாக்டர் க. கிருஷ்ணசாமி]

அந்த விதத்திலே புதிய தமிழகம் கட்சி சார்பாக என்னுடைய ஒரு மாத சம்பளத்தை நான் கொடுக்க முன்வருகிறேன். இந்த நேரத்திலே தமிழக அரசுக்கு ஒரு வேண்டுகோள். நாம் 5 கோடி ரூபாய் நிதி அளித்து இருக்கிறோம். அதற்குப் பாராட்டுகிறோம்; அதேநேரத்திலே இப்போது அந்த மாநில மக்களுக்குத் தேவைப்படுவது, உடனடியாக மருத்துவ உதவிதான் என்று சொல்லப்படுகிறது. எனவே, தமிழ்நாடு அரசினுடைய சார்பாக ஒரு பெரிய மருத்துவக்குழுவை உடனடியாக அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியரசு நாளன்று குலை நடுங்கச் செய்கின்ற அளவுக்கு மிகத் துயரமான சோகச் சம்பவம் நடைபெற்று விட்டது. இதிலே பல இலட்சம் குடும்பங்கள் கடுமையான பாதிப்புக்கு ஆளாகி, இன்றையவரையில் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியாகக்கூடிய ஓர் அவலமான சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. அதற்காக தமிழ்ப் பாட்டாளி மக்கள் கழகத்தின் சார்பிலே ஆழ்ந்த இரங்கலையும் வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

இப்போது பூகம்பச் சூழ்நிலைகளை அறிவியல் சாதனங்களினால் கண்டறிய வாய்ப்பு இல்லாவிட்டாலும்கூட, வீட்டு விலங்குகளாக இருந்தாலும்சரி அல்லது காட்டு விலங்குகளாக இருந்தாலும் சரி, அவைதான் இந்த பூகம்ப நிகழ்ச்சிகளை ஓரளவிற்கு முன்கூட்டியே அறியக்கூடிய அளவிற்கு இருக்கின்றன; அத்தகைய நேரங்களில் அவை அலைபாய்ந்து அல்லது ஓர் இடத்தைவிட்டு இன்னோர் இடத்திற்கு இடம் பெயரக்கூடிய அளவிற்கு, ஓடக்கூடிய அளவிற்கு இருக்கின்ற சூழ்நிலைகளை வைத்து அவற்றை எல்லாம் கண்டறிவார்கள். இதைக் கண்டறியக்கூடிய அளவிற்கு அறிவியல் சாதனங்கள் வளர்ந்தால் இத்தகைய பேரிழப்பைத் தவிர்க்கலாம் என்று சொல்கிறார்கள். அந்த வகையிலே இப்போது அங்கு துயரப்படுகிற மக்களுக்கு,

"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு"

என்று வள்ளுவப் பெருந்தகை அவர்கள் சொல்வதுபோல, நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் பெருந்தன்மையோடு

[ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்] [2001 ஜனவரி 30

5 கோடி ரூபாயை மனமுவந்து அளித்ததன் மூலம் இதிலேயும் தமிழகம் பிற மாநிலங்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்திருப்பதற்கு என்னுடைய நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் பாதிக்கப்பட்ட குஜராத் மக்களுக்கு என்னுடைய சார்பிலே ஒரு மாத ஊதியத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடம் அளிக்கிறேன் என்று கூறி, அங்கே உயிர் இழந்து, பொருள் இழந்து பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் எங்களுடைய ஆழ்ந்த இரங்கலையும் வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியரசு நாளன்று குஜராத்தில் நடைபெற்ற நில நடுக்கம், அங்குள்ள பூமிப் பகுதியை மாத்திரம் பிளக்கவில்லை; நம்முடைய நெஞ்சங்களை எல்லாம் பிளந்துவிட்ட கொடுமையான நிகழ்ச்சியாகும். பல்லாயிரக்கணக்கிலே உயிர்ச் சேதம், பொருள் சேதம் அங்கே ஏற்பட்டு, இந்திய பூபாகத்திலே உள்ள அனைத்து மக்களும் தங்களுக்கு உற்ற பாதிப்புபோல வருந்துகின்ற ஒரு சூழ்நிலையும் உருவாகி இருக்கிறது.

*முற்பகல் 10-05*

குஜராத்திலே புஜ் என்ற நகரமும், கட்ச் வளைகுடா பகுதியும் முழுவதும் நாசமடைந்துள்ளன. வர்த்தக நகரமான அகமதாபாத், ஜவுளித்தொழில் நகரமான சூரத், ராஜ்காட் போன்றவைகளும் இந்த நில நடுக்கத்தால் சிதறிக் கிடக்கின்றன என்று செய்திகள் வந்துள்ளன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமேயானால், புஜ் நகரமே கான்கிரீட்களிலான குப்பைமேடாகக் காட்சியளிக்கிறது என்று அங்கிருந்து வருகின்ற செய்திகள் அறிவிக்கின்றன.

ஏறத்தாழ 550 கிராமங்கள் அறவே அழிந்துவிட்டதாகவும், 70 கிராமங்களுக்கு இன்னும் மீட்புக் குழுவினர் செல்ல முடியாத அளவுக்கு அந்தப் பகுதிகளில் சாலைகளும், பாலங்களும் சேதமடைந்து கிடக்கின்றன என்ற செய்திகளும் ஈட்டி என நம்மைத் தாக்குகின்றன. தொடக்கத்திலே 500 பேருக்குமேல் உயிரிழந்தார்கள் என்று சொல்லப்பட்ட தகவல் பின்னர் இரண்டாயிரமாக, பத்தாயிரமாக, இருபதாயிரமாக, முப்பதாயிரமாக நீண்டு கொண்டிருக்கிறது. சில



2001 ஜனவரி 30] [கலைஞர் மு. கருணாநிதி]

ஏடுகளிலே இலட்சத்தைத் தாண்டும் இந்தக் கணக்கு என்று செய்திகள் வருவதையும் நாம் காணுகின்றோம்.

மத்திய அரசினால் தேசியப் பேரழிவு என அறிவிக்கப்பட்டுள்ள குஜராத் நிலநடுக்கத்தில் பாதிக்கப்பட்டவர்களை மீட்பதற்காக நமது நாட்டு இராணுவம் அழைக்கப்பட்டு மீட்புப் பணிகள் தொடர்ந்து தொய்வில்லாமல் வேகமாக நடைபெற்று வருகின்றன. இடிபாடுகளுக்கிடையிலே சிக்கியுள்ள பிணங்கள் தோண்டி எடுக்கப்படுகின்ற காட்சிகளையும் காயமடைந்தவர்கள் மருத்துவமனைகளிலே சேர்க்கப்பட்டு அவர்கள் துடிக்கின்ற காட்சிகளையும் நாம் T.V.-க்களின் மூலமாகக் காணுகிற நேரத்தில் எப்படிப் பதைக்கிறோம் என்பதை ஒவ்வொருவரும் உணர்கிறோம்.

பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட குஜராத் மக்களுக்குத் தேவையான பொருள்களை எடுத்துவர மத்திய அரசினுடைய ஏற்பாட்டின் மூலம் 50 விமானங்களும் ஹெலிகாப்டர்களும் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றன. காண்ட்லா துறைமுகத்திலே நிர்தேஷக், ஜமுனா ஆகிய இரண்டு கடற்படைக் கப்பல்கள் தற்காலிக மருத்துவமனைகளாகவே மாற்றி அமைக்கப்பட்டு சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், நிவாரணப் பணிகளுக்காக உணவுப் பொருள்களையும், ஆடைகள், கம்பளி, ஜமக்காளம் முதலியவைகளையும் மருந்துப் பொருள்களையும் திரட்டிக் கொண்டு குஜராத் நகரத்தை நோக்கி பல பகுதிகளிலேயிருந்து சிறப்பு இரயில்கள் இயக்கப்படுகின்றன.

இங்கிலாந்து, ஜெர்மனி, ஸ்விட்சர்லாந்து போன்ற நாடுகளிலிருந்து மீட்புப் பணிக்காக பல்வேறு குழுக்கள் வந்துள்ளன. இங்கிலாந்து தீயணைப்புப் படை அதிகாரி கெவின் செல்லியும், ஜெர்மனி குழுத் தலைவர் பி.ஸ்லக் அவர்களும் கடைசி மனிதனை மீட்கும் வரையில் தங்களுடைய பணி தொடருமென்று அறிவித்திருக்கின்றார்கள். சாதி மத, இனம் கடந்த மனித நேய உணர்வு பீறிட்டு எழுவதன் காரணமாக இந்த நாடுகளிலிருந்தெல்லாம் நவீன கருவிகளோடு மோப்ப நாய்களும் மீட்புக் குழுவினரும் வருகை தந்து மீட்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

தொடர்ந்து அடுத்தடுத்து அதே மாநிலத்தில் நில அதிர்வுகளும் கடந்த 3 நாட்களில் ஏறத்தாழ 288 முறை ஏற்பட்டிருக்கின்றன

**53-413—2a**

[கலைஞர் மு. கருணாநிதி] [2001 ஜனவரி 30

என்பதைக் காணும்பொழுதும், கேட்கும்பொழுதும் மேலும் மேலும் நாம் துடிக்கின்றோம்.

அஃதன்னியில் நேற்றையதினம், 29-1-2001 காலை 8.00 மணி அளவில் கர்நாடகாவிலும், தமிழ்நாட்டிலே தருமபுரி மாவட்டத்திலும் சில பகுதிகளிலே நில அதிர்ச்சி ஏற்பட்டுள்ளது. கர்நாடகாவில் பெங்களூர், தும்கூர், மாண்டியா, கோலார், மைசூர் மாவட்டங்களில் நில அதிர்ச்சி ஏற்பட்டுள்ளது. தருமபுரி மாவட்டத்திலே ஓசூர், தேன்கனிக்கோட்டை, அஞ்செட்டி, உத்தனப்பள்ளி, உளிமங்கலம், நாகனூர், ராயக்கோட்டை, பெண்ணாகரம் உட்பட பல பகுதிகளிலே இந்த அதிர்ச்சி ஏற்பட்டு 2 வினாடி நீடித்துள்ளது என்றும் இந்த அதிர்ச்சி 4.5 ரிக்டர் அளவு இருந்துள்ளது என்றும் செய்திகள் வந்துள்ளன.

*முற்பகல் 10-10*

நில நடுக்கம் காரணமாக பழைய ஏ.எஸ்.டி.சி. அட்கோ மாடி கார்னரில் விரிசல் ஏற்பட்டு உள்ளது. ஓசூர் சுண்ணாம்பு ஜூபி, ஓசூர் தேர்பேட்டை, ராயக்கோட்டை, அட்கோ பகுதிகளிலும் வீடுகளிலே விரிசல்கள் ஏற்பட்டுள்ளன. இவற்றையெல்லாம் காணும்போது இதை முன்கூட்டியே அறியக்கூடிய விஞ்ஞானம் இன்னும்—நம்முடைய நாட்டிலே மாத்திரம் அல்ல—உலகத்திலேயே ஏற்படாத இந்தச் சூழ்நிலையில், ஏற்படக்கூடும் என்கிற ஓரளவு அடையாளங்களையாவது தெரிந்துகொண்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது எவ்வளவு அத்தியாவசியமானது என்பதை நம்மால் உணராமல் இருக்க முடியவில்லை. அதைப்பற்றி இந்திய அரசு மாத்திரமல்ல, உலகம் முழுவதும் உள்ள எல்லா அரசுகளும் சிந்திக்க வேண்டிய ஒரு நேரம் வந்திருப்பதாகவே நான் கருதுகின்றேன்.

நம்மைப் பொறுத்தவரையில், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், நாம் சிந்துகின்ற கண்ணீரோடு, நம்முடைய காணிக்கையாக நம்மால் இயன்ற நிதியை பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்க முன்வந்து இருக்கின்றோம். அதனுடைய அடையாளமாகத்தான் தமிழ்நாட்டு மக்களின் சார்பாக, தமிழக அரசின் சார்பிலே 5 கோடி ரூபாய் முதலிலே வழங்கப்பட்டது. இன்று மாத்திரமல்ல, நாம் பல ஆண்டு காலமாகவே, இந்தியாவிலே எந்தப் பகுதியிலே யாருக்கு ஒரு பாதிப்பு ஏற்பட்டாலும் உதவக்கூடிய அந்த மனப்பான்மையை தமிழகம் பெற்றிருக்கிறது என்பதை நான் சொல்லி யாருக்கும் புரிய



2001 ஜனவரி 30] [கலைஞர் மு. கருணாநிதி]

வைக்கவேண்டிய அவசியம் இல்லை. கார்கில் போராட்டத்திற்கு 50 கோடி ரூபாயை வழங்கியது தமிழ்நாடு. அதைப்போலவே ஒரிசா மாநிலத்திலே அண்மையிலே நிகழ்ந்த புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக 3 கோடி ரூபாய் மதிப்புள்ள வேட்டி, சேலைகளும், ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள பால் பவுடரும் 44 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள உயிர்காக்கும் மருந்துகளும், இரண்டு இலட்சம் ரூபாய் மதிப்புள்ள அவல், வெல்லம் போன்ற பொருட்களையும் ஒரிசாவுக்கு நாம் அனுப்பினோம். அதேபாணியிலே இப்போது அனுப்புவது ஓரளவுக்கு ஒப்பிடும்போது குறைவாகக்கூட இருக்கும். மேலும் அதிகமாக அனுப்ப வேண்டும் என்கின்ற அந்த உணர்வு நம்மிடையே எழுந்துள்ளது. அந்த உணர்வின் எதிரொலியாகத்தான் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இந்த அவையிலே இப்போது தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்து இருக்கின்றார்கள்.

அதனால்தான் நேற்றையதினம் இடைக்கால நிதிநிலை அறிக்கையிலேகூட நான் குறிப்பிட்டேன். பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான மருத்துவ உதவி, பொருள் உதவி ஆகிய அனைத்து உதவிகளையும் செய்ய இந்த அரசு முன்வந்துள்ளது என்றும் மேலும் தமிழக அரசின் மூலமாக நிவாரண நிதி வழங்க விரும்புவோர் 'குஜராத் நில நடுக்க நிவாரண நிதி' என்ற பெயரில் சென்னை, தலைமைச் செலயகத்திலே உள்ள பொதுத் துறைச் செயலாளர் பெயருக்கு காசோலைகளோ வங்கி வரைவோலைகளோ அனுப்புமாறு கேட்டுக் கொண்டேன். ஏனென்றால், இவற்றையெல்லாம் முதலமைச்சரிடத்திலே தர வேண்டுமென்று சொன்னால், அரசியல் காரணமாக பலருக்கு ஒரு தயக்கம் ஏற்படும் என்பதற்காகத்தான், அரசு பொது என்கின்ற வகையில் பொதுத் துறைச் செயலாளருக்கு, அவருடைய முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டிருக்கின்றேன். எனவே இதில் அரசியல் கட்சி வித்தியாசங்கள் பாராமல் அனைவரும் தங்களுடைய நிதியை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

அமைச்சர்கள் தங்களுடைய ஒருமாத ஊதியத்தை வழங்க வேண்டுமென்று நாங்கள் தீர்மானித்திருக்கிறோம். அதைப்போலவே சட்டமன்ற உறுப்பினர்கள் வழங்குவார்கள் என்று திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் சார்பாகவும், வழங்க வேண்டுமென்று மற்ற உறுப்பினர்களையும் நான் கேட்டுக் கொள்கிறேன். அரசு

அலுவலர்கள் ஒன்றியத்தின் சார்பாக நண்பர் சூரியமூர்த்தி அவர்கள் எனக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர்களுடைய அரசு அலுவலர்கள் அத்தனை பேருடைய ஒருநாள் ஊதியத்தை இந்த நிதிக்கு வழங்குவதாகத் தெரிவித்து இருக்கிறார்கள். அதைப் பிடித்தமே செய்து கொள்ளுங்கள். ஒருநாள் ஊதியத்தை பிடித்தம் செய்துகொண்டு எங்களுக்கு ஊதியம் அளியுங்கள் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதற்காக நன்றி பாராட்டி, மற்றவர்களும் இதற்குத் தங்களுடைய ஆதரவை நல்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, உயிரிழந்த குடும்பங்களுக்கும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் நம்முடைய நெஞ்சார்ந்த ஆறுதலை மிகுந்த உருக்கத்தோடு தமிழ்நாட்டு மக்களின் சார்பாக இந்த அவையிலே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் பேரவையின் மற்ற அனைத்துக் கட்சித் தலைவர்களும் தெரிவித்திருக்கின்ற இரங்கலோடு என்னுடைய இரங்கலையும் பேரவையின் சார்பில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தான் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

*(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)*

## 2. அறிவிப்பு

### தியாகிகள் தினத்தையொட்டி பேரவை அலுவல்கள் சிறிது நேரம் ஒத்திவைக்கப்பெறுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தியாகிகள் தினத்தையொட்டி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று காலை 11.00 மணிக்கு தலைமைச் செயலக பிரதான கட்டடத்திற்கு அருகில் உள்ள இராணுவ அணிவகுப்பு மைதானத்தில் தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழியைச் செய்துவைக்க உள்ளார்கள். அந்நிகழ்ச்சியில் பேரவை உறுப்பினர்கள் அனைவரும் பங்கேற்கும் வகையில் பேரவை காலை 10.45 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டு மீண்டும் 11.15 மணிக்குக் கூடும்.



முற்பகல் 10-15

## 3. வினாக்கள்-விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 101, திரு. டி. மணி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**101—**

### பள்ளிக்குப் புதிய கட்டடம்

***26872—திரு. டி. மணி:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டத்தில் சுமார் 100 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டு பழுதடைந்துள்ள அரசு மேல்நிலைப் பள்ளிக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கன்னியாகுமரி மாவட்டத்தில் மார்த்தாண்டத்தில் சுமார் 100 வருடங்களுக்கு முன் கட்டப்பட்ட அரசு மேல்நிலைப் பள்ளியில் 1996-97 ஆம் நிதி ஆண்டில் பிளாக் 10 முதல் 18 வரையான கட்டடப் பழுதுப் பணிகள் ரூ.1,70,601 செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளன. 1998-99 ஆம் நிதியாண்டில் பிளாக் 1 முதல் 5 வரையான கட்டடப் பழுதுப் பணிகள் ரூ. 2,63,143 செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளன. தற்சமயம் இக்கட்டடங்கள் நல்ல நிலையில் உள்ளன. பிளாக் 6 முதல் 9 வரையில் உள்ள கட்டடங்களது பழுதுப் பணிகளை 2000-2001 ஆம் நிதியாண்டு எம்.ஆர். ஒதுக்கீட்டின்கீழ் ரூ.6.00 இலட்சம் செலவில் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொண்டு முடிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

[2001 ஜனவரி 30

மேலும், பழைய கட்டடங்களுக்குப் பதில் புதிய கட்டடம் கட்ட இந்த நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு இல்லாததால் இப்பள்ளிக்குப் புதிய கட்டடம் கட்ட சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திலிருந்து நிதி ஒதுக்க கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மார்த்தாண்டம் அரசு மேல்நிலைப் பள்ளியில் முன்வரிசையில் இருக்கின்ற கட்டடங்களுடைய பழுதுபார்க்கும் பணிகளில் சில முடிந்துள்ளன. அதனுடைய மேற்கூரை என்பது ஓடால் வேயப்பட்ட மேற்கூரை. மரத்தால் செய்யப்பட்ட கடுக்கோல் எல்லாம் வளைந்து எந்த நேரத்திலும் அது ஒடியக்கூடிய அளவில் இருப்பது தற்போதைய நிலை. மேம்பாட்டு நிதியிலிருந்து 2000 ஆண்டிலே 4 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டு, அதன் மூலமாக 4 அறைகளில் மேற்கூரையை அகற்றி, அதற்குப் பதிலாக காங்கிரீட் தளம் போட்டு செம்மைப்படுத்தப் பட்டுள்ளது. மீண்டும் வளைந்து இருக்கின்ற பகுதியில் மேற்கூரை மட்டும் பழுதுபார்க்கப்பட வேண்டும். சுவர்கள் அதற்குப் போதுமானதாக, பலமுள்ளதாக இருக்கின்றன. எனவே அப்படியொரு 10 அறைகளின் மேற்கூரைகளுக்கு காங்கிரீட் தளம் மட்டும் அமைத்தால், இப்போது இருக்கிற அந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வை நாம் ஏற்படுத்திக் கொள்ள முடியும். அந்த வகையிலே அரசு ஒதுக்கியிருக்கிற சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பக்கத்திலே இருக்கின்ற அரசு மருத்துவமனைக்கு 29 இலட்சம் ரூபாய் ஒதுக்கி, புதிய கட்டடத்தையும் கட்டி முடித்திருக்கின்றார்கள். அதைத் திறக்க வேண்டிய ஒரு சடங்கு மட்டும்தான் பாக்கி இருக்கிறது. அந்த வகையிலே என்னைப் பொறுத்தமட்டிலே பெருவாரியாக பள்ளிக் கட்டடங்களுக்கும், அரசு மருத்துவமனைகளுக்கும்தான் கூடுதலாக, அரசு வழங்குகிற மேம்பாட்டு நிதி செலவிடப்பட்டுள்ளது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். இந்தத் தருணத்திலே நிதிப் பற்றாக்குறை என்பது இருந்தும்கூட, அந்த 4 அறைகளையாவது கட்டுவதற்கு 4 இலட்சம் ரூபாய் அனுமதித்தால், அதனுடைய மேற்கூரையை ஒடிந்து விடாமல் பாதுகாத்துக்கொள்ள முடியும். அதைச் செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் அதனுடைய முழு விவரத்தையும் தெரிந்தவர்கள். தொடர்ந்து இந்த



2001 ஜனவரி 30]

முயற்சி நடைபெறுகிறது. இருந்தாலும், ஒரு சிறப்பு நிதி தேவைப்படுமானால், மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகத்தான் அதற்கு முயற்சி செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது. 'எம் & ஆர்.' நிதி மூலமாக - Maintenance and Repairs - பழுதுபட்ட கட்டடத்தால், பாதகமான நிலை மாணவர்களுக்கு, ஆசிரியர்களுக்கு ஏற்படாத வகையில், பாதுகாக்கிற பணியை அவர்கள் நிறைவேற்றுவதற்கு ஒரு வாய்ப்பு இருக்கிறது. இருந்தாலும், மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக எந்தத் திட்டத்தின் மூலமாக அதை இப்போது நிறைவேற்றக்கூடிய வாய்ப்பு இருக்கிறதோ, அந்தத் திட்டத்தின் மூலம் நிறைவேற்ற முயற்சிக்கலாம் — முயற்சிக்கலாம்; அது assurance அல்ல. நல்லெண்ணத்தின் அடையாளம் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 102, திருமதி ஆர். வேடம்மாள், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**102—**

### தொழில் நுட்பக் கல்லூரி

***30246—திருமதி ஆர். வேடம்மாள்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரூர் தொகுதி, ஊத்தங்கரை நகரில் தொழில் நுட்பக் கல்லூரி ஒன்றை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திருமதி ஆர். வேடம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரூர் தொகுதி, பொருளாதாரத்திலும் கல்வி நிலையிலும் மாவட்டத்திலேயே மிகவும் பின்தங்கிய தொகுதியாகும். இங்குள்ள மாணவ மாணவிகள், கல்லூரிப் படிப்பானாலும் தொழில் நுட்பக் கல்வியானாலும், சேலம், தருமபுரி போன்ற நீண்ட தூர நகரங்களுக்குச் சென்றுதான் படிக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. இத்தொகுதியில்

[2001 ஜனவரி 30

தாழ்த்தப்பட்ட இன மக்களும், மலைவாழ் மக்களும் அதிகமாக வாழ்வதால், தனியார் கல்லூரிகளுக்கு Donation தந்து அவர்கள் படிக்கும் நிலையில் இல்லை. எனவே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, இத்தொழில் நுட்பக் கல்லூரியை வழங்க ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்தொழில் பயிலகம் அல்லது பொறியியல் கல்லூரி போன்ற இப்படிப்பட்ட கல்வி நிறுவனங்கள் ஏற்படுத்துவதற்கு பெரும்பாலும், மாவட்டத்தைத்தான் அடிப்படையாகக் கருதி, அங்கே தேவை நிறைவேறுவதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்று பார்க்கிறோம். தொகுதி அடிப்படையிலே இதைக் கருதுவது எளிதல்ல, எளிதானதும் அல்ல; அப்படிக் கருதப்படுமானால், 234 சட்டமன்ற உறுப்பினர்களில் ஏறத்தாழ 150 பேருடைய தொகுதியிலே இப்படி ஒரு கல்வி நிலையம் இல்லை என்ற கருத்து எழுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அரூரைப் பொறுத்தவரையில் தருமபுரியே போட்டிக்கு வரும். இருந்தாலும்கூட, நான் தெரிவிக்க விரும்புகிறேன், இந்த மாவட்டத்திலே ஏறத்தாழ 8 பாலிடெக்னிக்குகள் உள்ளன. இவற்றிலே முழு இடங்கள் நிரம்பவில்லை. ஏறத்தாழ 60, 65 விழுக்காடு இடங்கள்தான் நிரம்பியிருக்கின்றன. மலைவாழ் மக்களாகவோ, தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த பிள்ளைகளாகவோ இருந்து, அவர்கள் சேர்ந்து படிப்பதற்கு ஏதேனும் இடையூறு இருக்குமானால், அதனைக் களைவதுபற்றி ஆலோசிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 103, திரு. இ.ஜி. சுகவனம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**103—**

### மருத்துவர்கள் நியமனம்

***9709—திரு. இ.ஜி. சுகவனம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2001 ஜனவரி 30]

(அ) பர்கூர் தொகுதி, பெருங்கோபனபள்ளி, கண்ணன்டஹள்ளி மற்றும் பல இடங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருந்தும் மருத்துவர்கள் இல்லாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், மருத்துவர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பர்கூர், கண்ணன்டஹள்ளி ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு அனுமதிக்கப்பட்ட மருத்துவர்கள் பணியிடங்கள் நிரப்பப்பட்டு உள்ளன. பெருங்கோபனபள்ளி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அனுமதிக்கப்பட்ட இரண்டு மருத்துவர்கள் பணியிடங்களில் ஒரு பணியிடம் நிரப்பப்பட்டுள்ளது. மற்றொரு பணியிடம் மற்றும் கிருஷ்ணகிரி சுகாதாரப் பகுதி மாவட்டத்தில் காலியாகவுள்ள மருத்துவர் பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும்.

**திரு. இ.ஜி. சுகவனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினா 1997 ஆம் ஆண்டு தொடுக்கப்பட்ட வினா. அதற்குப் பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும், அங்கே மருத்துவர்களை நியமித்து மிகச்சிறப்பான முறையிலே, அந்த மருத்துவமனை நடைபெற்று வருகிறது என்பதைத் தெரிவித்து, அதற்காக அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 104, திரு. இரா. மூக்கப்பன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**104—**

### சுகாதார நிலையத்திற்குக் கூடுதல் வசதிகள்

***26798—திரு. இரா. மூக்கப்பன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சின்னசேலத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்தவும், படுக்கைகளை அதிகரிக்கவும், கூடுதலாக மருத்துவர்களை நியமிக்கவும் அரசிடம் திட்டம் உள்ளதா?

[2001 ஜனவரி 30

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சின்னசேலத்தில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்திடல், படுக்கை வசதி அதிகரித்தல் மற்றும் கூடுதலாக மருத்துவர்களை நியமித்தல் தொடர்பாக செயற்குறிப்பேதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. இரா. மூக்கப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சின்னசேலத்தையொட்டி, கிட்டத்தட்ட 20, 30 கிலோமீட்டர் தூரத்திலே இருப்பவர்கள் எல்லாம் — ஒருபுறம் மலை சார்ந்த பகுதி, இடையிலே வனப்பகுதி இருப்பதாலே அடிக்கடி பாம்புக் கடிக்கு எல்லாம் ஆளாக்கப்படுகிறார்கள் — மருத்துவச் சிகிச்சை பெறுவதற்கும், பிரசவத்திற்காகவும் சின்னசேலம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு வருகிறார்கள். அங்கே இரண்டே இரண்டு பெட்கள்தான் உள்ளன. ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட 6 படுக்கைகள்கூட இன்னும் அமைக்கப்படவில்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, படுக்கை வசதியை அதிகரித்துக் கொடுக்கவும், மருத்துவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சின்னசேலம் அருகில், 13 கிலோமீட்டர் தொலைவில் கள்ளக்குறிச்சி அரசு மருத்துவமனை உள்ளது. அங்கே 92 படுக்கைகள் கொண்ட உள்நோயாளிகள் பிரிவும் சிறப்புப் பிரிவுகளும் இயங்கி வருகின்றன. குழந்தைகள் நலப் பிரிவு, பால்வினை நோய்ப் பிரிவு, இரத்த வங்கி, பல் சிகிச்சைப் பிரிவு, அறுவை அரங்கம், பரிசோதனைக்கூடம், விபத்து மற்றும் அவசரச் சிகிச்சைப் பிரிவு, எக்ஸ்ரே பிரிவு, அல்ட்ரா சௌண்ட் ஸ்கேனர் போன்ற வசதிகள் எல்லாம் பக்கத்திலேயே இருக்கின்ற காரணத்தினால், சின்ன சேலத்திலே அதனுடைய தரத்தை உயர்த்த வேண்டிய அவசியம் இல்லையென்று அரசு கருதுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 105, திரு. ஆர். தமிழ்ச்செல்வன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.



2001 ஜனவரி 30]

**105—**

### பூங்காவைப் புதுப்பித்தல்

***33690—திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரக்கோணம் நகரில் தர்மராஜா கோயில் அருகிலுள்ள நேரு பூங்காவைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரக்கோணம் நகரில் தர்மராஜா கோயில் அருகே வேதாச்சலம் பூங்காவில் சுதந்திர தின பொன்விழாத் திட்டத்தின்கீழ் சில மராமத்துப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதுடன், பசுமைப் புரட்சித் திட்டத்தின்கீழ் மரக்கன்றுகள் நடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதை மேலும் புதுப்பிக்க அரக்கோணம் நகராட்சியால் திட்டமிடப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரக்கோணம் நகரிலிருந்து, வேதாச்சலம் பூங்கா, அரக்கோணம் நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ளது. அதுமட்டுமின்றி, பழனிப்பேட்டையில் உள்ள காந்தி பூங்கா, இன்னும் ஜுப்லி ரோடில் உள்ள ஒரு பூங்கா இவை எல்லாம் கடந்த 10, 15 ஆண்டுகளுக்கு முன்னால் பொலிவோடு விளங்கியவை. வயதானவர்கள், சிறு பிள்ளைகள் எல்லாம் அங்கேதான் ஓய்வு எடுப்பார்கள். வானொலி மூலம் உலகச் செய்திகளை எல்லாம் கேட்பார்கள். ஆனால் தற்போது நகராட்சி நிர்வாகம் சரியாக அதைக் கவனிப்பதில்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அது சீர்படுத்தப்படும் என்றும் நிதி ஒதுக்கீடு செய்திருப்பதாகவும் அறிவித்திருக்கிறார்கள். அதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதை விரைந்து செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வர்ணம் பூசுதல், சிலைகளுக்கு வர்ணம் பூசுதல் ஆகிய

[2001 ஜனவரி 30

பராமரிப்புப் பணிகள் மட்டும் செய்யப்பட்டிருக்கின்றன. அதற்கேகூட 8,000 ரூபாய் செலவழிக்கப்பட்டுள்ளது. பசுமைப் புரட்சித் திட்டத்தின்கீழ், மரக்கன்றுகள் நடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இவற்றையெல்லாம் ஒழுங்காகச் செய்ய வேண்டும் என்றால், பூங்காவினை மேம்படுத்தவும், பூங்காவின் உட்புறத்தில் ஆழ்துளைக் கிணறு ஒன்று அமைத்து, மோட்டார் பொருத்தி தண்ணீர் வசதி செய்திடவும், பூங்காவின் உட்புறம் சோடியம் ஆவி விளக்குகள் அமைக்கவும், ஊஞ்சல் மற்றும் இதர சாதனங்கள் அமைத்திடவும் 70,000 ரூபாய் தேவைப்படுகிறது. மேற்படி பணிகளைச் செய்திட நகர் மன்றத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அனுமதியும் பெறப்பட்டிருக்கிறது. தற்போது நகராட்சியில் நிதிப் பற்றாக்குறை உள்ளதால், தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள, தீவிர வரி வசூலில் மேம்பாடு அடைந்து, அந்தத் திட்டத்தின் மூலம் பல பணிகளைச் செய்வதற்கான நடவடிக்கைகளை விரைவாய் எடுக்க அரசு தீர்மானித்துள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 106, திரு. ந. பாண்டுரங்கன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**106—**

**சாக்கடைத் திட்டம்**

***40008—திரு. ந. பாண்டுரங்கன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் மற்றும் சேத்துப்பட்டு பேரூராட்சிகளில் விரிவான சாக்கடைத் திட்டம் தீட்டி நவீனப்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திட்டம் ஏதுமில்லை.

(ஆ) வினா எழவில்லை.



2001 ஜனவரி 30]

**திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டிருக்கிற பேரூராட்சிகளிலே, குறிப்பாக சேத்துப்பட்டு பேரூராட்சியில், செஞ்சி சாலை மற்றும் வந்தவாசி சாலையில் இருக்கிற கடைகள் எல்லாம் கழிவு நீர்க் கால்வாயின் மேலேயே கட்டப்பட்டு உள்ளதால் கழிவு நீர்க் கால்வாய்கள் தூர்ந்து போய் முழுவதுமாக மழைக்காலங்களில் மழைநீர் பிரதான நெடுஞ்சாலையிலே தேங்கிவிடக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. இதனால் மழைக்காலங்களில் அசுத்தம் பரவி வியாதிகள் உருவாகக்கூடிய சூழலும், வியாபாரிகள் சங்கடப்படக்கூடிய சூழலும் இருக்கிறது. எனவே இந்த கழிவுநீர்க் கால்வாய்களை முறையாக அகலப்படுத்தி நவீனப்படுத்தித் தந்தால், அந்தப் பேரூராட்சி நல்ல பேரூராட்சியாக இயங்குவதற்கு வாய்ப்பிருக்கிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாதாளச் சாக்கடைத் திட்டம் என்பது ஒரு குறிப்பிட்ட இலக்கிலே எடுத்து அது செய்யப்பட வேண்டும். மாவட்டத் தலைநகரங்கள், சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த நகரங்கள் மற்றும் 1 இலட்சத்திற்கு மேல் அதிகமான மக்கள்தொகை கொண்ட அவசியம் ஏற்படுகிற நகரங்கள், இவற்றிற்குத்தான் முன்னுரிமை கொடுக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றன. திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் மற்றும் சேத்துப்பட்டு பேரூராட்சிகள் மேற்கூறிய குறிப்பிட்ட தரங்களைப் பூர்த்தி செய்யவில்லை. மேலும் இந்தப் பேரூராட்சிகளில் வெளியேறும் கழிவுநீரின் அளவும் மிகக் குறைவாக இருக்கிறது. இவையும் ஏற்கெனவே அமைந்துள்ள வடிகால் வழியாக வெளியேற்றப்படுகின்றது. பாதாளச் சாக்கடை அமைக்கும் அவசியம் தற்போது எழவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல் மழை நீர், சாக்கடை கால்வாய்கள், இவை எங்கேயாவது தடுக்கப்பட்டு அவற்றால் நகரத்திற்கு ஏதாவது இடையூறுகள் ஏற்படுமேயானால், தனியாக அவற்றைப் பரிசீலித்து பாதாளச் சாக்கடைத் திட்டம் என்ற நிலை இல்லாமல் மழை நீர்க் கால்வாய்கள், சாக்கடை ஓடும் வாய்க்கால்கள் இவற்றை சீர்திருத்தம் செய்து, அந்தப் பணிகளை நிறைவேற்றலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 107, திரு. ரா. சேதுநாதன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

[2001 ஜனவரி 30

107—

## குளிர் பதனக் கிடங்கு

***24204—திரு. ரா. சேதுநாதன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தர்பூசணிப் பழங்களைச் சேமித்து வைக்க திண்டிவனத்தில் ஒரு குளிர்பதனக் கிடங்கு அமைக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திண்டிவனத்தில் தர்பூசணிப் பழங்களைச் சேமித்து வைக்க ஒரு குளிர்பதனக் கிடங்கு அமைக்கும் திட்டம் வேளாண் விற்பனைத் துறையின் பரிசீலனையில் இல்லை. மேலும் தர்பூசணிப் பழங்கள் கோடைக்காலத்தில் மட்டுமே பயிரிடக் கூடியது என்பதால் இதனைச் சேமித்து வைக்க ஒரு குளிர்பதனக் கிடங்கு அமைத்தால் அது இலாபகரமாக இருக்காது என்று கருதப்படுகிறது.

**திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனம் பகுதியில் தர்பூசணிப் பழங்கள் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகின்றன. அது வட இந்தியாவிற்கும் பெரும்பாலும் அனுப்பப்படுகின்றது. அதிகமாக உற்பத்தியாகிற காலத்தில் அதற்கு விலைச்சரிவு ஏற்படுகிறது. விலைச்சரிவை சரிசெய்கின்ற வகையிலே அதை குளிர்பதனக் கிடங்கில் ஒருசில வாரங்கள் வைத்து அனுப்பினால், விலை சற்று கூடுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இதனால் பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் பயன் பெறுவதற்கு மிகவும் வாய்ப்பு இருக்கிறது. அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள், கோடைக்காலங்களில் மட்டும் தர்பூசணிப் பழங்கள் உற்பத்தியாகின்றன என்று. ஏற்றுக்கொள்கிறோம். இருப்பினும் அந்தக் கிடங்கை அமைத்தால் மற்ற நேரங்களில் எங்கள் பகுதியில் காய்கறிகள் அதிகமாக உற்பத்தியாவதால், அதையும் சில நாட்கள் வைப்பதற்கு ஏதுவாக இருக்கும். எனவே அதை மறுபரிசீலனை செய்வார்களா என அறிய விரும்புகிறேன். அதேநேரத்தில் ஆயிரக்கணக்கான தர்பூசணி விவசாயிகள், காய்கறிகளைப் பயிர் செய்கின்ற விவசாயிகள் பயன்பெறுகின்ற வகையிலே இருப்பதால் மீண்டும் தன்னுடைய முடிவை மறுபரிசீலனை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.



2001 ஜனவரி 30]

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டத்திலே 128 ஹெக்டேரில் 3,200 மெட்ரிக் டன்தான் அதுவும் கோடைக்காலத்திலே தர்பூசணி விளைகிறது. குளிர்பதனக் கிடங்கு கட்டி அவற்றை அதிலே stock வைக்கக்கூடிய அளவிற்கு உற்பத்தி அதிக அளவிலே இல்லை. ஆகவேதான் 'இல்லை' என்று இங்கு நான் பதில் தந்தேன். ஆகவே அவருடைய கோரிக்கையையும் பரிசீலித்து, சாத்தியக்கூறுகள் உண்டா என்று மீண்டும் துறை ஆய்வு நடத்தும்.

**திரு. இரா. தாமரைக்கனி:** தலைவர் அவர்களே, . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன, தர்பூசணியைப் பற்றியா?

**திரு. இரா. தாமரைக்கனி:** தலைவர் அவர்களே, ஆம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி கேளுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் சென்னை வந்த மத்திய அரசினுடைய இராஜங்க மந்திரி அவர்கள், விருதுநகர் மாவட்டத்தில் உணவுப் பொருட்கள், பழங்களெல்லாம் அதிகமாக விளைகின்றன, ஆகவே அங்கே குளிர்பதனக் கிடங்கு ஒன்று அமைக்கப்படும் என்று சொன்னார்கள். அதனடிப்படையில் விருதுநகர் மாவட்டத்தில் திருவில்லிப்புத்தூரில் மா, கொய்யா, சப்போட்டா மற்ற காய்கறிகள் அதிகமாக விளைகின்ற காரணத்தினால் அங்கு குளிர்பதனக் கிடங்கை அமைப்பதற்கு வேளாண்மைத் துறையிலிருந்து அரசு ஆய்வு நடத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று மத்திய இராஜாங்க அமைச்சர் அவர்கள் தமிழகம் வந்தார்கள். என்னையும் சந்தித்துப் பேசினார்கள். Food Processing-னுடைய அமைச்சராக அவர்கள் இருக்கின்றார்கள். ஆகவே தமிழகத்திலே பழவகைகளை Food Process செய்வதற்கு, உணவுப் பொருட்களை பதப்படுத்துவதற்கு என்னென்ன உதவிகளை மத்திய

அரசாங்கம் செய்ய வேண்டுமென்று சில கோரிக்கைகள் அவரிடத்திலே நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய கருத்தின் அடிப்படையிலே எடுத்து வைக்கப்பட்டன. அவர் அந்தக் கருத்துக்களை எல்லாம் கேட்டபிறகு, நடப்பு நிதியாண்டிலே விருதுநகர் மாவட்டத்தில் ஒரு உணவுப் பூங்கா (Food Park) அமைக்க அனுமதிக்கப்படும் என்று தமிழக அரசுக்கு உறுதியைத் தெரிவித்துச் சென்றார்கள். அதைப்போல 2001-2002 ஆம் ஆண்டில், சேலம், கோயம்புத்தூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம் என 4, 5 மாவட்டங்களுக்கு உணவுப் பூங்காக்கள் (Food Park) அமைப்பதற்கான அனுமதி வழங்கப்படும் என்ற உறுதியையும் அவர்கள் அளித்துச் சென்றிருக்கிறார்கள். அவற்றை எந்த இடத்திலே அமைக்க வேண்டும் என்பதைக் குறித்து மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு Proposal-ஐ அனுப்பி வைக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 108, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**108—**

**பயிர்களுக்கு இன்சூரன்ஸ்**

***30714—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளாண் பயிர்களுக்கு முழு இன்சூரன்ஸ் திட்டத்தை அமலாக்க அரசு கருதியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 1999 ரபி பருவம் முதல் மைய அரசினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தேசிய வேளாண்மை பயிர்க் காப்பீட்டுத் திட்டம் இம்மாநிலத்தில் அமலாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

(ஆ) இத்திட்டத்தின் முக்கிய சாராம்சங்கள் கீழ்க்கண்டவாறு இருக்கின்றன:



(1) தேசிய வேளாண்மைக் காப்பீட்டுத் திட்டம் மூலமாக அனைத்து பயிர்க்கடன் பெற்ற மற்றும் விருப்பமுள்ள கடன் பெறாத விவசாயிகளுக்கும் பயிர் காப்பீடு வழங்கப்படும்;

(2) சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளுக்குக் காப்பீட்டுக் கட்டணத்தில் 50 சதம் மானியமாகத் தொடர்ந்து வழங்கப்படும்;

(3) இத்தொகையினை மத்திய மாநில அரசுகள் சரிசமமாக ஏற்கும், இத்திட்டத்தின்கீழ் உணவு தானியங்கள், சிறு தானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள் தவிர வணிகப் பயிர்களான கரும்பு, பருத்தி, உருளைக் கிழங்கு ஆகிய பயிர்களுக்கும் காப்பீடு வழங்கப்படும்;

(4) கூட்டுறவு வங்கிகள், வணிக வங்கிகள் மற்றும் மண்டல ஊரக வங்கிகள் மூலம் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டில் பயனடைந்த விவசாயிகள் எவ்வளவு பேர்? அதில் இந்தத் திட்டத்தின்கீழ் பண ரீதியான பயன்கள் எந்த அளவுக்கு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிவதோடு எந்தெந்த வகை வேளாண் பயிர்களுக்கு இந்தத் திட்டம் அமலாக்கப்படுகின்றது என்பதையும் நான் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பயிர் பாதுகாப்புத் திட்டம் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். முதலில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்புத் திட்டம் என்று செயல்படுத்தப்பட்டு வந்தது. அதைத்தான் மத்தியிலே ஐக்கிய முன்னணி அரசு வந்தபோது அதை மாற்றி Pilot முன்னோடித் திட்டம் என்று அறிவித்து நமது மாநிலத்திலே திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களிலும் அதைக்கூட எடுத்துக்கொண்டார்கள். இந்தியா முழுவதும் 10, 14 மாவட்டங்களிலே பரீட்சார்த்தமாக அந்தத் திட்டத்தை அவர்கள் அறிமுகப்படுத்தினார்கள். பிறகு அந்தத் திட்டத்திலே பிரிமியம் அரசே செலுத்துவது என்றும்கூட அறிவிக்கப்பட்டது. இடையிலே இப்போது 1999-லே B.J.P. அரசு மத்தியிலே வந்த பிறகு அதிலே ஒரு மாற்றத்தைக் கொண்டு வந்து தேசிய வேளாண் பயிர் காப்பீட்டுத் திட்டம்

National Crop Insurance Scheme என்று அறிவித்து இதில் கடன் பெறாத விவசாயிகளும் இந்தத் திட்டத்திலே பயனடையலாம் என்றும், சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகளுக்கு 50 சதவிகிதம் மானியம், பிரிமியம் தொகையிலே மாநில அரசு 25 சதவிகிதமும், மத்திய அரசு 25 சதவிகிதமும் தருவதென்றும் அறிவித்தார்கள். 1-10-1999 முதல் இந்த அறிவிப்பு வந்தது. அதிலே தமிழ்நாட்டைப் பொறுத்தவரைக்கும் எவ்வளவு பேர் பயன் பெற்றார்கள் .என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். இதுவரை கிடைத்திருக்கிற விவரப்படி 1999-2000 ஆண்டில் காப்பீடு செய்த நெல் பரப்பளவு விவரம் 65,577 ஹெக்டேர். பயன் பெற்ற விவசாயிகள் 1,587 பேர். மொத்தத் தொகை 12.66 இலட்சம்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் உரிமையா?

**திரு. கே. சுப்பராயன்:** உரிமையாக அல்ல. வாய்ப்பைத்தான் கேட்கிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஒரு திட்டம் போடுவதென்பது யாருக்காக திட்டம் போடப்படுகிறதோ அவர்கள் முழுப் பயன் அடைய வேண்டும் என்கிற நல்ல நோக்கத்தோடுதான் திட்டம் போடப்படுகிறது. ஆனால் இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்களால் பதிலளிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட இந்தத் திட்டத்தின் பலனை எவ்வளவு பேர் அனுபவித்திருக்கிறார்கள் என்று கேட்டதற்கு 1,500 பேர் என்று அறிவித்திருக்கிறார்கள். இது தோற்றத்தில் நல்ல திட்டம் போல் தோன்றினாலும் உள்ளடக்கத்தில் பிரச்சார நெடி வீசுகிறது. எனவே நான் இங்கே குறிப்பிட விரும்புவது என்னவென்றால் இந்த மாநிலத்திலுள்ள அனைத்து விவசாயிகளுக்கும் பயனளிக்கின்ற முறையிலேயும், அனைத்து மாவட்டங்களுக்கும், அதேபோல வேளாண் பயிர்கள் அனைத்திற்கும் விஸ்தரிக்கின்ற முறையிலேயும் திட்டத்தை மாற்றியமைக்க மாநில அரசு முன்வருமா என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** தலைவர் அவர்களே, இது மாநிலம் முழுவதும்தான். மத்திய அரசாங்கம் இந்தத் திட்டத்தைப் புதிய முறையிலே, நான் சொன்னதைப்போல 1-10-1999 முதல் முன்பிருந்ததை மாற்றி இப்போது அவர்கள் அறிவித்து, அதை இப்போதுதான் நடைமுறைப்படுத்துகிறார்கள். அதேபோல 1999-லே அந்த விவரத்தைப் பார்த்தீர்களானால் அதிகமாகத்தான்





இருக்கிறது. 1997-98-லே முன்பிருந்த அந்த அடிப்படையிலே பார்த்தால் 2 இலட்சத்து 52 ஆயிரத்து 807 ஹெக்டேரில் பயிர் செய்த 13,423 விவசாயிகள் பயன் பெற்றிருக்கிறார்கள். அதிலே 210.97 இலட்சம் ரூபாய் அளவிற்கு விவசாயிகள் பயன் பெற்றிருக்கிறார்கள். 1998-99-ல் ஐக்கிய முன்னணி ஆட்சியிலே முன்பு செய்ததற்கு 2 இலட்சத்து 59 ஆயிரத்து 938 ஹெக்டேரில் பயிர் செய்த 4,383 விவசாயிகள் பயன் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் பயன்பெற்ற தொகை, இழப்பீடாகப் பெற்ற தொகை 31.79 இலட்சம் ரூபாய். ஆக, 1999-2000-லேதான், இது நடப்பு ஆண்டுதான், அப்படித்தான் கணக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். இதிலே குறைவாக இருக்கிறது. இன்னும் கூடுதலாக வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இன்னொன்று. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள், என்னென்ன பயிர்களுக்கு இப்போது காப்பீடு வழங்கப்படுகிறது என்று. இப்போது இந்தக் காப்பீட்டுத் திட்டத்திலே நெல், சோளம், கம்பு, ராகி ஆகிய பயிர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. அதைப்போல சிறு தானிய வகைகளிலே சில பயிர்களுக்கும் இந்தக் காப்பீட்டுத் திட்டத்திலே பயன் பெறக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. (குறுக்கீடு)

முற்பகல் 10-40

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, .....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி, நீங்கள் என்ன திரு. சிவபுண்ணியத்திற்கு சிபாரிசா? நம்முடைய அவையின் கேள்வி நேரம் இப்போது எந்த நேரத்திலே நடந்துகொண்டிருக்கிறது என்று உங்களுக்கே தெரியும்.

வினா எண் 109, திரு. கொ.வீ. நன்னன், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

**109—**

**கால்வாயைத் தூர் வாருதல்**

***22505—திரு. கொ.வீ. நன்னன்:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, மேல்முடியனூர் பெரிய ஏரிக் கால்வாயைத் தூர் வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**திரு. கொ.வீ. நன்னன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் செய்யாறு ஓடுகிறது. அந்த செய்யாற்றை நம்பி ஏராளமான ஏரிகள் இருக்கின்றன. அந்த ஏரிகளை நம்பி கால்வாய்கள் இருக்கின்றன. அந்த ஆற்றிலிருந்து ஏரிகளுக்குச் செல்கின்ற கால்வாய்களைத் தூர் வாரி, அங்கே அதை நம்பியிருக்கின்ற விவசாயிகளை வாழவைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அவர் ஆற்றை நம்பி, கால்வாயை நம்பி, ஏரியை நம்பியிருக்கிறார். நான் அரசாங்கத்தினுடைய நிதியை நம்பியிருக்கிறேன். அரசினுடைய நிதி கிடைத்தவுடன் அது எடுத்துக்கொள்ளப்படும்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லாக் கேள்விகளுக்கும் நீங்கள் துணைக் கேள்வி கேட்க வேண்டுமா? சரி, கேளுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நாம் குஜராத் சம்பவத்தைப் பற்றி, அந்தச் சோகமான நிகழ்ச்சியைப் பற்றி இங்கே விவாதித்துக் கொண்டிருந்தோம். நம்முடைய மாநிலத்திலே அந்த பூகம்பத்தின் அதிர்வுகள் ஏற்பட்டன என்று சொல்லப்பட்டதே, அதனாலே நம்முடைய மாநிலத்திலே இருக்கிற மேட்டூர் அணை போன்ற அணைகளிலே எதுவும் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட செய்திகள் எதுவும் கிடையாது. அப்படிப்பட்ட பாதிப்புகள் எந்த அணைக்கும் இல்லை. புதியதாக



ஒரு பிரச்சினையைக் கிளப்ப வேண்டாம் என்று மாண்புமிகு உறுப்பினரைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 110, திரு. ஆர்.ஆர். சேகரன், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

**110—**

**சாலை மற்றும் மின்சார வசதி**

***27346—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், கண்ணாப்பாடி, பூமரத்தூர் ஆகிய கிராமங்களுக்குச் சாலை வசதி மற்றும் மின்சார வசதி செய்ய அனுமதி அளிக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேலம் வனக்கோட்டத்தில் உள்ள மல்லாபுரம் வனச் சாலையில் பொம்மிடி இரயில் நிலையம் முதல் பூமரத்தூர் வரையிலுள்ள சாலையில் 13.90 கி.மீ. நீளத்திற்கு பராமரிப்புப் பணி மேற்கொள்ள காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்துக்கு வனத் துறை அனுமதி அளித்துள்ளது. 1980 ஆம் ஆண்டைய வனப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் மின்சார வசதி செய்யத் தேவையான நிலம் கேட்டு எவ்விதமான கருத்துருவும் அரசுக்கு வரப்பெறவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 111, திரு. குத்தாலம் பி. கல்யாணம், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**111—**

**புகைவண்டி**

***35223—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2001 ஜனவரி 30

நாகூர் - காரைக்கால் புகைவண்டி மார்க்கம் தொடங்க இருப்பது மாநில அரசுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருச்சிராப்பள்ளி - தஞ்சாவூர் - காரைக்கால் அகல இரயில் பாதைத் திட்டம் இரயில்வே வரவு-செலவுத் திட்டம் 1995-96-ல் சேர்க்கப்பட்டது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக நாகூர் முதல் காரைக்கால் வரை புதிய இரயில் பாதை அமைக்கப்படவுள்ளது. இரயில்வே வாரியம் இத்திட்டத்திற்குத் தேவையான நிதி ஒதுக்கியவுடன் பணி ஆரம்பிக்கப்படும் என தென்னக இரயில்வே தெரிவித்துள்ளது.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தோடு இணைத்து, காரைக்கால், தரங்கம்பாடி, மயிலாடுதுறை இரயில்வே சந்திப்பு வரை இரயில்வே பாதை அமைக்க ஒரு கோரிக்கை என்னால் மாண்புமிகு மத்திய அமைச்சர் மம்தா பேனர்ஜி அவர்களுக்கு அனுப்பப்பட்டு, அந்தக் கோரிக்கை கவனிக்கப்படும் என்று அவர்கள் பதில் எழுதியிருக்கிறார்கள். அதன் அடிப்படையில் இந்த 35 கிலோமீட்டர் தூரப் பாதையை அமைத்தால், நாகைக்குச் செல்ல வசதியாக இருக்கும். ஆகவே இந்தத் திட்டத்தை நிறைவேற்ற மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்த ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தீர்மானம் செய்யப்பட்ட, புதிய இரயில் பாதை தொடங்கப்படும் என்று சொல்லப்பட்ட திட்டத்திற்கே இன்னும் நிதி ஒதுக்கப்படவில்லை. இதற்காக இந்த அரசு மத்திய அரசை நிதி ஒதுக்குவதற்கு வற்புறுத்தி வருகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிய இரயில் பாதைத் திட்டத்தைக் கோரியிருக்கிறார். அதற்கான கருத்துருவை மாநில அரசுக்கும் கொடுத்தால், நிச்சயமாகப் பரிந்துரை செய்து மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்படும்.

முற்பகல் 10-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 112, திரு. ஏ.வி.ஏ. நாசர், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.



2001 ஜனவரி 30]

112—

## சாலையைச் செப்பனிடல்

***35654—திரு. ஏ.வி.ஏ. நாசர்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதி, சாத்தப்பாடி - வயலாமூர் - பூவாலை சாலை பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாத்தப்பாடி—வயலாமூர்-பூவாலை சாலையானது இத்துறையின் பராமரிப்பில் உள்ள இதர மாவட்டச் சாலையாகும். இது 4.8 கிலோமீட்டர் தூரம் உள்ளது. இதில் 3.8 கிலோமீட்டர் தூரத்தைப் பராமரிப்பு செய்வதற்கு 38 இலட்சம் ரூபாய் இதர மாவட்டச் சாலைகள் பராமரிப்பு நிதியிலிருந்து வழங்கப்பட்டு பணிகள் நடைபெறுகின்றன.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி கேட்டு நீண்ட நாட்கள் ஆகின்றது. இருப்பினும், அந்தப் பணி நடைபெற்றுக் கொண்டிருப்பதற்கு அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்திலே சேத்தியாத்தோப்பிலிருந்து புவனகிரி வரை இருக்கக்கூடிய கூட்டு ரோடு—அந்தக் கூட்டு ரோட்டிலிருந்து வரக்கூடிய அந்தச் சாலை—போக்குவரத்து அதிகமாக நடைபெறக்கூடிய சாலை, அது மிகவும் பழுதுபட்டு, பஸ் போக்குவரத்தே செல்ல முடியாத அளவிற்கு மிக மோசமான நிலையிலே இருக்கின்றது. அதற்கு ஒரு கோடியே (குறுக்கீடு) சிரிக்காதீர்கள். ஒரு நிமிஷம். நீங்கள் ஏன் அவசரப்படுகிறீர்கள்? என் தொகுதியைப்பற்றிக் கேட்டுக்கொண்டிருக்கும்போது நீங்கள் அவசரப்படாதீர்கள். ஆகவே 1 கோடியே 67 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு சாலைகள் அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இது பாதி தூரம் வரைதான் சென்று முடிந்திருக்கிறது. இன்னும் சாலை போட வேண்டியிருக்கின்றது. எனவே அர… துரிதப்படுத்தி

18482.

[2001 ஜனவரி 30

புவனகிரியிலிருந்து சேத்தியாத்தோப்பு கூட்டு ரோடு வரை விரைவில் அந்தச் சாலையை முடித்துத் தருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணி நடைபெறுவதாக மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்திருக்கிறார்கள். அந்தப் பணியில் மிச்சம் எதாவது சாலை விடப்பட்டிருக்குமானால் அதுவும் கவனிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் ஏற்கெனவே கூறியபடி அவை அரை மணி நேரத்திற்கு ஒத்திவைக்கப்படுகின்றது.

*பின்னர் பேரவை முற்பகல் 10-46 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

*பேரவை மீண்டும் முற்பகல் 11-15 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** *அவர்கள் தலைமையில் கூடியது.*

## 3. வினாக்கள்-விடைகள்—தொடர்ச்சி

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்-தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 113, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**113—**

### அச்சகத்தை நவீனமயமாக்குதல்

***39136—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூரில் இயங்கி வரும் கூட்டுறவு அச்சகம் நவீனமயமாக்கப்படுமா?



2001 ஜனவரி 30]

**மாண்புமிகு திரு. கா.நா.நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேலூர் கூட்டுறவு அச்சகத்தில் தற்போதுள்ள நவீன இயந்திரங்களே போதுமானதாக உள்ளதால், இதனை மேலும் நவீனமயமாக்கும் அவசியம் எழவில்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் கூட்டுறவு அச்சகம் இன்று பெருத்த நட்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கிறது. அங்கு இருக்கக்கூடிய இயந்திரங்கள் எல்லாம் மிகவும் out-dated இயந்திரங்களாக இருந்து கொண்டிருக்கின்றன. இதனால், அதிலே இருக்கக்கூடியவர்கள் அச்சகத்திற்கு வரக்கூடிய Order-களையெல்லாம் தனியார்களுக்கு, வெளியிலே உள்ளவர்களுக்கு கொடுத்து, அச்சகத்திற்கு வரவேண்டிய வருவாயைத் தடுத்துவிடுகின்றார்கள். எனவே, அமைச்சரவர்கள் அந்த இயந்திரங்களை இன்னும் கொஞ்சம் நவீனமயமாக்குவதற்கு அரசின் சார்பிலே 5 கோடி ரூபாயை எங்களுடைய வேலூர் கூட்டுறவு அச்சகத்திற்குக் கொடுத்து, அதைப் புனரமைப்புச் செய்து, இன்னும் அதிகமாக வருவாயைப் பெறுவதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முழு மாவட்டமாக வேலூர் மாவட்டம் இருந்தபோது இயங்கிக் கொண்டிருந்த அச்சகம் இது. திருவண்ணாமலை மாவட்டம் புதிதாகப் பிரிக்கப்பட்டு, அங்கு ஒரு புதிய அச்சகம் இப்போது தொடங்கப்பட்டிருக்கிறது. வேலைப் பளு இப்போது இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. கடந்த 3 ஆண்டு காலத்திற்கு முன்பு மத்திய வங்கியின் மூலமாக 3½ இலட்சம் ரூபாய் அந்த அச்சகத்திற்குத் தரப்பட்டிருக்கிறது. இவ்வாறு அதிகமான அளவுக்கு நிதியை மீண்டும் மீண்டும் தருகின்றபோது, அவர்களால் அதைத் திருப்பிச் செலுத்த முடியுமா என்ற வினா எழுகிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள், அங்கு அச்சடிக்க வருகின்ற Order-களை எல்லாம் வெளியிலே, தனியாருக்குக் கொடுத்து விடுகிறார்கள் என்று சொன்னார்கள். குறிப்பாக, அப்படியிருக்கிறது என்று சொன்னால், அதன்மீது நடவடிக்கை எடுத்து, வருகின்ற Order-களை எல்லாம் இந்த அச்சகத்திற்கே கிடைக்கின்ற வகையிலே அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2001 ஜனவரி 30

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 10 ஆண்டுகளாக அந்தக் கூட்டுறவு அச்சகம் நட்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கக்கூடிய நிலை மாண்புமிகு அமைச்சரவர்களுடைய கவனத்திற்கு வந்திருக்கும் என்று நான் கருதுகிறேன். ஆகவே இவ்வளவு நட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கிற அந்த அச்சகத்திற்கு அரசு 5 கோடி ரூபாய் மானியம் கொடுத்தால்தான் அந்த அச்சகமே எழுந்து நிற்க முடியும். ஆகவே, அமைச்சரவர்கள் மத்திய வங்கியின் மூலமாகக் கொடுத்த அந்த சில இலட்சங்களைச் சொல்லி, எங்களை இப்படி ஏமாற்றத்திற்கு ஆளாக்கி விடக்கூடாது. எனவே, உங்களுடைய துறையின் சார்பாக, 5 கோடி ரூபாய் மானியத்தை அளித்து, இதை புனரமைப்புச் செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாக மீண்டும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு நிறுவனங்களின் புனரமைப்புக்கு அரசு சார்பாக நிதி ஒதுக்குவது என்பது இப்போது இயலாத காரியமாக இருக்கிறது. ஏற்கெனவே மொத்த விற்பனைப் பண்டகசாலைகளை புனரமைப்புச் செய்ய வேண்டுமென்று NABARD வங்கியின் அனுமதிக்காகச் சென்றபோது, அரசு சார்பாக 6 கோடி ரூபாய் அளிக்க வேண்டும் என்று சொன்னபோது, அரசிலிருந்து ஏற்கெனவே பல கோடி ரூபாய் இதுபோல கூட்டுறவு நிறுவனங்களுக்கு வழங்கியிருக்கிறீர்கள், ஆனால், ஒரு கூட்டுறவு நிறுவனத்திலிருந்தும் மீண்டும் அரசுக்குப் பணம் திரும்ப வரவில்லை என்று அவர்கள் எடுத்துச் சொன்னதற்கு இணங்க, அது தாமதப்படுத்தப்பட்டு வருகிறது. இந்த அச்சகத்தை மேலும் நவீனமயமாக்குவதற்குச் செலவு எவ்வளவு ஆகும் என்பதை அறிந்து அதனுடைய அவசியத்தை உணர்ந்து, நிச்சயமாக அதை மறுபரிசீலனை செய்து, ஏதாவது செய்ய முடியுமா என்று ஆராய்ந்து செய்யப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அச்சகங்கள் நட்டத்திலே இயங்குவதற்கான காரணங்கள் என்ன என்பது குறித்து நாம் ஆய்வு நடத்துகிறபோது, குறிப்பாக, தனியார் அச்சகங்களில் எந்த அளவுக்கு அச்சுக்கூலி வாங்குகிறார்களோ அதைவிட அதிகப்படியாக இங்கு கூலி வாங்குகின்ற காரணத்தால்,



2001 ஜனவரி 30]

வெளியார்கள், தனி நபர்கள் அங்கு வருவதற்கு அஞ்சுகிறார்கள் என்பது தெரிகிறது. எனவேதான் வேலை முடக்கமாகிறது. வருமான இழப்பு ஏற்படுவதற்கு இது ஒரு காரணமாக அமைகின்றது. ஆகவே மற்ற அச்சகங்களிலே எந்த அளவுக்கு இதனுடைய கூலி இருக்கின்றதோ, அந்த அடிப்படையிலே வாங்குவதற்கு வழிமுறை செய்ய முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-20

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அந்தந்த நிர்வாகத் தலைவர்கள் செய்ய வேண்டிய பணி இது. பொதுப்படையாக அரசு என்பது இந்த வேலைக்கு இவ்வளவு கூலி என்று நிர்ணயம் செய்வது என்பது இல்லை. ஆனால் அரசு சார்பாக அச்சடிக்கப்படுகின்ற அத்தனை வேலைகளையுமே கூட்டுறவு அச்சகத்திற்குத்தான் வழங்கிக் கொண்டு வருகிறோம். மாவட்ட ஆட்சியர் அலுவலகமாக இருந்தாலும், மற்ற தாலுக்கா அலுவலகங்களாக இருந்தாலும் அத்தனை இடங்களிலும் இந்த அச்சகத்திற்குத்தான் முன்னுரிமை தந்து வழங்கிக் கொண்டு வருகிறோம். ஒரு காலத்திலே அதிகமான அளவிற்கு ஆட்களை நியமித்ததன் காரணமாக Establishment செலவே, அதிகமான சுமையை இந்த அச்சகங்களுக்கு வழங்கி வருகிறதே தவிர, அச்சுக் கோர்ப்பதில் அதிகமான கூலி வாங்குகிறார்கள் என்ற அளவிலே இதுவரையிலே புகார் வரவில்லை. இதையும் ஆராய்ந்து பார்க்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. இராமலிங்கம்.

**திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பல்வேறு கூட்டுறவு நிறுவனங்களுக்கு கூட்டுறவு மத்திய வங்கிகள் மூலமாக நிதியுதவி செய்யப்பட்டிருக்கிறது. அந்தக் கூட்டுறவு நிறுவனங்கள் இடைப்பட்ட காலத்திலே முறையாக இயங்காததன் காரணமாக நட்டம் ஏற்பட்டு, மீண்டும் இந்த ஆட்சி ஏற்பட்டதற்குப் பிறகு, இலாபகரமாகக்கூட பல நிறுவனங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட நிறுவனங்கள் பெற்ற கடன்களுக்கு அபராத வட்டியை மட்டும் தள்ளுபடி செய்து, Simple interest தனி வட்டி மூலமாக அந்தமுழுத் தொகையையும் செலுத்த முன் வந்தால், அதை ஏற்றுக்கொள்ள அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

2001 ஜனவரி 30]

ஏழை மக்களுக்கு இலவசமாக தீப்பிடிக்காத கல்நார் அட்டை வீடுகளை கட்டித் தருவதுபோல, நகராட்சிப் பகுதிகளான கொடைக்கானல், பெரியகுளத்திலும் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக இலவசமாக கல்நார் அட்டை வீடுகளை கட்டித் தர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாநகராட்சியில் தற்போது கட்டப்பட்டு வரும் சுவருடன் கூடிய கல்நார் அட்டை வீடுகள், நகராட்சிகளுக்கு விரிவுபடுத்தும்போது கொடைக்கானல் மற்றும் பெரியகுளம் நகராட்சிப் பகுதிகளில் வாழும் குடிசைவாழ் மக்களுக்கு சுற்றுச் சுவருடன் கூடிய கல்நார் அட்டை வீடுகள் அமைப்பது பற்றி பரிசீலனை செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கொடைக்கானல் போன்ற மலைப் பகுதிகளில் மண் சரிவு ஏற்பட்ட காரணத்தாலே அங்கே வாழக்கூடிய மக்களின் வீடுகள் எல்லாம் அடித்துக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. இந்தச் சூழ்நிலையில் அவர்கள் இருப்பதற்குக்கூட இடமில்லாமல் இருப்பது, மாண்புமிகு தலைவர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஆகையினாலே இதை மறுபரிசீலனை செய்து, எங்கெல்லாம் மண் சரிவு ஏற்படுகிறதோ அங்கெல்லாம் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக இலவச வீடு கட்டிக் கொடுப்பதற்கு மீண்டும் அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்போது மாநகராட்சியில்தான் இப்படிப்பட்ட திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அடுத்து நகராட்சியில் கட்டுவதற்காக பரிசீலனையில் இருக்கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்போது தலைநகர் சென்னையிலே குடிசை மாற்று திட்டத்தின் மூலமாக ஏழையெளிய மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கப்பட்டு வருகிறது. அதுபோல தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலே, நகராட்சிப் பகுதியாக இருந்தாலும் சரி அல்லது பேரூராட்சிப் பகுதியாக

இருந்தாலும் சரி, கிராமப் புறங்களிலே சுற்றுலா மையங்களிலே அன்றாடம் கூலி வேலை செய்து வாழக்கூடிய, வீடுகளே இல்லாத ஏழையெளிய மக்கள் எல்லாம் இருக்கிறார்கள். ஆகவே நம்முடைய மாநகராட்சிப் பகுதியிலே இருப்பதைப்போல தமிழ்நாட்டின் பல்வேறு பகுதியிலே உள்ள ஏழையெளிய மக்களுக்கு குடிசை மாற்று திட்டத்தின் மூலமாக வீடு கட்டிக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களும் தமிழக முதலமைச்சர் அவர்களும் இதைச் சிறந்த முறையிலே பரிசீலித்து அந்தத் திட்டத்தை அமலாக்குவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, தற்போது மாநகராட்சியில்தான் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது. அடுத்து, நகராட்சிக்காக பரிசீலனையில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையும் மாண்புமிகு முதலமைச்சரோடு கலந்து பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வ. வேலுசாமி.

*முற்பகல் 11-25*

**திரு. வ. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக மதுரை மாநகரத்திலே பல்வேறு இடங்களிலே வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டு இருக்கின்றன. ஆனாலும், என்னுடைய மதுரை கிழக்கு தொகுதியிலே ஓரிடத்திலே, *150* வீடுகளுக்கு மேலாகப் போடக்கூடிய இடத்தில் *50* வீடுகள் மாத்திரம் போடப்பட்டிருந்தன. இந்த நிலையில் மிச்சம் இருந்த *100* குடிசைகள் திடீரென நான்கு நாட்களுக்கு முன்பாக இரவு நேரத்திலே தீப்பிடித்து ஒட்டுமொத்தமாக எரிந்து விட்டன. ஆகவே அந்த குடிசைகளை மாற்றி, தலைவர் கலைஞர் அவர்களுடைய திட்டமான தீப்பிடிக்காத வீடுகள் கட்டப்பட வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம்கூட நேரடியாக ஒரு கோரிக்கை வைத்திருந்தேன். அவர்களும் நிச்சயமாக செய்து தருவதாகக் கூறியிருக்கிறார்கள். எப்படியாவது அந்த ஏழை எளிய மக்களுக்கு, எரிந்து போன வீடுகளைக் கட்டிக்கொடுக்க அரசு முன்வருமா? அமைச்சர் அவர்கள் கருணை காட்டுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் என்னிடம் நேரடியாகச் சொல்லியிருக்கிறார். அதிகாரிகளிடம் அதை ஆய்வு செய்ய அனுப்பியிருக்கிறேன். ஆகவே கண்டிப்பாக பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *115*, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**115—**

## நீதிமன்றம்

***36532—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணியில் நீதிமன்றம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணியில் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு பரிசீலனை செய்யப்பட்டு, நிதி நெருக்கடி காரணமாக தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு நன்றி. இருந்தாலும் அங்கு நீதிமன்றம் தொடங்கப்படுவதற்காக இரண்டாண்டுகளுக்கு முன்பு தஞ்சை மாவட்டத்தின் மாவட்ட நீதிபதி அவர்கள் வருகை தந்து, அதற்குரிய இடங்களையெல்லாம் தேர்வு செய்தார்கள். இரண்டாண்டு காலம் ஆகியிருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவிலே அங்கு நீதிமன்றம் தொடங்க ஆவன செய்வார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணியில் நீதிமன்றம் தொடங்கப்பட வேண்டுமென்பதில் இரண்டுபட்ட கருத்து கிடையாது. உண்மையிலேயே அரசு அதை அனுதாபத்துடன் வரவேற்கிறது.

24-4-2000-ல் ரிஜிஸ்ட்ரார் அவர்கள் அங்கே ஒரு District Municipal-cum-Judicial Magistrate Court அமைக்க வேண்டுமென்று பரிந்துரை செய்திருக்கிறார்கள். அந்தப் பரிந்துரையை நாங்கள் நிதித் துறைக்கு அனுப்பினோம். நிதித் துறை நெருக்கடி இருக்கிறது என்று சொல்லியதன் காரணமாக உயர் நீதிமன்றத்திற்கு 20-6-2000-ல் தற்போது இயலாது என்று சொல்லியிருக்கிறோம். இதனாலே எதிர்காலத்தில் நீதிமன்றம் தொடங்கப்படாது என்று பொருளல்ல. நிதிநிலைமை சீரானதும் பேராவூரணியில் நிச்சயமாக நீதிமன்றம் அமைக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. இராசமாணிக்கம்.

**திரு. பி. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், ஒரத்தநாட்டில் இயங்கி வருகின்ற நீதிமன்றம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. உயர் நீதிமன்றம் அங்கே ஒரு நிரந்தரக் கட்டடம் கட்டுவதற்கு அனுமதி அளித்து இருக்கிறது அரசு இந்த ஆண்டு நிரந்தரக் கட்டடம் கட்ட முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த மாமன்றத்தில் பலமுறை சொல்லியிருக்கிறேன். புதியதாக கட்டடங்கள் கட்டுதல், புதிய நீதிமன்றம் திறப்பதற்கு நீதித் துறை பரிந்துரைத்தாலும், நிதித் துறை ஆதரவு தரவில்லை என்பதைப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி தாலுகாவாக ஆக்கப்பட்டவுடன், கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அங்கு ஒரு சார்பு நீதிமன்றம் திறக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலும், சட்ட அமைச்சர் அவர்களிடத்திலும் மனு கொடுத்து, சட்டமன்றத்திலும் பேசியிருக்கிறேன். தற்பொழுது ஆய்வு செய்யப்பட்டு, திருச்சியிலிருந்து வந்து அந்த இடங்களையெல்லாம் பார்வை செய்து, வாடகைக் கட்டடத்திலாவது திறப்பதற்கு உரிய முயற்சியை மேற்கொண்டு இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலும் இது குறித்துப்



பேசியிருக்கிறேன். நிதிநிலை பற்றாக்குறை காரணமாக காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது என்று கூறியிருக்கிறார்கள். ஆகவே வருங்காலத்திலாவது தாலுகா தலைநகரமாக இருக்கிற காரணத்தால் அங்கே ஒரு சார்பு நீதிமன்றம் திறந்து தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வியையும், கேள்விக்கான விடையையும், விளக்கத்தையும் அவருடைய கேள்வியிலேயே இணைத்துவிட்டார்கள். எனவே, நிதிநிலை சீரானதும் இந்தப் பிரச்சினைகளெல்லாம் அனுதாபத்துடன் பரிசீலிக்கப்படும். அரவக்குறிச்சியில் நீதிமன்றம் வருவதற்கான வாய்ப்பும் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 116, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**116—**

## கடன் தொகையை அதிகப்படுத்துதல்

***41681—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தறியுடன் கூடிய வீடு கட்டிக்கொள்ள நெசவாளர்களுக்கு வழங்கப்படும் கடன் தொகையை அதிகப்படுத்தித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நெசவாளர்கள் தறியுடன் வீடு கட்டிக் கொள்ள HUDCO நிறுவனம் கடன் தொகையை அவ்வப்போது உயர்த்தி வழங்கி வருகின்றது.

முற்பகல் 11-30

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெசவுத் தொழிலிலே கைத்தறி நெசவுத் தொழிலாக இருந்தாலும் சரி, அல்லது power loom என்று சொல்லக்கூடிய விசைத்தறித் தொழிலாக இருந்தாலும்கூட நெசவாளர்கள் பிரச்சினை மிகவும் கேள்விக்குறியதாகவே தொடர்ந்து இருந்து வந்து கொண்டிருக்கிறது. நெசவாளர்கள் நெசவுத் தொழிலை தனியாக செய்யாமல், வீடுகளிலே குடும்பத்தோடு, குடும்பத்திலே இருக்கக்கூடிய எல்லோரும் சேர்ந்து குடிசைத் தொழிலாக நெசவுத் தொழிலை செய்து வந்தால்தான் குடும்பம் நடத்தக்கூடிய அளவிற்கு வருமானம் பெறும் வாய்ப்பு அமைகிறது. ஆகவே, வீடு ஒருபுறமும் தறித் தொழில் ஒரு புறமும் இருந்தால் அது சரியாக இருக்காது என்பதைக் கருத்திலேகொண்டு தறி வைப்பதற்குக் கடன் வழங்குகின்ற நேரத்தில் தறியோடு சேர்ந்து வீடு கட்டிக்கொள்வதற்கும் கூடுதலாக கடன் வழங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் HUDCO நிறுவனம் கடன் தொகையை அவ்வப்போது உயர்த்தி வழங்குமா என்றுதான் கேட்டிருக்கிறார்கள். அவ்வப்போது உயர்த்தியதன் அடிப்படையிலேதான் 1997-98-லே 25 ஆயிரம் ரூபாய் HUDCO கடன் வழங்கியது. நம்முடைய வேண்டுகோளை ஏற்று 1998-99-ல் 40 ஆயிரம் ரூபாய் கடன் அளிக்க அனுமதி அளித்துள்ளது. இதுபோல, தமிழகத்தைப் பொறுத்தவரையில் தனியார் தறியாளர்கள் வீட்டிலேயே 400 சதுர அடிக்குக் குறைவாக இருந்தாலும் அவர்கள் தறிக்கூடம் அமைக்க தனியாக 7 ஆயிரம் ரூபாயும்—அதற்கு மின்சார சாதனங்கள் பொருத்தக்கூடிய தொகையினுடைய விவரம் மட்டும் என்னிடம் இல்லை. இந்த வீடுகளைக் கட்டுவதைத் தவிர்க்க நாம் மத்திய அரசிடமிருந்து அவர்கள் இருக்கின்ற இட்த்திலேயே தறிக்கூடம் அமைக்க கிராமப்புறத் திட்டத்திற்கு 7 ஆயிரம் ரூபாயும்—அதேபோல நகர்ப்புற திட்டத்திற்கு 10 ஆயிரம் ரூபாயும் மானியமாக வழங்கி, அந்த அடிப்படையிலே நாம் மத்திய அரசிடமிருந்து 3232 தறிக்கூடங்கள் அமைக்க 2 கோடியே 31 இலட்சத்து 76 ஆயிரம் ரூபாய் பெற்றிருக்கிறோம். இது, அந்தந்தப் பகுதிகளிலே இருக்கின்ற நெசவாளர்கள் தாங்கள் குடியிருக்கின்ற பகுதியிலேயே இந்தத் தறிக்கூடங்களை அமைக்க தனிப்பட்ட முறையிலே ஒதுக்கப்பட்ட நிதி. அதுபோக, நம்முடைய ஒட்டுமொத்த கணக்கின்படி 1996-97-லே ஆயிரம்



வீடுகளை நாம் கட்டியுள்ளோம். அதனுடைய பணி முடிந்து கொண்டிருக்கிறது. 1997-98-லே 1200 வீடுகள் கட்டும் அந்தப் பணியும் இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. 1998-99-லே 920 வீடுகள் கட்டும் அந்தப் பணியும் இப்போது நடைபெற்று வருகிறது. அதுபோக 2000-2001-லே 1190 வீடுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அதிலே 1010 வீடுகள் சென்னிமலையிலே கட்டுவதற்கும், அதுபோக விருதுநகர் மாவட்டத்திலே பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குரிய தொகையான மத்திய அரசினுடைய மானியத் தொகையையும் நாம் இன்று பெற்றிருக்கிறோம். அப்படிக் கோரப்பெற்றத் தொகை 2 கோடியே 14 இலட்சம். ஆனால் உடனடியாக ஆரம்பிப்பதற்காக ஒதுக்கப்பட்ட 50 சதவீத ஒதுக்கீட்டின்படி ஒரு கோடியே 7 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் இந்த ஆண்டு அதற்கு ஒதுக்கப்பட்டு ஆணையும் பெறப்பட்டுவிட்டது. ஆக, தனியாக இருக்கின்ற நெசவாளர்கள் குறைந்த சதுர அடியே இருந்தாலும், அது சட்டத்திற்குட்படாமல் இருந்தாலும்கூட ஊராட்சியிலோ, பேரூராட்சியிலோ அவர்கள் அனுமதியை பெற்றுத் தருவார்களேயானால், 1010 வீடுகள் கட்டுவதற்கு என்ன அனுமதியோ அதே அனுமதி தனியாருடைய இல்லத்திற்கு அருகிலே 400 சதுர அடிக்குக் குறைவாக இருந்தால்கூட அதையும் அளிக்கக்கூடிய — அதாவது மத்திய அரசைக் கேட்டு நாங்கள் அந்த அனுசரணையையும், சலுகையையும் பெற்று அப்படிப்பட்ட திட்டங்களுக்கும் நாங்கள் — நல்ல வழிமுறைகளை உருவாக்கி அவர்களுக்கு தறிக்கூடம் அமைக்கவும் செய்திருக்கிறோம். சொந்த மகனுக்கு பக்கத்தில் ஒரு வீடு வேண்டுமென்றால் அதையும்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஏகப்பட்ட பதில் சொல்ல வேண்டாம்.

வினா எண் 117, திரு. இரா. மகேந்திரன், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**117—**

### தொழிற்பேட்டை அமைத்தல்

***38912—திரு. இரா. மகேந்திரன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2001 ஜனவரி 30

(அ) வேலூர் மாவட்டம், நாட்ராம்பள்ளி அருகில் தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், நாட்ராம்பள்ளி அருகில் தொழிற்பேட்டை அமைக்கும் உத்தேசம் தற்சமயம் அரசிடம் இல்லை.

முற்பகல் 11-35

**திரு. இரா. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்ராம்பள்ளி அருகில் தொழிற்பேட்டை வேண்டும் என்று நானும் என்னுடைய தொகுதி மக்களும் நீண்ட நாட்களாக கேட்டு வருகிறோம். என்னுடைய தொகுதியில் தொழிற்பேட்டை அமைக்க வேண்டிய முகாந்திரம் நிறைய இருக்கிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், தொழில் துறையைப் பொறுத்தவரையில், பின்தங்கி இருந்த தமிழகத்தை இன்றைக்கு இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாகக் கொண்டுவந்து இருக்கிற இந்த காலகட்டத்தில், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, என்னுடைய நாட்ராம்பள்ளி தொகுயில் ஒரு தொழிற்பேட்டை அமைத்துத்தர ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டியதைப்போல, ஆர்வம் உள்ள தொழில் முனைவர்கள் 20-க்கு மேற்பட்டவர்கள் விருப்பம் தெரிவித்தால், நிச்சயமாக அரசு அதைப் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 118, திரு. சீ.வெ. கிருஷ்ணன், மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.



2001 ஜனவரி 30]

**118—**

### திரையரங்குகளில் கூடுதல் கட்டணம்

***31916—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:**

மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதியிலுள்ள திரையரங்குகளில் அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட கட்டணத்திற்கு அதிகமாகக் கட்டணம் வசூலிப்பது மற்றும் அதிகமான பார்வையாளர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள் என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதனைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வட்டத்தில் உள்ள சில திரையரங்குகளை வணிக வரித் துறையினர் மற்றும் வருவாய் சார்நிலை அலுவலர்கள் திடீர் தணிக்கை செய்து, நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்திற்கு அதிகமாக நுழைவுக் கட்டணம் வசூலித்ததற்காகவும், அனுமதியளிக்கப்பட்ட எண்ணிக்கையைவிடக் கூடுதலாக பார்வையாளர்களை அனுமதித்தது போன்ற குற்றங்களுக்காகவும் உரிய தண்டனை வழங்கப்பட்டுள்ளன. மேலும், தற்போது இத்தகைய குற்றங்களைக் கண்டுபிடிக்கும் பணி தீவிரமாக்கப்பட்டுள்ளது.

**திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வேடசந்தூர் தொகுதியில் நடவடிக்கை எடுத்ததைப்போல, தமிழகம் எங்கும் இருக்கிற திரையரங்குகளில் எத்தனை திரையரங்குகளில் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் 2175 திரையரங்குகளில் ஆய்வுகள் செய்யப்பட்டன. அதிலே தவறு செய்தவைகளாகக் கண்டறியப்பட்ட திரையரங்குகளின் எண்ணிக்கை 1614. அதிலே Flat rate ஆக வசூலித்ததற்காக 355 திரையரங்குகளும், பிற குற்றங்களுக்காக 798 திரையரங்குகளும் ஆய்வு செய்யப்பட்டு இருக்கின்றன. கைது

[2001 ஜனவரி 30

செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 92. மொத்தத்தில் 2,889 குற்றங்களை இந்த அரசு கண்டுபிடித்து நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 119, திரு. உ. திசைவீரன், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**119—**

### பள்ளிக்குக் கூடுதல் கட்டடம்

***29434—திரு. உ. திசைவீரன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காட்டுபரமக்குடியில் ஆதிதிராவிடர் நலத் துறையின்கீழ் இயங்கும் நடுநிலைப்பள்ளிக்குக் கூடுதல் கட்டட வசதி செய்து தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டத்தில் உள்ள காட்டுபரமக்குடி ஆதிதிராவிடர் நல நடுநிலைப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைகள் கட்டி, கட்டட வசதி செய்ய, ஊரக வளர்ச்சித் துறை மூலம் மேற்படி பள்ளி தேர்வு செய்யப்பட்டு, தற்பொழுது கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. உ. திசைவீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மொத்தம் 7 தொடக்கப் பள்ளிகளில் 6 தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக மாற்றிய பெருமையும், குறிப்பாக பரமக்குடி தொகுதியிலே 7 விடுதிக் கட்டடங்கள் மற்றும் புதிய 3 விடுதிகளை திறந்து வைத்த பெருமையும் நமது மாண்புமிகு முதல்வர் அவர்களையும் நமது அமைச்சர் அவர்களையும் சாரும். ஆனால், புதிதாக தொடங்கப்பட்ட



2001 ஜனவரி 30]

நடுநிலைப் பள்ளிகள் போதிய கட்டட வசதி இன்றி, கூரைக் கட்டடத்தில், ஓட்டுக் கட்டடத்தில் இயங்குகின்றன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, காட்டுபரமக்குடி பள்ளிக்குக் கூடுதலாக புதிய அறைகள் கட்டித்தர நிதி ஒதுக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் எல்லாம் பழுது பார்ப்பதற்கும், பராமரிப்பதற்கும் நிதி ஒதுக்கப்படவில்லை. தமிழக அரசு, தலைவர் கலைஞர் தலைமையில் அமைந்த இந்த அரசுதான் கட்டடங்களைப் பழுது பார்ப்பதற்காக 2000-2001 ஆம் ஆண்டில்கூட ஒரு கோடியே 91 இலட்சம் ரூபாய் ஒதுக்கி இருக்கிறது. அந்த அடிப்படையில் பழுதடைந்துள்ள 3 கட்டடங்களை பழுது பார்ப்பதற்காக 11 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டு, 3 கட்டடங்கள் கட்டப்பட்டு தற்காலிகமாக சீர் செய்யப்பட்டு, வகுப்பறைகள் நடைபெற்று வருகின்றன. மேலும் நடுநிலைப் பள்ளிக்கு 3 வகுப்பறைகள் கட்டப்பட்டு இருக்கின்றன. அதற்காக 5 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. பூச்சு வேலை நடந்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 120, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**120—**

### சுற்றுலாப் பொருட்காட்சி

***31712—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோட்டில் சுற்றுலாப் பொருட்காட்சி நடத்த ஆவன செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஈரோட்டில் சுற்றுலாப் பொருட்காட்சி நடத்தும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு நகரம் ஒரு சிறந்த வியாபார ஸ்தலம் என்பது எல்லோருக்கும் தெரியும். குறிப்பாக கைத்தறித் துறையிலே, விசைத்தறித் துறையிலே நல்ல சிறந்த ஆடைகளை, தரமான துணிகளை எல்லாம் உற்பத்தி செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய, அந்த நகரத்தில் இந்திய நாட்டிலே தலைசிறந்து விளங்கக்கூடிய மஞ்சள் வளாகம் ஒன்றை அமைத்து சிறந்த வியாபாரம் நடந்துகொண்டிருக்கக்கூடிய நிலையிலே, எண்ணெய் வியாபாரம் நடந்துகொண்டிருக்கக்கூடிய நிலையிலே வியாபாரிகளும் சுற்றுலாப் பயணிகளும் அதிகமாக அங்கே வந்து போய்க்கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலை உள்ளது. எனவே, அங்கே ஒரு சுற்றுலாப் பொருட்காட்சி ஏற்படுத்தக்கூடிய சூழல் இருப்பதன் காரணமாகவும் அரசுக்கு நிறைய வருமானம் கிடைக்கக்கூடிய வாய்ப்பு உள்ளதாலும், அந்தப் பகுதி மக்களும் வியாபாரத்தை அதிகமாகச் செய்வதற்கு ஏற்ற வகையில்—மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்கின்ற நேரங்களில் எல்லாம், இல்லை, இல்லை என்று சொல்கின்ற பதிலைச் சொல்லாமல்—வருகின்ற காலங்களிலேயாவது கண்டிப்பாக ஈரோடு நகரத்திலே பொருட்காட்சி ஏற்படுத்துவதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-40

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பாக சென்னையிலே மட்டும் இந்திய சுற்றுலா மற்றும் தொழில்நுட்பப் பொருட்காட்சி நடந்துவருகிறது. மாவட்டங்களிலே பொருட்காட்சிகளை நடத்துவது செய்தி, மக்கள் தொடர்புத் துறை. பல மாவட்டங்களில் பொருட்காட்சியை இந்தத் துறை நடத்திக் கொண்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தின் அடிப்படையில் ஈரோட்டிலும் இதுபோன்ற பொருட்காட்சியை நடத்த வேண்டுமென்று செய்தித் துறையிடத்தில் எங்களுடைய துறையின் சார்பாகத் தெரியப்படுத்துகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.





**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு சென்னையில் இருக்கின்ற தீவுத் திடலில் நடந்த சுற்றுலாப் பொருட்காட்சி மூலம் எவ்வளவு இலாபம் வந்தது? இந்த ஆண்டு அரசுக்கு எவ்வளவு இலாபம் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது? மேலும், தமிழ்நாட்டில் திருவிழாக்கள் நடக்கின்ற ஊர்களான கும்பகோணம், பழனி, திருச்செந்தூர், ஸ்ரீவில்லிபுத்தூர் போன்ற இடங்களில் எல்லாம் திருவிழா நடைபெறுகின்ற நேரங்களில் அரசு மூலமாக பொருட்காட்சி நடத்த அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாப் பொருட்காட்சி மூலம் 1996 ஆம் ஆண்டிலிருந்து 2000 வரை, வருடத்திற்கு வருடம் இலாபம் அதிகரித்துக் கொண்டேயிருக்கிறது. கடந்த வருடத்தைப் பொறுத்தமட்டில் 69 இலட்சம் ரூபாய் இலாபம் ஈட்டப்பட்டிருக்கிறது என்பதையும், இந்த வருடம் அதற்கு மேலாக இலாபம் ஈட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்*

(பட்டியல்கள் 5,6,7 மற்றும் 8)

### ஐந்தாவது பட்டியல்

1—

### உயிர் இழந்தோர்

**வினா எண் 33695—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1998-99, 1999-2000 ஆண்டில் தமிழ்நாட்டில் சாதிக் கலவரத்தில் உயிர் இழந்தோர் எத்தனை பேர்?

*உடுக்குறியிடாத வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று அமைந்தனவாகும்.

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

1998 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் சாதிக் கலவரத்தில் உயிரிழந்தோர் - 30

1999 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் சாதிக் கலவரத்தில் உயிரிழந்தோர்-22

2000 ஆண்டில் (மார்ச் மாதம் முடிய) தமிழ்நாட்டில் சாதிக் கலவரத்தில் உயிரிழந்தோர் - 3.

அரசு மேற்கொண்ட உறுதியான நடவடிக்கைகளின் பயனாக சாதிக் கலவரங்களில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

2—

**கிளை நூலகம்**

**வினா எண் 33773—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் கிளை நூலகம் திறக்க உள்ள நிபந்தனைகள் என்ன என்பதை அரசு தெளிவுபடுத்துமா?

(ஆ) ஆம் எனில், அவை நிறைவு செய்யப்பட்டால் எடப்பாடி தொகுதி, செட்டிமாங்குறிச்சியில் கிளை நூலகம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) பொது நூலகச் சட்டம் 1948 இன்படி மக்கள் தொகை 5000-க்கு மேலுள்ள இடங்களில் கிளை நூலகங்கள் திறக்கலாம். எனினும், கிளை நூலகங்கள் திறக்க மூன்றாம் நிலை நூலகர் பணியிடமொன்று





அனுமதிக்க வேண்டும் என்ற நிலையிருப்பதாலும், அரசின் நெருக்கடியான நிதி நிலையின் காரணமாகவும் மேற்கண்டவாறு 5000 மக்கள் தொகை கொண்ட அனைத்து இடங்களிலும் கிளை நூலகங்கள் திறக்க இயலாத நிலை உள்ளது. எனவே, இதற்கென நிர்ணயிக்கப்பட்டுள்ள சில நிபந்தனைகளைப் பொது மக்கள் நிறைவேற்றித்தரும் நிலையில் அவர்கள் ஒத்துழைப்புடன் முதற்கட்டமாகப் பகுதி நேர நூலகம் திறக்கப்படுகிறது. இது பின்னர் ஊர்ப்புற நூலகமாகவும், அரசின் அனுமதி மற்றும் 3ஆம் நிலை நூலகர் பணியிடம் ஆகியவை வழங்கப்பட்டால் பின்னர் கிளை நூலகமாகவும் தரம் உயர்த்தப்படுகின்றது.

1. நூலகம் இயங்க வாடகை இல்லாத இலவசக் கட்டடம் அளிக்கப்பட வேண்டும்.

2. பின்னர் நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட 5 சென்ட் முதல் 10 சென்ட் வரை காலிமனை நூலக ஆணைக்குழு பெயருக்குப் பத்திரப்பதிவு செய்து கொடுக்க வேண்டும்.

3. ரூ.2000/-மதிப்புள்ள தளவாடப் பொருட்கள் நன்கொடையாக அளிக்கப்பட வேண்டும்.

4. 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

5. ரூ.1000/-செலுத்தி இரண்டு புரவலர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

மேலே வரிசை எண் 1 முதல் 5 வரை குறிப்பிடப்பட்டுள்ள பொது மக்களால் நிறைவு செய்யப்படும் நிபந்தனைகள் பகுதி நேர நூலகம், ஊர்ப்புற நூலகம் மற்றும் கிளை நூலகங்கள் திறப்பதற்கும் பொதுவானதாகும்.

(ஆ) செட்டிமாங்குறிச்சியின் மக்கள் தொகை 5000-க்கும் அதிகமாக உள்ளது. எனினும், மேலே (அ) பகுதியில் வரிசை எண் 1 முதல் 5 வரையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் செட்டிமாங்குறிச்சி மக்களால் நிறைவு செய்து தரப்படவில்லை. எனவே இந் நிபந்தனைகளை அவ்வூர்மக்கள் நிறைவு செய்து தந்த பின்னர் அரசின் நிதி வசதிகளைப் பொறுத்து இவ்வூரில் கிளை நூலகம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

[2001 ஜனவரி 30

3—

**மின்சாரம் திருட்டு**

**வினா எண் 32674—திரு. ஐ. கணேசன் மற்றும் திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் 1998-1999 செப்டம்பர் வரை மின்சாரத் திருட்டு வழக்கு எத்தனை பதிவு செய்யப்பட்டுள்ளது?

(ஆ) இந்த மின்சாரத் திருட்டால் அரசுக்கு எவ்வளவு கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது?

(இ) இது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) 1998 மற்றும் 1999 செப்டம்பர் முடிய ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் மொத்தம் 713.

1998 - 390

1999 - 323

(செப்டம்பர் வரை)

(ஆ) மேற்கண்ட திருட்டுகளால் மின்சார வாரியத்திற்கு ஏற்பட்ட இழப்பு ரூபாய் முப்பத்தொன்று கோடியே தொன்னூற்றேழு இலட்சத்து தொன்னூற்றேழு ஆயிரம் ஆகும்.

1998 - ரூ.11,87,42,000/-

1999 - ரூ.20,10,55,000/- (செப்டம்பர் வரை)

(இ) மேற்கண்ட திருட்டு சம்பந்தப்பட்ட மின் இணைப்புகளுக்கு உரியவர்கள் மீது போலீசில் புகார் கொடுக்கப்பட்டு சம்பந்தப்பட்ட காவல் நிலையங்களில் குற்றவியல் வழக்கு போடப்பட்டு உள்ளது. மின்வாரியத்திற்கு ஏற்பட்ட இழப்பு குறித்து சம்பந்தப்பட்ட மின்



2001 ஜனவரி 30]

நுகர்வோரிடம் தக்க விளக்கங்கள் கேட்டபின் அவர்களுக்கு தக்க வாய்ப்பளிக்கும் வகையில் விசாரணைகள் நடத்தி வாரிய விதிகளின்படி வாரிய இழப்பை தக்க தவணைகளில் கட்டுமாறு மதிப்பீட்டு ஆணைகள் அனுப்பப்பட்டன. சில திருட்டுகளில் சிவில் வழக்குகள் மின் நுகர்வோரால் போடப்பட்டு உள்ளன. இவற்றில் வழக்காடு மன்றத்தின் உத்தரவின்படி வாரியம் மேற்கண்ட ஆணைகளை ஒத்திப்போட்டோ அல்லது தற்காலிகமாக நிறுத்தியோ வைத்துள்ளது. இப்படியாக வாரிய இழப்பை சம்பந்தப்பட்டவர்களிடம் இருந்து வசூலிக்க அனைத்து முயற்சிகளையும் வாரியம் எடுத்துள்ளது. மின் திருட்டுகள் நிகழா வண்ணம் உரிய அனைத்து தடுப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் வாரியத்தால் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும் அவ்வப்போது புதிய நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

4—

**மின் விநியோகம்**

**வினா எண் 32687—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீரசிகாமணி 110/11 கே.வி. உபமின் நிலையத்திலிருந்து புதிதாக 66 கே.வி. மின் பாதை அமைத்து தென்காசி 68/11 கே.வி. உபமின் நிலையத்திற்கு மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மின் பாதை அமைத்தல், மின்மாற்றி அமைத்தல் ஆகிய பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த நிதியாண்டிற்குள் (2000-2001) பணிகள் முடிக்கப்பட்டு தென்காசி 66 கே.வி. உபமின் நிலையத்திற்கு மின்சாரம் வழங்கப்படும்.

[2001 ஜனவரி 30

5—

**பாலம் அமைத்தல்**

**வினா எண் 19800—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம், கொரக்கை பாளையம் கிராமத்திற்கு இடையிலுள்ள வெலிங்டன் கால்வாய்க்கு பாலம் அமைத்து போக்குவரத்துக்கு வழி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம், கொரக்கைபாளையம் கிராமத்திற்கு இடையில் உள்ள வெலிங்டன் கால்வாயில் 1998-99 ஆம் ஆண்டில் மாவட்ட பரவலாக்கும் திட்டத்தில் சுமார் 9.5 இலட்ச மதிப்பீட்டில் ஒரு பாலம் கட்டி முடிக்கப்பட்டு, பொது மக்களின் பயன்பாட்டில் உள்ளது.

6—

**தார்ச் சாலை**

**வினா எண் 22196—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் பட்டம்பாளையம், கரிச்சிபாளையம் ரோடு 1/2 கி.மீ. தார்ச் சாலையாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது பணி தொடங்கி முடிவுறும்?



2001 ஜனவரி 30]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை.

7—

**கட்டடம்**

**வினா எண் 22337—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடந்த 5 ஆண்டுகளில் திருப்பூர் ஜெய்வாய்பாய் நகராட்சி மகளிர் மேல்நிலைப் பள்ளியில் பெற்றோர்-ஆசிரியர் கழகத்தின் சார்பில் கட்டப்பட்ட கட்டடத்தின் மதிப்பு எவ்வளவு?

(ஆ) அதற்கான நிதி எவ்வாறு வசூலிக்கப்பட்டது?

(இ) அதன் கணக்குகளை யார் தணிக்கை செய்தது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) திருப்பூர் ஜெய்வாய்பாய் நகராட்சி மகளிர் மேல்நிலைப் பள்ளியில் பெற்றோர்-ஆசிரியர் கழகத்தின் சார்பில் கட்டப்பட்ட கட்டடத்தின் மதிப்பு ரூ. 26,10,130.35 (ரூபாய் இருபத்தி ஆறு லட்சத்து பத்தாயிரத்து நூற்றி முப்பது, பைசா முப்பத்தி ஐந்து மட்டும்) ஆகும்.

(ஆ) இதற்கான நிதி நகரப் பிரமுகர்கள் மற்றும் பெற்றோர்களிடம் நன்கொடையாகப் பெறப்பட்டது.

(இ) இதன் கணக்குகளை திருப்பூர் நகரில் உள்ள சார்ட்டர்டு அக்கௌண்டண்ட் திரு. எ. செல்வராஜ் தணிக்கை செய்துள்ளார்.

[2001 ஜனவரி 30

8—

**கூடுதல் டீசல்**

**வினா எண் 22887—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடிநீர் வடிகால் வாரிய வாகனத்திற்கு மாதம் ஒன்றுக்கு வழங்கப்படும் 220 லிட்டர் டீசலுடன் கூடுதலாக 80 லிட்டர் டீசல் வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு ஆணை எண் 742, நிதித் துறை, நாள் 10-7-1990-ல் செலவினங்களில் சிக்கன நடவடிக்கைகளை கடைப்பிடிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி வாரிய ஆணை எண் 245, நாள் 1-10-1990-ல் வாரிய தலைமை வாகனங்களான சீருந்துக்கு 200 லிட்டர் (மாதம் ஒன்றுக்கு) ஈப்புக்கு 175 லிட்டர் (மாதம் ஒன்றுக்கு) என உச்சவரம்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும் வாரிய சுற்றறிக்கை எண் இ4/003100/90-12, நாள் 5-1-1990-ல் மேற்பார்வைப் பொறியாளர் வாகனத்திற்கு 264 லிட்டர் (மாதம் ஒன்றுக்கு), நிர்வாகப் பொறியாளர் வாகனத்திற்கு 220 லிட்டர் (மாதம் ஒன்றுக்கு) என உச்ச வரம்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. சிக்கன நடவடிக்கையினை கடைப்பிடிக்கும் பொருட்டு, மேலே குறிப்பிட்டுள்ள டீசல் உச்சவரம்புக்கு மேல் கூடுதலாக டீசல் வழங்க உத்தேசம் ஏதுமில்லை.

9—

**தெரு விளக்கு**

**வினா எண்.27506—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம் பெண்ணாகரம் தொகுதி, கூத்தப்பாடி ஊராட்சி, கூத்தப்பாடி புது வீதியில் தெருவிளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2001 ஜனவரி 30]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கூத்தப்பாடி புது வீதியில் ஒரு தெருவிளக்கு அமைக்க தமிழ்நாடு மின்சார வாரியத்தால் விண்ணப்பக் கட்டணம் செலுத்தப்பட்டு உள்ளது. மேற்படி இடத்திற்குத் தெருவிளக்கு அமைக்க தொடர் நடவடிக்கை மேற்கொள்ள கூத்தப்பாடி ஊராட்சிக்கு தக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

10—

**மண் சாலை**

**வினா எண் 28161—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, சத்தியநாதபுரம் ஊராட்சி, கரியம்பட்டி முதல் சுடுகாடு வரை புதிய மண் சாலை அமைக்க அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பெண்ணாகரம் தொகுதி, சத்தியநாதபுரம் ஊராட்சி, கரியம்பட்டி முதல் சுடுகாடு வரை சாலை அமைக்க அக்கிராமத்திலுள்ள சில பட்டாதாரர்கள் ஆட்சேபணை செய்துள்ளதால் இப்போது வாய்ப்புகள் இல்லை.

11—

**சாலை வசதி**

**வினா எண் 28163—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பேடறஅள்ளி ஊராட்சி, பேடறஅள்ளி தெருவிற்கு சிமெண்ட் சாலை அமைக்க அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

[2001 ஜனவரி 30

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*1998-99 மற்றும் 1999-2000 ஆகிய இரு ஆண்டுகளில் தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பேடறஅள்ளி ஊராட்சி, பேடறஅள்ளி தெருவில் மொத்தம் ரூ.1,10,300/- செலவில் சிமெண்ட் தளம் அமைக்கப்பட்டது. மீதமுள்ள பணி 2000-2001-ம் ஆண்டில் நிதி நிலைக்கேற்ப மேற்கொள்ளப்படும்.*

**12—**

**தார்ச் சாலை**

**வினா எண் 28165—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கெண்டையன் அள்ளி ஊராட்சியைச் சேர்ந்த பிரதான சாலையிலிருந்து வெள்ளமன்காடு செல்லும் பாதையை தார்ச் சாலையாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கெண்டையன்அள்ளி ஊராட்சியைச் சேர்ந்த பிரதானச் சாலையிலிருந்து வெள்ளமன்காடு செல்லும் பாதையை தார்ச் சாலையாக அமைக்க தற்போது சாத்தியமில்லை.*

**13—**

**மின் வசதி**

**வினா எண் 29997—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2001 ஜனவரி 30]

*(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பிக்கிலி ஊராட்சியைச் சேர்ந்த (1) பெரியூர், (2) பாணைக்கட்டு, (3) குரல்திண்ணை, (4) மொசதிண்ணை, (5) மலையூர், (6) சக்கிலிநத்தம் ஆகிய கிராமங்களில் இதுவரை மின்சார வசதியில்லாமலிருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் மின் இணைப்பு வழங்கி தெருவிளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பிக்கிலி ஊராட்சியில் போதிய நிதி வசதி இல்லை. எனவே (1) பெரியூர், (2) பாணைக்கட்டு, (3) குரல்திண்ணை, (4) மொசதிண்ணை (5) மலையூர் (6) சக்கிலிநத்தம் ஆகிய கிராமங்களில் தெருவிளக்கு அமைக்கும் சாத்தியக்கூறு இல்லை.*

**14—**

**தெரு விளக்கு**

**வினா எண் 29998—திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பிக்கிலி ஊராட்சியைச் சேர்ந்த பூதிநத்தம் கிராமத்திற்கு இதுவரை தெருவிளக்கு அமைக்காமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் புதியதாக தெருவிளக்கு அமைக்கப்படுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பிக்கிலி ஊராட்சியில் போதிய நிதி வசதியில்லை. எனவே*

[2001 ஜனவரி 30

பூதிநத்தம் கிராமத்திற்கு தெருவிளக்கு அமைக்க சாத்தியக்கூறு இல்லை.

**15—**

**தெரு விளக்கு வசதி**

**வினா எண் 30003—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, அஜ்ஜனஅள்ளி ஊராட்சியைச் சேர்ந்த மாமரத்துக்காடு கிராமத்தில் தெருவிளக்கு வசதியே இல்லாமலிருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் இங்கு தெருவிளக்கு அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, அஜ்ஜனஅள்ளி ஊராட்சியில் தற்போது போதிய நிதி வசதியில்லை. எனவே, மாமரத்துக்காடு கிராமத்தில் தெருவிளக்கு அமைக்க சாத்தியக்கூறு இல்லை.

**16—**

**கைப்பம்பு அமைத்தல்**

**வினா எண் 30668—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நாகமரை ஊராட்சி, தொதியன்கொட்டாய் கிராமத்திற்கு கைப்பம்பு ஒன்று அமைக்க அரசு நடப்பாண்டில் நடவடிக்கை எடுக்குமா?



2001 ஜனவரி 30]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நாகமரை ஊராட்சியில் போதுமான நிதி வசதியில்லை. எனவே தொதியன்கொட்டாய் கிராமத்திற்கு கைப்பம்பு அமைக்க சாத்தியக்கூறு இல்லை.

**17—**

**கைப்பம்பு அமைத்தல்**

**வினா எண் 30820—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெரும்பாலை ஊராட்சி, பெரும்பாலை கீழ் தெருவில் போதுமான குடிநீர் வசதியில்லாமலிருப்பதால் அங்கு ஒரு கைப்பம்பு அமைக்க அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பெரும்பாலை ஊராட்சி, பெரும்பாலை கீழ் தெருவில் தற்போது கைப்பம்பு அமைக்கப்பட்டு நல்ல நிலையில் இயங்கி வருகின்றது.

**18—**

**குடிநீர் வழங்கல்**

**வினா எண் 31490—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2001 ஜனவரி 30

(அ) தென்காசி நகராட்சி புதிய குடிநீர் திட்டத்தில் வழியோர கிராமமான அரியபுரம் ஊராட்சியை இணைத்து குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தென்காசி நகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டமானது, திருத்திய அரசாணை எண் 134/ந.நி.ம.கு.வ. துறை, நாள் 17-12-1999-ல் ரூ.1038.17 இலட்சங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டமானது தென்காசி நகராட்சிக்குக் குடிநீர் வழங்கவும் மற்றும் 5 வழியோர குடியிருப்புக்களான முதலியார்பட்டி, மாதாபுரம், ஆசிர்வாதபுரம், திரவியநகர், மத்தளம்பாறை ஆகியவற்றிற்குத் தேவையான குடிநீர் அளவினையும் சேர்த்து Quantity Provision பிரதான குழாய் வடிவமைக்கப்பட்டுள்ளது.

அரியபுரம் ஊராட்சியில் 5 குடியிருப்புகள் உள்ளன. அவற்றில் ஒன்றான திரவியநகர் நீரேற்றுப் பிரதான குழாய் செல்லும் வழி அருகே இருப்பதால் ஏற்கெனவே தென்காசி நகராட்சிக் குடிநீர் அபிவிருத்தித் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 4 குடியிருப்புகளுக்கும் நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு 55 லிட்டர் வீதம் குடிநீர் வழங்க 2,56,926 லிட்டர் குடிநீர் கூடுதலாகத் தேவைப்படுகிறது. மேற்கண்ட 4 குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்க தென்காசி நகராட்சித் திட்ட வடிவமைப்பின்படி உள்ள நீரேற்று நேரத்தினை 20 மணியிலிருந்து 21 மணியாக, அதாவது 1 மணி நேரம் கூடுதலாக நீட்டித்தால் குடிநீர் வழங்க சாத்தியக்கூறுகள் உள்ளன.

தென்காசி நகராட்சிக் குடிநீர் அபிவிருத்தித் திட்டத்திலிருந்து அரியபுரம் ஊராட்சியில் விடுபட்டுள்ள குடியிருப்புகளுக்கு குடிநீர் வழங்க சம்மதம் தெரிவித்து தென்காசி நகர மன்றத் தீர்மானம் பெற்றபின் புதிய குடியிருப்புகளுக்குக் குடிநீர் குழாய் நீட்டிப்பு செய்து குடிநீர் வழங்குவது குறித்து பரிசீலிக்கப்படும்.



2001 ஜனவரி 30]

19—

## குடிநீர் வசதி

**வினா எண் 33366—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகராட்சி வாரச் சந்தையில் நகராட்சி குடிநீர் வசதி செய்து தராததால் மக்கள் கோடைக் காலங்களில் அவதிப்படுவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்தக் குறையைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகராட்சியில் வாரச் சந்தை கூடும் புதன்கிழமைகளில் டேங்கர் லாரி மூலமாக மக்களுக்குக் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

20—

## தார்ச் சாலை

**வினா எண் 38407—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் பெருமுகையில் பீடித் தொழிலாளர் குடியிருப்பு வரை செல்ல ரோடு சரியில்லாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை எப்போது?

[2001 ஜனவரி 30

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் பெருமுகையில் பீடித் தொழிலாளர் குடியிருப்புப் பகுதியில் 600 மீட்டர் தூரம் தார்ச்சாலை அமைக்கும் பணிக்கு வேலூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் 2000-2001-ம் நிதியாண்டில் ஒதுக்கீடு செய்துள்ள ரூ.2.00 லட்சம் நிதியின் மூலம் செயல்படுத்தப்படவுள்ளது.

21—

**விவசாயிகளுக்கு கருவிகள் வழங்குதல்**

**வினா எண் 43105—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதியிலுள்ள விவசாயிகளுக்கு வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலம் காய்கறி பயிரிடும் விவசாயிகளுக்கு ரோட்டாலேட்டர் கருவியை குறைந்த வாடகைக்கு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

வேளாண்மைப் பொறியியல் துறையில் வாங்கப்பட்டுள்ள நான்கு ரோட்டாலேட்டர் கருவிகளும் வேலூர், தருமபுரி, மயிலாடுதுறை மற்றும் தஞ்சாவூர் ஆகிய நான்கு உபகோட்டங்களுக்கு வழங்கப்பட்டு குறைந்த வாடகைத் தொகையாக மணிக்கு ரூ.150/- வீதத்தில் விவசாயிகள் பயன்பெற வேண்டி அளிக்கப்பட்டு வருகிறது. எடப்பாடி தொகுதியிலுள்ள விவசாயிகள் உதவி செயற்பொறியாளர் (வே.பொ.) சேலம் அலுவலகத்தை அணுகி, டிராக்டர் மற்றும் உபகரணமாகிய ரோட்டாலேட்டர் கருவியினை வாடகைக்குப்பெற்று, காய்கறி பயிரிடும் பணிகளில் ஈடுபடுத்தி பயன்பெறலாம்.



2001 ஜனவரி 30]

22—

**தனியார் பேருந்துகள்**

**வினா எண் 21067—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டத்தில் தனியார் பேருந்துகள், அவைகள் இயக்கப்படுவதற்கு அனுமதி பெற்ற வழித்தடங்களில் இயக்கப்படுவதில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டத்தில் தனியார் பேருந்துகள் அனுமதி பெற்ற வழித் தடங்களிலேயே இயக்கப்பட்டு வருகின்றன. இருப்பினும் புகார்கள் வரப்பெறும்பொழுது, இயக்க ஊர்தி ஆய்வாளர்களால் திடீர் தணிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

23—

**விபத்துக்களைத் தடுத்தல்**

**வினா எண் 21619—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் பேருந்துகளில் அதிகப்படியான பயணிகளை ஏற்றி விபத்து ஏற்படுவதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[2001 ஜனவரி 30

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தனியார் பேருந்துகளில் அதிக பயணிகளை ஏற்றிச் செல்வதைத் தடுக்க தனியார் பேருந்துகளை சோதனை செய்வதற்காக இயக்க ஊர்தி ஆய்வாளர்களுக்கு ஏற்கெனவே 12-9-1989 அன்று அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. தற்பொழுது இந்த சுற்றறிக்கையின்மீது தீவிர நடவடிக்கை எடுக்குமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

24—

**இரயில் போக்குவரத்து**

**வினா எண் 31764—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை-காஞ்சிபுரம்-திருவண்ணாமலை-சேலம் இடையே இரயில் போக்குவரத்து ஆரம்பிக்க மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்துமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னையிலிருந்து சேலத்திற்கு காஞ்சிபுரம், திருவண்ணாமலை வழியாக புதிய இரயில் பாதை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை என தென்னக இரயில்வே துறை தெரிவித்துள்ளது.

25—

**பட்டா வழங்குதல்**

**வினா எண் 28504—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2001 ஜனவரி 30]

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கெண்டையனஅள்ளி ஊராட்சி, அத்திமரத்தூர், தொப்பையாறு பழையூர், வெள்ளமன்காடு, ஊத்துப்பள்ளத்தூர், மருக்கம்பட்டிபுதூர், மேட்டுக்காடு ஆகிய கிராமங்களில் புறம்போக்கு நிலங்களில் விவசாயம் செய்பவர்களுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கெண்டையனஅள்ளி ஊராட்சியைச் சேர்ந்த அத்திமரத்தூர், தொப்பையாறு பழையூர், வெள்ளமன்காடு, ஊத்துப்பள்ளத்தூர், மருக்கம்பட்டிபுதூர், மேட்டுக்காடு ஆகிய கிராமங்களில் நில ஒப்படை செய்ய தகுதியான அனாதீனம் பரப்பு 198.90.5 ஹெக்டேர் மற்றும் தீர்வை ஏற்படாத தரிசு பரப்பு 220.54.5 ஹெக்டேர் புறம்போக்கு நிலங்கள் உள்ளன; அனாதீனம் புறம்போக்கு நிலங்கள் உள்ளன. அனாதீனம் புறம்போக்கு நிலங்கள் பெரும்பாலும் கரடாகவும், பெரு விவசாயிகளின் ஆக்கிரமிப்பிலும் இருந்து வருகிறது. தகுதியுள்ள நிலமற்ற ஏழை விவசாயிகளின் ஆக்கிரமிப்பில் உள்ள அரசுப் புறம்போக்கு நிலங்களை விதிமுறைகளின்படி நில ஒப்படை செய்யத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

26—

**வட்டாட்சியர் அலுவலகம்**

**வினா எண் 42487—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி வட்டம், எடப்பாடி நகரில் வட்டாட்சியர் அலுவலகம் இந்நிதியாண்டில் கட்டித்தர அரசு துரித நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) சொந்தக் கட்டடம் இல்லாத வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு கட்டடம் கட்ட ஆண்டுதோறும் நிதி நிலைமைக்கேற்ப பகுதி-2 திட்டத்தின்கீழ் நிதி ஒப்படைப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

*(ஆ) வட்டாட்சியர் அலுவலகம் கட்ட இந்த நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்படாத நிலையில் எடப்பாடி வட்டாட்சியர் அலுவலகம் கட்ட எப்போது நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்பதைக் குறிப்பிட்டுக் கூற இயலாது.*

27—

## விட்டுமனைப் பட்டா

**வினா எண் 24918—திரு. ந. பாண்டுரங்கன்:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வந்தவாசி வட்டம், இசாகொளத்தூர் ஊராட்சியில் மிகப் பிற்படுத்தப்பட்டவர்களுக்கான வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், இசாகொளத்தூர் கிராமத்தைச் சேர்ந்த மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினைச் சேர்ந்த 84 நபர்களுக்கு இலவச வீட்டுமனை வழங்க நேரடிப் பேச்சுவார்த்தைமூலம் சர்வே எண் 116/5ஏ-6-7பி-8 மற்றும் 118/1பி—ஆகியவற்றில் 3.62 ஏக்கர் புன்செய் நிலம் 13-6-2000 அன்று கையகப்படுத்தப்பட்டது. கையகப்படுத்திய நிலங்களை மிகப்பிற்படுத்தப்பட்ட இனத்தவருக்கு வீட்டு மனைகள் ஒதுக்கீடு செய்து 84 பயனாளிகளுக்கு கடந்த 15-8-2000-ல் நடந்த சுதந்திர தினவிழாவின் போது இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன.*



28—

## குழு அமைத்தல்

**வினா எண் 33119—திரு. ந. கருப்பண்ண உடையார்:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*அரசுத் துறைகளில் பணியாளர்கள் நியமனங்களின்போது இட ஒதுக்கீடுகள் முழுமையாக கடைப்பிடிக்கப்படுகின்றனவா என்பதனைக் கண்காணிக்கக் குழு ஒன்றை அமைக்க அரசு முன்வருமா?*

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

*அரசுத் துறைகளில் பணியாளர்கள் நியமனங்களின்போது இட ஒதுக்கீடுகள் முழுமையாக கடைப்பிடிக்கப்படுகின்றனவா என்பதனைக் கண்காணிக்க தலைமைச் செயலர் தலைமையில் கீழ்க்கண்டவாறு கண்காணிப்புக் குழு அமைத்து அரசாணை (நிலை) எண் 110 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (ஆர்) துறை, நாள் 22-6-2000 இல் ஆணையிடப்பட்டுள்ளது.*

*தலைவர்—தலைமைச் செயலர்—உறுப்பினர்கள்—*

*(1) பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை செயலர்,*

*(2) ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை செயலர்,*

*(3) பிற்படுத்தப்பட்டோர் மிக பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை செயலர்.*

29—

## விளையாட்டு விரர்கள்

**வினா எண் 34660—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) 1999-ம் ஆண்டில் தமிழகத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளி/ மேல்நிலைப் பள்ளிகளில் விளையாட்டுத் துறையில் சிறந்து விளங்கும் விளையாட்டு வீரர்களில் எத்தனை பேரை அரசு தேர்வு செய்துள்ளது?*

(ஆ) சேலம் மாவட்டத்தில் எவ்வளவு பேர்?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்:**

(அ) 1999-2000 ஆண்டில் முதன்மை உடற்கல்வி ஆய்வாளரால் நடத்தப்பட்ட பள்ளி விளையாட்டுப் போட்டிகளான குடியரசு தின/பாரதியார் தின விளையாட்டுப் போட்டிகளில் மொத்தம் 417 பேர் தேர்வு செய்யப்பட்டு ஊக்கத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) சேலம் மாவட்டத்தில் 38 விளையாட்டு வீரர்கள் தேர்வு செய்யப்பட்டு ஊக்கத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

**30—**

## பொருட்காட்சி

**வினா எண் 36091—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், சேலம் மாநகரில் சென்ற ஆண்டு பொருட்காட்சி நடத்தாததற்குக் காரணம் என்ன?

(ஆ) அதனால் அரசுக்கு ஏற்பட்ட வருவாய் இழப்பு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1999-ம் ஆண்டு சேலம் மாநகரில் அரசு பொருட்காட்சி நடத்திட அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. ஆனால் நாடாளுமன்றத் தேர்தல் கால அட்டவணை, தேர்தல் ஆணையத்தின் மூலம் அறிவிக்கப்பட்டதால், சேலத்தில் அரசுப் பொருட்காட்சி அரசால் நடத்தப் பெறவில்லை. அதனால் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்பட வாய்ப்பில்லை.



**31—**

## அரசுப் பொருட்காட்சி

**வினா எண் 41099—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1999 ஆம் ஆண்டுக்கு கோவையில் அரசுப் பொருட்காட்சி நடைபெற்றதா?

(ஆ) ஆம் எனில், அதில் அரசுக்குக் கிடைத்த வருமானம் எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

(அ) சில நிர்வாகக் காரணங்களினால் 1999 ஆம் ஆண்டு கோவையில் அரசுப் பொருட்காட்சி நடைபெறவில்லை.

(ஆ) வினா எழவில்லை.

**32—**

## அரசுப் பொருட்காட்சி

**வினா எண் 42086—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலியில் இரண்டு ஆண்டுக்கு ஒருமுறை நடைபெறும் அரசுப் பொருட்காட்சியை ஆண்டுதோறும் நடத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

[2001 ஜனவரி 30

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இது குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

33—

## ஆபத்து ஈட்டுப்படி

**வினா எண் 26285—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கால்நடை மருத்துவர்களுக்கு ஆபத்துப்படி ரூ.100/- ஆகவும், கால்நடை உதவி மருத்துவர்களுக்கு ஆபத்துப்படி ரூ.200/-ஆகவும் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை சீர்செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கால்நடைகள் நோய்களுக்கு இலக்காகும் பகுதிகளிலுள்ள கால்நடை மருத்துவமனைகளில் பணிபுரியும் மருத்துவர்களுக்கு வழங்கிய ஆபத்து ஈட்டுப்படியையும் மாதம் ரூ.100/-லிருந்து ரூ.200/-ஆக உயர்த்தி 1-9-1998 முதல் பெற ஆணையிடப்பட்டுள்ளது.

34—

## இலவசப் பேருந்து அட்டை

**வினா எண் 21617—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் பார்வையற்றோர்கள் மாநிலம் முழுவதும் இலவசமாக பயணம் செய்ய இலவச பேருந்து அட்டை வழங்க அரசு ஆவன செய்யுமா?



2001 ஜனவரி 30]

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆவன செய்யாது.

அரசாணை நிலை எண் 176, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, நாள் 28-06-1995-ன்படி ஊனமுற்றோர் இலவசமாகப் பயணம் செய்ய பயணச்சலுகை வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் குடும்ப அட்டை மற்றும் நிரந்தர இருப்பிடச் சான்றிதழ்களுடன் மேற்படி ஊனமுற்றோர் சம்பந்தப்பட்ட மாவட்ட மறுவாழ்வு அலுவலரை அணுகி அன்னாரின் பரிந்துரைக் கடிதங்களுடன் போக்குவரத்துக் கழகங்களை அணுகி இலவசப் பயண அட்டை பெற்று பயணம் செய்கின்றனர். அரசாணை எண் 28, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, நாள் 25-01-1996-ன்படி பார்வையற்றோருக்கு எவ்வித நிபந்தனையுமின்றி மாவட்டம் முழுவதும் சென்று வர இலவச பயணச் சலுகை வழங்கப்பட்டு வருகிறது. அரசாணை எண் 315, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, நாள் 13-12-1996-ன்படி பார்வையற்றவர்கள் மட்டுமின்றி அனைத்து ஊனமுற்ற நபர்களும் சில நிபந்தனைகளுக்குட்பட்டு 100 கிலோமீட்டர் வரை பயணம் செய்ய இலவசப் பேருந்து பயணச் சலுகை வழங்கப்பட்டு வருகிறது.

அரசாணை எண் 164, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, நாள் 13-05-1997-ன்படி ப்ளஸ்-2 வரை படிக்கும் அனைத்து ஊனமுற்ற மாணவர்களுக்கும் அவர்கள் இருப்பிடத்திலிருந்து பள்ளி வரை சென்று வர எவ்வித நிபந்தனைகளுமின்றி இலவசப் பயண அட்டை வழங்கப்பட்டு வருகிறது.

ஊனமுற்றவர்கள் அரசுப் பேருந்துகளில் இலவசப் பயணச் சலுகைகள் வழங்கும் திட்டத்தினை 2000-2001-ம் ஆண்டு தொடர அரசாணை நிலை எண் 120, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை நாள் 17-07-2000-ல் தொடராணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி பயணச் சலுகைகள் தவிர தமிழ்நாட்டில் பார்வையற்றவர்கள் மாநிலம் முழுவதும் இலவசமாக பயணம் செய்ய இலவசப் பேருந்து அட்டை வழங்க திட்டம் ஏதும் அரசு பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

35—

**பராமரிப்பு இல்லங்கள்**

**வினா எண் 39271—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் ஆதரவற்ற, கைவிடப்பட்ட குழந்தைகள் நலத்திற்காக அரசு எத்தனை பராமரிப்பு இல்லங்களை நடத்துகிறது?

(ஆ) அந்த பராமரிப்பு இல்லங்களில் எவ்வளவு குழந்தைகள் உள்ளனர்?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆதரவற்ற குழந்தைகளின் நலத்திற்காக, அரசு தமிழ்நாடு முழுவதும் மொத்தம் 25 குழந்தைகள் காப்பகங்களை, 5500 குழந்தைகளின் நலனுக்காக நடத்தி வருகின்றது. அக்குழந்தைகள் காப்பகங்களில் தற்போது மொத்தம் 4785 குழந்தைகள் பயனடைந்து வருகின்றனர்.

36—

**வீட்டுமனைப்பட்டா**

**வினா எண் 13558—திரு. ச. இராஜரெட்டி:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தளிதொகுதி, தளி ஒன்றியம், சாலிவாரம் டி. மல்லசந்திரம் ஓஜீர் கெலமங்கலம் ஒன்றியம், ஜார்காலட்டி கிராமங்களில் ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனைப்பட்டா கொடுக்க அரசு கைப்பற்றிய நிலங்களில் உள்ள தடை உத்தரவை நீக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?





விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

தளிதொகுதி, தளி ஒன்றியம், சாலிவாரம் டி. மல்லசந்திரம் ஓஜீர் கிராமங்களில் ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனைப்பட்டா கொடுக்க அரசு கைப்பற்றிய நிலங்களில் தடை உத்தரவை நீக்க அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

37—

**நிலப்பட்டா**

**வினா எண் 15275—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தாலுகா, தில்லைவிளாகம் மேலபழவேற்காட்டில் வசித்து வரும் ஆதிதிராவிட மக்களுக்கு நிலப்பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம், தில்லை விளாகம் மற்றும் மேலபழவேற்காடு கிராம ஆதிதிராவிடர்களுக்கு நிலப்பட்டா வழங்குவது தொடர்பாக இடம் ஆய்வு செய்ததில் தில்லை விளாகம் கிராமத்தில் அரசிற்கு சொந்த நிலங்கள் ஏதும் பட்டா வழங்க வேண்டிய வகையில் நேரடி பேச்சு வார்த்தை மூலம் அரசிற்கு கிரயம் செய்து கொள்ள எவரும் முன்வராததாலும், சித்தாய்மூர் அ/மி ஸ்வர்ணதாபலோசுவர ஸ்வாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான புஞ்சை நிலம் புல எண் 183-ல் 3.00 ஏக்கர் நில எடுப்பு செய்ய உரிய அனுமதி வேண்டி இந்து சமய அறநிலையத் துறைக்குக் கேட்கப்பட்டுள்ளது. அத்துறையிலிருந்து அறிக்கை வரப்பெற்றபின் நடவடிக்கை மேற்கொண்டு, தில்லைவிளாகம் மேலபழவேற்காடு

[2001 ஜனவரி 30

கிராமத்தில் ஆதிதிராவிட மக்களுக்கு நிலப்பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருக்கிறது.

**38—**

**பட்டா**

**வினா எண் 18512—திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ). சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் பேரூராட்சியில் 18-வது வார்டில் வசிக்கும் அருந்ததியர்களுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், இந்த நிதியாண்டில் வழங்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் பேரூராட்சியில் 18-வது வார்டில் வசிக்கும் அருந்ததியர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**39—**

**இலவசமாக குறிப்பேடுகள்**

**வினா எண் 25206—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1998-99ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மாணவ, மாணவியர்களுக்கு இலவசமாக குறிப்பேடுகள் உரிய காலத்தில் வழங்கப்பட்டுள்ளதா?



2001 ஜனவரி 30]

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

1998-99ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மாணவர்/மாணவியர்களுக்கு உரிய காலத்தில் இலவசமாக குறிப்பேடுகள் வழங்கப்பட்டன.

**40—**

**பட்டா வழங்குதல்**

**வினா எண் 39261—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, வெள்ளரிவெள்ளியில் ஆதிதிராவிடர் மக்கள் குடியிருந்து வரும் நிலத்திற்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

எடப்பாடி தொகுதி, வெள்ளரிவெள்ளியில் ஆதிதிராவிடர் மக்கள் குடியிருந்து வரும் நிலத்திற்கு பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**41—**

**உதவித் தொகை**

**வினா எண் 11471—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1999 ஆம் ஆண்டு சேலம் மாவட்டத்தில் எத்தனை தாழ்த்தப்பட்டவர்களின் பெண் குழந்தைகள் கல்வியைத் தொடர ஆறாம் வகுப்பில் உதவித் தொகை பெற்றனர்?

(ஆ) இத்திட்டம் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களின் பெண் குழந்தைகளுக்கும் விரிவுபடுத்தப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) பெண் கல்வி ஊக்குவிப்புத் திட்டத்தின்கீழ் கல்வி தொடர சேலம் மாவட்டத்தில் 1999 ஆம் ஆண்டில் ஆறாம் வகுப்பில் உதவித் தொகை பெற்று பயனடைந்த ஆதி திராவிட மாணவிகளின் எண்ணிக்கை : 725

பழங்குடியின மாணவிகளின் எண்ணிக்கை : 88

(ஆ) பெண் கல்வி ஊக்குவிப்புத் திட்டத்தின்கீழ் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சீர் மரபினர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கும் திட்டம் 1999-2000 ஆண்டு முதல் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

42—

### வேலைவாய்ப்பு

**வினா எண் 42399—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) படித்துவிட்டு பணியற்ற ஆதி திராவிடர், பழங்குடியினர் நலம் பேண கிராமங்களில் வேலைவாய்ப்பு ஏற்படுத்தித் தர அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் அரசு சார் நிறுவனங்களில் பணி அமர்த்துவதில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்காக 19 சதவிகிதம் (18+1)





ஒதுக்கப்பட்டுள்ளது. கிராமங்களுக்கும் இது பொருந்தும் எனவே கிராமங்களுக்கென தனியே ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தித் தர இயலாது.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

43—

### வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 42405—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1999-2000 ஆண்டில் எடப்பாடி தொகுதி, கண்ணந்தேரி கிராமத்தில் இலவச வீட்டுமனை கோரி விண்ணப்பித்துள்ள ஆதிதிராவிடர் எவ்வளவு பேர்?

(ஆ) அவர்களில் எவ்வளவு பேருக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 1999-2000 ஆண்டில் எடப்பாடி தொகுதி, கண்ணந்தேரி கிராமத்தில் இலவச வீட்டுமனை கோரி விண்ணப்பங்கள் ஏதுமில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

44—

### பிரிமியத் தொகை

**வினா எண் 41487—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓய்வு பெற்ற நீதிபதி ஒருவரைக் கொண்டு விசாரணைக் கமிஷன் அமைத்து ஒவ்வொரு மீனவர் பெயரிலும் செலுத்தப்பட்டுள்ள

[2001 ஜனவரி 30

விபத்து காப்புறுதி பிரிமியத்தொகை அந்த மீனவர் பெயரிலும் அரசு குறிப்பிட்டுள்ள இடத்தில் செலுத்தி மீனவர்களுக்கு மூன்று ஆண்டு ரசீது கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) இத்திட்டம் நடைமுறையில் இல்லை. ஆகையால் வினாவில் குறிப்பிட்டுள்ள திட்டத்தினை செயல்படுத்திட இயலாது.

(ஆ) கேள்வி எழாது.

**45—**

**வலை உலர்த்தும் கூடம்**

**வினா எண் 41517—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள பெரிய மீனவ கிராமங்களில் வலை உலர்த்தும் கூடம் அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டிலுள்ள பெரிய மீனவ கிராமங்களில் வலை உலர்த்தும் கூடம் அமைக்கும் திட்டம் ஏதும், மீன் வளத் துறையின் செயல்பாட்டில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.



2001 ஜனவரி 30]

**46—**

**மானியம்**

**வினா எண் 41518—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் மீன்வளர்ப்பை ஊக்குவிக்க கிராமங்களிலுள்ள விவசாயிகளுக்குப் பயிற்சியும், கடனுதவியுடன் கூடிய மானியமும் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் உள்நாட்டு மீன்வள உற்பத்தியை ஊக்குவிக்க கீழே கண்டுள்ள நோக்கங்களுக்கான மீன்வள மேம்பாட்டு முகமைகள் அமைக்கப்பட்டுள்ளன:—

(1) கழிமுகப் பகுதி, தூர்ந்துபோன குளங்கள் மற்றும் நீர்தேங்கும் குட்டைகளை சீரமைத்து மீன்வளர்ப்பிற்கு ஏற்றவாறு மாற்றியமைத்தல்.

(2) இம்முகமையின் பணியை ஒரு மையப் பகுதியிலிருந்து அனைத்துப் பகுதிகளுக்கும் விரிவுபடுத்துதல்.

(3) மீன்வளர்ப்பு என்ற புதியதொரு தொழிலை ஏற்படுத்தி பயிற்சிகளின் மூலம் விவசாயிகளை மீன்வளர்ப்பில் ஈடுபடுத்துதல், அதன் மூலம் வேலை வாய்ப்பினை பெருகச் செய்தல்.

(4) விஞ்ஞான ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் மீன் பண்ணைகளை அமைத்து கிராமத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்துதல்.

கிராமங்களிலுள்ள குளம் குட்டைகள் குத்தகைக்கு எடுத்து அதனில் மீன் உற்பத்தி செய்யவும், மேலும் சொந்த குளம் குட்டைகளில் மீன்வளர்ப்பு செய்வதற்கும் மீன்வள மேம்பாட்டு முகமை மூலம் கீழே கண்டுள்ள விவரப்படி மானியம் வழங்கப்பட்டு வருகிறது:—

(1) சொந்த நிலங்களில் புதிய குளங்களை வெட்டி உள் வெளிமடை அமைப்பதற்கு மானியம் அளித்தல்.

[2001 ஜனவரி 30

*(2) குளங்கள் சீர் அமைத்தலுக்கான மானியம் வழங்குதல்*

*(3) மீன் வளர்க்கத் தேவையான உணவு, உரம் போன்றவற்றை வாங்குவதற்கு மானியம் அளித்தல்.*

*(4) நீரேற்றும் இயந்திரம் மற்றும் ஏரேட்டர் போன்றவற்றை வாங்குவதற்கு மானியம் அளித்தல்.*

மேலும் நன்னீர் மீன்குஞ்சு உற்பத்தி நிலையம் வைப்பதற்கும் மற்றும் மீன்தீவன நிலையம் அமைப்பதற்கும் மானியம் வழங்கப்படுகின்றன.

மீன்வள மேம்பாட்டு முகமையால் தேர்வு செய்யப்படும் மீன் வளர்ப்போருக்கு மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்குத் தேவையான தொழில் நுட்பப் பயிற்சி 10 நாட்களுக்கு அரசு செலவில் அளிக்கப்பட்டு வருகின்றது.

கிராமங்களிலுள்ள விவசாயிகளும் மீன்வள மேம்பாட்டு முகமைகளில் மீன் வளர்ப்போராக சேர்ந்து மீன் வளர்ப்பதற்காக மானியம் அந்தந்த மண்டலங்களிலுள்ள மீன்துறை உதவி இயக்குநர்கள் (உள்நாட்டு மீன்வளம்/நீர்வாழ் உயிரின வளர்ப்பு) மூலம் பெறலாம். மேலும் கிராம விவசாயிகள் கடன் உதவி பெறுவதற்கு அருகிலுள்ள வங்கிகளை அணுகி பயன்பெறலாம்.

**47—**

**கலப்பின மீன் குஞ்சுகள்**

**வினா எண் 41520—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) மீன் வளர்ப்புக்கு கலப்பின மீன்குஞ்சுகள் விவசாயிகளுக்கு கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*



2001 ஜனவரி 30]

*(ஆ) மீன்வளர்ப்போர் தங்கள் தேவைக்கு, அருகில் உள்ள மீன்துறை மற்றும் தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழக கட்டுப்பாட்டில் உள்ள மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்களிலிருந்து மீன்குஞ்சுகள் பெற்று, வளர்த்து விற்பனை செய்யலாம்.*

**48—**

**இலவச விடுகள்**

**வினா எண் 41673—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தமிழ்நாட்டில் கடல் மீன் பிடிப்பவர்களுக்கு இலவச வீடுகள் கட்டிக் கொடுப்பதுபோல், சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், காவேரி ஆற்றில் மீன் பிடிப்பவர்களுக்கு இலவச வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) நடப்பு நிதியாண்டில் (2000-2001-ல்) வீடு கட்டித்தரக் கோரும் உள்நாட்டு மீனவர்களுக்கு கீழ்க்கண்ட தகுதிகள் இருப்பின் அவர்களது கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு வீடுகள் கட்டித்தரப்படும்:—*

*1. பயனாளி உள்நாட்டு மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினராக இருத்தல் வேண்டும்.*

*2. உள்நாட்டு மீனவர் பெயரில் அல்லது அவரது மனைவி பெயரில் பட்டா நிலம் இருக்க வேண்டும்.*

*3. வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள மீனவராக இருத்தல் வேண்டும்.*

**49—**

## தொகுப்பு விடுகள்

**வினா எண் 41674—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட ஒகேனக்கல், ஊட்டமலை, நாகமலை பகுதிகளில் உள்ள மீனவர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) நடப்பு நிதியாண்டில் 2000-2001-ல் ஆயிரம் உள்நாட்டு மீனவர்களுக்கு கீழ்க்காணும் தகுதி அடிப்படையில் இலவச வீடுகள் கட்டித்தர அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது:—

1. பயனாளி உள்நாட்டு மீனவ கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினராக இருத்தல் வேண்டும்.

2. உள்நாட்டு மீனவர் பெயரில் அல்லது அவரது மனைவி பெயரில் பட்டா நிலம் இருக்க வேண்டும்.

3. வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள மீனவராக இருத்தல் வேண்டும்.

**50—**

## நிவாரணத் தொகை

**வினா எண் 42170—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் 1999-2000 ஆண்டில் மீனவர் குழு விபத்து காப்புறுதித் திட்டத்தின்கீழ் எவ்வளவு மீனவர் குடும்பங்களுக்கு நிவாரணத் தொகை அளித்துள்ளது?



விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:**

1999-2000 ஆண்டில் மீனவர் குழு விபத்து நிவாரணத் திட்டத்தின்கீழ் 384 குடும்பங்களுக்கு நிவாரணத் தொகை அளிக்கப்பட்டுள்ளது.

# ஆறாவது பட்டியல்

**1—**

## கூடுதல் வகுப்பறைகள்

**வினா எண் 41549—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், தருமபுரி அரசினர் கலைக் கல்லூரியில் போதுமான கட்டட வசதியில்லாமல் இருப்பதால், கூடுதலான வகுப்பறைகள் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி அரசினர் கலைக் கல்லூரியில் கூடுதலாக நான்கு வகுப்பறைகள் கட்ட 1999-2000 நிதியாண்டில் ரூ.32.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து அரசாணை நிலை எண் 349, உயர்கல்வி (டி2) துறை, நாள் 15-7-1999-ல் உரிய ஆட்சி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. கட்டடம் கட்டுவதற்கான பூர்வாங்க வேலைகள் நடைபெற்று வருகின்றன.

**2—**

## உயர்நிலைப் பள்ளி

**வினா எண் 41856—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2001 ஜனவரி 30

காடையாம்பட்டி வட்டம், கே.என்.புதூர் நடுநிலைப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

சேலம் மாவட்டம், காடையாம்பட்டி வட்டம், கே.என்.புதூர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்துவதற்கு கருத்துரு எதுவும் பெறப்படவில்லை.

3—

## நூலகங்கள்

**வினா எண் 42208—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் எத்தனை அரசு நூலகங்கள் உள்ளன?

(ஆ) எத்தனை நூலகங்கள் அரசு கட்டடத்திலும், தனியார் கட்டடத்திலும் இயங்கி வருகின்றன?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் 92 பொது நூலகங்கள் செயல்படுகின்றன. அவற்றின் விவரம் கீழே தரப்பட்டுள்ளது:—

| | | | |
|---|---|---|---|
| அ) | மைய நூலகம் | - | 1 |
| ஆ) | கிளை நூலகங்கள் | - | 53 |
| இ) | ஊர்ப்புற நூலகங்கள் | - | 10 |
| ஈ) | பகுதிநேர நூலகங்கள் | - | 27 |
| உ) | இயங்கும் நூலகம் | - | 1 |
| | மொத்தம் | - | 92 |



2001 ஜனவரி 30]

(ஆ) அரசுக் கட்டடத்திலும் தனியார் கட்டடத்திலும் இயங்கி வரும் நூலகங்கள் பற்றிய விவரம் கீழே தரப்பட்டுள்ளது:—

| வ.எண் | நூலகங்கள் விவரம் | சொந்தக் கட்டடத்தில் செயல்படும் நூலகங்கள் | வாடகைக் கட்டடத்தில் செயல்படும் நூலகங்கள் | இலவசக் கட்டடத்தில் செயல்படும் நூலகங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1. | மாவட்ட மைய நூலகம் | 1 | - | - | 1 |
| 2. | கிளை நூலகங்கள் | 36 | 11 | 6 | 53 |
| 3. | ஊர்ப்புற நூலகங்கள் | 2 | - | 8 | 10 |
| 4. | பகுதிநேர நூலகங்கள் | 2 | - | 25 | 27 |
| | மொத்தம் | 41 | 11 | 39 | 91 |

4—

## வாக்குச் சாவடி

**வினா எண் 44032—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணம் ஒன்றியம், காவாளிப்பட்டி ஊராட்சி, செவ்வாய்பட்டி கிராமத்தில் உள்ள ஒன்றியப் பள்ளியில் வாக்குச் சாவடி அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

வாக்குச் சாவடிகள் பெரும்பாலும் நிரந்தர அடிப்படையிலேயே அமைக்கப்படுகின்றன. ஏனெனில் வாக்காளர்களுக்கு அவர்கள் வழக்கமாக வாக்களிக்கும் வாக்குச்சாவடி அமைவிடங்கள் பழக்கமாகியிருக்கும். புதிய அல்லது கூடுதல் வாக்குச்சாவடிகளை

அமைக்க இந்திய தேர்தல் ஆணையம் கீழ்க்கண்ட சூழ்நிலைகளில் மட்டுமே ஒப்புதல் வழங்குகிறது :

(1) தற்போதுள்ள வாக்குச்சாவடிகளை அமைக்க கட்டடங்கள் கிடைக்காமற் போதல்.

(2) கட்டடம் பழுதடைந்தோ, முற்றிலும் இடிக்கப்பட்டு வாக்குப்பதிவு நடத்த இயலாத நிலையிலோ இருத்தல்.

(3) ஒரு வாக்குச்சாவடிக்கு 1500 வாக்காளர்கள் என்ற நிர்ணயிக்கப்பட்ட அதிகபட்ச அளவைக் கடத்தல்.

எனவே, மேற்கண்ட வரையறைகளின் அடிப்படையில், பொதுத் தேர்தல்கள்/இடைத்தேர்தல்/வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தம் ஆகியவை நடைபெறும்போது வாக்குச் சாவடிகளைப் புதியதாக அமைத்தல்/ இடமாற்றம் செய்தல் முதலான கருத்துருக்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து பெறப்பட்டு இந்தியத் தேர்தல் ஆணையத்தின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

5—

## இட ஒதுக்கீடு

**வினா எண் 41288—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1999 ஆம் கல்வி ஆண்டில் கிராமப்பள்ளி மாணவர்களுக்கு தொழிற் கல்வி கல்லூரிகளில் 15 சதவீத இட ஒதுக்கீட்டின்படி எவ்வளவு மாணவர்கள் மருத்துவக்கல்லூரியில் மருத்துவம் படிக்க தேர்ந்தெடுக்கப்பட்டனர்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

1999 ஆம் கல்வி ஆண்டில் கிராமப்பள்ளி மாணவர்களுக்கு தொழிற்கல்வி கல்லூரிகளில் 15 சதவீத இட ஒதுக்கீட்டின்படி, 86





மாணவர்கள் மருத்துவக் கல்லூரியில் மருத்துவம் படிக்கத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

6—

## விளையாட்டு வீரர்களுக்கு முன்னுரிமை

**வினா எண் 42123—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு மருத்துவப்படிப்பில் சேர்க்க முன்னுரிமை வழங்க இயலுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஒவ்வொரு ஆண்டும் மருத்துவப் பட்டப்படிப்பில் (எம்.பி.பி.எஸ்.) சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு மூன்று இடங்கள் சிறப்பு ஒதுக்கீட்டின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகின்றது.

7—

## பொதுக் கழிப்பறைகள்

**வினா எண் 34233—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகரமன்றத்தால் கட்டப்பட்டுள்ள பொதுக் கழிப்பறைகள் எத்தனை?

(ஆ) அவை எவ்வாறு சுத்தம் செய்து பராமரிக்கப்படுகின்றன?

(இ) இதுகுறித்து பொதுமக்கள் திருப்தி அடைந்துள்ளனரா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) திருப்பூர் நகராட்சியால் கட்டப்பட்டுள்ள பொதுக் கழிப்பறைகளின் எண்ணிக்கை மொத்தம் 40 ஆகும்.

(ஆ) நகராட்சி துப்புரவுப் பணியாளர்களைக் கொண்டு தினமும் கழிப்பிடம் சுத்தம் செய்யப்படுகிறது.

(இ) பொதுக் கழிப்பிடங்கள் பராமரிப்பு குறித்து பொதுமக்கள் திருப்தியாக உள்ளனர். குறைகள் தெரிவித்தால் அவ்வப்போது சரிசெய்யப்படுகிறது.

**8—**

## கழிப்பிட வசதி

**வினா எண் 34483—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் 11-வது வார்டு எம்.எஸ்.நகரில் ஆதிதிராவிடர் காலனியில் பொதுக் கழிப்பிட வசதி இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது பொதுக் கழிப்பிடம் கட்டப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நகராட்சி 11-வது வார்டு எம்.எஸ்.நகர் ஆதிதிராவிடர் காலனியில் "ஒருங்கிணைந்த சுகாதாரத்" திட்டத்தின் கீழ் ரூ.10 லட்சம் மதிப்பீட்டில் பொதுக் கழிப்பிடம் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.





**9—**

## கழிவுநீர் உறிஞ்சி

**வினா எண் 34485—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகராட்சியில் கழிவுநீர் உறிஞ்சி அப்புறப்படுத்தும் வண்டிகள் எத்தனை இயங்குகின்றன?

(ஆ) எத்தனை நாளைக்கு ஒரு முறை கழிவுநீர் உறிஞ்சி வெளியேற்றப்படுகிறது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) திருப்பூர் நகராட்சியில் கழிவுநீர் உறிஞ்சி அப்புறப்படுத்தும் வண்டிகள் இரண்டு இயங்குகின்றன.

(ஆ) அவை நாள்தோறும் கழிவுநீர் உறிஞ்சி வெளியேற்றப் பயன்படுத்தப்படுகின்றன.

**10—**

## கழிப்பிட வசதி

**வினா எண் 34984—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் 15—வேலம்பாளையம் பேரூராட்சி, அனுப்பர்பாளையம் நடுநிலைப்பள்ளியில் கழிப்பிட வசதி இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது கழிப்பிட வசதி செய்து தரப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) பள்ளிகள் பேரூராட்சிகள் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்படுவதில்லை. இருப்பினும் கோவை மாவட்டம், 15 வேலம்பாளையம் பேரூராட்சிக்குட்பட்ட அனுப்பர்பாளையம் நடுநிலைப்பள்ளியில் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்து ரூபாய் 40,000/- மதிப்பீட்டில் கழிப்பிடம் கட்டப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டு வரப்படுகிறது.*

**11—**

**சுற்றுச்சுவர்**

**வினா எண் 35383—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) திருநெல்வேலி மாவட்டம், அரியப்புரம் ஊராட்சி, திரவிய நகரில் உள்ள ஊராட்சி ஒன்றியப் பள்ளியைச் சுற்றி, சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) இல்லை.*

**12—**

**பள்ளிக்குக் கூடுதல் வசதி**

**வினா எண் 35817—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



*(அ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், குலசேகரன்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் பள்ளிக் கட்டடத்தை சீர் செய்து, குடிநீர் வசதி மற்றும் கழிப்பிட வசதி செய்து கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?*

விடை—

**மாண்புமிகு திரு.கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியம், குலசேகரன்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியை பழுது நீக்கம் செய்ய ஒன்றியக் குழுவின் தீர்மானம் நிறைவேற்றி விரைவில் பழுது நீக்கம் செய்யப்படும்.*

**13—**

**வாயில் அமைத்தல்**

**வினா எண் 35934—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி புதிய பேருந்து நிலையத்திலிருந்து மருத்துவமனைக்குச் செல்ல வாயில் அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?*

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி புதிய பேருந்து நிலையத்திலிருந்து மருத்துவமனைக்கு பொதுமக்கள் செல்ல தற்பொழுது பாதை அமைக்கப்பட்டுள்ளது. அதை பொதுமக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.*

14—

## ஆரம்பப் பள்ளிகளைப் பழுதுபார்த்தல்

**வினா எண் 36432—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியம் மற்றும் எடப்பாடி ஊராட்சி ஒன்றியம் ஆகிய பகுதிகளிலுள்ள ஆரம்பப் பள்ளிகளைப் பழுதுபார்க்க அரசு சிறப்பு மானியம் வழங்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் அரசு தெரிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியத்தில் மொத்தம் 59 பள்ளிகளில் 136 கட்டடங்கள் உள்ளன. அதில் 1999-2000 ஆண்டு பழுது நீக்கியவை 28 பள்ளிக் கட்டடங்கள். செலவினத் தொகை ரூ.4,85,581. 2000-2001-ம் ஆண்டில் பழுது நீக்கியது 3 பள்ளிக் கட்டடங்கள். செலவினம் ரூ.36,036. இன்னும் பழுதுபார்க்க வேண்டிய கட்டட எண்ணிக்கை 56 ஆகும். பழுதுநீக்க தோராய மதிப்பீடு ரூ.15,00,000 ஆகும். எடப்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் 1997-98 ஆம் ஆண்டு 40 ஊராட்சி ஒன்றிய பள்ளிக் கட்டடங்களும் 1999-2000-ம் ஆண்டில் 36 பள்ளிக் கட்டடங்களும் பழுதுபார்க்கப்பட்டுள்ளன. தற்போது 8 பள்ளிக் கட்டடங்கள் மட்டும் ரூ.76,000/- மதிப்பீட்டில் பழுதுபார்க்க உத்தேசிக்கப்பட்டு இப்பணிக்கு விரைவில் ஒன்றியக் குழு மூலம் நிர்வாக அனுமதி பெற நடவடிக்கை மேற்கொண்டு டெண்டர் மூலம் கல்வி நிதியிலிருந்து பணிகள் முடிக்கப்படும்.





15—

## கடைகள் கட்டுதல்

**வினா எண் 37709—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் பேருந்து நிலையத்திலுள்ள சங்கீத சபா இடத்தில் முன் அனுமதியின்றி கடைகள் நடத்தப்பட்டு வருவதை அரசு அறியுமா?

(ஆ) இத்தகைய வருவாய் இழப்பை சரி செய்ய அரசு என்ன நடவடிக்கை எடுக்க உள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் நகராட்சிப் பேருந்து நிலையத்திலுள்ள சங்கீத சபா அருகில் மூன்று பெட்டிக் கடைகள் வைத்துக்கொள்ள வேலூர் நகர்மன்றத் தீர்மானம் எண் 663, நாள் 27-3-1996-ல் அனுமதித்ததன் அடிப்படையில் கடைகள் வைக்கப்பட்டுள்ளன. இக்கடைகளுக்கு கடை எண் 27, 29, 34 என எண்களிடப்பட்டு முறையே ரூ.886/- ரூ.1,323/- மற்றும் ரூ.1,179/- ஆக மாத வாடகை வசூலிக்கப்படுகிறது. இக்கடைகளை அகற்றக் கூடாது என்று மேற்படி கடைகளின் உரிமைதாரர்கள் 1997-ம் ஆண்டு நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து வழக்கு நிலுவையில் உள்ளது. இது அல்லாமல் முன் அனுமதியின்றி நடத்தப்படும் கடைகள் ஏதும் இல்லை. அவ்வாறு முன் அனுமதியின்றி ஆக்கிரமிப்பு செய்து கடைகள் வைக்கப்படும் பட்சத்தில் ஆக்கிரமிப்புகளைக் கண்டறிந்து அவை நகராட்சியால் அவ்வப்போது அகற்றப்படுகின்றன.

16—

## குடிநீர் வசதி

**வினா எண் 37936—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2001 ஜனவரி 30

ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், குண்டுக்கல் ஊராட்சியிலுள்ள கொட்டலூர் புதூர், சிகல்பாப்பட்டி, ஜோடுகுழிபுதூர், ஜோடுகுழி புது காலனி ஆகிய இடங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டி குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

ஓமலூர் தொகுதி, கடையாம்பட்டி ஒன்றியம், குண்டுக்கல் ஊராட்சியிலுள்ள கொட்டலூர் புதூர், சிகல்பாப்பட்டி, ஜோடுகுழிபுதூர், ஜோடுகுழி புது காலனி ஆகிய குடியிருப்புகளின் 1992 ஆம் ஆண்டு மறு ஆய்வின்படி மக்கட் தொகை மற்றும் குடிநீர் விநியோக விவரம் கீழ்க்கண்டவாறு:—

| வ.எண் | குடியிருப்பின் பெயர் | மக்கட்தொகை | நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு லிட்டர் |
|---|---|---|---|
| 1. | கொட்டலூர் புதூர் | 520 | 25 |
| 2. | சிகல்பாப்பட்டி | 720 | 25 |
| 3. | ஜோடுகுழி புதூர் | 225 | 20 |
| 4. | ஜோடுகுழி புது காலனி | 120 | 25 |

இக்குடியிருப்புகளுக்கு வரும் நிதியாண்டில் (2000-2001) நிதி ஆதாரத்தைப் பொறுத்து முன்னுரிமை அடிப்படையில் மேல்நிலைத் தொட்டி கட்டி குடிநீர்த் திட்டம் செயலுக்கு எடுத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

**17—**

## நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 38006—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2001 ஜனவரி 30]

(அ) வேலூர் மாவட்டம், வேலூர் சத்துவாச்சாரி பேரூராட்சியில் புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் திட்டம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) அரசு ஆணை (நிலை) எண் 106, ந.நி.(ம)கு.வ. துறை, நாள் 11-8-2000-ல் வேலூர் நகராட்சி, சத்துவாச்சாரி நகரப் பேரூராட்சி மற்றும் 12 வழியோரக் கிராமங்களுக்கான குடிநீர் அபிவிருத்தித் திட்டத்திற்கு ரூ.19.28 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்ட மதிப்பீட்டில் சத்துவாச்சாரி பேரூராட்சியில் கூடுதலாக கீழ்க்கண்ட இடங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் புதியதாக அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது:—

| | | இலட்சம் லிட்டர் கொள்ளளவு |
|---|---|---|
| 1. | ரங்காபுரம் பகுதி | 2.00 |
| 2. | வீட்டு வசதி வாரியக் குடியிருப்பு | 4.00 |
| 3. | வீட்டு வசதி வாரியக் குடியிருப்பு | 3.00 |

(ஆ) உடனடியாக இத்திட்டம் செயல்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ளது.

**18—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 38336—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட மாதே அள்ளி ஊராட்சி, ஆண்டார அள்ளி கிராமத்தில் குடிநீர்

[2001 ஜனவரி 30

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்காமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட மாதேஅள்ளி ஊராட்சி, ஆண்டார அள்ளி கிராமத்தில் குடிநீர் பற்றிய பிரச்சினை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

(ஆ) இக்குடியிருப்பின் தற்போதைய மக்கட் தொகை 320 ஆகும். இங்கு கையிறைப்பான் ஒன்று பயனில் உள்ளது. இக்குடியிருப்பிற்கு நாளொன்றுக்கு நபர் ஒன்றுக்கு 10 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இருப்பினும் வரும் நிதியாண்டுகளில் தேவை மற்றும் தகுதியின் அடிப்படையில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் அமைக்க பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**19—**

## குடிநீர்த் தொட்டிகள்

**வினா எண் 38371—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மாங்கரை ஊராட்சி, நாய்க்குட்டை கொட்டாய் கிராமத்தில் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் இங்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்படுமா?



2001 ஜனவரி 30]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மாங்கரை ஊராட்சி, நாய்க்குட்டை கொட்டாய் கிராமத்தின் குடிநீர் பற்றிய பிரச்சினை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

(ஆ) 1992 ஆம் ஆண்டு குடிநீர் மறு ஆய்வின்படி, இக்குடியிருப்பு, குறியீட்டு புத்தகத்தில் இடம் பெறாத குடியிருப்பு ஆகும். இக்குடியிருப்பின் மொத்த மக்கட் தொகை 60 ஆகும். இக்குடியிருப்பில் மக்கட் தொகை மிகக் குறைவாக உள்ளதால், வாரிய விதிமுறைகளின்படி இக்குடியிருப்பிற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்கு வழிவகையில்லை. எனவே, ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் கையிறைப்பான் திட்டம் அமைத்து மக்களுக்கு குடிநீர் வழங்கலாம்.

**20—**

## சாலைகள்

**வினா எண் 38506—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர், தொரப்பாடி பேரூராட்சி, கிருஷ்ண மந்திரி கார்டன் பகுதியில் சரியான சாலைகள் இல்லாததை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், புதிய சாலைகளை உடனே அமைக்க நடவடிக்கை எப்போது எடுக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) வேலூர், தொரப்பாடி பேரூராட்சி, கிருஷ்ண மந்திரி கார்டன் பகுதியில் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தார்ச் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

[2001 ஜனவரி 30

21—

## பணி நிரந்தரம்

**வினா எண் 39283—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகராட்சியில் பணிபுரியும் பல்வேறு பணியாளர்கள் இன்னும் பணி நிரந்தரம் செய்யப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பணி நிரந்தரம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) எடப்பாடி நகராட்சியில், தினக்கூலிப் பணியாளர்களாக 16 பணியாளர்கள் பணிபுரிந்து வந்தனர். அப்பணியாளர்களில் 3 பேர் அரசாணை (நிலை) எண் 125, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 27-5-1999-ன்படி நகராட்சியில் காலியாக இருந்த மூன்று வருவாய் உதவியாளர் பணியிடங்களில் முறையான பணியில் அமர்த்தப்பட்டுள்ளார்கள். மீதமுள்ள பணியாளர்களையும் நகராட்சியில் அவ்வப்போது காலியாகும் பணியிடங்களில் முறைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

22—

## கூடுதல் மேல்நிலைத் தொட்டிகள்

**வினா எண் 39373—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, கூத்தப்பாடி ஊராட்சி, கூத்தப்பாடி கிராமத்தில் அதிகமான மக்கள் தொகை இருப்பதாலும், குடிநீர்



2001 ஜனவரி 30]

பற்றாக்குறை அதிகமாக இருப்பதாலும், இங்கு கூடுதலாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) பெண்ணாகரம் தொகுதி, கூத்தப்பாடி ஊராட்சி, கூத்தப்பாடி கிராமத்தின் குடிநீர் பற்றிய பிரச்சினை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

(ஆ) இக்குடியிருப்பின் தற்போதைய மக்கட் தொகை 1300 ஆகும். இக்குடியிருப்பிற்கு 1991-1992 ஆம் ஆண்டில் 60,000 லிட்டர் கொள்ளளவு உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய மின் இறைப்பான் திட்டம் முடிக்கப்பட்டு பயனில் உள்ளது. இக்குடியிருப்பிற்கு தற்போது நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு 40 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. கூடுதல் குடிநீர் வசதிக்கு வரும் நிதியாண்டுகளில் தேவை மற்றும் தகுதியின் அடிப்படையில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டம் அமைக்க பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

23—

## குடிநீர் வசதி

**வினா எண் 39376—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட கலப்பம்பாடி ஊராட்சி, கோவள்ளி கோம்பை கிராமத்தில் குடிநீர் வசதியில்லாமல் இருப்பதால் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2001 ஜனவரி 30

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட கலப்பம்பட்டி ஊராட்சி, கோவள்ளி கோம்பை கிராமத்தின் குடிநீர் பற்றிய பிரச்சினை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

(ஆ) கோவள்ளி கோம்பை குடியிருப்பின் தற்போதைய மக்கட் தொகை 250 ஆகும். இங்கு ஒரு கையிறைப்பான் பயனில் உள்ளது. இக் குடியிருப்பில் தற்பொழுது நாளொன்றுக்கு நபர் ஒன்றுக்கு 15 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**24—**

### நகராட்சிப் பணியாளர்கள்

**வினா எண் 40080—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகராட்சிகளில் சொத்து வரி, தொழில் வரி வசூலிக்கும் பணியாளர்களை நகராட்சி மண்டல இயக்குநர் வரம்பிற்குள் கொண்டுவரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.



2001 ஜனவரி 30]

**25—**

### கட்டடத்தைப் பழுது பார்த்தல்

**வினா எண் 40177—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஊராட்சிக்குட்பட்ட கோவில் பாளையம் ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளி கதவு, ஜன்னல் மிக மோசமான நிலையில் உள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அங்குள்ள ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியைப் பழுதுபார்த்து மாணவ/மாணவியர்கள் படித்து பயன்பெற ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி ஊராட்சி ஒன்றியம், பூலாம்பட்டி பேரூராட்சியிலுள்ள கோவில்பாளையம் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக் கட்டடம் ரூ.30,000/- மதிப்பீட்டில் பழுதுபார்க்க மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணிக்கு ஒன்றியக் குழுவின் நிர்வாக அனுமதி பெற்று டெண்டர் மூலமாக கல்வி நிதியிலிருந்து பணி முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**26—**

### பேருந்து நிலையம்

**வினா எண் 41551—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்த, வேறு இடத்தில் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) டுபிட்கோவினால் பேருந்து நிலைய விரிவாக்கத் திட்டத்திற்கு கடன் உதவி அனுமதிக்கப்பட்டதும் பெண்ணாகரம் பேருந்து நிலையம் விரிவுபடுத்தப்படும். ஆனால், வேறு இடத்தில் அமைப்பதற்கான வாய்ப்புகள் இல்லை.

27—

## கட்டடத்தைச் செப்பனிடுதல்

**வினா எண் 42772—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், வடக்குக்கோட்டை ஊராட்சியிலுள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக் கட்டடம் பழுதுபட்டுள்ளதைச் செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், வடக்குக் கோட்டை ஊராட்சியிலுள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக் கட்டடம் பழுதுபட்டுள்ளதை ஒன்றிய கல்வி நிதியிலிருந்து ரூ.30,000/- மதிப்பீட்டில் பழுது நீக்கும் பணி நடைபெற்று வருகிறது.

28—

## தொழில் துவக்குதல்

**வினா எண் 40188—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





சேலம் மாவட்டத்தில் விவசாயத் தொழிலை மட்டும் நம்பியிருக்கும் மக்களுக்கு மாற்றுத் தொழில் ஒன்று துவக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

விவசாயிகளுக்கு வேளாண்மையின் புதிய நவீன தொழில் நுட்பங்களைத் தெரிவித்து வேளாண்மையைப் பெருக்குவதே இத்துறையின் நோக்கமாகும். சேலம் மாவட்டத்தில் வேளாண்மைத் தொழிலை வளர்ச்சியடைய ஊக்கப்படுத்துமே தவிர/மாற்றுத் தொழிலை வளர்க்க வேளாண்மை வீழ்ச்சி பெற இத்துறை ஒருபோதும் அனுமதிக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

29—

## அடையாள அட்டைகள்

**வினா எண் 40195—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விவசாயிகளுக்குத் தகுந்த நேரத்தில் வரையறுக்கப்பட்ட விலையில் இரசாயன உரம் கிடைத்திடும் வகையில் எந்த அடிப்படையில் உர அடையாள அட்டைகள் வழங்கப்படுகின்றன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

உரங்கள் தட்டுப்பாடு ஏற்படும் காலங்களில் விவசாயிகளுக்குத் தேவைப்படும் உரங்கள் தேவையான அளவிலும், உரிய நேரத்திலும் கிடைத்திட வேண்டுமென்ற அடிப்படையில் இவ்வுர அடையாள அட்டைகள் வழங்கும் திட்டம் முன்னோடித் திட்டமாக அனைத்து மாவட்டங்களிலும் (நீலகிரி நீங்கலாக) தெரிவு செய்த கோட்டங்களில் வழங்கப்பட்டுள்ளது. இவ்வுர அடையாள அட்டைகள் தெரிவு செய்த கோட்டங்களில் அனைத்துத் தரப்பு விவசாயிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது. இதில் தாழ்த்தப்பட்ட விவசாயிகளுக்கு மஞ்சள் நிற அட்டையாகவும், இதர விவசாயிகளுக்கு இளம் பச்சை/நீலநிற

[2001 ஜனவரி 30

அட்டையாகவும் வழங்கப்பட்டுள்ளது. இவ்வுர அடையாள அட்டைகளைக் கொண்டு கூட்டுறவுச் சங்கங்கள்/தனியார் உரக் கடைகள் மற்றும் வேளாண்மை விரிவாக்க மையங்கள் போன்ற இடங்களில் முன்னுரிமை அடிப்படையில் இடுபொருட்கள் வழங்கும் நோக்கில் விநியோகிக்கப்பட்டுள்ளது. முன்னோடித் திட்டமாக இவ்வுர அடையாள அட்டைகள் 8 இலட்சம் விவசாயிகளுக்கு ரூ.11.41 இலட்சம் செலவில் தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும், (நீலகிரி நீங்கலாக) மாவட்டத்திற்கு தெரிவு செய்து ஒரு கோட்டம் வீதம் 28 கோட்டங்களில் வழங்கப்பட்டுள்ளது. இந்த உர அடையாள அட்டைகள் தமிழகத்தில் மீதமுள்ள அனைத்து விவசாயிகளுக்கும் வழங்குவது குறித்து, வேளாண்மை இயக்குநர் உரத் தட்டுப்பாடு ஏற்படும் காலங்களில் மட்டுமே உர அடையாள அட்டைகள் விவசாயிகளுக்குப் பயன்படுமெனவும் வருங்காலத்தில் உரத் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பில்லையாதலால் இத்திட்டத்தை விரிவுபடுத்த வேண்டிய சூழ்நிலை தற்போது ஏற்படவில்லையெனவும், கருத்துத் தெரிவித்துள்ளார். வேளாண்மை இயக்குநரின் இக்கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

30—

**எண்ணெய் வித்துக்கள்**

**வினா எண் 41799—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடந்த ஆண்டு எடப்பாடி தொகுதியில் எண்ணெய் வித்துக்கள் எத்தனை ஹெக்டேரில் பயிரிடப்பட்டன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

1999-2000 ஆண்டில் எடப்பாடி தொகுதியில், நிலக்கடலை (இறவை) 1,439 எக்டரிலும், நிலக்கடலை (மானாவாரி) 14,953 எக்டரிலும், எள் (இறவை) 2,856 எக்டரிலும், எள் (மானாவாரி) 1,221 எக்டரிலும், ஆமணக்கு 2811 எக்டரிலும், சோயாபீன்ஸ் 136 எக்டரிலும் ஆக எடப்பாடி பகுதியில் கடந்த ஆண்டு 23,416 எக்டர் பரப்பில் எண்ணெய் வித்துக்கள் பயிரிடப்பட்டன.



2001 ஜனவரி 30]

31—

**மானியம்**

**வினா எண் 41800—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியை மேம்படுத்த எடப்பாடி தொகுதியில் எவ்வளவு மானியம் கடந்த ஆண்டு வழங்கப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியை மேம்படுத்த 1999-2000 ஆண்டு எடப்பாடி தொகுதியில் ஆதார விதை உற்பத்தி, விதை விநியோகம், விதைக் கொள்முதல், உயிர் உரம், நுண்ணூட்டம், இனக்கவர்ச்சி பொறி செயல் விளக்கம், ஐ.பி.எம். செயல் விளக்கம், தெளிப்பு நீர் கருவி, விதை நேர்த்தி மருந்து, ஜிப்சம் விநியோகம், பயிர் பாதுகாப்புக் கருவி மற்றும் விவசாயிகள் பயிற்சி ஆகிய 12 இனங்களின்கீழ் சிறு, மிகச்சிறு மற்றும் ஆதிதிராவிட விவசாயிகளுக்கு மொத்தம் ரூ.4,56,614/- மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

32—

**தானிய உற்பத்தி**

**வினா எண் 41804—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் 1999-2000 ஆண்டில் மொத்த தானிய உற்பத்தி எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

1999-2000 ஆண்டில் தமிழ்நாட்டில் நெல், சிறு தானியங்கள், பயிறு வகைகள் ஆகியவற்றில் கீழ்க்காணும் உற்பத்தி அடையப்பட்டுள்ளது:—

| | | | |
|---|---|---|---|
| மொத்த தானிய உற்பத்தி | .. | 89.84 இலட்சம் மெ. டன் அதில் | |
| அரிசி | .. | 72.25 இலட்சம் | ” |
| சிறு தானியங்கள் | .. | 12.93 இலட்சம் | ” |
| பயிறு வகைகள் | .. | 4.66 இலட்சம் | ” |

**33—**

## பழச் செடிகள்

**வினா எண் 42067—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் 1999-2000 ஆண்டில் பழச் செடிகள் எவ்வளவு வழங்கப்பட்டன?*

*(ஆ) அதில் பயன்பெற்ற விவசாயிகள் எத்தனை பேர்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில், 1999-2000 ஆண்டில் 2700 மாச்செடிகள், 1925 கொய்யா, 200 எலுமிச்சை மற்றும் 350 மாதுளை ஆக மொத்தம் பழச் செடிகள் 5175 எண்கள் வழங்கப்பட்டன.*

*(ஆ) இதன் மூலம் 44 விவசாயிகள் பயன் பெற்றனர்.*

**34—**

## பயிர் பாதுகாப்பு

**வினா எண் 42852—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தமிழகத்தில் வெற்றிலை பயிர் செய்யும் விவசாயிகளுக்கு பயிர் பாதுகாப்பு காப்பீட்டுத் திட்டம் அமலில் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?*





*(ஆ) ஆம் எனில், பயிர் பாதுகாப்பு காப்பீட்டுத் திட்டம் அமல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) வேளாண்மைத் துறையின்கீழ் செயல்படுத்தப்படும் தேசிய பயிர் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் நெல், சிறு தானியங்கள், பயிறு வகைகள், எண்ணெய் வித்துக்கள், பருத்தி ஆகிய பயிர்கள் அறிவிக்கை செய்யப்பட்டு, திட்டம் செயல்படுத்தப்படுகிறது. ஆனால் தோட்டக்கலைப் பயிரான வெற்றிலைப் பயிருக்கு, பயிர் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

**35—**

## சந்தனக் கட்டைகள்

**வினா எண் 42171—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*1999-2000 ஆண்டில் எவ்வளவு மதிப்புள்ள சந்தனக் கட்டைகள் சேலம் மாவட்ட வன அலுவலகத்தில் ஏலம் விடப்பட்டன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

*சேலத்திலுள்ள சந்தன மரக் கிடங்கிலிருந்து 1999-2000 ஆண்டில் 998.500 டன் சந்தனக் கட்டைகள் பொது ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டன. அதன் மூலம் ரூ.39,81,90,000/- அரசிற்கு வருவாய் கிடைக்கப் பெற்றுள்ளது.*

[2001 ஜனவரி 30

36—

### சந்தனக் கட்டைகள்

**வினா எண் 42172—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*1999-2000 ஆண்டில் எவ்வளவு மதிப்புள்ள சந்தனக் கட்டைகள் தமிழ்நாட்டில் ஏலம் விடப்பட்டது என்பதை அரசு தெரிவிக்குமா?*

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

*1999-2000 ஆண்டில் 2330.500 டன் சந்தனக் கட்டைகள் பொது ஏலத்தில் விடப்பட்டன. இதன் மூலம் மட்டும் ரூ.91,64,14,950 அரசுக்கு வருவாய் கிடைத்துள்ளது.*

37—

### உலமா ஓய்வூதியம்

**வினா எண் 40194—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*தமிழ்நாட்டில் உலமா ஓய்வூதியம் பெறுப்வர்கள் எவ்வளவு பேர்?*

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:**

*அனைத்து மாவட்டங்களிலிருந்தும் அரசால் சேகரிக்கப்பட்ட விவரங்களின்படி, 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு உலமா ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் தற்போது சுமார் 1650 நபர்கள் உலமா ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். 73 உலமா ஓய்வூதிய விண்ணப்பங்கள் அரசுக்கு சமீபத்தில் வந்துள்ளன. இவை தற்போது அரசின் பரிசீலனையில் இருந்து வருகின்றன. இந்த விண்ணப்பதாரர்களுக்கும் உலமா ஓய்வூதியம்*



2001 ஜனவரி 30]

*வழங்குவதற்கான ஆணை, வரும் சில நாட்களில் பிறப்பிக்கப்படும். இத்திட்டத்தின்கீழ் ஒப்பளிக்கப்பட்டுள்ள பயனாளிகளின் மொத்த எண்ணிக்கை 2200 ஆகும்.*

38—

### புதிய கட்டடம்

**வினா எண் 42284—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் போதிய வெளிச்சம் இல்லாமலிருப்பதால் மாவட்ட ஆட்சியர் வளாகத்திற்குப் புதிய கட்டடம் கட்டப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டும் பணி, அரசின் நிதிநிலைக்குத் தக்கவாறு மேற்கொள்ளப்படவேண்டிய நிலையில் இப்பணியை எப்போது மேற்கொள்ள இயலும் என்பதைக் குறிப்பிட்டுக் கூற இயலாது.*

39—

### செங்கல் சூளைகள்

**வினா எண் 13207—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) ஓமலூர் தொகுதியில் செயல்படும் செங்கல் சூளைகள் எத்தனை?*

*(ஆ) அவற்றை நவீனப்படுத்தி தொழில்நுட்ப மற்றும் கடன் வசதி அளிக்க அரசு முன்வருமா?*

[2001 ஜனவரி 30

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) ஓமலூர் தொகுதியில் 9 செங்கல் சூளைகள் செயல்பட்டு வருகின்றன.

(ஆ) இது குறித்து அரசுத் திட்டமேதுமில்லை. எனினும், தனியார் செங்கல் தொழிற்சாலைகளை நவீனப்படுத்த திட்ட அறிக்கைகள் தயார் செய்வதிலும், தொழில் நுட்ப உதவி வழங்குவதிலும் மாவட்ட தொழில் மையங்கள் உதவி புரிகின்றன. மேலும், கூட்டுறவு வங்கிகள் மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடன் வசதி பெறுவதற்கு மாவட்டத் தொழில் மையங்கள் பரிந்துரை செய்கின்றன.

**40—**

## புதிய கட்டடம்

**வினா எண் 38778—திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாபநாசம் தொகுதியில் அய்யம்பேட்டை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் பதிவு மாவட்டத்தைச் சேர்ந்த அய்யம்பேட்டை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



2001 ஜனவரி 30]

**41—**

## சொந்தக் கட்டடம்

**வினா எண் 38791—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தாம்பரம் தொகுதி, நீலாங்கரை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

ஆவணப் பதிவுகளின் எண்ணிக்கை, ஆண்டு வருமானம் மற்றும் கட்டடத்தின் அத்தியாவசிய தேவை மற்றும் அரசின் நிதி நிலைமையைக் கருத்திற்கொண்டு முன்னுரிமை அடிப்படையில் சார் பதிவாளர் அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில், தாம்பரம் தொகுதி, நீலாங்கரை சார் பதிவாளர் அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**42—**

## தொழிற்பேட்டை

**வினா எண் 40368—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தொழில் வசதியில்லாத மிகவும் பின்தங்கிய பகுதியான எடப்பாடியில் ஒரு தொழிற்பேட்டை ஏற்படுத்த அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

எடப்பாடியில் ஒரு தொழிற்பேட்டை அமைக்கும் நோக்கத்துடன், இருமுறை தொழில் முனைவோர் ஊக்குவிப்பு முகாம்கள்

நடத்தப்பட்டன. இரண்டு முகாம்கள் நடத்தியும் தொழில் முனைவோர் யாரும் தொழில் மனைகள் வேண்டி சிட்கோவை அழைக்காததால் எடப்பாடியில் தொழிற்பேட்டை அமைப்பதற்கான திட்டம் அரசிடம் தற்சமயம் இல்லை.

43—

### சுற்றுப்புறச்சுவர்

**வினா எண் 40382—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சேலம் மாவட்டம், எடப்பாடியிலுள்ள சார் பதிவாளர் அலுவலகத்திற்கு சுற்றுப்புறச் சுவர் இல்லை என்பது அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், சுற்றுப்புறச் சுவர் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

*(அ) எடப்பாடி சார் பதிவாளர் அலுவலகம் இயங்கி வரும் அரசு கட்டடத்தின் முன்புறம் மட்டும் கம்பிவேலி போடப்பட்டுள்ளது. பின்புறம் மற்றும் இருபுறங்களிலும் தற்போது சுற்றுச்சுவர் ஏதுமில்லை.*

*(ஆ) அரசின் நிதி நிலைமையைக் கருத்திற்கொண்டு, சுற்றுச்சுவர் அமைத்தல் குறித்து பரிசீலிக்கப்படும்.*

44—

### போலி முத்திரைத் தாள்

**வினா எண் 40387—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—





போலி முத்திரைத் தாள் விற்பனை செய்வதைக் கண்டறிய அரசு வெளியிடும் முத்திரைத்தாளுக்கு வரிசை எண் மற்றும் சீரியல் எழுத்து வெளியிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

முத்திரைத் தாள்கள், மத்திய அரசின் கட்டுப்பாட்டின்கீழ் நாசிக் மற்றும் ஐதராபாத்திலுள்ள அரசு மைய அச்சகங்களில்தான் அச்சடிக்கப்படுகிறது. போலி முத்திரைத் தாள்களைத் தடுக்க தற்போது ரூ.10,000/- ரூ.15,000/-, ரூ.20,000/- மற்றும் ரூ.25,000/- ஆகிய முகமதிப்புள்ள முத்திரைத் தாள்களின் சீரியல் எழுத்து மற்றும் வரிசை எண்கள் அச்சிடப்பட்டு விநியோகம் செய்யும் செயல்முறை கடைப்பிடிக்கப்படுகிறது.

45—

### கட்டட வசதி

**வினா எண் 40452—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சார் பதிவாளர் அலுவலகங்களில் ஆவணங்கள் பதிவு செய்வது மட்டுமின்றி அவற்றைப் பாதுகாக்க வேண்டிய இடமாக உள்ளதால், சார் பதிவாளர் அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டித்தர அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

ஆவணப் பதிவுகளின் எண்ணிக்கை, ஆண்டு வருமானம், கட்டடத்தின் அத்தியாவசியத் தேவை மற்றும் அரசின் நிதிநிலையைக் கருத்திற்கொண்டு சார் பதிவகங்களுக்கு கட்டடம் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

[2001 ஜனவரி 30

46—

## கண்காணிப்புக் குழு

**வினா எண் 40453—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சார் பதிவாளர் அலுவலகங்களில் முறைகேடு நடைபெறாமல் தடுக்க கண்காணிப்புக் குழு ஒன்று சட்டமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) சார் பதிவாளர் அலுவலகங்களில் முறைகேடுகள் நடைபெறுவது அறியப்படின், உயர் அதிகாரிகளால் விசாரணை செய்யப்பட்டு தக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. முறைகேடுகள் நடைபெறாமல் கண்காணிப்பதற்கு அமைக்கப்பட்டுள்ள சிறப்பு விழிப்புக் குழுவில் காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் ஒருவரின் தலைமையின்கீழ், 4 காவல் துறை ஆய்வாளர்கள் பணிபுரிகின்றனர். மேலும், சார் பதிவாளர் அலுவலகங்கள், மாவட்டப் பதிவாளர்கள், துணைப் பதிவுத் துறைத் தலைவர்கள் மற்றும் மண்டல ஆய்வாளர்களால் திடீராய்வு மூலம் கண்காணிக்கப்படுகின்றன. இந்நிலையில், சட்டமன்ற உறுப்பினர்களை உள்ளடக்கி கண்காணிப்புக் குழு அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழாது.

47—

## ஜெராக்ஸ் கருவி

**வினா எண் 40458—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2001 ஜனவரி 30]

(அ) சார் பதிவாளர் அலுவலகங்களில் ஜெராக்ஸ் கருவி நிறுவ, நகல் வேண்டி மனுச் செய்வோருக்கு உடனடியாக நகல் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சார் பதிவாளர் அலுவலகங்களில் நகல் வேண்டி மனுச்செய்வோருக்கு நகல்கள் வழங்கும் வகையில், இதுவரை 22 சார் பதிவகங்களுக்கு ஜெராக்ஸ் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது நடப்பு நிதியாண்டில் (2000-2001) மேலும் 10 ஜெராக்ஸ் கருவிகள் வாடகை அடிப்படையில் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. அனைத்து சார் பதிவகங்களுக்கும் படிப்படியாக ஜெராக்ஸ் இயந்திரம் வழங்க நடவடிக்கை தொடரப்பட்டு வருகிறது.

48—

## பட்டா மாற்றம்

**வினா எண் 40466—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சார் பதிவாளர் அலுவலகங்களில் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களின் புதிய உரிமையாளர்கள் பெயரில் பட்டா மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பட்டா மாறுதல் மனுக்கள் ஆவணங்கள் பதிவுக்கு தாக்கல் செய்யப்படும்போது உரிய கட்டணத்துடன் தாக்கல்

செய்யப்படுகின்றன. இந்த பட்டா மாறுதல் மனுக்கள் உரிய பதிவு விவரங்களுடன் சம்பந்தப்பட்ட வட்டாட்சியருக்கு ஒவ்வொரு வாரமும் அனுப்பி வைக்கப்படுகின்றன. இதன்மீது வட்டாட்சியர்கள் பெயர் மாற்றம் செய்து பட்டா வழங்குகின்றனர். பட்டா மாற்றம் தொடர்பான பணிகள் வருவாய்த் துறையைச் சேர்ந்தது என்பதால் பதிவுத் துறையைப் பொறுத்தமட்டில் ஆவணப் பதிவின்போது பெறப்படும் பட்டா மாறுதல் மனுக்களை தக்க நடவடிக்கைக்கு வட்டாட்சியருக்கு அனுப்பும் பணி மட்டுமே மேற்கொள்ளப்படுகிறது.

**49—**

### முத்திரைத் தாள் விற்பனை

**வினா எண் 40482—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முத்திரைத் தாள்கள் விற்பனை செய்யும் முகவர்களுக்கு வழங்கப்படும் கமிஷன் தொகையை உயர்த்தி வழங்கிட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) முத்திரைத் தாள் விற்பனையாளர்களுக்கு வழங்கும் தரகுத் தொகை 20-5-1999 முதல் உயர்த்தி நிர்ணயம் செய்து வழங்கப்பட்டு வருகிறது.

(ஆ) தரகுத் தொகையினை மீண்டும் உயர்த்தி அமைத்திடும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.



**50—**

### தீண்டாமை ஒழிப்பு

**வினா எண் 24602—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தீண்டாமையைப் போக்க சினிமாப்படம் எடுத்து நடிகர் நடிகைகளை வைத்து பிரச்சாரம் செய்யும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

தீண்டாமை ஒழிப்பு, மதநல்லிணக்கம் மற்றும் சமூக ஒற்றுமையினை வலியுறுத்தி 1999-ம் ஆண்டில் திரைப்பட நடிகர் நடிகைகள் நடித்து "மனித நேயமே உலகம்", "சாதிகளை நீக்கி சமத்துவம் காண்போம்" ஆகிய இரண்டு திரைப்படங்களும் "ஒன்றே குலம்", "சாதிகள் இல்லையடி பாப்பா" ஆகிய இரண்டு வீடியோ படங்களும், "சமத்துவமே சமுதாயம்" என்னும் பாடல் விளக்கப்படமும் செய்தி, மக்கள் தொடர்புத் துறையில் விளக்கப்படங்களாகத் தமிழ்நாடு திரைப்படப் பிரிவு மூலம் தயார் செய்யப்பட்டு, திரையரங்குகள் மற்றும் தொலைக்காட்சி நிலையங்கள் மூலம் திரையிடப்பட்டு வருகின்றன.

தீண்டாமை ஒழிப்பை வலியுறுத்தும் கருத்துக்களைக் கொண்ட இரண்டு விளம்பரத் துணுக்குகள் ரூ.40,000 செலவில் தயாரிக்கவும், மக்கள் மனதில் எளிதில் பதியும் வண்ணம் 20 நிமிடங்கள் ஓடக்கூடிய "வாழு வாழவிடு" மற்றும் "காலம் மாறிடுச்சி" ஆகிய இரண்டு படங்களை ஒவ்வொன்றும் ரூ.1.30 இலட்சம் செலவில் தயாரிக்கவும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை ரூ.3.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்து ஆணைகள் வெளியிட்டுள்ளது.

[2001 ஜனவரி 30

## ஏழாவது பட்டியல்

1—

### மதுக்கடைகள் ஏலம்

**வினா எண் 37513—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதியில் மதுக்கடைகள் ஏலம் விடப்பட்டவையும், நியமன அடிப்படையில் ஏலம் விடப்பட்டவையும் எத்தனை ?

(ஆ) அந்த ஏலத்தின் மீது 1998-99-ல் அரசுக்கு வந்த வருமானம் எவ்வளவு ?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) எடப்பாடி தொகுதியில் 1998-99 ஆம் ஆண்டில் 6 மதுபான சில்லறை விற்பனைக் கடைகள் பொது ஏலத்தில் விடப்பட்டன. நியமன அடிப்படையில் எந்தக் கடையும் விடப்படவில்லை.

(ஆ) 1998-99 ஆம் ஆண்டில் மேற்படி ஏலத்தில் விடப்பட்ட கடைகள் மூலம் அரசிற்கு பிரிவிலேஜ் கட்டணமாக கிடைத்த வருவாய் ரூ.36,40,000.

2—

### மறு ஏலம்

**வினா எண் 37517—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் மதுக்கடைகளை ஏலம் விடும்போது அரசு நிர்ணயம் செய்யும் தொகைக்கு ஏலம் போகாவிட்டால் எத்தனை முறை மறு ஏலம் வைக்க சட்டத்தில் இடம் உண்டு என்பதை அரசு தெரிவிக்குமா ?



2001 ஜனவரி 30]

(ஆ) அப்படி 1998-99-ல் ஏலம் போகாமலே நின்று போன கடைகள் எத்தனை ?

(இ) அதன்மீது அரசு எடுத்த முடிவு என்ன என்பதை அரசு தெரிவிக்குமா ?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மதுபான சில்லறை விற்பனைக் கடைகள், முதல் சுற்றில் பொது ஏலத்தில் விற்கப்படவில்லையெனில், அக்கடைகள் விற்கப்படுவதற்கு சாத்தியக்கூறுகள் இருப்பின் மீண்டும் ஏலத்திற்கு கொண்டு வரப்படுகின்றன. தமிழ்நாடு மதுபான (சில்லறை விற்பனை) விதிகள், 1989-ல் விற்கப்படாத கடைகள் எத்தனை முறை மறு ஏலத்திற்கு கொண்டு வரப்பட வேண்டும் என்பதற்கான விதிகள் இல்லை. ஆனால் ஒவ்வொரு திங்கள் மற்றும் வியாழன் அன்று ஏலம் தொடர்ந்து நடத்தப்படுகிறது.

(ஆ) 1998-99 ஆம் ஆண்டில் அறிவிக்கை செய்யப்பட்ட 4700 கடைகளில் மறு ஏலங்கள் நடத்தப்பட்ட பிறகும்கூட 25 கடைகள் மட்டுமே ஏலத்தில் விற்கப்படாமல் நின்று போயின.

(இ) மேற்படி ஏலத்தில் விற்கப்படாத கடைகள் 1999-2000 ஆண்டில் மீண்டும் ஏலத்திற்குக் கொண்டு வரப்பட்டன.

3—

### மேல்நிலைப் பள்ளிகள்

**வினா எண் 40126—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல், ஈரோடு, தருமபுரி ஆகிய மாவட்டங்களில் 2000-2001-ல் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசு உத்தேசித்து உள்ளதா ?

(ஆ) அது பற்றி அரசு தகவல் தருமா ?

[2001 ஜனவரி 30

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) 2000-2001 ஆம் கல்வி ஆண்டில் நாமக்கல், ஈரோடு, தருமபுரி ஆகிய மாவட்டங்களில் மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப் பட்டுள்ள அரசு உயர்நிலைப் பள்ளிகளின் விவரம் பின்வருமாறு:*

| மாவட்டம் | ஒன்றியம் | வ.எண். | பள்ளியின் பெயர் |
|---|---|---|---|
| நாமக்கல் | புதுச்சத்திரம் | 1 | அரசு உயர்நிலைப்பள்ளி, புதுச்சத்திரம் |
| | வெண்ணாந்தூர் | 2 | அரசு உயர்நிலைப்பள்ளி, அத்தனூர் |
| | எருமப்பட்டி | 3 | அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளி, எருமப்பட்டி |
| ஈரோடு | கோபிசெட்டிப் பாளையம் | 4 | அரசு உயர்நிலைப்பள்ளி, பொலவக்காளிப் பாளையம் |
| | அந்தியூர் | 5 | அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளி, அந்தியூர் |
| தருமபுரி | பெண்ணாகரம் | 6 | அரசு உயர்நிலைப்பள்ளி, பெரும்பாலை |
| | மொரப்பூர் | 7 | அரசு உயர்நிலைப்பள்ளி, இராமியம்பட்டி |
| | காரிமங்கலம் | 8 | அரசு உயர்நிலைப்பள்ளி, பெரியாம்பட்டி. |

**4—**

### பள்ளிகளைத் தரம் உயர்த்துதல்

**வினா எண் 41851—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2001 ஜனவரி 30]

சேலம் மாவட்டத்தில் 2000-2001 ஆம் கல்வி ஆண்டில் எத்தனை உயர்நிலைப் பள்ளிகளை, மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்த அரசு உத்தேசித்துள்ளது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

2000-2001 ஆம் கல்வி ஆண்டில், உயர்மட்டக்குழு பரிந்துரை செய்த 50 அரசு/மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை, மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அவற்றுள் சேலம் மாவட்டத்தில் பின்வரும் நான்கு அரசு/மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகளும் அடங்கும்.

| | | | |
|---|---|---|---|
| சேலம் | ஓமலூர் | 1 | அரசு உயர்நிலைப்பள்ளி, வெள்ளாளப்பட்டி |
| | கங்கவல்லி | 2 | அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளி, ஜலகண்டபுரம் |
| | பனைமரத்துப்பட்டி | 3 | அரசு உயர்நிலைப்பள்ளி, தாசநாய்க்கன்பட்டி |
| | சேலம் மாநகராட்சி | 4 | காமராஜ் மாநகராட்சி மகளிர் உயர்நிலைப்பள்ளி, மணக்காடு. |

**5—**

### மருத்துவர்கள் நியமனம்

**வினா எண் 24775—திரு. அ. வெங்கடாசலம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்ட அரசு தலைமை மருத்துவ மனைகளில் 12 மணி வெளிநோயாளிப் பகுதி (12 மணி O.P.) கவனித்திட அமைக்கப்பட்ட மருத்துவர்கள் பணியிடங்கள் இருந்தும் 'அவசர

'அவசர சிகிச்சைப் பிரிவு' (Casuality) மருத்துவர் என ஒருவர் மட்டுமே பணியாற்றுவதை அரசு அறியுமா?

(ஆ) வெளிநோயாளிப் பகுதி, அவசரச் சிகிச்சைப் பிரிவு இரண்டிற்கும் தனித்தனி மருத்துவர்கள் இல்லாததால் பொதுமக்கள் பாதிக்கப்படுவதை அரசு அறியுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) புதுக்கோட்டை மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவைக் கவனித்துக்கொள்ள மூன்று 'இளைய மருத்துவர்கள்' பணியாற்றி வருகிறார்கள்.

(ஆ) புதுக்கோட்டை மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை வெளிநோயாளிப் பகுதியைக் கவனித்துக்கொள்ள தற்போது உள்ள 25 மருத்துவர்கள் சுழற்சி முறையில் பணியாற்றி வருகின்றார்கள். மேலும், அவசர சிகிச்சைப் பிரிவினை தனியாக மூன்று இளைய மருத்துவர்கள் கவனித்துக்கொள்கின்றனர். எனவே, பொதுமக்கள் பாதிப்பு என்ற வினாவிற்கே இடமில்லை.

**6—**

### ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 41953—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதியில் 24 மணிநேரமும் இயங்கும் ஆரம்ப சுகாதார நிலையம் எத்தனை உள்ளன? அதில் உள்ள மருத்துவர்கள் விவரத்தை அரசு தெரிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் 24 மணிநேரமும் இயங்கும் ஆரம்ப சுகாதார நிலையம் மகுடஞ்சாவடி ஆரம்ப சுகாதார நிலையமாகும். அதில் மூன்று மருத்துவ அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த ஆரம்ப சுகாதார நிலையம் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது.



**7—**

### மருத்துவமனை

**வினா எண் 43162—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணம் ஒன்றியம், நெய்வேலி தென்பாதி கிராமத்தில் இயங்கி வரும் ஊரக மருத்துவமனையை அரசு மருத்துவமனையாக அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், நெய்வேலி தெற்கு என்ற கிராமத்தில் செயல்படும் ஊராட்சி ஒன்றிய மருந்தகம், திருவோணம் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. திருவோணம் ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 74,955. மத்திய அரசின் இலக்கின்படி, 30,000 மக்கள் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையில், திருவோணம் ஊராட்சி ஒன்றியத்தில் தற்போது செயல்படும் 4 ஆரம்ப சுகாதார நிலையங்களை போதுமானவை. எனவே, நெய்வேலி தெற்கு கிராமத்தில் செயல்படும் ஊராட்சி ஒன்றிய மருந்தகத்தினை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றும் சாத்தியக்கூறுகளில்லை.

**8—**

### படுக்கை வசதிகள்

**வினா எண் 43303—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2001 ஜனவரி 30

(அ) பெருந்துறை அரசு மருத்துவமனையில் போதிய படுக்கைகள் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக போதிய படுக்கைகள் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெருந்துறை அரசு மருத்துவமனையில் சராசரியாக 2 உள்நோயாளிகள் மட்டுமே சிகிச்சை பெறுகின்றனர். இங்கு மொத்தம் 6 படுக்கைகள் உள்ளதால் கூடுதல் படுக்கை வசதிக்குத் தேவை ஏற்படவில்லை.

**9—**

**பாதுகாப்புச் சுவர்**

**வினா எண் 42608—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணம் ஒன்றியம், காடுவெட்டி விடுதி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியைச் சுற்றி பாதுகாப்புச் சுவர் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், திருவோணம் ஊராட்சி ஒன்றியம், காடுவெட்டி விடுதி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு நடைமுறையில் உள்ள அரசு திட்டங்களின் மூலம் சுற்றுச்சுவர் கட்டித்தர இயலாது.



2001 ஜனவரி 30]

**10—**

**கசிவு நீர்க்குட்டை**

**வினா எண் 40250—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1999 ஆம் ஆண்டு எடப்பாடி தொகுதியில் எவ்வளவு பேர் கிராமங்களிலுள்ள கசிவு நீர்க்குட்டை திட்டத்தின்கீழ் பயன்பெற்றனர்?

(ஆ) அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்.**

(அ) 1998-1999 மற்றும் 1999-2000 ஆகிய நிதியாண்டுகளில் புதிய கசிவு நீர்க்குட்டைகள் அமைக்கும் பணிகள் மற்றும் பழைய கசிவு நீர்க்குட்டைகள் சீரமைக்கும் பணிகளுக்கு, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை நிதி ஒதுக்கீடு செய்யாததால் இப்பணிகள் மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) வினா எழவில்லை.

**11—**

**விவசாயிகளுக்கு டிராக்டர்கள்**

**வினா எண் 40780—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் தொகுதியில் வேளாண்மை இயந்திரமாக்கல் திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு டிராக்டர்கள் வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்.**

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 451, வேளாண்மை, நாள்: 12-10-1999-ல் வேளாண்மை இயந்திரமாக்கல் எனும் திட்டத்தின் மானியம் ரூ.30,000/-) தமிழக விவசாயிகளுக்கு 1999-2000 ஆம் ஆண்டில் வழங்கிட ரூ.113.40 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. அதில் தருமபுரி மாவட்டத்திற்கு 30 டிராக்டர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டதில் இதுவரை 12 டிராக்டர்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால், பெண்ணாகரம் தொகுதிக்கு இதுவரை டிராக்டர் எதுவும் வழங்கப்படவில்லை. பெண்ணாகரம் தொகுதியில் உள்ள விவசாயிகள் டிராக்டர் தேவையெனில் தருமபுரி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநரை அணுகலாம். அவரது பரிந்துரையுடன் மீதமுள்ள 18 டிராக்டர்களில் பெண்ணாகரம் தொகுதியில் உள்ள விவசாயிகளுக்கும் டிராக்டர்கள் வழங்க வாய்ப்பு உள்ளது.

12—

## நவீனப்படுத்துதல்

**வினா எண் 40831—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, சுஞ்சல்நத்தம் ஊராட்சி, மரவைத்திப்பள்ளம் ஏரியை ஐரோப்பிய பொருளாதாரக் குழு உதவியுடன் பயிர் பலதிறப்படுத்தும் கட்டில் விளக்கம் நடத்துவதற்கு நவீனப்படுத்த அரசு நடப்பாண்டில் நடவடிக்கை மேற்கொள்ளுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

இல்லை.



13—

## விதை நெல்

**வினா எண் 41087—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட விதை நெல் ஆடுதுறை 36-ல் கலப்படமாக ஐ.ஆர்.20 மற்றும் காட்டு நெல் கலந்து உள்ளதாக புகார் ஏதாவது வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவசாயிகளுக்கு வழங்கப்படும் விதை நெல்லை தரம் நிறைந்ததாக வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட விதை நெல் ஆடுதுறை 36-ல் கலப்படமாக ஐ.ஆர்.20 மற்றும் காட்டுநெல் கலந்துள்ளதாக புகார் ஏதும் பெறப்படவில்லை.

(ஆ) வினா எழவில்லை.

14—

## நீர்க்குட்டை

**வினா எண் 42022—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், ஆவாரக்குளம் கிராமத்தின் மேல்பகுதி மலையடிவாரத்தில் உள்ள காணியாறு அருகில் கசிவு நீர்க்குட்டை அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், ஆவாரக்குளம் கிராமத்தின் மேல்பகுதி மலையடிவாரத்தில் உள்ள காணியாறு அருகில் கசிவு நீர்க்குட்டை அமைக்க வாய்ப்புள்ளது. அதற்கு சுமார் ரூ.2.50 லட்சம் நிதி ஒதுக்கீடு தேவைப்படும். கடந்த 1999-2000 ஆம் நிதியாண்டு வரை மத்திய அரசின் நிதி உதவி, ஊரக வளர்ச்சி முதுமை மூலம் பெறப்பட்டதால், வேலைவாய்ப்பு உதவி அளிப்பு திட்டத்தின்கீழ் கசிவு நீர்க்குட்டைகள் தமிழகம் முழுவதும் தொழில்நுட்ப சாத்தியக்கூறுகளுக்கு ஏற்ப அமைக்கப்பட்டன.*

*ஆனால், 2000-2001 ஆம் நிதியாண்டிலிருந்து, மத்திய அரசின் புதிய வழிகாட்டி நெறிமுறைகளின்படி வேலைவாய்ப்பு உறுதி அளிப்பு திட்டத்தின்கீழ் கசிவு நீர்க்குட்டைகள் அமைக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு வழங்கப்படுவதில்லையாதலால், இப்பணிகளை மேற்கொள்ள இயலவில்லை.*

**15—**

## கரும்பு உற்பத்தி

**வினா எண் 42719—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம், தருமபுரி மாவட்டங்களில் அதிகமாக கரும்பு உற்பத்தியுள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், அதில் கிடைக்கும் சக்கையைக்கொண்டு சேலம் மாவட்டத்தில் காகித ஆலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ) சேலம் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் உள்ள கரும்பு, சேலம், தருமபுரி மற்றும் சுப்பிரமணிய சிவா ஆகிய மூன்று கூட்டுறவு*



*சர்க்கரை ஆலைகளாலும் பொன்னி சுகர்ஸ் என்னும் தனியார் சர்க்கரை ஆலையாலும் பதிவு செய்து அரவை செய்யப்படுகிறது. சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு ஒரு பருவத்திற்கு 4.30 இலட்சம் டன்கள் கரும்பு தேவைப்படுகிறது. இப்பருவத்தில் 4.30 இலட்சம் டன்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*தேவைக்கு அதிகமாக கரும்பு பதிவாகவில்லை. பதிவு செய்யப்படாத கரும்பு வெல்லம் தயாரிக்கப் பயன்படுத்தப்படுகிறது. தருமபுரி கூட்டுறவு சர்க்கரை ஆலையில், அரவைத் திறனுக்குத் தேவையான கரும்பு 3.44 இலட்சம் டன் ஆகும். இங்கு மொத்தம் 3.50 இலட்சம் டன் கரும்பு பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலையில் ஒரு பருவத்திற்குத் தேவையான 4.30 இலட்சம் டன்களுக்குப் பதிலாக 3.00 இலட்சம் டன் கரும்பு மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளது. இங்கு வறட்சியின் காரணமாக 1.30 இலட்சம் டன் கரும்பு குறைவாக உள்ளது. எனவே ஒட்டுமொத்த அளவில் சேலம் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் கரும்பு உற்பத்தி தேவைக்கு அதிகமாக இல்லை.*

*(ஆ) சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் தமிழ்நாடு காகித நிறுவனத்தால் (T.N.P.L.) கொதிகலன் அமைக்கப்பட்டு அதன் மூலம் ஆலைக்குத் தேவையான நீராவி பெறப்பட்டு, அதற்குப் பதிலாக காகித நிறுவனத்திற்கு கரும்புச்சக்கை வழங்கப்படுகிறது. மேலும் தருமபுரி, சுப்பிரமணிய சிவா கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் அபரிதமான கரும்பு உற்பத்தி இல்லாததால் காகித ஆலை நிறுவும் அளவிற்குக் கரும்புச் சக்கை கிடைக்காது. எனவே, சேலம் மாவட்டத்தில் காகித ஆலை நிறுவும் வாய்ப்பு தற்போதைக்கு இல்லை.*

**16—**

## விலை நிர்ணயம்

**வினா எண் 43103—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டத்திலுள்ள சிறு விவசாயிகள் கரும்பு, குச்சிக்கிழங்கு பயிர் செய்தவர்களுக்கு சரியான விலையில்லாததால் விவசாயிகள் துன்பப்படுவது அரசுக்குத் தெரியுமா?*

[2001 ஜனவரி 30

(ஆ) ஆம் எனில், அதிகப்படியான விலை நிர்ணயம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கரும்பு விவசாயிகளைப் பொறுத்தமட்டில் சர்க்கரை ஆலைகளில் உறுப்பினராகி கரும்பு விநியோகம் செய்யும் விவசாயிகளுக்குக் கரும்பிற்கான சட்டபூர்வமான குறைந்தபட்ச விலையை நிர்ணயம் செய்து மைய அரசு ஆணையிடுகின்றது. மேலும் அரவைப் பருவம் முடிந்தபின் ஆலையின் வரவு செலவு அடிப்படையில் கணக்கிட்டு கரும்பு கட்டுப்பாட்டு ஆணை பிரிவு 5ஏ-யின்கீழ் கூடுதல் கரும்பு விலை வழங்கவும், மைய அரசு ஆணை வழங்குகிறது. இதற்கும் மேலாக கரும்பு விவசாயிகள் கட்டுப்படியான விலை வேண்டும் என்ற கோரிக்கையினைப் பரிசீலித்து, மாநில அரசு பரிந்துரை செய்யும் விலையும் அளிக்கப்படுகிறது. 1999-2000 அரவைப் பருவத்தில் 8.5% சர்க்கரை கட்டுமானம் கொண்ட கரும்பிற்கு டன் ஒன்றுக்கு ரூ.561/- என மைய அரசு சட்டபூர்வ குறைந்தவிலை அறிவித்தது. அதன் அடிப்படையில் விலை நிர்ணயம் செய்து அனைத்து சர்க்கரை ஆலைகளுக்கும் (தனியார் துறை உட்பட, கரும்பு கிரையம் வழங்கப்பட்டது. ஆனால் கடந்த 1998-99 ஆம் ஆண்டு தனியார் துறை சர்க்கரை ஆலைகளின் கூட்டமைப்பு, சென்னை உயர்நீதிமன்றத்தில் மாநில அரசு கரும்புக்கு விலை பரிந்துரை செய்யக்கூடாது என வழக்குத் தொடுத்து தடை ஆணை பெற்றது. இவ்வழக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் நிலுவையாக உள்ளது. இந்நிலையில் மாநில அரசு 1998-99 மற்றும் 1999-2000 ஆம் அரவைப் பருவத்திற்குத் தனது பரிந்துரை விலையினைக் கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுக்கு மட்டும் அறிவித்தது. தனியார் ஆலைகள் தாங்களாகவே கரும்பு விவசாயிகள் ஒப்புக்கொண்ட விலையாக சட்டபூர்வ குறைந்தபட்ச விலையை விட சற்று அதிகரித்து வழங்கி வருகின்றனர். 1999-2000 ஆம் அரவைப் பருவத்திற்கு மாநில அரசு 8.5% சர்க்கரை கட்டுமானத்திற்கு டன் ஒன்றுக்கு ரூ.740/- என விலை பரிந்துரை செய்தது. அதன் அடிப்படையில் கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகள் கரும்பு விவசாயிகளுக்குக் கரும்பு விலை வழங்கப்பட்டு வருகின்றது. ஆகவே கரும்பு விவசாயிகள் சரியான விலை இல்லாததன் காரணமாக துன்பப்படுகிறார்கள் என்பது சரியல்ல.



2001 ஜனவரி 30]

சேலம் மாவட்டத்தில் சுமார் 19,000 ஹெக்டேரில் மரவள்ளிக் கிழங்கு (குச்சிக்கிழங்கு) சாகுபடி செய்யப்பட்டு, தற்போது நல்ல விலையில் ஆலைகள் கொள்முதல் செய்கின்றன. 72 கிலோ மூட்டை ஒன்று, ரூ.185/- முதல் ரூ.200/- வரை விற்கிறது. மேற்படி விலைக்கு விவசாயிகள் மரவள்ளிக் கிழங்கை விற்பனை செய்து வருவதால், விவசாயிகள் பாதிப்பு எதற்கும் உள்ளாகவில்லை.

17—

## வன நிலம்

**வினா எண் 41339—திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர், சங்கிம்பூண்டி, நம்பேடு, அரியாபாடி, அஸ்தினாபுரம் பகுதிகளில் வன நிலம் எவ்வளவு உள்ளது?

(ஆ) இதில் எவ்வளவு முதலீட்டில் வனப் பயிர்கள் வைக்கப்பட்டுள்ளன?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர், சங்கிம்பூண்டி, நம்பேடு, அரியாபாடி, அஸ்தினாபுரம் பகுதிகளில் நம்பேடு, காப்புக் காடு 576.43.0 ஹெக்டேரிலும் மற்றும் அரியாபாடி அருகே சீனிவாச உதயானவனம் காப்புக் காடு 1,474.5.10 ஹெக்டேரிலும் உள்ளது.

(ஆ) மேற்கண்ட காப்புக் காடுகளில் 1997-98 முதல் 2000-2001 ஆம் ஆண்டு வரை ரூ.86.36 இலட்சம் முதலீட்டில் வனப் பயிர்கள் வைக்கப்பட்டுள்ளன.

**18—**

**உயிரினப் பூங்காக்கள்**

**வினா எண் 42195—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள உயிரினப் பூங்காக்களில் மொத்தம் எத்தனை யானைகள், சிங்கங்கள், புலிகள் மற்றும் காண்டாமிருகங்கள் உள்ளன?

(ஆ) அதற்கு அரசு ஆண்டுக்கு எவ்வளவு தொகை செலவு செய்கிறது?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டிலுள்ள உயிரினப் பூங்காக்களில் மொத்தம் 32 யானைகள், 30 சிங்கங்கள், 5 புலிகள் உள்ளன. காண்டாமிருகம் இல்லை.

(ஆ) தமிழ்நாட்டிலுள்ள உயிரினப் பூங்காக்களில் இருக்கும் கீழ்க்கண்ட மிருகங்களுக்கு ஆண்டுக்கு சராசரியாக ஆகும் உணவுச் செலவு விவரம் பின்வருமாறு: (காண்டாமிருகம் தவிர)

| மிருகத்தின் பெயர் | எண்ணிக்கை | ஆண்டுச் செலவு |
|---|---|---|
| 1. யானைகள் | 32 | ரூ.33,21,331.00 |
| 2. சிங்கங்கள் | 30 | ரூ.39,12,450.00 |
| 3. புலிகள் | 5 | ரூ.6,52,075.00 |

**19—**

**நிலுவைத் தொகை**

**வினா எண் 40531—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) ஸ்டாண்டர்ட் கார் தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்குச் சேரவேண்டிய நிலுவைத் தொகையினை உடனே வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஸ்டாண்டர்ட் மோட்டார்ஸ் நிறுவனம் உயர் நீதிமன்றத்தால் கலைக்க (Windup) உத்தரவிடப்பட்டு, 4-10-1996 முதல் கலைப்பு அதிகாரியினை நியமித்து நிறுவனத்தின் சொத்துகள் கலைப்பு அதிகாரியின் பொறுப்பில் உள்ளன. எனவே, தொழிலாளர்கள் தங்களுக்குச் சேரவேண்டிய நிலுவைத் 'தொகைகளைப் பெறுவதற்கு கலைப்பு அதிகாரியின் முன்பு மனுச் செய்து நிவாரணம் காண வழிவகையுள்ளது.

(ஆ) எழாது.

**20—**

**எடை அளவுக் கருவிகள்**

**வினா எண் 40704—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1999 ஆம் ஆண்டு சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் முத்திரையிடப்படாத எடை அளவுக் கருவிகள் பயன்படுத்தியதாக எவ்வளவு பேர் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது?

(ஆ) அவர்கள் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 1999 ஆம் ஆண்டு முத்திரையிடப்படாத எடையளவுக் கருவிகள் பயன்படுத்தியதாக சேலம் மாவட்டத்தில் 964 வழக்குகளும்

2001 ஜனவரி 30]

(அ) நபார்டு வங்கித் திட்டத்தில் அமைக்கப்படும் கிழக்குக் கடற்கரைச் சாலை, நாகப்பட்டினத்திலிருந்து வேதாரண்யம், முத்துப்பேட்டை, அதிராம்பட்டினம் வழியாகச் செல்ல அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. பகம்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) கிழக்குக் கடற்கரைச் சாலை, நாகப்பட்டினத்திலிருந்து திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை வழியாக தூத்துக்குடி வரை 321 கி.மீ. நீளத்திற்கு, ரூ.360.00 கோடி மதிப்பீட்டுத் தொகையில் உலக வங்கி உதவியுடன், தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான வடிவமைப்பு மற்றும் திட்ட மதிப்பீடு முடிவடைந்துள்ளது. சுற்றுப்புறச் சூழல் பாதிப்பின்மைக்கு, மத்திய அரசு சுற்றுப்புறம் மற்றும் வனத் துறையிடமிருந்து ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளி விவரங்கள் ஆலோசகர்களால் உலக வங்கியின் ஒப்புதல் பெற தயாரிக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) உலக வங்கியின் ஒப்புதல் பெற்ற பின்புதான் பணி செயலாக்கம் தொடங்கப்படும்.

23—

## பயணியர் விடுதி

**வினா எண் 33121—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி தாலுகா தலைநகராக உள்ளதால் எடப்பாடி பயணியர் விடுதியில் மேலும் இரண்டு தங்கும் அறைகள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரத்தை அரசு தெரிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சாலை மேம்பாட்டுப் பணிக்கு மட்டுமே முன்னுரிமை அளித்து இத்துறை செயல்பட்டு வருவதால் புதிதாகப் பயணியர் விடுதிகள் கட்டும் திட்டம் ஏதும் அரசிடம் தற்போது இல்லை.*

**24—**

**சாலையைப் புதுப்பித்தல்**

**வினா எண்.33721—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஜலகண்டாபுரம் சாலை முதல் வேம்பனேரி (வழி) சௌரிப்பாளையம் சாலை கி.மீ. 0/0-7/250 வேம்பனேரி சாலை 1 கி.மீ. மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், அந்தச் சாலையைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையானது நெடுஞ்சாலைத் துறை மூலம் பராமரிக்கப்பட்டு வரும் இதர மாவட்டச் சாலையான எடப்பாடி ஜக்கண்டாபுரம் சாலை முதல் வேம்பனேரி (வழி) சௌரிப்பாளையம் சாலை கி.மீ. 0/0-7/250 ஆகும். இச்சாலையில் மிகவும் பழுதடைந்த பகுதியான கி.மீ. 2/10 மற்றும் கி.மீ. 6/6-7/250 பகுதிகள் 2000-2001 ஆம் ஆண்டு காலமுறை புதுப்பித்தல் மற்றும் சிறப்புப் பழுதுபார்த்தல் திட்டத்தில் ரூ.6.0 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு விரைவில் முடிக்கப்படும். எஞ்சியுள்ள பகுதிகளில் உள்ள சிறுசிறு பழுதுகள் தார்நொடிகள் போடப்பட்டு வாகனப் போக்குவரத்துக்கு ஏற்ப நல்ல நிலையில் உள்ளன.*



**25—**

**சாலையைச் செப்பனிடல்**

**வினா எண்.36964—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், கச்சுப்பள்ளி பிரிவு ரோடு, வடுகப்பட்டியிலிருந்து எனம்பிள்ளை வரை செல்லும் சாலை மிகவும் மோசமாக உள்ளதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், அந்தச் சாலையைச் செப்பனிட்டுத்தர அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையின் சரியான பெயர் கட்சுப்பள்ளி அழகப்பம்பாளையம் இளம்பிள்ளை சாலையாகும். இது 13.00 கி.மீ. நீளம் கொண்ட தார் பரத்தப்பட்ட இதர மாவட்டச் சாலையாகும். இச்சாலையில் மிகவும் பழுதடைந்த பகுதி கி.மீ. 1/6-3/6 மற்றும் 11/0-13/0 வரை 4.00 கி.மீ. தூரத்திற்கு தர மாவட்டச் சாலைகள் மிகவும் பழுதடைந்த பகுதி மேம்படுத்தும் திட்டத்தின்கீழ் (2ம் கட்டப் பணி) ரூ.12.00 இலட்சம் செலவில் மேம்படுத்த ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பணி விரைவில் முடிக்கப்படும். இதற்கிடையில் சாலையில் உள்ள குழிகளில் தார்நொடிகள் போட்டு வாகனப் போக்குவரத்துக்கு ஏற்றபடி பராமரிக்கப்பட்டு வருகிறது.*

**26—**

**சாலையைப் பழுதுபார்த்தல்**

**வினா எண்.37351—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) எடப்பாடி தொகுதியில் உள்ள குருக்கல்பட்டி சமுத்திரம் சாலை 0/0-0/6 தூரம் 0.60 கி.மீ. தார்ச்சாலை மிகவும் பழுதடைந்து உள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், பழுதுபார்க்க அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலை எடப்பாடி தொகுதியிலுள்ள குருக்கல்பட்டி சமுத்திரம் எல்லை சாலை 0/0-1/0 வரையுள்ள இதர மாவட்டச் சாலையாகும். இச்சாலையில் முழுப் பகுதியினை மேம்படுத்த ரூ.4.00 இலட்சம் தேவைப்படும். இப்பணி அரசு தற்போது அனுமதி வழங்கப்பட்டுள்ள எந்தத் திட்டத்திலும் இடம் பெறவில்லை. இருப்பினும் இச்சாலையில் தார் ஒட்டு போடப்பட்டு வாகனப் போக்குவரத்திற்கு ஏற்ப நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.*

27—

**சாலையைச் செப்பனிடல்**

**வினா எண் 37352—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்குடையளிப்பாரா—*

*(அ) எடப்பாடி தொகுதியில் உள்ள எடப்பாடி-ஜலகண்டாபுரம் சாலை முதல் குருக்கல்பட்டி சாலை 0/0-1/0 தூரம் 1.00 கி.மீ. வரையுள்ள தார்ச்சாலை மிகவும் பழுதடைந்து உள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், செப்பனிட அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையானது நெடுஞ்சாலைத் துறை பராமரிப்பில் உள்ள எடப்பாடி-ஜலகண்டாபுரம் சாலை முதல் குருக்கல்பட்டி சாலை கி.மீ.0/0-1/6 என்ற இதர மாவட்டச் சாலையாகும். இச்சாலையின் முழுப் பகுதிகளை ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டில் 2000-2001-ம் ஆண்டு இதர மாவட்டச் சாலைகள் மேம்படுத்தும் திட்டத்தில் இரண்டாம் கட்டத்தில் எடுத்துக்கொள்ள பணி அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பணி விரைவில் செய்து முடிக்கப்படும்.*



28—

**நியாயவிலைக் கடை**

**வினா எண் 24501—திரு. மு. அப்பாவு:** *மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், இராதாபுரம் ஊராட்சி ஒன்றியம், சூடுஉயர்தான்விளை கிராமத்தில் நியாய விலைக் கிளைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது அமைத்துக் கொடுக்கப்படும்?*

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், புலிமான்குளம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி நடத்தும் புலிமான்குளம் நியாய விலைக் கடையில் 953 குடும்ப அட்டைகள் உள்ளன. இக்கடைக்கு தோப்புவிளை கிராமத்தில், அரசுக் கட்டடத்தில் 194 குடும்ப அட்டைகளுடன் பகுதிநேரக் கடை அமைக்கப்பட்டு புதன்கிழமை மட்டும் செயல்படுகிறது. இப்பகுதிநேரக் கடையுடன் 124 குடும்ப அட்டைகள் கொண்ட சூடுஉயர்தான்விளை கிராமம் இணைக்கப்பட்டு பகுதிநேரக் கடையில் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படுகின்றன. ஏற்கெனவே ஒரு பகுதிநேரக் கடையுடன் இக்கிராமம் இணைக்கப்பட்டுள்ளதாலும், 200-க்கும் குறைவான குடும்ப அட்டைகள் இருப்பதாலும் அங்கு தனியாக பகுதிநேரக் கடை அமைக்க வாய்ப்பில்லை.*

29—

**நியாய விலைக் கடை**

**வினா எண் 27604—திரு. நா. பெரியசாமி:** *மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2001 ஜனவரி 30

(அ) ஈரோடு வட்டம், பிச்சாண்டாம்பாளையம் பொதுமக்களிடமிருந்து நியாய விலைக் கடை அமைத்துத் தருமாறு அரசுக்குக் கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு அதன்மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு வட்டம், பிச்சாண்டாம்பாளையம் கிராமத்தில் 318 குடும்ப அட்டைகளுடன் ஒரு முழுநேர அங்காடி 20-12-1998 முதல் பெருந்துறை ஆர்.எஸ். தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியால் நடத்தப்பட்டு வருகிறது. எனவே, பிச்சாண்டாம்பாளையத்தில் புதியதாக நியாய விலைக் கடை அமைக்க வேண்டிய நிலை எழவில்லை.

30—

**ஊதிய உயர்வு**

**வினா எண் 35138—திரு. டி. மணி:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொடக்க வேளாண்மைக், கூட்டுறவு வங்கிகளின்கீழ் பணியாற்றும் நியாய விலைக் கடை விற்பனையாளர்கள் மற்றும் விற்பனை உதவியாளர்களுக்கு ஊதிய உயர்வு கோரி அரசுக்குக் கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதன்மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் கீழ் பணியாற்றும் நியாய விலைக் கடை விற்பனையாளர்கள் மற்றும்



2001 ஜனவரி 30]

விற்பனை உதவியாளர்களுக்கு ஊதிய உயர்வு குறித்த கோரிக்கை அரசால் பரிசீலிக்கப்பட்டு, அரசாணை (நிலை) எண் 238 கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள்: 19-10-2000-ல் கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் பொது விநியோகத் திட்ட நியாய விலைக் கடைகளின் விற்பனையாளர்கள் மற்றும் கட்டுநர்களின் ஊதியம் 1-4-2000 முதல் உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.

31—

**சொந்தக் கட்டடம்**

**வினா எண் 38333—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், கக்கரைக்கோட்டை கிராமத்திலுள்ள கிராமக் கூட்டுறவு அங்காடிக்கு நடப்பு நிதியாண்டில் (2000-2001) சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், கக்கரைக்கோட்டை கிராமக் கூட்டுறவு அங்காடிக்கு புதிய கட்டடம் கட்ட 12-6-2000 தேதிய கடிதத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் அவர்களுக்கு தஞ்சாவூர் மண்டல இணைப் பதிவாளர் அவர்களால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

32—

**பகுதிநேர அங்காடி**

**வினா எண் 38675—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், சிட்லபாக்கம் ஊராட்சி ஒன்றியம், வடக்குபட்டு கிராமத்திற்கு பகுதிநேர அங்காடி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): காஞ்சிபுரம் மாவட்டம், சிட்லபாக்கம் ஊராட்சி ஒன்றியம், வடக்குபட்டு கிராமத்தில் பகுதிநேரக் கடை அமைக்க கோரிக்கை பெறப்பட்டால் பரிசீலனை செய்யப்படும்.

33—

### கட்டிட வசதி

**வினா எண் 38920—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒரத்தநாடு வட்டம், சங்கரனார் குடிகாடு கிராம நியாய விலைக் கடைக்கு நடப்பு நிதியாண்டில் (2000-2001) கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், சங்கரனார் குடிகாடு நியாய விலைக் கடைக்கு 2000-2001 ஆம் ஆண்டில் கட்டிடம் கட்டுவது தொடர்பாக தஞ்சாவூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு,



தஞ்சாவூர் இணைப் பதிவாளர் அவர்களால் 18-8-2000 நாளிட்ட கடிதம் மூலம் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

34—

### ஊழியர்களுக்குச் சலுகைகள்

**வினா எண் 40772—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு ஊழியர்களுக்கு இணையான அகவிலைப்படி உயர்வு, வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி மலைப்பகுதிகளில் பணிபுரிபவர்களுக்கான சலுகைகள் அனைத்தும் கூட்டுறவுப் பண்டகசாலை ஊழியர்களுக்கும் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைப் பணியாளர்களுக்கு அரசு ஊழியர்களுக்கு இணையான அகவிலைப்படி 1-10-1989 முதல் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. அரசு ஊழியர்களுக்கு 1-7-1999 முதல் வழங்கப்பட்ட அகவிலைப்படி உயர்வும், பண்டகசாலை ஊழியர்களுக்கு வழங்க அனுமதித்து அரசாணை வழங்கப்பட்டுவிட்டது. இவர்களுக்கு அடிப்படைச் சம்பளத்தில் வீட்டு வாடகைப்படி 10 சதவீதமும், நகர ஈட்டுப்படி 5 சதவீதமும் மற்ற இடங்களுக்கு 4 சதவீதமும், மலைப்பிரதேசங்களில் பணிபுரிபவர்களுக்கு மலைப்படியாக 20 சதவீதமும் ஏற்கெனவே வழங்கப்பட்டு வருகின்றன.

[2001 ஜனவரி 30

35—

**அங்காடிக்குக் கட்டிடம்**

**வினா எண் 40885—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், வடக்கூர் தெற்கு ஊராட்சியிலுள்ள அமுதம் அங்காடிக்குச் சொந்தக் கட்டிடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், வடக்கூர் தெற்கு ஊராட்சியிலுள்ள அங்காடிக்குக் கட்டிடம் கட்ட தஞ்சாவூர் மண்டல கூட்டுறவு இணைப் பதிவாளர் அவர்களால் தஞ்சாவூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் அவர்களுக்கு 9-11-2000 அன்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

36—

**அமுதம் சிறப்பங்காடி**

**வினா எண் 42092—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை நகரில் இயங்கி வந்த அமுதம் சிறப்பங்காடி மீண்டும் இயங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?



2001 ஜனவரி 30]

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செங்கோட்டையில் இயங்கி வந்த அமுதம் சிறப்பாங்காடி மாதந்தோறும் ரூ.20,000/-க்கும் அதிகமாகத் தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வந்ததால், அதனை மூடுவதற்கு உத்தரவிடப்பட்டது. மேலும் மாநிலக் கணக்காய்வுக் குழு, வட்டத்தில் இயங்கி வரும் அமுதம் பல்பொருள் அங்காடிகளை மூடிவிடுமாறு அறிவுறுத்தியதற்கிணங்க நட்டத்தில் இயங்கி வரும் அங்காடிகள் மூடப்பட்டு வருகின்றன. எனவே, செங்கோட்டையில் அமுதம் சிறப்பங்காடியினை மீண்டும் திறப்பதற்குச் சாத்தியக்கூறுகள் இல்லை.

37—

**வீட்டுமனைப் பட்டா**

**வினா எண் 14211—திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டு தொகுதி, திருவண்ணாமலை ஒன்றியத்தில் தண்டரை, அரடாப்பட்டு, பழையனூர், பாவும்பட்டு, பாப்பம்பாடி, பண்டிதப்பட்டு, நாறையூர், அண்டம்பள்ளம், காடகமான், பெருமணம், விருதுவிளங்கினான், கல்லேறி மதுரம்பட்டு ஆகிய கிராமங்களில் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1999-2000 நிதியாண்டில் திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு தொகுதியில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு 465 மிகப் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டன.

**திருவண்ணாமலை வட்டம்**

| | |
|---|---|
| பண்டிதம்பட்டு கிராமம் | 81 பயனாளிகள் |
| நாறையூர் கிராமம் | 110 பயனாளிகள் |

**செங்கம் வட்டம்**

| | |
|---|---|
| தண்டராம்பட்டு கிராமம் | 67 பயனாளிகள் |
| கொழுந்தம்பட்டு கிராமம் | 57 பயனாளிகள் |
| மோத்தக்கல் கிராமம் | 85 பயனாளிகள் |
| கீழ்வணக்கம்பாடி கிராமம் | 65 பயனாளிகள் |
| ஆக மொத்தம் | 465 பயனாளிகள் |

நடப்பு நிதியாண்டில் (2000-2001) கீழே குறிப்பிட்டுள்ளபடி பட்டாக்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது:

**திருவண்ணாமலை மாவட்டம்**

| | |
|---|---|
| வைப்பூர் கிராமம் | 95 பயனாளிகள் |
| சின்னக்கல்லப்பாடி கிராமம் | 110 பயனாளிகள் |

**செங்கம் வட்டம்**

| | |
|---|---|
| தாடாப்பட்டு கிராமம் | 200 பயனாளிகள் |
| கீழ் ராவத்தவாடி | 96 பயனாளிகள் |

மேலும் தீவிர வீட்டுமனைப் பட்டா வழங்கும் சிறப்புத் திட்டத்தின் கீழ் திருவண்ணாமலை மாவட்டம், தண்டரை கிராமத்தில் புல எண்கள் 85/1 மற்றும் 91-1-லும், அரடாப்பட்டு கிராமத்தில் புல எண் 104/1, 91/9, 115/2, 120/1, 140 ஆகியவற்றிலும் வகைமாற்றம் செய்து இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இதைத் தவிர நடப்பு நிதியாண்டில் நேரடிப் பேச்சுவார்த்தை மூலமாகவும் நிலங்களைக் கையகப்படுத்தி மிகப் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.





இத்தொகுதியில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள கிராமங்களைத் தவிர இதர கிராமங்களிலிருந்து இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் கோரி மனுக்கள் ஏதும் நிலுவையில் இல்லை.

**38—**

**இலவச வீட்டுமனை**

**வினா எண் 17573—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில் சலவைத் தொழிலாளர்கள், முடிதிருத்துவோர் வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வேண்டி எத்தனை பேர் விண்ணப்பித்துள்ளார்கள்?

(ஆ) எத்தனை பேருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டத்தில் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் கோரி விண்ணப்பித்த சலவைத் தொழிலாளர்கள் மற்றும் முடித்திருத்துவோரின் எண்ணிக்கை முறையே 362 மற்றும் 416 ஆகும்.

**சலவைத் தொழிலாளர் பற்றிய விவரம்**

1999-2000 நிதியாண்டில் 274 பேருக்கு இலவச மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 88 பேரில் பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், போகிநாயக்கனஅள்ளி கிராமத்தைச் சேர்ந்த 74 பயனாளிகளுக்கும், பாலக்கோடு வட்டம், பேவுஅல்லி கிராமத்தைச் சேர்ந்த 14 பயனாளிகளுக்கும், நில எடுப்புச் சட்டப்படி நிலம் கையகப்படுத்தி இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

2001 ஜனவரி 30]

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

1997-98 ஆம் ஆண்டில் நாமக்கல் மாவட்டத்தில் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் கோரி மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினைச் சேர்ந்த 494 சலவைத் தொழிலாளர்களும், 147 முடித்திருத்துவோர்களும் விண்ணப்பம் செய்திருந்தனர். அவர்களில் 242 சலவை தொழிலாளர்களுக்கும், விண்ணப்பம் செய்திருந்த 147 முடித்திருத்துவோர்களுக்கும் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 152 சலவைத் தொழிலாளர்களுக்கு அவர்களின் தகுதியின் அடிப்படையில் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**40—**

## வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 30223—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி தொகுதியில் பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களிடமிருந்து வீட்டுமனைப் பட்டா கோரி வந்துள்ள மனுக்கள் எத்தனை?

(ஆ) அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புவனகிரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கிராமங்களில் வீடற்ற பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் முற்பட்டோர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் கோரியதன் அடிப்படையில்

[2001 ஜனவரி 30

கீழ்புவனகிரியில் 57 நபர்களுக்கும், பிச்சாவரத்தில் 39 நபர்களுக்கும், மிராளூரில் 85 நபர்களுக்கும், வடக்கு திட்டையில் 50 நபர்களுக்கும் ஆக மொத்தம் 231 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க நில எடுப்புச் சட்டத்தின் மூலமும், தனியார் பேச்சுவார்த்தை மூலமும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு பட்டா வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

41—

## வீட்டுமனைப் பட்டாக்கள்

**வினா எண் 33030—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் கடந்த ஆண்டில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்ட வீட்டுமனைப் பட்டாக்கள் எத்தனை?

(ஆ) நிலுவையிலுள்ள மனுக்கள் எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்தில் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீரமரபினர் மற்றும் முற்பட்ட வகுப்பினருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டத்தில் 1997-98 ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கு மற்றும் சாதனை விவரங்களின்படி வழங்கப்பட்ட பட்டாக்கள் பின்வருமாறு:

1,610 பேருக்கு இலவச பட்டாக்கள் ரூ.70.30 இலட்சத்தில் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இதில் ரூ.8.53 இலட்சத்தில் 416 பிற்படுத்தப்பட்டோருக்கும், ரூ.28.82 இலட்சத்தில் 1,010 மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கும், 51.35 ஏக்கர் பரப்பளவில் வீட்டுமனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளது. இலக்கு நிர்ணயிக்கப் பட்டதில் பட்டா வழங்கப்படாமல் மீதமுள்ளவை 184.



2001 ஜனவரி 30]

42—

## இலவச வீட்டுமனைகள்

**வினா எண் 33139—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், மேலஉளூர் கிராமத்தில் நரிக்குறவர் காலனியில் வீடு இல்லாமல் உள்ள நரிக்குறவர்கட்கு இலவச வீட்டுமனைகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், 7 மேலஉளூர் கிராமத்தில் 67 நரிக்குறவர்களுக்கு இலவச வீட்டுமனையில் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டு அதில் அவர்கள் குடியிருந்து வருகிறார்கள். குடியிருந்து வரும் 67 நரிக்குறவர்களில் 31 நபர்கள் புல எண் 313-லும், 31 நபர்கள் புல எண் 257/4 மற்றும் 257/8-லும் குடியமர்த்தப்பட்டுள்ளனர். இந்தக் குடும்பங்களில் 1998-99 ஆம் ஆண்டில் திருமணம் செய்து கொண்ட நபர்களான (1) பொன்னரசு, த/பெ. ஆராவது, (2) மனோகர், த/பெ. சங்கர், (3) தேவதாஸ், த/பெ. காசி, (4) ரஜினி, த/பெ. காந்தா ஆகிய நபர்கள் மட்டும் பெற்றோருடன் கூட்டுக் குடும்பமாக வசித்து வருகிறார்கள். இவர்களைத் தவிர்த்து அனைத்து நபர்களுக்கும் மனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளது. இந்த நான்கு நபர்களுக்கு கீழ்உளூர், கிராமத்தில் ஏற்கனவே நரிக்குறவர்களுக்கு மனைப்பட்டா வழங்கப்பட்ட புலத்தில் காலியாக உள்ள பகுதியில் மனைப்பட்டா வழங்க ஒரத்தநாடு வட்டாட்சியரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

43—

## நிலத்தைக் கையகப்படுத்துதல்

**வினா எண் 37947—திரு. ஆர்.ஆர். சேகரன்:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், பூசாரிப்பட்டி ஊராட்சியில் மிகவும் பிற்படுத்தப்பட்ட இன மக்களுக்கு இலவச வீட்டு மனைப்பட்டா வழங்குவதற்கு தாசசமுத்திரம் கிராமம் ச.நெ.11/2-இல் உள்ள நிலத்தை நேரடி பேச்சுவார்த்தை மூலம் கையகப்படுத்தும் பணி எந்த நிலையில் உள்ளது?*

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், பூசாரிப்பட்டி மற்றும் தாசசமுத்திரம் கிராமம் ச.நெ.11/2-ல் 0.95.0 ஹெக்டேர் நிலம் ஆர்ஜிதம் செய்தல் தொடர்பாக பிற்படுத்தப்பட்டோர் நல தனி வட்டாட்சியரிடம் முன்மொழிவுகள் கோரப்பட்டுள்ளன. முன்மொழிவுகள் கிடைக்கப்பெற்றவுடன் தனியார் பேச்சுவார்த்தை மூலம் ஆர்ஜிதம் செய்ய விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

44—

## வீட்டுமனைகள்

**வினா எண் 38349—திரு. ஆர். ஆர். சேகரன்:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், வெள்ளக்கல்பட்டி ஊராட்சியில் வசிக்கும் வீடற்ற மிகப் பிற்படுத்தப்பட்ட பொதுமக்களுக்கு வீட்டுமனை வழங்க அரசு முன்வருமா?*



விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், வெள்ளக்கல்பட்டியில் வசிக்கும் வீடற்ற மிகப்பிற்படுத்தப்பட்ட இன மக்களுக்கு 1998-99 ஆம் வருடம் வெள்ளாளப்பட்டி கிராமத்தில் 5.00 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு 118 பயனாளிகளுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது.

2000-2001ல் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த வீடற்ற 30 குடும்பங்களுக்கு 1.50 ஏக்கர் நிலம் தனியார் பேச்சுவார்த்தை மூலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

45—

## சொந்தக் கட்டடம்

**வினா எண் 40986—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** *மாண்புமிகு பிற்பட்டுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, பெருமகளூர் ஊராட்சியிலுள்ள பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர் விடுதிக்குச் சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, பெருமகளூர் ஊராட்சியிலுள்ள பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதிக்குச் சொந்தக் கட்டடம் கட்டித்தருவது குறித்த செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

46—

## விடுதிக்குக் கட்டடம்

**வினா எண் 40988—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி தொகுதி, பேராவூரணி அரசு மாணவர் விடுதிக்குச் சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி தொகுதி, பேராவூரணி அரசு மாணவர் விடுதிக்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தருவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

47—

## பதிவுத் திருமணம்

**வினா எண் 40349—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் 1999-2000 ஆண்டு ஏப்ரல் 30 வரை சார்பதிவாளர் அலுவலகங்களில் எவ்வளவு பேர் பதிவுத் திருமணம் செய்து கொண்டனர்?

(ஆ) கலப்புத் திருமணங்கள் எவ்வள்வு?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் 1999-2000 ஆண்டு ஏப்ரல் 30 வரை பதிவு செய்யப்பட்டுள்ள பதிவுத் திருமணங்களின் எண்ணிக்கை 1,365 ஆகும்.





(ஆ) மேற்குறிப்பிட்ட காலத்தில் 384 கலப்புத் திருமணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

48—

## கணினி வசதி

**வினா எண் 40459—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆவணப் பதிவு அலுவலகங்களில் கணினி வசதி செய்துதர நடப்பாண்டில் அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

பதிவுத் துறையை கணினி மயமாக்கும் திட்டம் 6-2-2000 அன்று தொடங்கப்பட்டு முதல் கட்டமாக 9 பதிவு மாவட்டங்களும் 16 சார்பதிவு அலுவலகங்களும் கணினி மயமாக்கப்பட்டன.

2. இரண்டாம் கட்டமாக 41 பதிவு மாவட்டங்களும் 284 சார்பதிவு அலுவலகங்களும் கணினி மயமாக்கப்பட்ட அரசு ஆணை எண் 118, வணிகவரித் துறை, நாள்: 21-7-2000-ல் நிர்வாக ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி திட்டம் "எல்காட்" நிறுவனத்தின் மூலம் செயலாக்கப்படவுள்ளது. இதர சார்பதிவகங்கள் மூன்றாம் கட்டமாக கணினி மயமாக்கப்படும்.

49—

## முத்திரைத்தாள் கட்டணம்

**வினா எண் 40462—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கர்நாடக மாநில அரசில் பாகப்பிரிவினைக்கு சொத்து மதிப்பிடாமல், மாநகராட்சி, நகராட்சி மற்றும் ஊராட்சி

போன்றவற்றிற்கு முறையே ரூ.1000, ரூ.500 மற்றும் ரூ.250 மட்டும் முத்திரைத் தாள் கட்டண விகிதம் உள்ளதுபோல் தமிழகத்திலும் நடைமுறைப்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது இத் திட்டம் அமலுக்கு வரும்?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் குடும்ப உறுப்பினர்களுக்கிடையில் செய்துகொள்ளப்படும் பாக ஆவணங்களுக்கு விதிக்கத்தக்க முத்திரைத் தீர்வை 4%-லிருந்து 2%-ஆக ஏற்கெனவே குறைக்கப்பட்டுள்ளது. தவிரவும் விளை நிலங்கள் தொடர்பான பாக ஆவணங்களில் முத்திரைத் தீர்வை விதித்திடும் நேர்வில் சொத்தின் மதிப்பு வழிகாட்டி மதிப்பின்படி பின்பற்றப்படாமல் விவசாய நிலங்களுக்கு விதிக்கப்படும் தீர்வையில் 25 மடங்கிற்கு 1% எனக் கணக்கீடு செய்யப்படுகிறது. இது விவசாய நிலங்களுக்கு அளிக்கப்படும் சலுகையாகும். இந் நிலையில் கர்நாடக அரசின் நடைமுறையில் உள்ளது போன்று முத்திரைத் தீர்வைக் கட்டணம் நிர்ணயம் செய்யும் கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை.

50—

**கூட்டுறவுச் சங்கம்**

**வினா எண் 42496—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கருப்பட்டியின் மருத்துவப் பயன்களைப் பொதுமக்கள் அறிந்து கொள்ளவும், கருப்பட்டியைத் தயாரிக்கும் கூட்டுறவுச் சங்கம் அமைக்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு, கதர்த் துறை அமைச்சர்:**

கருப்பட்டியின் மருத்துவக் குணங்களை அறிந்து மக்கள் ஏற்கெனவே இதனை உணவுப் பொருளாகப் பயன்படுத்தி வருகின்றனர்.





மேலும், தமிழ்நாட்டில் கருப்பட்டி (பனைவெல்லம்) உற்பத்தி செய்வதற்காக ஏற்கனவே 1,476 ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. எனவே, புதியதாகப் பனைவெல்லம் உற்பத்தி செய்யக் கூட்டுறவுச் சங்கங்களை அமைக்கும் திட்டம் அரசிடம் ஏதுமில்லை.

## எட்டாவது பட்டியல்

1—

**கலால் வரி**

**வினா எண் 31099—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுவகை தயாரிப்புகளின்மீது கடந்த 1998-99-ல் வசூலிக்கப்பட்ட கலால் வரி எவ்வளவு என்பது அரசு தெரிவிக்குமா?

(ஆ) அதில் வசூலிக்கப்படாமல் நிலுவையில் உள்ள தொகை எவ்வளவு என்பதை அரசு தெரிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மதுவகை தயாரிப்புகளின்மீது கடந்த 1998-99-ல் வசூலிக்கப்பட்ட கலால் வரி (ஆயத் தீர்வை) 50.66 கோடி ரூபாய் ஆகும்.

(ஆ) 1998-99-ஆம் ஆண்டு சம்பந்தமாக வசூலிக்கப்படாமல் நிலுவையில் உள்ள தொகை ஏதும் இல்லை.

2—

**மது உற்பத்தி**

**வினா எண் 31172—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குறைந்த விலையில் மது தயாரித்து அண்டை மாநிலங்களுக்கு வழங்கி அரசின் வருவாயை அதிகப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

[2001 ஜனவரி 30

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) குறைந்த விலையில் மது தயாரித்து அண்டை மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்து அரசின் வருவாயை அதிகப்படுத்தும் செயற்குறிப்பேதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ் வினா எழ வாய்ப்பில்லை.

3—

**நவீன வசதிகள்**

**வினா எண் 37304—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா— (அ) சென்னை, சேப்பாக்கம் அரசு விருந்தினர் மாளிகையில் நவீன வசதிகள் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) சென்னை, சேப்பாக்கம் அரசு விருந்தினர் மாளிகையில் 1999-2000 ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ் நவீன வசதிகள் ரூ.20,13,000 செலவினத்தில் செய்யப்பட்டுள்ளன.

(ஆ) நவீன வசதிகள் செய்யப்பட்ட விவரங்கள் வருமாறு:—

(1) ரூ.4,86,000 மதிப்பீட்டில் 27 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வாங்கிப் பொருத்தப்பட்டுள்ளன.

(2) பல சேனல் நிகழ்ச்சிகளையும் பார்க்க கேபிள் தொலைக் காட்சி வசதி செய்யப்பட்டுள்ளது.



2001 ஜனவரி 30]

(3) ரூ.1,01,000 மதிப்பீட்டில் அறை எண் 101 மற்றும் 201-ற்குப் புதிய சோபா மற்றும் மரச் சாமான்கள் போடப்பட்டுள்ளன.

(4) ரூ.3,00,000 மதிப்பீட்டில் பழைய குளிர்சாதனப் பெட்டிகளுக்குப் பதிலாக புதிய குளிர்சாதனப் பெட்டிகள் பொருத்தப்பட்டுள்ளன.

(5) ரூ.50,000 மதிப்பீட்டில் புதிய சமையல் பாத்திரங்கள் வாங்கப்பட்டுள்ளன.

(6) ரூ.5,60,000 மதிப்பீட்டில் ஃபோம் படுக்கைகள் வாங்கப்பட்டுள்ளன.

(7) ரூ.5,60,000 மதிப்பீட்டில் கூடுதல் மரச்சாமான்கள் வாங்கப்பட்டுள்ளன.

(8) ரூ.23,000 மதிப்பீட்டில் 5 புதிய இரும்பு பீரோக்கள் வாங்கப்பட்டுள்ளன.

(9) ரூ.27,000 மதிப்பீட்டில் 2000 லிட்டர் கொள்ளவு கொண்ட புதிய சின்டெக்ஸ் மேல்நிலைத் தொட்டி பொருத்தப்பட்டுள்ளது.

(10) ரூ.1,50,000 மதிப்பீட்டில் மூன்று அறைகள் நவீனப் படுத்தப்பட்டுள்ளன.

(11) ரூ.1,00,000 மதிப்பீட்டில் புதிய மின் அறை கட்டப்பட்டுள்ளது.

மேலும் தேவைக்கேற்றவாறு வசதிகள் செய்யவும் திட்டமிடப் பட்டுள்ளது.

4—

**வகுப்பறைக் கட்டடம்**

**வினா எண் 30215—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கோட்டை நகராட்சி அரசுப் பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்குப் போதுமான வகுப்பறைக் கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செங்கோட்டை நகராட்சி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்குப் போதுமான வகுப்பறைக் கட்டடம் கட்டிக் கொடுக்க நடப்பாண்டில் அரசின் நிதி ஒதுக்கம் இல்லை. எனவே சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திலிருந்து இப்பள்ளிக்குக் கூடுதல் கட்டட வசதி செய்ய நிதி ஒதுக்குமாறு திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர் இசைவு பெறப்படின் இப்பள்ளிக்குக் கட்டட வசதி செய்து தரப்படும்.

5—

**கட்டடங்கள்**

**வினா எண் 39494—திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் வட்டத்தில் எத்தனை அரசு நூலகங்கள் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன?

(ஆ) வாடகைக் கட்டடத்தில் இயங்குபவை எத்தனை?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) சிதம்பரம் வட்டத்தில் சொந்தக் கட்டடத்தில் செயல்படும் கிளை நூலகங்கள்:-

| | | |
|---|---|---|
| 1. டி.எஸ். பேட்டை | 2. பிவ்வத்தூர் | 3. சாக்காங்குடி |
| 4. பரதூர் | 5. மஞ்சக்குழி | 6. புவனகிரி |
| 7. கிள்ளை | 8. பி. முட்லூர் | 9. சேத்தியாத்தோப்பு |

சொந்தக்கட்டடத்தில் செயல்படும் ஊர்ப்புற நூலகம்: பரிவிளாகம்.



(ஆ) சிதம்பரம் வட்டத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கும் கிளை நூலகங்கள்:—

1. சிதம்பரம் 2. பரங்கிப்பேட்டை

6—

**கட்டட வசதி**

**வினா எண் 35607—திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், தென்காசி அரசு தலைமை மருத்துவமனை புதிய வளாகத்தில் புறநோயாளிகள் பிரிவு கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறைவேற்றப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தென்காசி அரசு தலைமை மருத்துவமனை புதிய வளாகத்தில் புறநோயாளிகள் பிரிவு கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு 2-1-2000 முதல் செயல்படுகிறது.

7—

**காலிப் பணியிடங்கள்**

**வினா எண் 35829—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவமனைகளில் காலியாக உள்ள பணியிடங்கள் எப்பொழுது நிரப்பப்படும்?

[2001 ஜனவரி 30

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டத்திலுள்ள அரசு மருத்துவமனைகளில் காலியாக உள்ள அனைத்துப் பணியிடங்களும் நிரப்பப்பட்டுள்ளன.

**8—**

### பணியாளர்கள் நியமனம்

**வினா எண் 38361—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி அரசு மருத்துவமனைக்கு மருத்துவமனை பணியாளர்கள் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், புதிதாக 5 மருத்துவப் பணியாளரை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) எடப்பாடி அரசு மருத்துவமனையில் போதிய பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**9—**

### குடும்பக் கட்டுப்பாடு

**வினா எண் 39656—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2001 ஜனவரி 30]

எடப்பாடி அரசு மருத்துவனையில் 1999-ம் ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் முடிய எவ்வளவு பெண்கள் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொண்டனர்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

1999 ஆம் ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் முடிய எடப்பாடி அரசு மருத்துவமனை அறுவைச் சிகிச்சை அரங்கம் சரியில்லாத நிலையில் இருந்ததால் பெண்களுக்கான குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை செய்யப்படவில்லை.

**10—**

### மருத்துவமனை

**வினா எண் 39664—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம், ஈரோடு, நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் 2000-2001-ல் எத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்களை மருத்துவமனையாக தரம் உயர்த்த அரசு உத்தேசித்துள்ளது?

(ஆ) அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) சேலம், ஈரோடு மற்றும் நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களை 2000-2001 ஆம் ஆண்டில் அரசு மருத்துவமனைகளாக தரம் உயர்த்தும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழாது.

[2001 ஜனவரி 30

**11—**

### வருவாய் இழப்பு

**வினா எண் 40043—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பல வருடங்களாக வேலூர் நகராட்சியின் சுற்றுலா விடுதி சரிவர பராமரிக்கப்படாமல் மூடியிருப்பதால் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்படுவதைத் தவிர்க்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வேலூர் நகராட்சி பயணியர் விடுதி, பயணிகள் தங்க உகந்ததாக இல்லை. நகராட்சி நிதி நிலை சரியில்லாததால், பெருமளவு செலவு செய்து அதைப் புதுப்பிக்கத் தற்போது வழியில்லை. அவ்வளவு செலவு செய்தாலும், குறைந்த வருமானமே வர வாய்ப்புள்ளது. எனவே, மேற்படி விடுதி, நகராட்சிக்குச் சொந்தமான பொருட்கள் சிமெண்ட், தார், இரும்புக் கம்பிகள் போன்றவற்றைச் சேமித்து வைக்கும் கிடங்காகப் பயன்படுத்தப்படுகிறது. இதனால் நகராட்சிக்கு நிதி இழப்பு ஏதும் இல்லை.

**12—**

### கரும்புக்கு கூடுதல் விலை

**வினா எண் 30322—திரு. க.வெ.வீ. இராசமாணிக்கம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரும்பு விவசாயிகளுக்கு கூடுதல் விலை எப்பொழுது வழங்கப்படும்?

(ஆ) ஆலைகளுக்கு அனுப்பிய கரும்புக்கு உடனடியாகப் பணம் முழுத்தொகையையும் பட்டுவாடா செய்ய ஏற்பாடு செய்யப்படுமா?

(இ) ஆம் எனில், எப்பொழுது?



2001 ஜனவரி 30]

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தமிழக அரசு மாநில அரசு பரிந்துரை விலையை 1999-2000 அறவைப் பருவத்தில் கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளுக்கு 8.5% பிழிதிறன் கொண்ட கரும்பிற்கு டன் ஒன்றுக்கு ரூ.740 என நிர்ணயித்து அதன்படி கரும்பு கிரயம் வழங்கப்பட்டு வருகிறது. தனியார் சர்க்கரை ஆலைகள் மாநில அரசு பரிந்துரை விலை நிர்ணயிப்பதை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் தடையாணை பெற்று இது தொடர்பான நீதிமன்றப் பேராணை மனு இன்னமும் இறுதித் தீர்ப்பு வழங்கப்படாமல் நிலுவையில் உள்ளதால், தனியார் ஆலைகள் விவசாயிகளுடன் ஒப்புக்கொண்ட விலையைத் தற்போது வழங்குகின்றன.

(ஆ) மற்றும் (இ) கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகள் பெருத்த நட்டத்தில் இயங்கி வருவதால் 1999-2000 அறவைப் பருவத்தில் மாநில அரசு பரிந்துரை விலையின் ஒரு பகுதியை இன்னமும் வழங்க இயலவில்லை. கரும்பு விலை பாக்கியை அளிப்பதற்காக மாநில அரசு 23-10-2000-ல் ரூ.30.00 கோடி வழிவகை முன்பணம் வழங்கியது. மேலும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளிலிருந்து கொள்முதல் செய்யவும் (ஜனவரி-மார்ச், 2001) மூன்று மாத லெவி சர்க்கரைக்கான விலையில் 50 விழுக்காட்டின் தொகை ரூ.27.13 கோடியை ஆலைகள் பெற்றுக்கொள்ள அனுமதித்து 11-12-2000-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மீதமுள்ள கரும்பு பாக்கித் தொகை விரைவில வழங்கப்படும்.

2. தனியார் ஆலைகளைப் பொறுத்தமட்டில் தரணி 1 மற்றும் தரணி 2 சர்க்கரை ஆலைகள் மட்டும் ரூ.6.89 கோடி நிலுவை வைத்துள்ளன. மேற்படி இரண்டு ஆலைகளும், கரும்பு விலை நிலுவையை உடனடியாகச் செலுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளன.

[2001 ஜனவரி 30

13—

**பஞ்சு உற்பத்தி**

**வினா எண் 32210—திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் ஒரு எக்டேர் நிலப்பரப்பில் உற்பத்தியாகும் பஞ்சு எத்தனை கிலோ?

(ஆ) பஞ்சு உற்பத்தியில் இந்திய சராசரி உற்பத்தி அளவு என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் 1999-2000 ஆண்டில் பருத்தி உற்பத்தித் திறன் ஒரு எக்டேருக்கு 271 கிலோ பஞ்சு ஆகும். கடந்த மூன்றாண்டுகளில் பஞ்சு உற்பத்தி விவரம் கீழ்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1996-97 | - | 221 கிலோ/எக்டேர் |
| 1997-98 | - | 267 கிலோ/எக்டேர் |
| 1998-99 | - | 300 கிலோ/எக்டேர் |

(ஆ) பஞ்சு உற்பத்தியில், இந்திய சராசரி உற்பத்தி அளவு 1999-2000 ஆண்டில் 205 கிலோ ஆகும். முந்தைய மூன்றாண்டுகளில் இந்திய சராசரி உற்பத்தி விவரம் கீழ்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1996-97 | - | 265 கிலோ/எக்டேர் |
| 1997-98 | - | 213 கிலோ/எக்டேர் |
| 1998-99 | - | 223 கிலோ/எக்டேர் |

14—

**புதிய திட்டம்**

**வினா எண் 38352—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காய்கறி கழிவுகளை வீணாக்காமல் அவற்றை உரமாகப் பயன்படுத்தும் புதியத் திட்டத்தை அரசு அறிமுகப்படுத்த உள்ளதா?



2001 ஜனவரி 30]

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காய்கறிக் கழிவுகளை வீணாக்காமல் அவற்றை உரமாகப் பயன்படுத்தும் திட்டம் ஏதும் தற்போது அரசின் செயல்பாட்டில் இல்லை. காய்கறிக் கழிவுகளை வீணாக்காமல் அவற்றை உரமாகப் பயன்படுத்த மண்புழு பெரிதும் உபயோகப்படுத்தப்படுகிறது. மண்புழுக்கள் இவற்றை உணவுப் பொருளாக உட்கொண்டு நாங்கூழ்கட்டிகள் எனப்படும் சிறுசிறு உருண்டைகளாக வெளியேற்றும் கழிவுப் பொருளே மண்புழு கழிவு உரம் அல்லது வெர்மி கம்போஸ்ட் எனப்படும். இக்கழிவு உரத்தை விவசாயிகளிடையே பரவலாக்க வேளாண்மைத் துறை களப்பணியாளர்கள் விவசாயிகளுக்கு உரிய ஆலோசனை முறைகளை வழங்கி வருகிறார்கள். இது போன்று மண்புழு கழிவு உரம் தயாரிக்க செங்கல்பட்டு உயிரியல் ஆய்வு மையம் (தமிழ்நாடு சர்க்கரை இணையத்தின் அலகு) தேவையான மண்புழுக்களை விவசாயிகளுக்கு வழங்கி வருகிறது. கழிவு உரம் தயாரிப்பதற்கான ஆலோசனைகளும் இம்மையத்தினால் அளிக்கப்படுகின்றன. மேலும், சர்க்கரை ஆலை கழிவு மண்ணைக்கொண்டு (Press Mud) மண்புழு கழிவு உரம் தயாரிக்க தமிழ்நாட்டில் மதுராந்தகம், திருத்தணி, செய்யார், வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் மற்றும் குருங்குளம் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை, கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு சர்க்கரை கழிவு மண்ணை (Press Mud) வழங்கி வருகின்றன. இதற்கு விவசாயிகளிடையே பெரும் வரவேற்பு உள்ளதால் இத்தொழில்நுட்பத்தை சர்க்கரை ஆலைப் பகுதிகளிலும் விரிவுபடுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

15—

**விதைகள் இலவசம்**

**வினா எண் 39776—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் **துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு** விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள சிறு விவசாயிகளுக்கு விதைகளை இலவசமாகக் கொடுக்கலாம் என அரசு தீர்மானித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் நடைமுறைக்கு வரும்?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகத்திலுள்ள சிறு விவசாயிகளுக்கு விதைகளை இலவசமாக வழங்கும் திட்டம் ஏதும் நடைமுறையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**16—**

### யூரியா விலை

**வினா எண் 39783—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) யூரியா விலை ஏற்றத்தால் தமிழ்நாட்டில் வேளாண்மை உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், யூரியா விலையைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத்துறை அமைச்சர்.**

(அ) மற்றும் (ஆ) யூரியா விலை ஏற்றத்தால் தமிழ்நாட்டில் வேளாண் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது என்பதற்கான வாய்ப்பு ஏதுமில்லை. யூரியாவின் விலையை முன்பு 'இருந்தபடியே ஒரு டன் ரூ.4000 என நிர்ணயிக்குமாறு கோரிக்கை மைய அரசுக்கு மாநில அரசினால் எழுப்பப்பட்டது. இருப்பினும், மைய அரசு யூரியாவில் விலையை திருத்தி அறிவிக்கவில்லை. 29-02-2000-லிருந்து டன் ஒன்றுக்கு ரூ.4600 (உள்ளூர் வரி நீங்கலாக) என உயர்த்தி நிர்ணயம் செய்ததினை முன்னிட்டு, தமிழகத்தில் யூரியாவின் விலை டன் ஒன்றுக்கு ரூ.4,688 என திருத்தி அமைக்கப்பட்டது. இதர மாநிலங்களில் யூரியாவிற்கு விதிக்கப்படும் விற்பனை வரி 4% என இருக்கையில், தமிழகத்தில் யூரியா



மீதான விற்பனை வரி 2% என்றே கடைப்பிடிக்கப்படுகிறது. அதனால் அண்டை மாநிலங்களைக் காட்டிலும், தமிழகத்தில் யூரியாவின் விலை குறைந்தே காணப்படுகிறது. மேலும் மைய அரசின் யூரியா விலை உயர்வு அறிவிப்பினையொட்டி, யூரியா விலை திருத்தி அமைக்கப்பட்டிருப்பினும், தமிழக விவசாயிகளால் யூரியாவினை பயிர்களுக்குப் பயன்படுத்தும் நிலை ஏதும் குறைவுபடவில்லை என்பதைப் பின்வரும் புள்ளி விவரங்களிலிருந்து அறியலாம்:

| யூரியா நுகர்வு அளவு | (இலட்சம் டன்னில்) |
|---|---|
| ஆகஸ்டு 1999 முடிய | 2.59 |
| ஆகஸ்டு 2000 முடிய | 2.56 |

எனவே, விலை உயர்வினால் நுகர்வு அளவு எந்தவிதத்திலும் பாதிக்கப்படவில்லை. யூரியாவில் பயனீட்டு அளவில் எந்தவித மாற்றமும் ஏற்படாத பட்சத்தில் வேளாண்மை உற்பத்தி பாதிப்பிற்கான வாய்ப்பு ஏதும் இல்லை.

**17—**

### நெல் சாகுபடி

**வினா எண் 39871—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் கடந்த 1999-2000 ஆண்டில் சொட்டு நீர்ப் பாசன திட்டத்தின் மூலம் எத்தனை ஏக்கர் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது?

(ஆ) அதற்கு அரசால் எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் 1999-2000 ஆண்டில் சொட்டு நீர்ப்பாசனத் திட்டத்தின் மூலம் நெல் சாகுபடி ஏதும் செய்யப்படவில்லை.

[2001 ஜனவரி 30

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

18—

### பழப் பண்ணைகள்

**வினா எண் 39928—திரு. இரா. மகேந்திரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தோட்டக்கலைத் துறையில் அரசு பழப் பண்ணைகள் இலாபத்தில் இயங்குகின்றனவா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். தோட்டக்கலைத் துறையில் அரசு பழப் பண்ணைகள் இலாபகாமாக இயங்கி வருகின்றன.

(ஆ) தோட்டக்கலைத் துறையின்கீழ் 54 அரசு தோட்டக்கலைப் பண்ணைகள் இயங்கி வருகின்றன. கடந்த 5 வருடங்களில் அப்பண்ணைகளின் செலவினம் வரவு மற்றும் இலாபம் ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| வ.எண் | வருடம் | வரவு (இலட்சத்தில்) | செலவினம் (இலட்சத்தில்) | இலாபம் (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | 1995-96 | 495.783 | 437.950 | 57.833 |
| 2. | 1996-97 | 590.724 | 549.339 | 41.385 |
| 3. | 1997-98 | 575.179 | 545.796 | 29.383 |
| 4. | 1998-99 | 703.869 | 650.069 | 53.800 |
| 5. | 1999-2000 | 734.710 | 713.369 | 21.341 |



2001 ஜனவரி 30]

19—

### ஆழ்குழாய்க் கிணறு

**வினா எண் 43637—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், பொய்யுண்டார் கோட்டை ஊராட்சி, காராமணித்தோப்பு கிராமத்தில் விவசாயத்திற்குப் பயன்படும் வகையில் ஆழ்குமாய்க் கிணறு இரண்டு அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்.**

மானியத்துடன் சமுதாயக் கிணறு அமைத்துத் தரும் திட்டம் ஏதும் நடைமுறையில் இல்லை. விவசாயிகள் விரும்பினால் கருவிகளுக்கு உரிய வாடகையைப் பெற்றுக்கொண்டு வேளாண்மைப் பொறியியல் துறை உரிய தொழில்நுட்ப ஆலோசனையை வழங்கி குழாய்க் கிணறுகளை அமைத்துத் தரும்.

20—

### ஜப்பான் நிதியுதவி

**வினா எண் 25225—திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழக்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் தொகுதியில் வனத் துறையின் சார்பாக ஜப்பான் நாட்டு நிதி உதவியோடு என்ன பணிகள் நடைபெற்று வருகின்றன?

[2001 ஜனவரி 30

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

1997-98 ஆம் ஆண்டில் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ், ஓமலூர் தொகுதியில் லோகுர் மற்றும் கே.என். புதூர் ஆகிய இரண்டு கிராமங்கள், முறையே சேலம் கோட்டம் மற்றும் சேலம் மண்வளப் பாதுகாப்பு கோட்டங்கள் மூலம் தெரிவு செய்யப்பட்டு, இக்கிராமங்களை ஒட்டியுள்ள தரம் குறைந்து வனப்பகுதிகளில் 300 ஹெக்டேர் ஒவ்வொரு கிராமத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்டு தோட்டம் எழுப்பும் பணிகள், வெளி மண்டலத்தில் மாற்று வேலை வாய்ப்புப் பணிகள் மற்றும் சமுதாயப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், 1998-99 மற்றும் 1999-2000 ஆண்டுகளில் பராமரிப்புப் பணிகள், மாற்று வேலைவாய்ப்பு மற்றும் சமுதாயப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

21—

## பயிர்கள் பாதுகாப்பு

**வினா எண் 38967—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் ம வட்டம், ஆம்பூர் பகுதியிலுள்ள நாய்க்கனேரி கிராமத்திலும், வேலூர் பகுதியில் மேல் வல்லம் கிராமத்திலும் யானைகள் வந்து பயிர்களை அழிப்பதை அரசு தடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

வேலூர் மாவட்டம், ஆம்பூர் மற்றும் ஆலங்காயம் வனச்சரகத்திற்குட்பட்ட நாய்க்கனேரி, குப்பம் போன்ற பகுதிகளுக்கு யானைகள், ஆந்திர மாநிலத்திலிருந்து ஆம்பூர் வழியாகவோ அல்லது ஓசூர் கோட்ட வனப்பகுதியிலிருந்தோ ஆலங்காயம் வனச்சரகப் பகுதிகளைக் கடந்து இடம் பெயர்ந்திருக்கக்கூடும். மேற்படி பகுதிகளில்



2001 ஜனவரி 30]

78 முறைகள் தொடர்ந்து யானைகளால் பயிர்ச்சேதமும் மற்றும் இரண்டு முறை உயிர்ச் சேதமும் ஏற்பட்டிருகிறது. இவற்றால் ஏற்பட்ட இழப்பீட்டுத் தொகை ரூ.2,67,810 ஆகும். அதற்கான இழப்பீட்டுத் தொகை அவ்வப்போது அரசினால் அளிக்கப்பட்டு வருகிறது. யானை நடமாட்டம் உள்ள இடத்தில் அவ்வப்போது "டாம் டாம்" அடித்தும், யானைகள் குறித்து மக்களிடம் உரிய விழிப்புணர்வை ஏற்படுத்த, துண்டுப் பிரச்சார சீட்டுகள் விநியோகித்தும் வனத் துறையினால் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

22—

## வயர்லெஸ் கருவி

**வினா எண் 38975—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏலகிரி மலை, மங்கலம் கிராமத்திலிருந்து வனத் துறையின் வயர்லெஸ் கருவி அமைக்கப்பட்டுள்ள மலைப்பகுதிக்கு சாலை இல்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், சாலை எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வனக்கோட்டத்தைச் சார்ந்த ஏலகிரி மலையில் மங்கலம் காப்புக்காட்டில் சுமார் 1333 மீ. உயரமுள்ள சுவாமிமலை என்ற இடத்தில் வனத் துறைக்குச் சொந்தமான கம்பியில்லாத் தந்தி (வயர்லெஸ்) கருவி அமைக்கப்பட்டுள்ள இடத்திற்குச் சென்றுவர சுமார் 2.0 மீ. அகலமுள்ள மலைப்பாதை வனத் துறையின் பராமரிப்பில் உள்ளது. மங்கலம் கிராமத்திலிருந்து சுமார் 3 கி.மீ. நீளம் கொண்ட இந்த மலைப்பாதையில் கற்கள் பதிக்கப்பட்டு படிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இப்பாதையில் எந்தவித வாகனமும் செல்லமுடியாது. மேற்கண்ட வயர்லெஸ் கருவி

[2001 ஜனவரி 30

அமைந்துள்ள இடம் மிகவும் பாதுகாக்கப்பட்ட இடம் என்பதால், இப்பகுதிக்கு வாகனங்கள் செல்லுமளவுக்குச் சாலை அமைக்கும் உத்தேசம் ஏதும் அரசிடம் இல்லை.

**23—**

**தையல் பயிற்சி நிலையம்**

**வினா எண் 36365—திரு. மா. இராமச்சந்திரன்:** *மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், குருக்குளம் மேம்பாதி ஊராட்சி, அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை வளாகத்தில் ஒரு மகளிர் தையல் பயிற்சி நிலையம், தொழிலாளர் நல வாரியம் மூலம் தொடங்கிட அரசு ஆணையிடுமா?*

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

*சாத்தியம் இல்லை.*

**24—**

**சாலை செப்பனிடுதல்**

**வினா எண் 33721—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஜலகண்டாபுரம் சாலை முதல் வேம்பனேரி (வழி) சௌரிபாளையம் சாலை கி.மீ. 0/0-7/250 வேம்பனேரி சாலை 1 கி.மீ. மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், அந்தச் சாலையைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?*



2001 ஜனவரி 30]

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையானது நெடுஞ்சாலைத் துறை மூலம் பராமரிக்கப்பட்டுவரும் இதர மாவட்டச் சாலையான எடப்பாடி—ஜலகண்டாபுரம் சாலை முதல் வேம்பனேரி (வழி) சௌரிப்பாளையம் சாலை கி.மீ. 0/0-7/250 ஆகும். இச்சாலையில் மிகவும் பழுதடைந்த பகுதியான கி.மீ. 2/10 மற்றும் கி.மீ. 6/6-7/250 பகுதிகள் 2000-2001 ஆம் ஆண்டு காலமுறை புதுப்பித்தல் மற்றும் சிறப்புப் பழுது பார்த்தல் திட்டத்தில் ரூ.6 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு விரைவில் முடிக்கப்படும். எஞ்சியுள்ள பகுதிகளில் உள்ள சிறுசிறு பழுதுகள் தார்நொடிகள் போடப்பட்டு வாகனப் போக்குவரத்துக்கு ஏற்ப நல்ல நிலையில் உள்ளது.*

**25—**

**பழுதடைந்த சாலையைப் புதுப்பித்தல்**

**வினா எண் 33725—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டம் எடப்பாடி தொகுதி கட்சுப்பள்ளி அழகப்பம்பாளையம், இளம்பிள்ளை சாலை கி.மீ 0/0-4/6 கட்சுப்பள்ளி வளம்பிள்ளை சாலை 3.00 கி.மீ தூரம் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், அந்தச் சாலையைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையானது நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பில் உள்ள இதர மாவட்டச்*

சாலையான கட்சுப்பள்ளி-அழகப்பம்பாளையம்-வளம்பிள்ளை சாலை கி.மீ. 0/0-13/0 ஆகும். இதில் 0/0-1/6 வரை வாகனப் போக்குவரத்திற்கு ஏற்றவாறு நன்கு பராமரிக்கப்பட்டு வருகிறது. எஞ்சியுள்ள கி.மீ. 1/6-4/6 3.0 கி.மீ. தூரம் உள்ள சாலையைச் சீர் செய்யும் பணி வரும் ஆண்டு சாலை பராமரிப்பு நிதிநிலைக்கேற்ப மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

**26—**

**சாலையைச் செப்பனிடல்**

**வினா எண் 33726—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, வடுகப்பட்டி சாலை கி.மீ 0/0-3/2 வடுகப்பட்டி சாலை கி.மீ 2.00 சாலை தூரம் மிகவும் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அந்தச் சாலையைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள வடுகப்பட்டி சாலையானது 3.20 கி.மீ. (கி.மீ. 0/0-3/2) நீளமுடைய அரசு இதர மாவட்டச் சாலையாகும். இச்சாலையில் கி.மீ. 2/4-3/2 வரையிலான சாலைப் பகுதி நல்ல நிலையில் உள்ளது.

கி.மீ. 1/6-2/4 வரையுள்ள சாலைப் பகுதியை நடப்பு நிதியாண்டில் (2000-2001) மேம்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மீதமுள்ள பகுதி (கி.மீ. 0/0-1/6) ரூ.6.00 லட்சம் மதிப்பீட்டில் நடப்பாண்டு (2000-2001) பராமரிப்பு நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட திட்டமிடப்பட்டுள்ளது. பராமரிப்பு நிதி ஒதுக்கீட்டினைப் பொறுத்து இப்பணி செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். அதுவரை இச்சாலையில் தார் நொடிகள் மேற்கொள்ளப்பட்டு வாகனப் போக்குவரத்திற்கு இடையூறின்றிப் பராமரிக்கப்படும்.



**27—**

**சாலையைப் புதுப்பித்தல்**

**வினா எண் 33727—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் உள்ள மலையனூர் சாலை மிகவும் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அச்சாலையைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள மலையனூர் சாலை கி.மீ. 0/0-6/0 நெடுஞ்சாலைத் துறையின் இதர மாவட்டச் சாலையாகும். இதில் கி.மீ. 0/0-2/0 வரை மிகவும் பழுதடைந்துள்ளதால் இதனை இதர மாவட்டச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தில் ரூ.6 இலட்சம் செலவில் மேம்படுத்தும் பணி நடைபெற்று வருகின்றது.

**28—**

**சாலை வசதி**

**வினா எண் 37353—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதியிலுள்ள கட்சுப்பள்ளி அழகப்பம்பாளையம் எளம்பிள்ளை சாலை கி.மீ. 1/6-3/6 மற்றும் 11/0-13/0 தூரம் 4.00 கி.மீ. வரை தார் சாலை மிகவும் பழுதடைந்துள்ளது என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்படும் சாலையினைச் சீர் செய்ய 2000-2001 ஆண்டு பழுதுற்ற இதர மாவட்டச்

[2001 ஜனவரி 30

சாலைகள் மேம்படுத்தும் திட்டத்தின் கீழ், ரூ.12.00 இலட்சம் அனுமதி அளிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

**29—**

**ஆழ்குழாய்க் கிணறுகள்**

**வினா எண் 38327—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் தொகுதியில் விவசாயிகளுக்கு கூட்டுறவு நிலவள வங்கிகள் மூலம் எத்தனை பேருக்கு கடந்த 4 ஆண்டுகளில் புதிய ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்க கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது?

(ஆ) வழங்கப்பட்ட கடன் தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவு அமைச்சர்:**

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் சட்டமன்றத் தொகுதியில் கூட்டுறவு நிலவள வங்கிகளின் மூலம் ஆறு நபர்களுக்கு, கடந்த 4 ஆண்டுகளில் புதிய ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்க கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) கடன் தொகை ரூ.1,19,900 வழங்கப்பட்டுள்ளது.

**30—**

**கூட்டுறவு வங்கி**

**வினா எண் திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகமுறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆந்திர மாநிலத்தில் உள்ளதுபோல், பெண்களுக்கான, பெண்களாலே நிர்வகிக்கும் கூட்டுறவு வங்கியைத் தமிழ்நாட்டிலும் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?



2001 ஜனவரி 30]

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவு அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டில் சேலம் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய நகரங்களில் மகளிர் நகர கூட்டுறவு வங்கிகளைத் தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**31—**

**கூடுதல் மண்ணெண்ணெய்**

**வினா எண் 39418—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகமுறை மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமப்புறங்களில் எண்ணெய் விளக்குகளை அதிகமான முறையில் பயன்படுத்தவதால், மண்ணெண்ணெய் அதிகமாக வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவு அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கிராமப்புறங்களில், குடும்ப அட்டைதாரர்களுக்கு தற்போது வழங்கப்படும் மண்ணெணெய் வழங்கல் அளவான 3 லிட்டருக்கும் கூடுதலாக மண்ணெணெய் வழங்குவது தொடர்பாக கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. இருப்பினும், பொது விநியோகத் திட்டத்தில் அவ்வப்போது சேமிப்பாகக் கிடைக்கும் மண்ணெண்ணெயைக் குடும்ப அட்டைகளுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் மண்ணெண்ணெய் அளவுடன் சேர்த்து கூடுதலாக வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி, கிராமப் பஞ்சாயத்துப் பகுதிகளில்

[2001 ஜனவரி 30

சமையல் எரிவாயு இணைப்பு இல்லாத குடும்ப அட்டை ஒன்றுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் மண்ணெண்ணெய் அளவுடன் அக்டோபர் 2000 மாதத்திற்கு 1 லிட்டரும், நவம்பர் 2000 மாதத்திற்கு 1 லிட்டரும் கூடுதலாக மண்ணெண்ணெய் வழங்கப்பட்டுள்ளது.

32—

**விசைத்தறிக் கடன்**

**வினா எண் 39739—திரு. நா. பெரியசாமி :** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) ஈரோடு மாவட்டம், தம்புளியம்பட்டி நிலவள வங்கியின் மூலம் கடன் பெற்று விசைத்தறிக் கூடங்களை எத்தனை பேர் அமைத்துள்ளனர்?*

*(ஆ) இந்த வகைக்கடன் வசூல் எந்த அளவில் உள்ளது?*

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவு அமைச்சர்:**

*(அ) 717 பேர் கடன்பெற்று விசைத்தறிக் கூடங்களை அமைத்துள்ளனர்.*

*(ஆ) 717 உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட மொத்தக் கடன் தொகை ரூ.719 இலட்சத்தில், 112 கடன்தாரர்களிடமிருந்து ரூ.163 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது. 10-11-2000 ஆம் தேதியில் ரூ.116 இலட்சத்திற்கான 289 கடன்கள் தவணை தவறிய நிலையில் உள்ளன.*

33—

**வேளாண்மை உற்பத்தி**

**வினா எண் 39786—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தமிழ்நாட்டில் விவசாயிகள் மீது ஐப்தி நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதால் வேளாண்மை உற்பத்தி பாதிக்கப்படுகிறது என்பது அரசுக்குத் தெரியுமா?*



2001 ஜனவரி 30]

*(ஆ) ஆம் எனில், விவசாயிகள் மீதான ஐப்தி நடவடிக்கையை தற்காலிகமாக நிறுத்த அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவு அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் விவசாயிகள், கூட்டுறவுச் சங்கங்களில் பெற்றுள்ள விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த கடன்களுக்கு 3 சதவிகித அபராத வட்டி தள்ளுபடி மற்றும் 7 சதவிகிதம் வட்டி ஊக்குவிப்பு தொகை ஆகிய இரு சலுகைகளை அரசு அறிவிப்பு செய்துள்ளது. இச்சலுகைகளை, சிறிய பெரிய மற்றும் அனைத்து விவசாயிகளும் பயன் அடையும் வகையில் விளம்பரங்கள் செய்து, விவசாயிகளிடம் நேரடி அணுகுமுறையில் கடன்களை வசூல் செய்ய அறிவுறுத்தப்பட்டு ஐப்தி நடவடிக்கை தவிர்க்கப்பட்டுள்ளது.*

*இருப்பினும், கீழ்க்காணும் ஆறுவகை கடன்தாரர்களிடம் தவணை தவறிய கடன வசூலில் மட்டுமே ஐப்தி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது:-*

*(அ) 5 ஏக்கரும் அதற்கு மேலும் நிலம் உள்ள நிலச்சுவான்தாரர்கள்.*

*(ஆ) டிராக்டர் மற்றும் இதர வேளாண்மை துணைக் கருவிகள் வாங்க கடன் பெற்றவர்கள்/பண்ணைசாராக் கடன் பெற்றவர்கள்.*

*(இ) டாக்டர், வழக்கறிஞர், பொறியாளர் போன்ற தொழில் செய்பவர்கள் மற்றும் வணிகர்கள், அரிசி அரவை ஆலை வைத்திருப்பவர்கள், திரை அரங்கு வைத்திருப்பவர்கள் போன்ற இதர வருமானம் உள்ளவர்கள்.*

*(ஈ) அடமானம் வைக்கப்பட்ட நிலத்தை விற்று விட்டவர்கள், விற்றுவிட முயற்சிப்பவர்கள்.*

*(உ) கடன் தொகையைப் பெற்று உரிய காரியத்திற்குப் பயன்படுத்தாமல் இதர காரியத்திற்குப் பயன்படுத்தியவர்கள் மற்றும்*

*(ஊ) கூட்டுறவு வங்கிகளில் ரூ.10,000-க்கு மேல் கடன் நிலுவை வைத்திருப்பவர்கள்.*

[2001 ஜனவரி 30

34—

**நிதியுதவி**

**வினா எண் 38705—திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விபத்து நிவாரணத் திட்டத்தின் கீழ் நிதியுதவி பெறுகிற பயனாளிகள் எந்தெந்த வகையைச் சேர்ந்தவர்கள்?

(ஆ) இதன்படி ஈரோடு மாவட்டத்திலும், பெருந்துறை வட்டத்திலும் எத்தனை பேர் பயன்பெற்றுள்ளனர்?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) விபத்து நிவாரணத் திட்டத்தின் கீழ் நிதியுதவி பெறும் பயனாளிகள் 44 வகையான ஏழை வாழ்க்கைத் தொழில் முறையைத் தொழிலாகக் கொண்டவர்கள்.

(ஆ) ஈரோடு மாவட்டத்திலும், பெருந்துறை வட்டத்திலும் பயனடைந்தோர் விவரம் பின்வருமாறு:-

| | வருடம் | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| ஈரோடு மாவட்டம் | 1999-2000 | 6 |
| | 2000-2001 | 8 |
| பெருந்துறை வட்டம் | 1999-2000 | - |
| | 2000-2000 | 3 |

35—

**கஞ்சா தோட்டங்கள்**

**வினா எண் 33713—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997, 1998 மற்றும் 1999 செப்டம்பர் மாதம் முடிய காவல் துறை எத்தனை கஞ்சா தோட்டங்களை அழித்துள்ளது?



2001 ஜனவரி 30]

(ஆ) அதன் மதிப்பு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

(அ) 1997, 1998, மற்றும் 1999 செப்டம்பர் முடிய காவல் துறையால் அழிக்கப்பட்ட கஞ்சா தோட்டங்களின் விவரம் பின்வருமாறு:

| வருடம் | மலை வேட்டைகளின் எண்ணிக்கை | தோட்டத்தின் பரப்பு (ஏக்கர்) | அழித்த கஞ்சா பயிரின் அளவு (கிலோ கிராம்) |
|---|---|---|---|
| 1997 | 80 | 141.40 | 1,33,365 |
| 1998 | 75 | 154.11 | 2,83,990 |
| 1999 (செப்டம்பர் வரை) | 35 | 49.50 | 59,983 |

(ஆ) அழிக்கப்பட்ட கஞ்சாவின் மதிப்பு பின்வருமாறு:-

| வருடம் | மதிப்பு (ரூபாய்) |
|---|---|
| 1997 | 26,67,30,000 |
| 1998 | 56,79,80,000 |
| 1999 | 11,99,66,000 |

36—

**இலவசமாக கருவிகள்**

**வினா எண் 37038—திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் தொகுதியில் 1996-97 ஆம் ஆண்டு முதல் 1999 டிசம்பர் வரை முடிதிருத்தும் தொழிலாளர்கள் எத்தனை பேருக்கு முடிதிருத்தும் கருவிகள் இலவசமாக வழங்கப்பட்டன?

(ஆ) நிலுவையில் எத்தனை பேர் உள்ளனர்?

(இ) நிலுவையில் உள்ள்வர்களுக்கு நடப்பு ஆண்டில் முடிதிருத்தும் கருவிகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் தொகுதியில் 1996-97 ஆண்டு முதல் 1999 டிசம்பர் வரை முடிதிருத்தும் தொழிலாளர்கள் 8 பேருக்கு இலவசமாக கருவிகள் வழங்கப்பட்டன.

(ஆ) நிலுவையில் யாரும் இல்லை.

(இ) நடப்பு ஆண்டில் மனு செய்வோருக்கு, தகுதியின் அடிப்படையில் இருப்பிலுள்ள 75 முடிதிருத்தும் கருவிகளிலிருந்து வழங்கப்படும்.

**37—**

## இலவச விட்டுமனைப் பட்டா

**வினா எண் 38639—திரு. ஆர்.ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதியில் அனைத்து தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோரில் சொந்த வீடு இல்லாத குடும்பங்களைக் கண்டறிந்து வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

வீட்டுமனை கேட்டு அரசிடம் வரும் மனுக்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுத்து இலவச வீட்டுமனைப்பட்டா உடனடியாக வழங்க



ஆவன செய்யுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டு வருகிறது.

2. ஓமலூர் தொகுதியில் இதுவரை 762 மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் பெற்றுள்ளனர். மேலும், ஓமலூர் வட்டம் குண்டுக்கல், ஓலக்கூர் போன்ற கிராமங்களில் ச.நெ. 88/2-ல் 2.39 ஏக்கர் நிலத்தை மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்க நில ஆர்ஜிதம் செய்து முன்மொழிவுகள் அனுப்ப ஓமலூர் ஆதிதிராவிடர் நலத் துறை வட்டாட்சியர் கேட்டுக் கொள்ளப் பட்டுள்ளார். அவரது முன்மொழிவுகள் கிடைத்தவுடன் பட்டா வழங்க உடனடி நடவடிக்கைகள் தொடங்கப்படும்.

**38—**

## கூடுதல் நிதி ஒதுக்கீடு

**வினா எண் 39341—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தரும்புரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியிலுள்ள சலவைத் தொழிலாளர்களுக்கு பித்தளை சலவைப்பெட்டிகள் வழங்க அதிக நிதி ஒதுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நடப்பாண்டில் மாநிலம் முழுவதிலும் 8000 சலவைப் பெட்டிகள் வழங்க அரசு அனுமதித்துள்ளது. அவற்றில் தருமபுரி மாவட்டத்திற்கு 720 சலவைப்பெட்டிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

39—

**விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்**

**வினா எண் 33658—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) 1999-2000 ஆண்டில் தமிழ்நாட்டில் படித்துக் கொண்டுள்ள மாணவ/மாணவியர்களில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் எவ்வளவு பேருக்கு உதவித் தொகை வழங்க அரசு உத்தேசித்துள்ளது?*

*(ஆ) இத்திட்டத்திற்கு அரசு ஒதுக்கிய தொகை எவ்வளவு?*

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) 1999-2000 ஆண்டில் தமிழ்நாட்டில் 116 மாணவ/மாணவியர்களுக்கு ஊக்க உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. இதற்காக செலவிடப்பட்ட தொகை ரூ.6.79 இலட்சம் ஆகும்.*

40—

**நிதியுதவி**

**வினா எண் 37650—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) உலகச் சுற்றுப்புறச்சூழல் கண்காணிப்புத் திட்டத்திற்கு மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தால் அளிக்கப்பட்ட நிதி எவ்வளவு?*

*(ஆ) அதில் மாநில அரசின் நிதியுதவி எவ்வளவு?*





விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்:**

*(அ) ஜனவரி 1990 முதல் டிசம்பர் 1999 வரையில் ரூ.34,15,235*

*(ஆ) மத்திய அரசால் தீட்டப்பட்ட திட்டம் என்பதால், மாநில அரசு தனியாக நிதி ஒதுக்கம் செய்யவில்லை.*

41—

**போலி முத்திரைத்தாள்கள்**

**வினா எண் 34891—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழகத்தில் சில சார்பதிவாளர் அலுவலகங்களில் போலியான முத்திரைத்தாள்கள் உபயோகித்து பதிவு செய்துள்ளதாக அரசு கண்டறிந்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எந்தெந்த சார்பதிவாளர் அலுவலகங்களில் இது மாதிரியான தவறுகள் நடந்ததாகக் கண்டறியப்பட்டுள்ளது?*

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

*(அ) சில சார்பதிவாளர் அலுவலகங்களில் பதிவான சில ஆவணங்களில் போலி முத்திரைத்தாட்கள் பயன்படுத்தப் பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்பட்டு, அது தொடர்பாக தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.*

*(ஆ) சார்பதிவகங்களில் தவறேதும் நடக்கவில்லை. கீழ்க்குறிப்பிட்டுள்ள சார்பதிவகங்களில் பதிவான ஒரு சில ஆவணங்களில் போலி முத்திரைத்தாட்கள் பயன்படுத்தப் பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*

[2001 ஜனவரி 30

| | | |
|---|---|---|
| 1. | பேட்டை | : திருநெல்வேலி மாவட்டம் |
| 2. | தோவாளை | : கன்னியாகுமரி மாவட்டம் |
| 3. | பூதப்பாணி | : கன்னியாகுமரி மாவட்டம் |
| 4. | அரசரடி | : மதுரை (தெற்கு) |
| 5. | தெப்பக்குளம் | : மதுரை (வடக்கு) |
| 6. | 1 நிர் இணை சார்பதிவாளர் அலுவலகம் | : மதுரை (வடக்கு) |
| 7. | 1 நிர் இணை சார்பதிவாளர் அலுவலகம் | : திருவண்ணாமலை மாவட்டம் |
| 8. | வாணியம்பாடி | : வேலூர் மாவட்டம் |
| 9. | வாலாசா | : அரக்கோணம் வட்டம் |
| 10. | 1 நிர் இணை சார்பதிவாளர் அலுவலகம் | : தென்சென்னை |
| 11. | 2 நிர் இணை சார்பதிவாளர் அலுவலகம் | |
| 12. | அடையாறு | |

42—

### கணினி

**வினா எண் 36359—திரு. மா. இராமச்சந்திரன்:** *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் டதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் வட்டம், வல்லத்திலுள்ள சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அரசு இந்த நிதியாண்டின் கணினி வழங்க ஏற்பாடு செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.**

பதிவுத் துறையை கணினி மயமாக்கும் திட்டம் 6-2-2000 அன்று தொடங்கப்பட்டு, முதல் கட்டமாக 9 பதிவு மாவட்டங்களும் 16 சார்பதிவு அலுவலங்களும் கணினி மயமாக்கப்பட்டுள்ளன.



2001 ஜனவரி 30]

2. இரண்டாம் கட்டமாக 41 மாவட்டப் பதிவகங்களும், தஞ்சாவூர் பதிவு மாவட்டத்தைச் சார்ந்த வல்லம் சார்பதிவு அலுவலகம் உட்பட, 284 சார்பதிவு அலுவலகங்களும் கணினி மயமாக்கப்பட அரசாணை (நிலை) எண் 118, வணிகவரித் துறை, நாள் 21-7-2000-ல் நிர்வாக ஒப்பளிப்பு செய்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு, மேற்படி கணினிமயமாக்கல் திட்டம் 'எல்காட்' நிறுவனத்தின் மூலம் செயலாக்கப்பட்டு வருகிறது.

43—

### மகளிருக்கு நிதியுதவி

**வினா எண் 36949—திரு. ஆர்.ஆர். சேகரன்:** *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*சேலம் மாவட்டத்தில் மகளிர் தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டத்தின் மூலமாக எத்தனை பேர் பயனடைந்துள்ளனர்? அவர்களுக்கு எவ்வளவு நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது?*

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.**

சேலம் மாவட்டத்தில் மகளிர் தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டத்தின் மூலமாக இதுவரை ரூ.2,74,680 செலவில் 199 நபர்கள் பயிற்சி பெற்றனர். அவர்களில் 101 நபர்கள் தொழில் நிறுவனங்கள் தொடங்கி உள்ளார்கள். இதில், 5 நபர்கள் பாரதப் பிரதமரின் ரோஜ்கார் யோஜனாவின் கீழ் ரூ.1,80,000 நிதியுதவி பெற்று தொழில் தொடங்கியுள்ளனர். ஏனையோர் சுயநிதி கொண்டு தொழில் தொடங்கி உள்ளார்கள்.

44—

### தொழில்கள் தொடங்குதல்

**வினா எண் 38833—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2001 ஜனவா

சேலம், தருமபுரி, நாமக்கல் மற்றும் ஈரோடு ஆக மாவட்டங்களில் கடந்த 1999-2000 ஆம் ஆண்டில் மாவட்ட தொழ் மையங்கள் மூலம் வழங்கப்பட்ட மானியத்தொகை மற்று தொடங்கப்பட்ட தொழில் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

வினாவில் கோரப்பட்டுள்ள விவரங்கள் இணைப்பில் அளிக்கப்பட்டுள்ளன.

**இணைப்பு:**

1999-2000 ஆண்டில் வழங்கப்பட்ட மானியத் தொகையின் விவரங்கள்:

| | மாநில முதலீட்டு மானியம் | மின் மானியம் | மின் உற்பத்தி இயந்திர மானியம் |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1. சேலம் | 1.86 | 7.75 | 0.40 |
| 2. தருமபுரி | 28.50 | 28.00 | 3.65 |
| 3. நாமக்கல் | 14.46 | 14.99 | 1.95 |
| 4. ஈரோடு | 29.05 | 88.44 | 3.24 |

1999-2000 ஆண்டில் தொடங்கப்பட்ட தொழில்களின் விவரம்:

| குறியீட்டு எண் | குறியீட்டு எண் வகைப்படி பிரிக்கப்பட்ட தொழிலகங்கள் பற்றிய விவரம் | சேலம் | தருமபுரி | நாமக்கல் | ஈரோடு |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 20-21 | உணவுப்பொருட்கள் | 255 | 193 | 105 | 98 |
| 22 | பானங்கள் மற்றும் புகையிலை சம்பந்தப்பட்டவை | 1 | - | 1 | 3 |
| 23 | பருத்தி நூல் சம்பந்தப்பட்டவை | 153 | 14 | 66 | 87 |
| 24 | உல்லன், பட்டு மற்றும் செயற்கை இழை | - | 11 | - | 1 |
| 25 | சனல் சம்பந்தமானது | - | - | - | .. |
| 26 | ஆயத்த மற்றும் பின்னல் ஆடைகள் | 906 | 419 | 494 | 514 |
| 27 | மரம் மற்றும் மரச்சாமான்கள் | 104 | 24 | 16 | 10 |
| 28 | காகிதப்பொருட்கள் மற்றும் அச்சுத் தொழில்கள் | 12 | 39 | 13 | 23 |
| 29 | தோல் பொருட்கள் | 25 | 25 | 44 | 45 |
| 30 | இரப்பர் மற்றும் பிளாஸ்டிக் சாமான்கள் | 20 | 21 | 25 | 13 |



2001 ஜனவரி 30]

45—

**சமாதான் திட்டம்**

**வினா எண் 38875—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசு கொண்டு வந்த "சமாதான்" திட்டத்தின் கீழ் தேங்கிக் கிடந்த பத்திரங்கள் பொது மக்கள் 50% செலுத்தி சார்பதிவாளர் அலுவலகத்தில் பெற்றதன் காரணமாக வருவாய் அதிகமாகிறது என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டத்தை மேலும் ஓர் ஆண்டிற்கு நீட்டிக்க அரசு ஆவன செய்யுமா?

[2001 ஜனவரி 30

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

*(அ) பதிவுத் துறையில் "சமாதான்" திட்டம் 1-3-1999 முதல் 30-9-1999 வரை மட்டும் நடைமுறைப்படுத்தப்பட்டு கணிசமான வருவாய் ஈட்டப்பட்டது.*

*(ஆ) மேற்படி திட்டத்தினை நீட்டிப்பது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

**46—**

### பணியாளர்கள் நியமனம்

**வினா எண் 39683—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாடு அரசு மைய அச்சகத்திற்கு போதிய பணியாளர்கள் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், புதிய பணியாளர்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) அரசு மைய அச்சகம் படிப்படியாக நவீனமயமாக்கப்பட்டு வருகின்ற நிலையில், தற்போதுள்ள இயந்திரங்களின் செயல்திறன் மற்றும் பணிச்சுமை ஆகியவற்றின்படி, தற்போதுள்ள பணியாளர்களின் எண்ணிக்கை போதுமானதாக உள்ளது. காலிப் பணியிடங்கள் அவ்வப்போது தேவைக்கேற்ப நிரப்பப்படுகின்றன.*



2001 ஜனவரி 30]

**47—**

### இலவச சீருடை

**வினா எண் 34972—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழகத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையால் இயங்கும் அரசு மேல்நிலைப் பள்ளி/அரசு உயர்நிலைப் பள்ளிகளில் 1998-99 ஆம் ஆண்டுகளில் 10 ஆம் வகுப்பு படிக்கும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ/மாணவியர்களுக்கு இலவசமாக எவ்வளவு சீருடைகள் வழங்கப்பட்டன?*

*(ஆ) இதனால் அரசுக்கு எவ்வளவு தொகை செலவானது?*

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) தமிழகத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் இயங்கும் அரசு மேல்நிலைப்பள்ளி/உயர்நிலைப் பள்ளிகளில் 1998-99-ம் ஆண்டில் 10-ம் வகுப்பு படிக்கும் 10,140 ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மாணவ/மாணவியர்களுக்கு இலவசமாக சீருடைகள் வழங்கப்பட்டன.*

*(ஆ) இத்திட்டத்தின்கீழ் அரசுக்கு ரூ.6,64,40,000 செலவினம் ஏற்பட்டுள்ளது.*

**48—**

### குடியிருப்புப் பட்டா

**வினா எண் 36695—திரு. மு. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு ஆதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சீர்காழி நகரம், இரயிலடி தோப்புத் தெருவிலுள்ள 37 ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு குடியிருப்புச் சட்டத்தின் மூலம் குடியிருப்புப் பட்டா வழங்க அரசு முன்வருமா?*

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

சீர்காழி நகராம் இரயிலடி தோப்புத் தெருவிலுள்ள 37 ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு குடியிருப்புச் சட்டத்தின்கீழ் பட்டா வழங்க இயலாது. ஆனால், நில எடுப்புச் சட்டத்தின்கீழ் பட்டா வழங்க இடம் தேர்வு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**49—**

### கொத்தடிமைகள் மீட்பு

**வினா எண் 38750—திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குனேரி பகுதியில் கொத்தடிமைத் தொழிலாளர்கள் அரசால் மீட்கப்பட்டனரா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) அம்பாசமுத்திரம் வட்டம், உலகன்குளம் கிராமத்தில் ரத்னா செங்கல் சூளையில் வேலைபார்த்த விருதுநகர் மாவட்டம், இராஜபாளையத்தைச் சார்ந்த 28 நபர்களும் சேரன்மகாதேவி சார் ஆட்சியரால் 9-4-2000 அன்று விடுவிக்கப்பட்டனர். இதில் விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த 28 நபர்களில் 7 ஆண்கள் மற்றும் 8 பெண்கள் ஆக மொத்தம் 15 நபர்களை விருதுநகர் மாவட்ட ஆட்சித்தலைவர் மூலம் முழு நிவாரணம் வழங்குவதற்கு ராஜபாளையம் துணை வட்டாட்சியர் அழைத்துச் சென்றுவிட்டார்.





**50—**

### மீன் வளத் திட்டம்

**வினா எண் 39244—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் வேளாண்மை மனித வள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மீன் வளத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு நடப்பாண்டில் ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் வேளாண்மை மனித வள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மீன் வளத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான செயல் திட்டம் தற்போது ஏதுமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.**

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 4. அறிக்கை அளித்தல்

### பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, குழுவின் அறிக்கைகளை அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல், குழுவின் தலைவர் திரு. கும்மிடிப்பூண்டி கி. வேணு.

**திரு. கும்மிடிப்பூண்டி கி. வேணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2000-2001-ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று முப்பத்து ஒன்பது முதல் நூற்று நாற்பத்து நான்கு வரையிலான 6 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

[2001 ஜனவரி 30

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு நில மேம்பாட்டுச் செயல்திட்ட (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2001

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2001-ஆம் ஆண்டு தமிழ்நாடு நில மேம்பாட்டுச் செயல் திட்ட (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2001-ஆம் ஆண்டு தமிழ்நாடு நில மேம்பாட்டுச் செயல் திட்ட (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஆ) தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்களின் (வேலை ஒழுங்குமுறைப்படுத்துதல் மற்றும் பணி நிபந்தனைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2001

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2001-ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை ஒழுங்குமுறைப்படுத்துதல் மற்றும் பணி நிபந்தனைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.



**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2001-ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை ஒழுங்குமுறைப்படுத்துதல் மற்றும் பணி நிபந்தனைகள்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவாத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

## 6. இடைக்கால வரவு-செலவுத் திட்டம், 2001-2002, பொது விவாதம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து 2001-2002-ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம். டாக்டர் அ. செல்லக்குமார் அவர்கள் தொடங்கி வைப்பார்கள். டாக்டர் செல்லக்குமார் அவர்கள் பேசுவதற்கு 20 நிமிடங்கள் கொடுக்கப்படுகின்றன. மற்ற உறுப்பினர்களுக்கெல்லாம் பேசுவதற்கு 10 நிமிடங்கள் கொடுக்கப்படும். இதைக் கண்டிப்பாக துணைத் தலைவர் அவர்கள் கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டினுடைய இடைக்கால வரவு-செலவுத் திட்ட அறிக்கையின் மீது பேசுகின்ற வாய்ப்பினைப் பெற்றமைக்கு நான் நன்றி கூறிக்கொள்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

இயற்கைச் சீற்றத்தால் குஜராத்தில் இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்ற மிகப் பெரிய நில அதிர்வால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு.... *(மணியடிக்கப்பெற்றது)*

## 7. தகவல் கோரல்

### உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்பு

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஒரு தீர்மானம் கொடுத்திருந்தேன். எங்கள் கட்சி அலுவலகம் தாக்கப்பட்டது சம்பந்தமாக, இன்றைக்கு எடுத்துக் கொள்வதாக...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அது ஆய்வில் இருக்கிறது. பின்னர் தெரிவிக்கப்படும்.

## 6. இடைக்கால வரவு–செலவுத் திட்டம், 2001–2002, பொது விவாதம்—*தொடர்ச்சி*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் அ. செல்லக்குமார் தொடர்ந்து பேசுங்கள்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** இயற்கைச் சீற்றத்தால் குஜராத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாகவும், எங்களுடைய சார்பாகவும் ஆழ்ந்த வருத்தத்தினையும், இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த இடைக்கால வரவு-செலவு அறிக்கை என்பது ஏறத்தாழ 5 ஆண்டுகள் ஆட்சி செய்து முடித்துவிட்டு, தேர்தல் களத்திலே நிற்கின்றபோது வைக்கப்படுகின்ற அறிக்கை என்பதை நான் பார்க்கிறேன். இந்த 5 ஆண்டு காலத்தில் அரசு அறிவித்திருக்கின்ற



பல்வேறு திட்டங்கள், அரசினுடைய கொள்கை முடிவுகள் முறையாக செயல்படுத்தப்பட்டிருக்கின்றனவா என்றும், அவை செயல்படுத்தப் பட்டிருக்கின்றன என்று சொன்னால், அதனால் அரசுக்கு ஏற்பட்டிருக்கின்ற இலாப நஷ்டத்தையும் கணக்கிட்டுப் பார்க்கின்ற இடத்தில் இப்போது நாம் இருக்கின்றோம்.

*முற்பகல் 11-15*

அண்மையிலே இந்தியத் தணிக்கைத் துறை அதிகாரி அவர்கள் 1998-99 ஆம் ஆண்டுக்கான தமிழக அரசினுடைய செலவினங்களைக் கணக்கிட்டு ஓர் அறிக்கையைத் தாக்கல் செய்திருக்கிறார்கள். அதிலே ஓரிடத்திலே சொல்லப்பட்டிருப்பது, ஏறத்தாழ 102 திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட 3,150 கோடி ரூபாயில், சரியான திட்டமிடுகின்ற செயல்களை இந்த அரசு செய்யாத காரணத்தினால், அல்லது ஆமை வேகமாகச் செயல்பட்டதன் காரணத்தால், ஏறத்தாழ 2,638 கோடி ரூபாய்க்கான திட்டங்கள் செயல்படுத்தப்படாமல் பணம் மீண்டும் கஜானாவுக்கு அனுப்பப்பட்டது என்று அதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது உண்மையாக இருக்கும் என்று சொன்னால், இந்த அரசினுடைய வேகத்தை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு இதைவிட வேறு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு இருக்க முடியாது என்று நான் கருதுகின்றேன்.

பல்வேறு துறைகளினுடைய வளர்ச்சியைப் பற்றி அதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. கால அவகாசத்தைக் கருதி நான் அதிலே அதிகம் செல்ல விரும்பாவிட்டாலும், ஒன்றிரண்டை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

கடந்த ஆட்சியிலே மின்சாரத் துறையிலே, மின் உற்பத்திக்காக ஜி.எம்.ஆர். வாசவி என்ற நிறுவனத்தோடு ஒப்பந்தம் போட்டார்கள். ஆனால் அதற்குப் பிறகு 1996-லே இந்த ஆட்சி வந்த பிறகு, அந்த ஒப்பந்தத்தில் இந்திய அரசு விதித்த சில நிபந்தனைகளைத் தளர்த்தி Power Purchase Agreement போடுகின்றபோது நீங்கள் சில விதிமுறைகளை வைத்திருக்க வேண்டும். நீங்கள் விதித்திருக்கின்ற அந்த விதிமுறைகள் மூலமாக தமிழக மின்சார வாரியத்திற்கு ஏற்பட்டிருக்கின்ற இழப்பு என்பது தொடர்ந்து வரவேண்டிய இழப்பு, இந்த நிறுவனம் மின்சாரத்தை உற்பத்தி செய்து இந்த அரசு வாங்குகின்றவரை தொடர்ந்து ஆண்டுதோறும் வருகின்ற இழப்பு என்பது ஏறத்தாழ ஆண்டுக்கு 55. 56 கோடி ரூபாய் என்று

குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒரு தனியார் நிறுவனத்தோடு Power Purchase Agreement போடுவதிலே நீங்கள் காட்டியிருக்கின்ற மும்முரம், கவனம் காரணமாக ஏற்கெனவே நட்டத்தில் ஓடிக்கொண்டிருக்கின்ற மின்சார வாரியத்திற்கு ஆண்டுக்கு 56 கோடி ரூபாய் நட்டத்தைப் பெற்றுக்கொடுக்கும் என்று சொன்னால், நான் மகாராஷ்ட்ராவை எண்ணிப் பார்க்கிறேன். மகாராஷ்ட்ரா என்பது மிகப்பெரிய தொழிற்புரட்சியை உருவாக்கி இருக்கின்ற மாநிலம். ஆனால் 'என்ரான்' என்கின்ற நிறுவனத்தோடு அவர்கள் ஒப்பந்தம் போட்டு, அந்த ஒப்பந்தத்திலே அவர்கள் Power Purchase Agreement-ஐ சரியான முறையிலே கண்காணிக்காத காரணத்தால் மகாராஷ்ட்ரா மாநிலமே திவாலாகிவிடும் என்ற சூழலுக்குச் சென்று கொண்டிருக்கின்றது. நிதி நெருக்கடியிலே இருக்கின்றது என்பதை இந்த நாட்டு மக்கள் அத்தனைபேரும் அறிந்திருக்கிறோம். அதை நான் ஒப்பிட்டுப் பார்க்கிறபோது—ஜி.எம்.ஆர். வாசவி நிறுவனத்தோடு நீங்கள் போட்ட P.P.A. ஒப்பந்தத்தை ஒப்பிட்டுப் பார்க்கிறபோது—தணிக்கை அதிகாரிகள் கொடுத்திருக்கின்ற புள்ளிவிவரத்தைப் பார்த்து நான் சொல்கின்றேன்—அதற்குப் பிறகு நீங்கள் போட்டிருக்கின்ற ஒப்பந்தம்—இப்போது நீங்கள் ஆட்சியிலே இருக்கின்றீர்கள். நாளை யார் ஆட்சியிலே இருப்பார்கள் என்று தெரியாது. அன்றையதினம் இந்த நாடு திவாலாகிவிடும் என்று சொன்னால், தமிழகம் திவாலாகிவிடும் என்று சொன்னால், அன்றைக்கு ஆட்சியிலே இருப்பவர்கள்மீது குற்றச்சாட்டை நீங்கள் தொடுக்கின்றபோது, உண்மைக் குற்றவாளிகள் மறைக்கப்படுகிறார்கள் என்கின்ற உண்மையை நான் இங்கே எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவதைப்போல ஆடிட்டர் ஜெனரல் ரிப்போர்ட் என்பது அரசாங்கத்திற்குக் கிடைத்தது. ஆடிட்டர் ஜெனரல் கொடுத்திருக்கின்ற Report-ஐ வைத்துக் கொண்டே ஒரு முடிவுக்கு வந்து விடக்கூடாது. ஆடிட்டர் ஜெனரல் அலுவலகத்திலே இருக்கக் கூடியவர்களும் அதிகாரிகள்தான். அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற அனைத்தும் உண்மை அல்ல என்பதை ஏற்கெனவே மின்சார வாரியத் தலைவரும், அங்கே இருக்கின்ற உறுப்பினர்களும் நம்முடைய நிதித் துறை செயலாளர், தொழில் துறை செயலாளர், மின்சாரத் துறை செயலாளர் ஆகியோரைக் கொண்ட ஒரு குழு போடப்பட்டு, கடந்த 8 மாத காலமாக, அவர்கள் சொல்லியிருப்பது உண்மையா, அல்லது நாம் போட்டிருக்கின்ற



Power Purchase Agreement உண்மையா, மத்திய அரசாங்கம் கொடுத்த கைட்-லைன்ஸ்படிதான் நாம் போட்டிருக்கிறோமா என்பதை எல்லாம் பரிசீலித்துப் பார்த்து அந்த அறிக்கையை இப்போது C.A.G.-க்கு நம்முடைய தமிழக அரசு அனுப்பியிருக்கிறது. நான் உறுதியாகச் சொல்கிறேன், அதிலே எந்தவிதமான தவறும் நடைபெறவில்லை. அதில் ஏதாவது தவறை நீங்களாகக் கண்டுபிடித்துச் சொன்னால், அதற்கு நான் பதில் சொல்லத் தயாராக இருக்கின்றேன். ஆனால் அந்த ஆடிட்டர் ஜெனரல் ரிப்போர்ட்டில் கொடுக்கப்பட்டிருக்கின்ற விவரங்கள் உண்மையல்ல. அதற்குப் பிறகு நாங்கள் அவர்களுக்குத் தெரிவித்தபோது முதலிலே இந்த விவரங்கள் எல்லாம் எங்களுக்குக் கொடுக்காத காரணத்தினாலே நாங்கள் எழுதினோம் என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். எனவே, அதிலே எந்தவிதமான தவறும் நடைபெறவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஜி.எம்.ஆர். வாசவி நிறுவனம் ஏற்கெனவே கடந்த கால ஆட்சியிலே ஒப்பந்தம் செய்திருந்தாலும், நாங்கள் ஆட்சிக்கு வந்த உடனே, உடனடியாக P.P.A. ஒப்பந்தம் செய்து, 1½ ஆண்டு காலத்திலே நமக்கு மின் பற்றாக்குறை இருந்த காலத்திலே அவர்கள் மின்சாரத்தை 200 மெகாவாட் தந்தார்கள். ஆனால், அவர்கள் கொடுக்கின்ற மின்சாரம் கொஞ்சம் விலை அதிகமாக இருக்கிறது என்று மின் வாரியத் தலைவர் உணர்ந்த காரணத்தினால், இரவு நேரத்திலே எங்களுக்கு மின்சாரம் தேவையில்லை; பகல் நேரத்திலே மட்டும் உற்பத்தி செய்து தாருங்கள் என்று சொல்லி 200 மெகாவாட் மின்சாரத்தில் 100 மெகாவாட்தான் நாம் பெற்றுக் கொண்டிருக்கிறோம்; பகல் நேரத்திலே. அதனாலே மின்சார வாரியத்திற்கு மாதத்திற்கு 9 கோடி ரூபாய் இலாபம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-50

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அண்மையிலே ஒரு செய்தி பத்திரிகையிலே வந்து இருக்கிறது. மின்சார வாரியத்திலே Conductors வாங்குவதிலே ஒரு தவறு நடைபெற்றது என்று பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. அதை நம்முடைய மாநிலத்தில் இருக்கின்ற, அதை உற்பத்தி செய்கின்ற நிறுவனங்கள் பரிசோதனை செய்து, அது உண்மை என்று இங்கே வெளிக்காட்டி இருக்கின்றன. அதிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்று சொன்னால், Alloy Conductors வாங்குவதற்கான ஒப்பந்தம் போடப்பட்டு, அதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பிறகு இங்கே

வந்து இறங்கியவை, Aluminium Conductors-கள் என்று இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதனால் ஏற்படுகின்ற அதன் விலை வித்தியாசம், டன்னுக்கு 10,000 ரூபாய் என்று சொன்னால், ஒட்டுமொத்தமாக இந்த உதிரிப் பாகத்தை வாங்குவதிலே ஏற்பட்டு இருக்கின்ற விலை வித்தியாசம் பல கோடிக்கணக்கான ரூபாய் என்பதிலே யாருக்கும் மாற்றுக் கருத்து இல்லை. விலை வித்தியாசம் என்பதைவிட, இந்த Alloy Conductors என்பது, மனிதருக்குப் பாதுகாப்பினைத் தருவதற்காக, மின் கடத்துகின்றபோது, அதிலே ஏற்படுகின்ற கசிவிலிருந்து மக்களுக்குப் பாதுகாப்பினைத் தர வேண்டும் என்பதற்காகத்தான் Alloy Conductors வாங்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அதற்குப் பதிலாக Aluminium Conductors-களை இப்போது விநியோகம் செய்திருக்கிறார்கள் என்பது கண்டுபிடிக்கப்பட்டு அதற்கான அறிக்கைகூட மின்வாரியத்திற்குக் கொடுக்கப்பட்டதாக நான் அறிகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வது, பத்திரிகையிலே வந்த செய்தி. அதிலே எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை. டெண்டர் கேட்கின்ற நேரத்திலே யார் எல். ஒன்றோ அவர்களுக்குத்தான் கொடுக்க வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்து இருக்கிறது. அதன் அடிப்படையிலே மின்சார வாரியம் டெண்டர்களை பரிசீலனை செய்து, உத்தரவு வழங்கியது. அந்த உத்தரவைப் பெற்றவர்கள் மத்திய அரசாங்கத்தினுடைய நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் கொடுத்த எல்லா Conductor-களும், எல்லா இடங்களிலேயும் நன்றாக இருந்தன. ஆனால், கோயம்புத்தூரிலே கொடுத்த Conductor-களில் இரண்டு barrel மட்டும் தவறாக, தரம் குறைந்ததாக கொடுத்திருந்தார்கள் என்பதை மின்சார வாரியமே கண்டுபிடித்துவிட்டது. அவர்கள் கண்டுபிடித்து, உடனடியாக அவர்களை எடுத்துக் கொள்ளச்சொல்லி, அதற்குப் பணம் கொடுக்க மாட்டோம் என்பது மட்டுமல்ல, அந்தக் கம்பெனியை Black list-ல் சேர்ப்பது என்றும் மின் வாரியம் முடிவு செய்திருக்கிறது.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** இவற்றையெல்லாம் சொல்வதற்குக் காரணம், மின்சார வாரியத்திலே, சில ஐயப்பாடுகள் இப்போது எழுப்பப்பட்டிருக்கின்றன. அண்மையிலே பெங்களூருக்கு வருகை புரிந்த, General Electrics-U.S.A.-வினுடைய C.E.O.-வாக, முதன்மை



நிர்வாக அதிகாரியாக இருக்கும் ஜாக்வெல்ஸ் என்பவர் பெங்களூரிலே நிருபர்களைச் சந்திக்கின்றபோது ஒன்றைச் சொல்லியிருக்கின்றார்கள். "இந்தியத் திருநாடு மென்பொருள் உற்பத்தியைப் பயன்படுத்தி, நாளையதினம் உலகத்திலே வல்லரசு நாடாக உருவாக முடியும் என்ற நம்பிக்கையை இப்போது பல மாநிலங்கள் தெரிவித்துக் கொண்டிருக்கின்றன. ஆனால், அதற்கு அடிப்படையே மின்சாரம்தான். அதில் அவர்கள் கவனம் செலுத்தத் தவறிவிட்டார்கள். நாளையதினம் இந்த நிலை நீடிக்கும் என்று சொன்னால், இந்தத் துறை நசிந்துவிடும்; இந்தியா அதற்கு ஏற்றதாக இல்லாத ஒரு சூழ்நிலை உருவாகிவிடும்" என்று அன்றைக்குப் பத்திரிகையிலே கொடுத்திருக்கிறார்கள்.

இப்போது இந்த அரசினுடைய சாதனையாக நாம் சொல்வது, தொழில் புரட்சியில் நாம் பெருமைப்பட்டுக் கொள்வதெல்லாம், I.T. துறையைப் பொறுத்தவரைதான். அதுதான் இந்த ஆட்சியினுடைய சாதனை என்று நாம் சொல்கிறோம். மென்பொருள் உற்பத்தியைப் பொறுத்தவரை, இது அரசினுடைய சாதனை என்று சொல்லிவிட முடியாது. தமிழர்களுடைய அறிவுக் கூர்மையின் காரணமாக, தனி மனிதர்களுடைய உழைப்பு காரணமாக, முயற்சி காரணமாக உருவாக்கப்பட்டதுதான் இந்த மென்பொருள்களினுடைய உற்பத்தியை அதிகப்படுத்தியது என்பது. வேறு மாநிலத்தை விட்டு, தமிழகத்திலே ஏன் அதிகமாக வந்து, அவர்கள் அதிகம் உற்பத்தி செய்கின்றார்கள் என்று சொன்னால், மும்பையிலே கட்டடத்தை வாங்குகின்றபோது அதற்கான விலை நிர்ணயம்; வாடகை ஆகியவற்றை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, தமிழகம் மிகக் குறைந்த கட்டட யுகமாக இருக்கின்றது. அந்த மூலதனம் குறைவாக இருக்கிறது என்பதால்தான், அந்த அடிப்படையில்தான், தனி மனிதர்களின் முயற்சியின் காரணமாக அவர்கள் இங்கே வருவதால் அந்தத் துறை இப்போது பெரிய அளவில் உருவாகிக் கொண்டு இருக்கிறது. அதிலேகூட ஓர் ஆபத்து இருக்கிறது என்று கேள்விப்படுகிறேன். ஏனென்று சொன்னால் நம்முடைய buyers என்று சொல்லப்படுவது நாம் முழுமையாக அமெரிக்காவை நம்பித்தான் இந்தத் துறையை நடத்திக் கொண்டிருக்கிறோம். Slicon valley என்று சொல்லப்படுகின்ற கலிபோர்னியாவிலேகூட, இப்போது சரியான முறையிலே மின்சாரம் விநியோகம் செய்ய இயலாத காரணத்தினால், அதனுடைய பொருளாதாரம் நலிவடைந்து நாளையதினம் மென்பொருள் ஏற்றுமதியை ஊக்கப்படுத்த முடியாத சூழ்நிலை வந்துவிடும் என்று பத்திரிகைகளிலே சொல்லப்பட்டிருக்கிறது.

[டாக்டர் அ. செல்லக்குமார்] [2001 ஜனவரி 30

அமெரிக்காவினுடைய பொருளாதாரமே வீழ்ச்சியடைகின்ற சூழ்நிலைக்குச் சென்று கொண்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். அப்படிச் சொல்கின்றபோது, அதைமட்டுமே நம்பி, இந்த நாட்டினுடைய, தமிழகத்தினுடைய இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பைத் தருவோம் என்று சொல்லிக் கொண்டிருக்கின்ற நாம், இலட்சக்கணக்கான இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லாத சூழ்நிலையை உருவாக்குகிறோம் என்பதை உணர்ந்து பார்க்க வேண்டும்.

*முற்பகல் 11-55*

அடுத்து நம்முடைய சிறுதொழில்கள். இந்த ஆட்சி பொறுப்பேற்று, ஐந்து ஆண்டுகள் முடிகின்ற இன்றைய நிலையில் எத்தனை தொழில்கள் நசிவடைந்திருக்கின்றன என்பதை நாம் எண்ணிப்பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். பல இலட்சக்கணக்கான தொழிலாளர்கள், வேலையிழக்கின்ற சூழ்நிலை இப்போது உருவாகிக் கொண்டிருக்கிறது. அது spinning தொழிற்சாலையாக இருந்தாலும் சரி, நெசவுத் தொழிற்சாலையாக இருந்தாலும் சரி, இன்னும் பல்வேறு தொழில் நிறுவனங்கள் அத்தனையும் இப்போது நலிவடைகின்ற சூழ்நிலையிலே இருந்து கொண்டிருக்கிறது. இப்போதுகூட விவசாயிகளுக்கு ஓர் ஆபத்து இருக்கிறது. இங்கே பல கோடிக்கணக்கான ரூபாய் அளவிற்கு விவசாயிகளுக்கு இலாபத்தை ஈட்டித் தருகின்றது என்று சொல்லப்படுகின்ற மேலை நாட்டிலிருந்து வரும் பருத்திக்கான வீரிய விதைகள்கூட ஏற்றதாக இல்லை என்று பத்திரிகைகளில் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. ஏனென்று சொன்னால், அந்த வீரிய விதைகளைப் போடுகிறபோது, செடி மேலோங்கி வளர்கிறது. ஆனால், அதிலே பூக்கின்ற பூ, அதன் காயினுடைய எடையைப் பார்க்கின்றபோது, 5 கிலோ, 10 கிலோதான் வருகிறது. அதற்காகின்ற செலவினை ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, 'விவசாயிகள் வாழ்வு நசிந்துவிடும் என்கிற ஐயப்பாடு இருக்கிறது. அப்படி ஒரு சூழ்நிலை இருக்கும் என்று சொன்னால், நாளையதினம் இந்த நாட்டினுடைய எதிர்காலம் என்னவென்பதை சிந்தித்துப் பார்க்கின்ற இடத்திலே நாம் நின்று கொண்டிருக்கிறோம்.

அமெரிக்கா நாட்டிலே இப்போது உலக வியாபாரத் தலத்தை திறந்துவிட்டிருக்கிறார்கள் என்று சொன்னால்—அதை ஒரு பக்கம் திறந்து இருக்கிறார்கள்—மறுபக்கம், அந்த நாட்டினுடைய மக்களுக்கு



2001 ஜனவரி 30] [டாக்டர் அ. செல்லக்குமார்]

அவர்கள் அறிவைப் புகட்டிக் கொண்டிருக்கிறார்கள். அது என்னவென்று சொன்னால் "மேலை நாட்டினுடைய பொருளை வாங்குவதன் மூலமாக, நம்முடைய நாட்டில் உற்பத்தி செய்கின்ற பொருட்கள் நலிவடைந்துவிடும், நம்முடைய தொழிலாளர்கள் வேலையில்லாமல் ஆகிவிடுவார்கள். எனவே, நம்முடைய தொழிலின் மூலமாக உற்பத்தி செய்கின்ற பொருட்களை வாங்குங்கள்" என்று அங்கேயுள்ள பொதுமக்கள் அறிவுறுத்தப்படுவதன் மூலமாக, அந்த நாட்டினுடைய பொருளாதாரம் ஓரளவுக்காவது தாக்குப் பிடித்து நின்று கொண்டிருக்கிறது. அதுகூட வீழ்கின்ற சூழ்நிலையில் இருந்து கொண்டிருக்கிற நிலைமை இருக்கிறது. ஆனால், நம்முடைய நிலைமை என்ன என்பதை நாம் எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

சென்னை நகரத்தினுடைய தண்ணீர் தாகத்தை நாம் அத்தனை பேரும் உணர்ந்து பார்க்கிறோம். அமைச்சர் அவர்கள் பத்திரிகையிலே சொல்கிறார்கள். கிருஷ்ணா நீர் வருகிறது என்று சொல்லப்படுகிறது. ஆனால், வீதிகளிலே, மக்கள் படுகின்ற அல்லல்களை நாம் எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். சென்னையில் 10 ஆண்டுகளுக்கு முன்னர், இதுபோன்ற தண்ணீர்த் தட்டுப்பாடு வந்தபோது, நெய்வேலியிலிருந்து புகைவண்டி மூலமாகக்கூட தண்ணீர் கொண்டு வரப்பட்டது. மக்களுடைய தேவைக்கு அதிகமாகத் தண்ணீர் அன்றைக்கு விநியோகம் செய்யப்பட்டது. ஆனால் இப்போது எத்தனை திட்டங்கள் போட்டாலும்கூட, சென்னை நகரத்து மக்களின் தண்ணீர் தாகத்தைக்கூட, இந்த அரசால் பூர்த்தி செய்து கொடுக்க முடியவில்லை என்பதை நீங்கள் ஒத்துக் கொண்டுதான் ஆக வேண்டும். ஏனென்று சொன்னால், காலையிலே வீதிகளிலே பெண்கள் கொளுத்துகின்ற வெயிலைப் பொருட்படுத்தாமல் தண்ணீருக்காக அவர்கள் நின்று அல்லல்படுகின்ற அவலங்களைப் பார்க்கின்றபோது நாம் வேதனைப்பட வேண்டிய சூழ்நிலையிலே இருந்து கொண்டிருக்கிறோம். என்ன நடைபெறுகிறது? கேட்டால் சொல்வீர்கள், தண்ணீர் தந்து கொண்டிருக்கிறோம், கிருஷ்ணா தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது என்று. வருமுன் காப்போம் என்கிற திட்டத்தைத் தருகின்ற இந்த அரசு, நாளையதினம் தண்ணீர்த் தட்டுப்பாடு என்கிற சூழ்நிலை வருகின்றபோது, வந்தபின் தவிக்க விடுவோம் என்று சொல்கின்ற சூழலுக்கு நீங்கள், இந்த நாட்டு மக்களைக் கொண்டு விடக்கூடாது என்பதை நான் அன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[டாக்டர் அ. செல்லக்குமார்] [2001 ஜனவரி 30]

இன்றைக்குக்கூட பல திட்டங்களைப் பார்க்கிறோம். இந்த ஆட்சி பதவி ஏற்ற பிறகு, வனத் துறையிலே ஏறத்தாழ, 500 கோடி ரூபாய்க்கு ஜப்பான் அரசினுடைய மூலதனத்தோடு தமிழ்நாடு வன வளத்திட்டம் செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. நாங்கள்கூட சட்டமன்றத்திலே கேட்டிருக்கிறோம். 500 கோடி ரூபாய் மூலதனத்தை எந்தப் பகுதியிலே, செலவிட்டு வனத்தை, வளம் ஆக்குகின்ற திட்டத்தைச் செயல்படுத்தினீர்கள் என்பதற்கான வெள்ளை அறிக்கையைத் தாருங்கள் என்று சட்டமன்றத்திலே நாங்கள் கேட்டிருக்கிறோம். தமிழ்நாட்டினுடைய எதிர்க்கட்சித் தலைவர் மரியாதைக்குரிய சோ. பாலகிருஷ்ணன் அவர்கள்கூட, சட்டமன்றத்திலே அதைக் குறித்து கேட்டிருக்கிறார்கள். அந்த வெள்ளை அறிக்கை இதுகாறும் தரப்படவில்லை. 500 கோடி ரூபாய்க்கான திட்டம் செயல்படுத்தப்பட்டது என்று நீங்கள் சொல்கிறீர்கள். அந்தத் திட்டம் எங்கே செயல்படுத்தப்பட்டிருக்கிறது? எத்தனை ஏக்கர்களில் பயிர் செய்யப்பட்டிருக்கிறது? எனவே இந்தந்தப் பகுதிகளிலே பயிர் செய்திருக்கிறோம் என்கின்ற புள்ளி விவரத்தை, இந்த அரசு தமிழக மக்களுக்குத் தரவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு திட்டத்திற்கும், அரசு செயல்படுத்துகின்ற ஒவ்வொன்றிற்கும் வெள்ளை அறிக்கையை இந்த மாமன்றத்திலே வைக்க முடியாது. அதாவது ஜப்பான் நாட்டு உதவியோடு, TAP Village—காட்டு அபிவிருத்தித் திட்டத்தை நாம் செய்கிறோம். எங்கு செய்கிறீர்கள் என்று கேட்கிறார்கள். இதற்கு ஜப்பான் நாட்டோடு நாம் ஒப்பந்தம் போடுகிறபொழுதே, இவை எங்கெங்கு செய்ய வேண்டுமென்று சொல்லிச் செய்கிறோம். காட்டை அடுத்து இருக்கிற ஊர்களில், காட்டை நம்பி வாழ்கிற மக்களுக்கு காட்டினுடைய பொருளை வைத்து வாழ்க்கை நடத்துகிற மக்களுக்கு, அவர்கள் காட்டிற்குப் போகாமல் இருப்பதற்காக, காட்டை அழிக்காமல் இருப்பதற்காக அவர்கள் வாழ்க்கையைப் பெருக்குவதற்கு, அவர்களுக்கு பல வகையிலே நாங்கள் கடன் கொடுக்கிறோம். ஒரு TAP village-லே ஒரு சொசைட்டியை ஏற்படுத்துகிறோம். அந்த கிராமங்களில் குடிநீர் வசதி, பள்ளிக்கூட வசதி, சாலை வசதி போன்றவற்றையெல்லாம் செய்து கொடுக்கிறோம். மாடு வேண்டுமென்றால் மாடு வாங்க லோன் கொடுக்கிறோம். தையல் மெஷின் தருகிறோம். சுருக்கமாகச் சொன்னால் அதை ஒரு தத்து எடுத்த கிராமத்தைப்போலச் செய்திருக்கிறோம். ஒவ்வொரு கிராமத்திலும்



2001 ஜனவரி 30] [திரு. துரைமுருகன்]

குறிப்பிட்ட அங்கத்தினர்களைச் சேர்த்து இதற்கு தலைவரும் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இதே மன்றத்திலே நானே சொல்லியிருக்கிறேன். அப்படிப்பட்ட TAP village-லே சொசைட்டியிலே தலைவரைத் தேர்ந்தெடுக்கிறபோது சட்டமன்ற உறுப்பினர்களையும் கலந்துகொள்ள வேண்டுமென்று நான் உத்தரவே பிறப்பித்திருக்கிறேன். ஆகவே இங்கே அமர்ந்திருக்கிற உறுப்பினர்கள் எல்லோருக்கும் தெரியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தொகுதியில் காடு கிடையாது. ஆகையினாலே அதுபற்றி உங்களுக்குத் தெரியாது. ஆனால், எங்களைப்போல கிராமப் பகுதிகளிலேயிருந்து வந்திருக்கிற எம்.எல்.ஏ.-க்களுக்கு எந்தெந்த கிராமங்களில் நடத்துகிறார்கள் என்பது தெரியும். இன்னும் சொல்லப்போனால் ஜப்பான் நாட்டுப் பணம் கொடுத்த குழு இங்கே வந்து பார்த்து இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டம் சிறப்பாகச் செயல்படுகிறது என்று சொல்லிவிட்டுப் போனது. அடுத்த முறையும் பணம் கொடுப்பதற்கு வேண்டிய பேச்சுவார்த்தையை இப்போது நாங்கள் நடத்திக் கொண்டிருக்கிறோம்.

*நண்பகல் 12-00*

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வீரப்பன் மறைந்திருக்கிற காட்டைப் பார்த்துக்கூட அவர்கள் சொல்லியிருக்க முடியும்.

இப்போது தமிழகத்திலே ஒரு மிகப் பெரிய பகல் கொள்ளை, கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளாக நடந்து கொண்டிருக்கிறது ஒரு துறையில்...

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்டது, TAP village-ஐப் பற்றி. அதுகுறித்து நான் சொன்னேன். வீரப்பன் மறைந்திருக்கிற காட்டைப் பற்றி அவர் சொல்கிறார். வீரப்பன் மறைந்திருப்பதும் காடுதான். ஆனால் அந்தக் காட்டில் இந்த TAP village திட்டம் செயல்படுத்தப்படாது. அது பெரு மரங்கள் உள்ள காடு.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** துணைத் தலைவர் அவர்களே, நீண்ட நெடுநாட்களாக தமிழ் மாநில காங்கிரசினுடைய சார்பாக ஒரு கோரிக்கை வைக்கப்பட்டது. தமிழகத்திலே விற்பனை செய்யப்படுகின்ற

[டாக்டர் அ. செல்லக்குமார்] [2001 ஜனவரி 30

சிமெண்ட் அதிக விலை வைத்து விற்கப்படுகிறது. அதன்மூலமாக பகல் கொள்ளை நடக்கிறது என்று பலமுறை நாங்கள் சட்டமன்றத்திலே சொல்லியிருக்கிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட சட்டமன்றத்திலே பதில் சொல்கின்றபோது மத்திய அரசு அதுகுறித்து பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது; விரைவிலே ஒரு நல்ல முடிவு வரும் என்று சொன்னார்கள். எங்களுடைய குற்றச்சாட்டு என்னவென்று சொன்னால், 2 ஆண்டுகளாக இதுகுறித்து நாங்கள் இந்த மன்றத்திலே சொல்லிக் கொண்டிருக்கிறோம். அரசை வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். தமிழகத்திலே மட்டும் அதிக விலை கொடுத்து ஒரு மூட்டைக்கு ஏறத்தாழ 70, 80 ரூபாய் அதிகமான விலை நிர்ணயம் செய்து இங்கே வியாபாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். அது ஒரு சாதாரணத் தொகை என்று எண்ணிவிடக்கூடாது. ஏனென்று சொன்னால் எனக்குக் கிடைத்திருக்கிற தகவல் என்னவென்று சொன்னால், ஏறத்தாழ 60 இலட்சம் டன்னுக்கும் அதிகமாக ஒரு மாதத்திலே விற்பனை செய்யப்படுவதாகச் சொல்கிறார்கள். நான் ஒப்பிட்டுப் பார்க்கிறேன். ஒரு மூட்டைக்கு 60 ரூபாய் 70 ரூபாய் அதிகம் என்று சொன்னால் தமிழ்நாட்டினுடைய 6 கோடி மக்களுடைய அப்பாவி ஏழை எளிய தமிழ் மக்களுடைய பணத்தைத் தவறான முறையிலே சுரண்டி அவர்கள் பெற்றிருப்பார்கள் என்று சொன்னால், அதன்மூலமாக அவர்கள் ஈட்டிய வருமானம் மட்டும் (மணியடிக்கப்பெற்றது) ஏறத்தாழ ஓராண்டுக்கு எப்படிப் போனாலும் 600 கோடி ரூபாய்க்கு அவர்கள் சொத்து சேர்த்திருக்கிறார்கள். 3 ஆண்டுகளுக்கு என்று சொன்னால் எவ்வளவு வரும் என்பதைக் கூட்டிக் கழித்துப் பார்த்துக்கொள்ளுங்கள். இதை நான் பார்க்கின்றபோது இந்த அரசு.....

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** துணைத் தலைவர் அவர்களே....

**டாக்டர் அ. செல்லக்குமார்:** நிறைய குறுக்கீடு வருகிறது. எனக்குப் பேசுவதற்கு நேரம் கொடுங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** உங்களுக்கு நேரம் ஒதுக்குவார்கள். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், ஆளுநர் உரைமீது விவாதத்தில் பேசியபோதே நான் இதற்குப் பதில் சொல்லியிருக்கின்றேன். ஏதோ தமிழ்நாட்டிலே மட்டும்தான் சிமெண்ட் விலை ஏறிக் கொண்டிருப்பதாகவும், அதிகமான விலைக்கு விற்று கொண்டிருப்பதாகவும் ஒரு தவறான கருத்தை தமிழ்நாட்டிலே சில அரசியல் கட்சிகள் திட்டமிட்டே பிரச்சாரம் செய்கிறார்கள். நான் இப்போதும் சொல்கிறேன். நம்முடைய தமிழ்நாட்டைவிட கேரளாவிலோ, மும்பையிலோ மற்ற மாநிலங்களிலோ எங்கேயும் சிமெண்ட் விலை குறைவாக விற்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போல 130 ரூபாய் சிமெண்ட் தமிழ்நாட்டில் விற்பதற்கு யாராவது தயாராக இருந்தால், இந்த அரசாங்கம் யாரையும் தடுக்கவும் இல்லை.



2001 ஜனவரி 30] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

அம்புஜா என்ற ஒரு நிறுவனம்தான்—த.மா.கா.வைச் சேர்ந்தவர்கள் குறிப்பாக அப்பாவு போன்றவர்கள், தூத்துக்குடியிலே அவர்கள் சிமெண்ட் ஆலை போட முயற்சித்ததாகவும், தடுத்ததாகவும் சொன்னார்கள். இந்த அம்புஜா நிறுவனமே—கேரளாவிலே 193 ரூபாய்க்குத்தான் இப்போதும் விற்றுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, தமிழக அரசுக்கும் சிமெண்ட் விலை உயர்வுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. மாநில அரசுக்கு இதிலே எந்த அதிகாரமும் இல்லை. எனவேதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நம்முடைய மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் அவர்களிடத்திலேயும் சொல்லியிருக்கிறார்கள்; பிரதமர் அவர்களிடத்திலேயும் பேசியிருக்கிறார்கள். இதுசம்பந்தமாக மத்திய அரசாங்கம் 2ஆம் தேதி இந்தியாவிலுள்ள அனைத்து சிமெண்ட் உற்பத்தியாளர்களையும் அழைத்துப் பேச இருக்கிறது.

பிற்பகல் 12-05

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு பேசவிருக்கிறது என்பதை நாங்கள் ஒத்துக்கொண்டிருக்கிறோம். ஏனைய மாநிலங்களிலே இன்றைக்கும் விலை உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதையும் நாங்கள் ஒத்துக் கொள்கிறோம். நான் பேசுகின்றபோது தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். ஏனைய மாநிலங்களில் விலை கட்டுப்பாட்டில் இருக்கிறபோது தமிழகத்திலே, இரண்டு ஆண்டுகளில் அதுபோன்ற விலை உயர்வு இருந்தது. அப்போது இந்த அரசை நாங்கள் தட்டிப் பார்த்தோம். கெஞ்சிப் பார்த்தோம். ஆனால் கேட்பதற்கு, செவி மடுப்பதற்கு இந்த அரசு தயாராக இல்லை. ஆனால் பஞ்சாபிலே ஏற்றியபோது, ஹரியானாவிலே விலையை உயர்த்தியபோது, உத்திரப்பிரதேசத்திலே விலையை உயர்த்தியபோது அந்தந்த

மாநிலங்களினுடைய அரசுகள் மத்திய அரசை வலியுறுத்தின. இந்தியா முழுவதும் விலை உயர்த்தப்பட்டது என்று சொன்னபோது எங்களது மாநிலத்து மக்கள் மீது நாங்கள் வரிச்சுமையை ஏற்றுவதற்கு அதுவும் குறிப்பாக தனியார் பணம் சம்பாதிப்பதற்காக இதுபோன்ற சுமையை நாங்கள் சுமத்த மாட்டோம் என்று அந்த அரசுகள் மத்திய அரசை வலியுறுத்தின. இப்போது எடுக்கிற முயற்சியை, ஏன் தமிழக அரசு சார்பாக மத்திய அரசை வலியுறுத்தி 3 ஆண்டுகளுக்கு முன்னால் எடுக்கவில்லை என்பதுதான் எங்களுடைய கேள்வி. இதன் மூலமாக ஈட்டப்பட்டுள்ள சொத்து ஏறத்தாழ 2,000 கோடி ரூபாய்க்கும் அதிகமாக இருக்கும் என்று நாங்கள் சொல்கிறோம், கேள்விப்படுகிறோம். இதைப் பார்க்கிறபோது ஒரு பழமொழியை, நடைமுறையிலே இருக்கின்ற ஒரு செய்தியை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது) பாலைவனத்திலே ஒரு தீக்கோழி இருக்கும். பார்த்து இருக்கிறோம். தொலைக் காட்சியிலே பார்க்கிறோம். தனக்கு ஆபத்து வந்துவிட்டது என்று சொன்னால் அது வேகமாக ஓடுகிறது. ஓடி எங்கே செல்கிறது என்று சொன்னால் பாலைவனத்தின் மண்ணிற்குள்ளே தன்னுடைய தலையை மட்டும் புதைத்துக் கொள்கிறது. தான் தப்பித்து விட்டதாகக் கருதுகிறது. அதுதான் இன்றைய சூழ்நிலை. தேர்தல் நெருங்கிவிட்டது. சிமெண்டை எண்ணி 6 கோடி மக்களும் இப்போது வேதனையிலே வாடிக் கொண்டிருக்கிறபோது அரசுகள் வேகமாக ஓடிக் கொண்டிருக்கின்றன. இந்த நாட்டு மக்களை பாலைவனமாக மாற்றிவிட்ட சூழ்நிலையில் இந்த தீக்கோழி தலையை பாலைவனத்தின் மண்ணுக்குள்ளே புதைத்துக் கொண்டிருக்கிறது. தான் தப்பிவிட்டதாகக் கருதுகிறது. நிச்சயமாக அது தப்பாது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். எத்தனை விளக்கங்கள் தந்தாலும்கூட (மணியடிக்கப்பெற்றது) நான் பேச ஆரம்பித்து...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் 2 நிமிடங்கள் தான்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** 20 நிமிடங்கள் என்றீர்கள். குறுக்கீடுகள் அதிகமாக இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** குறுக்கீடுகள் எல்லாம் சேர்த்துத்தான் கொடுத்திருக்கிறேன். பேசுங்கள். (குறுக்கீடு) காட்டிலேயே அதிக நேரம் இருந்தீர்கள். நாட்டிற்கு வரவில்லை. சீக்கிரம் உரையை முடியுங்கள். நேரம் ஆகிவிட்டது. (குறுக்கீடு) டாக்டர் பத்மா, இந்தமாதிரி





உட்கார்ந்து கொண்டு எல்லாம் பேசக்கூடாது. வெளியிலே அனுப்பிவிடுவேன். டாக்டர் செல்லக்குமார், 2 நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**டாக்டர் பத்மா:** அவர் 11-44 மணிக்குத்தான் பேச ஆரம்பித்தார்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இது மாதிரியெல்லாம் பேசக் கூடாது. உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் முதலில் உட்காருங்கள். மன்றத்தினுடைய மரபைத் தெரிந்து உட்காருங்கள். (குறுக்கீடு) டாக்டர் செல்லக்குமார் 2 நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** குறுக்கீடுகள் நிறைய வந்தன. நான் 11-44 மணிக்குத்தான் பேச ஆரம்பித்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** குறுக்கீடுகள் வராமல் பேசவேண்டும், பேசுங்கள். இன்னும் 2 நிமிடங்கள் தருகிறேன், பேசுங்கள்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** இப்போது அரசினுடைய சார்பாக எத்தனை விளக்கங்களைத் தந்தாலும்கூட நிச்சயமாக ஒரு பழமொழி என்னுடைய நினைவிலே வருகிறது. கேப்பையிலே நெய் வடிகிறது என்றால் கேட்பவருக்கு புத்தி எங்கே சென்றது என்று கேட்பார்கள் நாட்டு மக்கள். அந்தச் சூழ்நிலை வந்துவிடக்கூடாது என்பதை மட்டும் இந்த அரசுக்கு நான் நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

இன்னொரு வேண்டுதலை நான் அரசுக்கு வைக்க விரும்புகின்றேன். சென்னை நகரத்தினுடைய பெருமக்கள் கட்டிய வீட்டிற்கு அரசு அங்கீகாரத்தோடு அந்தக் கட்டட விதிமுறைகளை நிர்ணயிப்பதற்காக, வரைமுறைப்படுத்துவதற்காக அரசு ஒரு கட்டணத்தை விதித்திருக்கிறது. ஏனைய மாநிலங்களை எல்லாம் ஒப்பிட்டுப் பார்க்கிற தமிழக அரசு அந்தக் கட்டணத்தை இரத்து செய்ய வேண்டும். அது நடந்துவிட்டது. யாரோ செய்துவிட்ட தவறு. அந்தத் தவறு நடந்துவிட்டது. அதற்காக அப்பாவி மக்கள், நடுத்தர மக்கள் பாதிக்கப்பட்டு விடக்கூடாது. ஆகவே அந்தக் கட்டணத்தை நீங்கள் இரத்து செய்யவேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் கடந்த வரவு-செலவுத் திட்ட அறிக்கையைத் தாக்கல் செய்கிறபோது காவல் துறையிலே களப் பணியாளர்களாக இருப்பவர்களுக்கு அரசு ஊழியர்களுக்கு

இணையான சம்பளம் வழங்கப்படும்; அடிப்படை ஊதியம் வழங்கப்படும் என்று அன்றைக்கு அறிவித்தார்கள். அறிவித்து 8 மாதங்கள் கடந்துவிட்டன. இன்று வரையில் அதற்கு அரசாணை பிறப்பிக்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். இந்தச் சட்டமன்றத்திலே அறிவிக்கப்படுகிற அறிவிப்புகளுக்குக்கூட அரசாணை பிறப்பிப்பதில் இவ்வளவு காலதாமதம் என்றால், 24 மணி நேரமும் பணியாற்றுகின்ற அந்தக் காவலர்கள் 8 மணி நேரம் பணியிலே இருக்கிற அரசு ஊழியர்களோடு அந்த அடிப்படை வருமானத்தை ஒப்பிட்டுப் பெறுவதற்குக்கூட அவர்களுக்கு வாய்ப்பில்லாத சூழ்நிலை வரும் என்று சொன்னால் அது உண்மையிலேயே வேதனைக்குரிய ஒன்று. எனவே அரசாங்கம் அறிவித்த அந்த அறிவிப்பை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். நீண்ட நாட்கள் இந்த மன்றத்திலே விவாதம் நடந்திருக்கிறது. உள்ளாட்சித் துறையிலே கிராமப் பஞ்சாயத்துகளுக்கு வேண்டிய மின்சார உதிரிப் பாகங்களை சில குறிப்பிட்ட கடைகளில் வாங்குங்கள் என்று அரசு உத்தரவு பிறப்பித்து இருக்கிறது என்று பலர் இந்த சட்டமன்றத்திலே சொல்லியிருக்கிறார்கள்.

***மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட உத்தரவு இருந்தால் என்னிடம் காட்ட வேண்டும் என்று விரும்புகிறேன். காரணம் ஒவ்வொன்றையும் சொல்லிவிட்டுப் போய்க் கொண்டே இருக்கக்கூடாது. அவ்வாறு உத்தரவு இருந்தால் அதைக் காட்டவும். அப்படி இருந்தால் அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

**டாக்டர். அ. செல்லக்குமார்:** அரசாணை எண் 195, பொருளாதாரத் துறை, அரசாணை எண் 149, ஊரக வளர்ச்சித் துறை, 16-7-1998-லே அரசாணை பிறப்பிக்கப்பட்டது. மாவட்டத்தினுடைய...

பிற்பகல் 12-10

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதற்குப் பிறகும் ஓர் ஆணை பிறப்பிக்கப்பட்டு அவர்கள் எங்கு வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளலாம்; ஆனால் I.S.I. Seal இருக்க வேண்டும்; அது குறிப்பிட்ட விலைக்கு மேல் இருக்கக்கூடாது; அப்படியிருந்தால் அதன்மேல் உரிய நடவடிக்கை எடுப்போம்; ஆனால் வாங்குகிறவர்கள் எங்கு வேண்டுமானாலும் வாங்கிக்கொள்ளலாம் என்ற உத்தரவும் அதே பஞ்சாயத்தில் போடப்பட்டிருக்கிறது.



**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஓர் உத்தரவு போடப்பட்டிருகிறது என்றுதான் நான் சொன்னேன். நான் பேசுவதற்கு முன்னே அப்படி ஒரு உத்தரவே போடவில்லை; இருந்தால் காட்டுங்கள் என்று சொன்னார்கள். நான் படிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** இப்பவும் சொல்கிறேன். அந்த உத்தரவில் அதுபோன்று இல்லை. இன்னின்ன கடைகளில்தான் வாங்க வேண்டும் என்பது நிச்சயமாக இல்லை.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் அவர்கள் ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள் பஞ்சாயத்து தலைவர்களுக்கு. அதனுடைய எண் 2326/98. அதிலே சில தனியார் நிறுவனங்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்று சொல்கிறார்கள். என்னுடைய கருத்து என்னவென்று சொன்னால் அரசு இரண்டாவது உத்தரவு பிறப்பிக்கப்பட்டதற்குப் பின்னால்.....

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** நான் குறிப்பிட விரும்புவது எந்தெந்த கடையில் வாங்கவேண்டும் என்று அந்த உத்தரவில் இருக்கிறதா என்பதுதான் நான் கேட்கின்ற விளக்கம்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தினுடைய மரபு, அமைச்சர் உறுப்பினர் கூறுவதை மறுத்து ஒரு விளக்கம் சொல்வாரேயானால் அதை ஏற்றுக்கொண்டு பின்னர் வேறு ஏதாவது, எப்பொழுதாவது ஆதாரம் கிடைத்தால் நீங்கள் அமைச்சரிடத்திலேயே கேட்கலாம். அவையினுடைய நேரத்தில் அதிக அளவு நேரத்தை நீங்கள் எடுத்துக் கொள்வதேகூடச் சரியாகாது. குறிப்பிட்ட நேரத்திற்கு மேல் எடுத்துக் கொள்வதற்கு எந்தக் கட்சி உறுப்பினருக்கும் உரிமை கிடையாது. எதிர்க் கட்சித் தலைவராக இருந்தால் சொல்லப்பட்ட நேரத்தைவிட 5 நிமிடம் அதிகம் எடுத்துக் கொள்ளலாம். ஆகவே, அப்படி நேரத்தை எடுத்துக்கொள்கிறபோது மற்ற உறுப்பினர்கள் எல்லாம் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினரின் நினைவுக்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு தனியார் நிறுவனம் பஞ்சாயத்துக்களுக்கு கடிதம்

எழுதுகிறது. நான் காட்டுகிறேன். உங்களிடம் கொடுத்துவிடுகிறேன். அதிலே என்ன குறிப்பிடுகிறது என்றால், உதவி இயக்குநர்- ஊராட்சிகள்- தருமபுரி - கடித எண் 2326/98, ஆ4, நாள் 26-3-1998. ஒரு குறிப்பிட்ட கடையை எழுதி, இந்தக் கடையில்தான் வாங்க வேண்டும் என்று, பிரபு எலக்ட்ரிகல்ஸ் என்ற ஒரு கடையைக் குறிப்பிட்டு அதனுடைய முகவரி எல்லாம் எழுதியிருக்கிறார்கள். (குறுக்கீடு) Letter இருக்கிறது. நான் கொடுத்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இங்கே கவனியுங்கள். அதாவது இந்தமாதிரி இருந்தால் நீங்கள் முன்கூட்டியே என்னிடம் காட்டி என்னுடைய அனுமதியை வாங்கியிருந்தால் அதை நான் முறைப்படி அமைச்சரிடம் கொடுத்து, அதற்கான பதிலை அமைச்சர் சொல்லியிருப்பார். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது அரசு போட்ட G.O. அரசு உத்தரவு என்றுதான் குறிப்பிட்டார். அதற்குப் பிறகு யார் யாரோ, எங்கெங்கேயோ கடிதம் என்று வந்துவிட்டார். நான் குறிப்பிடுவது உள்ளபடியே ஓர் உத்தரவு என்றால் அரசு போட வேண்டும் என்றால் அரசுக்கு வந்து, அரசு பரிசீலித்து அந்த உத்தரவைப் போட்டிருக்க வேண்டும். அல்லது அங்கிருக்கின்ற அதிகாரிகள் ஏதாவது செய்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று நான் ஆரம்பத்திலேயே சொல்லியிருக்கிறேன். இப்பவும் நான் அதிலிருந்து விலகிச் செல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் உங்களுக்கு 20 நிமிடம் ஒதுக்க வேண்டும் என்று சொல்லிவிட்டுப் போனார்கள். நீங்கள் 30 நிமிடம் பேசியிருக்கிறீர்கள். அடுத்த உறுப்பினர் திரு. குழந்தை தமிழரசன்.

***திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த இடைக்கால நிதிநிலை அறிக்கையில் பேசுவதற்கு அனுமதி வழங்கிய தங்களுக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் எனது பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** இது என்ன நியாயம்? ஓரவஞ்சனை பண்ணாதீர்கள்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 30 நிமிடங்கள் பேசிவிட்டு ஓரவஞ்சனை என்று சொன்னால் எப்படி?

**டாக்டர் அ. செல்லக்குமார்:** குறுக்கீடு நேரம் என்ன என்று பாருங்கள்.

**திரு. குழந்தை தமிழரசன்:** முந்தைய ஆட்சியில் பாலைவனமாக இருந்த தமிழ்நாட்டை சோலைவனமாக ஆக்கி (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தினுடைய இடைக்கால பட்ஜெட்டை அறிவித்து...

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு தவறான குறிப்பு அவையிலே பதியக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் முதலிலே பேசும்போது அரசாங்கம் ஆணை பிறப்பித்திருக்கிறது என்று சொன்னார். பிறகு தனியார் நிறுவனத்திற்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார். ஆனால் அவர் கொடுத்த இந்தக் கடிதத்தில் பிரபு எலக்ட்ரிகல்ஸ் அண்டு ஹார்டுவேர்ஸ் என்ற ஒரு தனியார் நிறுவனம் வேண்டுகோள் வைக்கிறார்கள். அந்த வேண்டுகோளைத்தான் இங்கே படித்துக் காட்டினார். எனவே ஒரு தனியார் நிறுவனம் அதிகாரிகளுக்கு கடிதம் எழுதுவது என்பது ஆணை அல்ல. அரசாங்கம் பிறப்பிக்கின்ற ஆணைகள்தான் ஆணைகளை தவிர இந்த பிரபு எலக்ட்ரிகல்ஸ் எழுதியிருப்பது அரசாங்கத்தின் ஆணை அல்ல.

*பிற்பகல் 12-15*

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தனியார் நிறுவனம் எழுதியது என்பதை ஒத்துக்கொள்கிறேன். நான் என்ன சொல்லியிருக்கிறேன் என்றால், அதிலே அரசு இயக்குநர் எழுதியிருக்கிறார். அரசு இயக்குநர் ஆணை பிறப்பித்து, தருமபுரி, ஊராட்சி ஒன்றியத்தினுடைய இயக்குநர் என்று சொன்னால், அந்த ஊராட்சி ஒன்றியத்தினுடைய இயக்குநர் அரசா அல்லது தனியாரா என்பதுதான் இங்கே உள்ள கேள்வி.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆரம்பத்திலே அவர் குறிப்பிட்டது, அரசு அதிகாரபூர்வமாக ஓர் உத்தரவு வழங்கியிருக்கிறது, இந்தப் பொருட்களை இன்னின்ன கடைகளில்தான் வாங்க வேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்று சொன்னார். நான் இப்போது கேட்பது, அப்படிப்பட்ட உத்தரவு, அதாவது எந்தெந்தக் கடைகளிலே வாங்கப்பட

வேண்டும் என்று இந்த அரசு உத்தரவிட்டிருக்கிறதா என்பதை அவர் தெளிவாகச் சொல்ல வேண்டும்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் ஒன்றும் தனியாரைக் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. அந்தக் கடிதம் எழுதியவர், அரசினுடைய பொறுப்பு வாய்ந்த இயக்குநர், அவர்களே ஓர் அரசாணையைக் கொடுத்திருக்கிறார். உத்தரவு போடப்பட்டிருக்கிறது. அந்த உத்தரவு போடப்பட்டிருக்கிறது. அவர் அதிலே குறிப்பிட்டிருக்கிறார். அதைத்தான் நான் இப்போது அமைச்சர் கையிலே கொடுத்திருக்கிறேன். அந்த அதிகாரிகள்மீது நீங்கள் என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறீர்கள்?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுக்குப் புரியும் என்பதற்காகச் சொல்கிறேன். 'மூப்பனாரும் செல்லக்குமாரும் ஒன்றா?' அரசாணை என்றால் அமைச்சரோ அல்லது அந்தத் துறைச் செயலாளரோ கையெழுத்துப் போட்டு, அவர்கள் மூலமாகப் பிறப்பிப்பது அரசாணை. (மேசையைத் தட்டும் ஒலி) அரசு அதிகாரிகள் எவ்வளவோ காரியங்களைச் செய்யலாம். செய்தது நிரூபிக்கப்பட்டால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள் ஏற்கெனவே தெரிவித்திருந்தால் அதற்குப் பதில் ஏற்கெனவே உங்களுடைய வீட்டிற்கேகூட வந்திருக்கும். நடவடிக்கை எடுத்திருக்கலாம். அரசாங்கம் என்பது ஒரு கடல் மாதிரி. அதிலே யார் வேண்டுமானாலும், எந்தத் துறையிலே வேண்டுமானாலும் இறங்கிக் குளிக்கலாம். குளிப்பவர்களுக்கு எல்லாம் அரசாங்கம் பொறுப்பல்ல.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். உள்ளபடியே அந்தக் குற்றச்சாட்டு சரிதானா, இல்லையா என்பதைப் பார்ப்பதற்கு அன்று இரவே இங்கேயிருந்து தனியாக அதிகாரிகளும் அங்கே அனுப்பப்பட்டிருக்கிறார்கள். மறுபடியும், இன்றைக்குக் காலையிலேகூட அது தொடர்கிறது என்று சொன்னார்கள். இப்போதும் நான் வெளியே போய்விட்டு, மறுபடியும் D.R.D. அவர்களை வரவழைத்து, அதுசம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன என்று கேட்பதற்காக 2-00 மணிக்கு என்னுடைய அலுவலகத்திற்கு வரச்



சொல்லியிருக்கிறேன். உள்ளபடியே அரசு அதிகாரிகள் தவறு செய்திருப்பார்களேயானால், சுட்டிக்காட்டினால் நடவடிக்கை எடுக்காமல் இருந்தால், எங்களுடைய குறையே தவிர, நீங்கள் அதைத் தெரிந்துகொண்டு சும்மா இருந்தால் அவர்களுக்கு அதற்கு ஒத்தாசை செய்வதாகத்தான் அர்த்தம்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்வியமைச்சர் அவர்கள் ஒரு விளக்கத்தைத் தந்தார்கள். மக்கள் தலைவர் மூப்பனார் அவர்களும் நானும் ஒன்றா என்று கேட்டார்கள்......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர்தான் சொல்லி விட்டாரே, நீங்கள் உட்காருங்கள். குழந்தை தமிழரசன் பேசுங்கள்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி உட்காருங்கள். திரு. குழந்தை தமிழரசன்.

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த இடைக்கால நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்திலே எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகம் முந்தைய ஆட்சியிலே பாலைவனமாக மாறிவிட்டதை இந்த நாட்டு மக்கள் அறிந்திருப்பார்கள். அந்தப் பாலைவனத்தை சோலைவனமாக ஆக்கி, தமிழகத்திலே கடந்த 4 1/2 ஆண்டுகாலமாக நல்லாட்சி நடத்திக்கொண்டு வந்திருப்பவர்தான் நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த நல்லாட்சியில் நாடும், வீடும் மக்களும் நலமுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இங்கே முன்னால் பேசிய சட்டமன்ற உறுப்பினர் ஒரு கருத்தைக் குறிப்பிட்டார்கள். Information Technology என்பது தமிழகத்தினுடைய மாணவர்கள் அவர்களாகவே படித்து வளர்த்துக் கொள்கிறார்கள் என்று சொன்னார்கள். மனிதர்கள் எல்லோருக்கும், மாணவர்கள் எல்லோருக்கும் மூளை இருக்கும். ஆனால், அந்த

[திரு. குழந்தை தமிழரசன்] [2001 ஜனவரி 30

மூளையிலே இருக்கின்ற அறிவைக் கண்டுபிடித்து, அந்த அறிவை இன்று வளர்ந்து வருகின்ற நூற்றாண்டிற்குத் தகுந்த அளவிற்கு, உலகத்தினுடைய தரத்திற்குப் போட்டி போடுகின்ற அளவிற்கு மாற்றுவது ஓர் அரசினுடைய கடமை. அந்த அரசை நடத்துகின்ற ஒரு முதல்வருடைய கடமை, அந்தக் கடமையைத்தான் நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் மிகத் திறம்பட இந்த நூற்றாண்டிலே செய்து காட்டியிருக்கிறார்கள். இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள், மாணவர்கள் தாங்களாகவே வளர்த்துக் கொண்டுவிட்டார்கள் என்று. அரசு ஒன்றும் செய்யாததைப்போல குறிப்பிட்டுச் சொன்னார்கள். ஆனால் இந்த நூற்றாண்டு கணினி யுகம்; இந்தக் கணினி யுகத்திலே வளர்ந்து வருகின்ற மாணவர்களுக்கு வேண்டிய வசதிகளை உயர்நிலைப் பள்ளிகளிலேயிருந்து, மேல்நிலைப் பள்ளிகளிலேயிருந்து கல்லூரிகள் வரை இன்று கணினிக் கல்வி கொடுக்கப்படுகிறது. கணினி அறிவைப் பெறுவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் அடிகோலியிருக்கிறார்கள். தரமணியிலே Tidal Park ஒன்றைத் தொடங்கினார்கள். அந்த Tidal Park மூலமாக தமிழகத்தினுடைய தொழில்நுட்பம் பலமுறை, பல மடங்கு மேலோங்கி வளர்ந்திருக்கிறது. இரண்டாவது முறையாக, அதற்கு மாணவர்கள் மத்தியிலேயும், உலக அளவிலேயும் இருக்கின்ற வரவேற்பை அறிந்து மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் 20 இலட்சம் சதுர அடி பரப்பளவில் இரண்டாவது Tidal Park-ஐ உருவாக்குவதற்கு இப்போது ஆணையிட்டிருக்கிறார்கள். அந்தப் பணி வேகமாக நடந்து வருகின்றது. இந்தியாவிலேயே Information Technology-யில் நம்முடைய தமிழகம்தான் முன்னணியில் இருக்கிறது என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தமிழகத்தினுடைய தலைநகரமாம் சென்னைதான் அ.்வியல் நகரம்; அறிவியலுக்கு வாய் என்று பல பத்திரிகைகள் இந்த Information Technology வருவதைக் குறித்து பரராட்டியிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*பிற்பகல் 12-20*

இங்கே பேசும்போது எதிர்காலத்திலே நாடு திவாலாகிவிடும் என்கிற ஒரு நிலை உருவாகும் என்று சொன்னார்கள். ஆனால் சில கட்சிகளினுடைய கோட்பாடுகளின் காரணமாகத்தான், மக்களிடம் இரட்டை வேடங்கள் போடுகின்ற காரணத்தினால்தான் அந்த அரசியல் கட்சிகள்தான் திவாலாகி விடுகின்ற நிலைமை இந்த



2001 ஜனவரி 30] [திரு. குழந்தை தமிழரசன்]

நாட்டிலே உருவாகி இருக்கிறதே தவிர, எந்தக் காலத்திலும் தமிழ்நாடு திவாலாகி விடுகின்ற நிலைமை உருவாகாது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் மனிதநேயம் மிக்க முதல்வர் ஆவார்கள். அவர்கள் தேசிய ஒருமைப்பாட்டை மிகவும் மதிக்கக்கூடிய முதல்வர். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்கிற கணியன் பூங்குன்றனாருடைய வார்த்தைக்கு இலக்கணமாக வாழ்ந்து கொண்டிருப்பவர் நம்முடைய தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், குஜராத்திலே பூகம்பம் என்று அறிந்தவுடன் இந்தியாவிலே எந்த மாநில முதல்வரும் அறிவிக்காத நிலையில் ஐந்து கோடி ரூபாயை முதலில் அறிவித்து அந்த மக்களுக்கு நிவாரணத் தொகை வழங்கிய ஒரே முதல்வர் நம்முடைய முதல்வரவர்கள். அதேபோன்றுதான் ஒரிசாவிலே புயல் அடித்த நேரத்திலே நாம் அவர்களுக்கு வேண்டிய உதவிகளை வழங்கியிருக்கின்றோம். கார்கில் போர் நடந்த நேரத்திலே கார்கிலினுடைய நிவாரண நிதிக்காக 50 கோடியை நம்முடைய முதல்வரவர்கள் திரட்டிக் கொடுத்திருக்கின்றார்கள். எனவே, இந்த மனித நேயம் மிக்க அரசை மக்கள் பெரிதும் பாராட்டுகின்றார்கள்.

நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலே முதல் பாராவிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். "தேர்ந்தெடுக்கப்படும் புதிய சட்டப்பேரவையில் முழு அளவிலான வரவு-செலவுத் திட்டம் தாக்கல் செய்யப்படும்" என்று அறிவித்தார்கள். நான் இந்த மன்றத்திற்கும் தமிழக மக்களுக்கும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்த முழு அளவிலான பட்ஜெட்டையும் நம் முதல்வர் கலைஞர் அவர்கள்தான் இந்த மன்றத்திலே உட்கார்ந்து தாக்கல் செய்வார்கள். நான் ஒரு ஆளுங்கட்சி உறுப்பினர் என்ற முறையில் இதைப் பேசவில்லை. ஐந்தாண்டுக் காலத்தில் தமிழகத்தினுடைய பட்டி தொட்டிகளிலும், நகரங்களிலும் வளர்ந்திருக்கின்ற வளர்ச்சி, அந்த வளர்ச்சியின் பயனாக மக்கள் அடைந்திருக்கின்ற பயன் அந்தப் பயனை நுகர்ந்து கொண்டிருக்கின்ற மக்களினுடைய மனப்போக்கினை அறிந்துதான் இந்த வார்த்தையை நான் மிகத் தைரியமாகச் சொல்கிறேன்.

முந்தைய ஆட்சியிலேதான் வேதனைகள் இருந்தன. இன்றைய ஆட்சியில் சாதனைகள்தான் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழக முதல்வர் தலைவர் அவர்கள்

[திரு. குழந்தை தமிழரசன்] [2001 ஜனவரி 30

மனித நேயத்தை மதிக்கக் கூடியவர் மட்டுமல்ல. எதிர்க்கட்சியினர் கோரிக்கை வைத்தாலும், அதிலே நியாயம் இருக்குமானால் அதையும் ஏற்றுச் செயல்படுத்தக்கூடியவர் அவர்கள். நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள், கோட்டை அமீருடைய பெயரால் ஒரு விருது வழங்க வேண்டும் என்று தெரிவித்தார்கள். அதை ஏற்று, கோட்டை அமீருடைய பெயரால் நம்முடைய தஞ்சை சுல்தான் அவர்களுக்கு இந்த ஆண்டு மனித நேய மத நல்லிணக்க விருதை வழங்கியிருக்கின்றார்கள். மேலும் பாதிக்கப்பட்ட அந்தக் குடும்பத்திற்கு, கோட்டை அமீரினுடைய குடும்பத்திற்கு மாதந்தோறும் உதவித் தொகை, குடும்பத்திற்கு வேலைவாய்ப்பு, கோவை மாநகரத்திலே அவர்களுக்கு வீடு. போன்றவற்றைக் கொடுப்பதற்கும் ஆணையிட்டிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அரசு நிர்வாகத் திறமையுள்ள அரசு. இன்றுகூடப் பத்திரிகையிலே பார்த்தேன். அறிக்கையை விட்டே அரசியல் நடத்தக் கூடிய ஒரு முந்தைய முதலமைச்சர் ஓர் அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார். நிர்வாகத் திறமை இல்லாத ஓர் அரசாங்கம், இந்த அரசாங்கம் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த அரசாங்கத்திற்கு யாராவது ஒரு மனு அனுப்பினால் அந்த மனுமீதுகூட நடவடிக்கை எடுத்து அவர்களுக்கு வேண்டிய உதவியைச் செய்யக்கூடிய அரசாக இந்த அரசாங்கம் இருக்கிறது. அதற்கு ஓர் உதாரணத்தை இந்த மன்றத்திலே நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

கல்லுப்பட்டி என்கிற ஒரு கிராமத்திலேயிருந்து, முஸ்லீம் சமுதாயத்தைச் சேர்ந்த ஊனமுற்ற ஒரு பெண் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்களுடைய தனிப் பிரிவுக்கு ஒரு கடிதத்தை அனுப்பியிருந்தார்கள். "நான் ஊனமுற்றிருக்கிறேன், இடைநிலைப் பயிற்சி முடித்திருக்கிறேன், எனக்கு ஆசிரியர் வேலை வழங்குங்கள்" என்று கேட்டார்கள். அதைக் கருணையுடன் பார்த்த நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் அந்தப் பெண்ணுக்கு உடனடியாக இடைநிலை ஆசிரியர் வேலைவாய்ப்பைக் கொடுத்தார்கள். மாண்புமிகு முதல்வரவர்களுக்கு நன்றி தெரிவித்து அந்தப் பெண் ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அதை இந்த மன்றத்திலே நான் பதிய வைக்க விரும்புகிறேன்.

"ஏழை துயர் துடைக்கும் தூய மனம் படைத்த மாண்புமிகு தமிழக முதல்வரவர்களுக்கு, தங்களின் ஈர இதயத்தால் எதிர்காலம் பெற்ற



2001 ஜனவரி 30] [திரு. குழந்தை தமிழரசன்]

ஊனமுற்ற பெண்ணாகிய உசைன் பானு வணக்கத்துடன் வரையும் நன்றி மடல். நான் தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், கெங்குவார்பட்டி-கல்லுப்பட்டி எனும் கிராமத்தில் ஓர் ஏழை விவசாயக் குடும்பத்தில் வீம். சம்சுதீன் என்பவரின் மகளாகப் பிறந்தவள். இளைய வயதில் போலியோ நோயால் பாதிக்கப்பட்டு, இரு கால்களிலும் நடக்கும் சக்தியை முற்றிலுமாக இழந்தவள். இரண்டு கால்களையும் இழந்து விட்டுத் தவிக்கின்ற நான் வாழ்க்கையின் மீதான நம்பிக்கையை மட்டும் இழக்காமல் இருந்தேன். என் பெற்றோர் தந்த ஊக்கத்தால் என் படிப்பில் அதிக ஆர்வத்தோடு படித்து என் சக்திக்கேற்ற வகையில் இடைநிலை ஆசிரியர் பயிற்சிப் படிப்பில் நான் தேர்ச்சி பெற்றேன். இடைநிலை ஆசிரியர் வேலைவாய்ப்புக்காகக் காத்திருந்த நான் என் நிலையைக் குறிப்பிட்டுத் தங்கள் முதலமைச்சர் அலுவலகத் தனிப் பிரிவுக்கு ஒரு மனுவை அனுப்பி வைத்தேன். விண்ணப்பித்த சில மாதங்களுக்கு இடையில் என் மனுவைக் கருணையோடு பரிசீலித்து எனக்கு உடனடியாக வேலைவாய்ப்பு வழங்கிய தங்கள் அரசின் அறிவிப்பு ஆணை கண்டு ஆனந்தமான அதிர்ச்சி கொண்டேன். உடல் ஊனமுற்ற எனக்கு சொந்த ஊரான கல்லுப்பட்டியிலேயே வேலை வாய்ப்பு அளித்த தங்களின் தீர்க்கமான பார்வையும் இனிய உள்ளமும் என்னை நெகிழ வைத்தன. தாங்கள் பல்லாண்டு வாழ்ந்து தங்களின் நல்லாட்சி தொடர வேண்டுமென்று உடல் ஊனமுற்றவர்களின் சார்பாகவும், சிறுபான்மை இனத்தவர்களின் சார்பாகவும் வேண்டி வணங்கி ஆண்டவனைத் துவா செய்கிறேன். என் நன்றி மலர்களைக் தங்களுக்கு இந்தக் கடிதத்தின் மூலம் சமர்ப்பிக்கிறேன்" என்று சொல்கிறார். ஊனமுற்ற பெண்களுக்குக்கூட நாட்டிலே வாழ்வைக் கொடுத்த தமிழக முதல்வர் அவர்களை, உயிரோடு நல்ல முறையிலே இருக்கிறவர்கள்கூட தமிழக அரசினுடைய முதல்வர் அவர்களுடைய நல்ல செயல்களைப் பாராட்ட மனம் இல்லை என்ற வேதனையை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 12.25*

நம்முடைய முதல்வரவர்கள்—quick decision and right decision என்று சொல்வார்கள், அதை எடுப்பதிலே மிக வல்லவர். அந்த முறையிலேதான் தமிழகத்திலே இருக்கின்ற எந்தத் திட்டமாக இருந்தாலும், உடனடியாக அந்தத் திட்டத்தினை சீர்தூக்கிப் பார்த்து முடிவு எடுத்து மக்களுக்கு வாழ்வளித்து வருகின்றார்கள்.

தமிழகத்தினுடைய பொருளாதாரம் கடந்த 4 ஆண்டு காலத்திலே மிகப் பெரிய அளவிலே முன்னேறியிருக்கிறது. இந்தியாவில் பொருளாதார வளர்ச்சி பெற்ற மிக முக்கிய மூன்று மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று என்ற பெருமையை நம்முடைய தமிழக முதல்வர், கலைஞர் அவர்களுடைய ஆட்சி கொண்டு வந்திருக்கிறது. 1998 ஆம் ஆண்டு நம்முடைய தமிழகத்தினுடைய பொருளாதார வளர்ச்சி என்பது 6.05 சதவிகிதமாகும். ஆனால், 2000-ல் இந்த உயர்வானது 7.04 சதவிகிதமாக உயர்ந்திருக்கிறது. அதேபோல 1995-96-ல், நம்முடைய தமிழ்நாட்டில் தனி நபர் வருமானம் 11,894 ரூபாயாக இருந்தது. ஆனால் இப்போது, 2000-ல் ரூ.18,786 ஆக உயர்ந்திருக்கிறது. எனவே முந்தைய ஆட்சியில் நலிந்து கிடந்த பொருளாதாரத்தை, மக்களுடைய வாழ்வைத் தூக்கி நிறுத்தி, ஊழலை சுத்தமாக ஒழித்து, நேர்மையாகவும், தூய்மையாகவும் நம்முடைய முதல்வரவர்கள் ஆட்சி செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே அன்று இதைக் கண்டித்தவர்கள் இன்று ஊழலோடு கை கோர்த்து நிற்பது என்ன நியாயம் என்பதை இந்த நாட்டு மக்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அதேபோல, 'உறவுக்குக் கை கொடுப்போம், உரிமைக்குக் குரல் கொடுப்போம்'. இது கழகத்தினுடைய கொள்கையிலே ஒன்று; கொள்கை முழக்கங்களிலே ஒன்று. நம்முடைய மாநிலத்தில் நிதிப் பிரச்சினை குறித்து இங்கே குறிப்பிட்டுப் பேசினார்கள். இந்தியாவினுடைய 11-வது நிதி ஆணையத்தினுடைய பரிந்துரைகள் நமக்கு குறிப்பாக, மாநிலங்களுக்கு சாதகமாக இல்லை. மொத்த வருவாயில் 40 சதவிகிதத்தை மாநிலங்களுக்குப் பிரித்துக் கொடுக்க வேண்டுமென்பது ஒவ்வொரு மாநிலத்தினுடைய கோரிக்கை. நம்முடைய மாநிலத்தினுடைய கோரிக்கையும் ஆகும். ஆனால் நிதி ஆணையம் 29.5 சதவிகிதம்தான் பிரித்துக் கொடுப்போம் என்று அறிவித்தது. அதனால் நமக்கு இந்த 2000 ஆண்டிலிருந்து எதிர்காலத்தில் 5 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் இழப்பு ஏற்படுகிறது. இதைப் போக்குவதற்காக நம்முடைய முதல்வரவர்களும் மற்றைய மாநில முதல்வர்களும் மாண்புமிகு பிரதமர் திரு. வாஜ்பாய் அவர்களுக்கு, 40 சதவிகிதம் பிரித்துக் கொடுக்க வேண்டுமென்ற அளவில் ஒரு கோரிக்கையை வைத்திருக்கின்றார்கள். அந்தக் கோரிக்கையின் அடிப்படையில் 40 சதவிகிதத்தை மாநிலங்களுக்கு பிரித்துக் கொடுக்க வேண்டுமென்று நானும் இந்த நேரத்திலே வலியுறுத்த விரும்புகிறேன்.

அடுத்து உள்ளாட்சி மன்றங்கள். உள்ளாட்சி மன்றங்களுக்கு ஒவ்வோர் ஆண்டும் அதிக நிதி ஒதுக்கப்படுகிறது. உள்ளாட்சி



மன்றங்களுக்கு அதிக நிதி ஒதுக்கப்படுகின்ற காரணத்தினால்தான் தமிழகத்திலே கிராமங்கள்தோறும் பளிச்சிடுகின்ற சாலைகள், எரிகின்ற விளக்குகள், குடிக்கின்ற நீர் வழங்கப்பட்டு வருகிறது. 1995-96-இல் 787 கோடி ரூபாய் உள்ளாட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட்டது. ஆனால் 2001-ல் 2,401 கோடி ரூபாய் உள்ளாட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதன் மூலம் கிராமப்புற மக்கள் மிக நல்ல முறையிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது மாண்புமிகு முதல்வர் தலைவர் அவர்களுடைய நல்ல ஆட்சியில், மகளிருக்கான திட்டங்கள் பெருமளவில் தீட்டப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 'வாழ்ந்து காட்டுவோம்' என்கிற திட்டம் அருமையான திட்டம். மகளிர் சுய உதவிக் குழுக்கள் மிகச் சிறப்பாகத் தமிழகத்திலே இடம் பெற்று இயங்கி வருகின்றன. என்னுடைய தொகுதியைச் சேர்ந்த கம்மாபுரம் ஒன்றியத்தில் 300 குழுக்கள் மிகச் சிறப்பாக ஓர் ஒன்றியத்திலே இயங்கி வருகின்றன. நான் அவர்கள் அழைக்கின்ற அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் சென்று வருகிறேன். அவர்கள் சிறந்த சேமிப்பை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அதேபோல் கடன் கொடுக்கின்ற அந்தப் பாங்கினையும் வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழகத்தில் ஏறத்தாழ 59,000 சுய உதவிக் குழுக்கள் இயங்கி வருகின்றன. அதிலே 131 கோடி ரூபாய் வங்கியின் மூலம் கடன் பெற்ற, அந்த மகளிர் சுய உதவிக் குழுக்கள் மிகச் சிறப்பாக இயங்கி வருகின்றன. இப்படி மகளிருக்கு, இப்போது மிகச் சிறந்த திட்டத்தை நம்முடைய முதல்வரவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

அடுத்து Gas இணைப்பு வழங்குகின்ற திட்டம். இது ஒரு மிக அருமையான திட்டம். Gas இணைப்பு ஒவ்வொரு ஏழைக் குடும்பத்திற்கும் வழங்கப்பட நம்முடைய முதல்வரவர்கள் உத்தரவு வழங்கியிருக்கிறார்கள். 3,800 ரூபாய் செலவில் ஒரு வீட்டிற்கு இரண்டு சிலிண்டருடன் கூடிய ஒரு Gas இணைப்பு இப்போது வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் வழங்கப்படுகிறது. அந்த 3,800 ரூபாயை 30 மாதத் தவணைகளில் மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் பெறுகின்ற கடனுக்குத் திருப்பிச் செலுத்தினால் போதும். முன்பு, ஒரு வீட்டிற்கு Gas வாங்க வேண்டுமென்றால் நாம் ஒரு எம்.பியைப் பார்த்து, அண்ணே ஒரு கூப்பன் கொடுங்கள், Gas வேண்டுமென்று கேட்க வேண்டிய நிலைமை இருந்தது. இப்போது கலைஞர் ஆட்சியில், அம்மா, வாங்கம்மா, ஒரு Gas எடுத்துக் கொண்டு போங்கம்மா என்று சொல்லக்கூடிய ஒரு மிகப் பெரிய நிலைமையை, ஒரு புரட்சியை

[திரு. குழந்தை தமிழரசன்] [2001 ஜனவரி 30

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள். நான் இந்த நேரத்திலே கேட்க விரும்புகிறேன். ஒரு மாவட்டத்திற்கு ஒரு இலட்சம் Gas இணைப்புகளை நம்முடைய தமிழக அரசாங்கம் வழங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழிவகை செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் வலியுறுத்திக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-30*

இப்போது தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கிறது. எல்லோரும் தேர்தலை வைத்துத்தான் இப்போதெல்லாம் பேசிக் கொண்டிருக்கிறார்கள். நாம் கிராமத்திற்குப் போகின்ற நேரத்திலே அங்கே போய் நாம் நின்று கொண்டு பேசுவோம். பொதுவாகவே எதிர்க்கட்சிக்காரர்களிடம் சென்று கேட்டால் இந்த அரசாங்கம் என்ன செய்தது? எனவே எனக்கு வாக்களியுங்கள் என்று கேட்பார்கள். நான் சொல்ல விரும்புகிறேன், எதிர்க்கட்சிக்காரர்களாக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும் சரி, கலைஞர் அவர்கள் கிராமங்களிலே போட்டு இருக்கிற சிமெண்ட் சாலையில் நின்று கொண்டு, தலைவர் கலைஞர் அவர்கள் ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்ற, அங்கே வைத்திருக்கின்ற Tank-லேயிருந்து தண்ணீரைப் பிடித்து குடித்துக் கொண்டு, அங்கே எரிகின்ற light வெளிச்சத்திற்குக் கீழே நின்றுதான் எந்தத் திட்டமாக இருந்தாலும், எந்த அரசியல் கட்சியாக இருந்தாலும் இந்த நாட்டிலே பேசக்கூடிய ஒரு நிலைமை உருவாகியிருக்கிறது. எனவே பொய் பேசினால், உண்மைக்கு மாறாகப் பேசினால் அதை எதிர்த்து மக்கள் பேசக்கூடிய நிலைமை தமிழகத்திலே இருக்கிறது. எனவே நல்லாட்சி நடத்துகின்ற முதல்வர் கலைஞர் அவர்கள் மீண்டும் முதல்வராக வருவார்கள். நான் ஒரு கவிதை வரியை குறிப்பிட்டுச் சொன்னேன்.

'ஐந்து விரலை நீ விரித்தாய்
அது உதயசூரியனாக மாறியது,
ஐந்து விரலை நீ விரித்தாய்
அது உதயசூரியனாக மாறியது!
நீ ஐந்தாம் முறையும்
இந்தத் தமிழ்நாட்டை ஆள்வாய்'

என்று நான் பொங்கல் வாழ்த்தினை என்னுடைய தொகுதி மக்களுக்கு அனுப்பி வைத்தேன். நிச்சயமாக தமிழக முதல்வர் அவர்கள் மீண்டும்



2001 ஜனவரி 30] [திரு. குழந்தை தமிழரசன்]

ஐந்தாம் முறையாக தமிழகத்தினுடைய அரியணையை அலங்கரிப்பார்கள், மக்கள் அதற்கு வாக்களிப்பார்கள் என்று தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே முன்வைக்கப்பட்டிருக்கிற இடைக்கால நிதிநிலை அறிக்கையின் மீதும், அவற்றை இந்தப் பேரவைக்கு அளித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய பட்ஜெட் உரையின் மீதும் சிலபல கருத்துக்களை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்தப் பட்ஜெட்டிலே ஒன்றுமே இல்லை என்று சொல்ல முடியாது. பல விஷயங்கள் இருக்கின்றன. பல்வேறு வேலைகள் நடைபெற்று இருக்கின்றன; நடைபெற்ற வேலைகள் பட்டியலிடப்பட்டு இருக்கின்றன. இவையெல்லாம் ஓர் அரசு என்ற முறையில் இயல்பாக நடைபெற்று வருகின்ற இயல்பான காரியங்கள்தான். இயல்பான காரியங்களையே ஓர் இமாலயச் சாதனையாக நாம் வெளிப்படுத்த முடியாது. கங்கை-காவிரி நதி இணைப்பு ஏற்பட்டிருந்தால் அதுவொரு சாதனை; தென்னக நதிகள் இணைக்கப்பட்டிருந்தால் அதுவொரு சாதனை; மேற்கு நோக்கி ஓடுகிற ஆறுகள் திருப்பிவிடப்பட்டிருந்தால் அதுவொரு சாதனை; ஆனால் இங்கு சொல்லப்பட்டிருக்கிற பல்வேறு விஷயங்களும் எந்த ஓர் அரசும் இயல்பாக நடத்தி நிகழ்த்தி முடிக்கிற சில விஷயங்கள்தான் பட்டியலிடப்பட்டு இருக்கின்றன.

இந்த நேரத்திலே எனக்கு ஒரு பழமொழிதான் நினைவுக்கு வருகிறது. இந்த பட்ஜெட்டிலே நிறைய கொட்டு முழக்கு இருக்கிறது; இல்லை என்று நான் குறிப்பிடவில்லை. 'கோயில் சிறிது என்றாலும் கொட்டும் முழக்கு பெரிது' என்ற வழக்குச் சொல் ஒன்று உண்டு. அதுபோல இங்கே நிகழ்த்தப்பட்டிருக்கிற சாதனைகள் இயல்பானதுதான்; எந்தவொரு அரசும் இயல்பாக நிறைவேற்றுகிற ஒரு விஷயம்தான். ஆனால் அவற்றை சாதனை என்று பட்டியலிடுவது என்பது கோயிலைச் சிறியதாகக் கட்டி வைத்துக் கொண்டு, கொட்டு முழக்கை பெரிதாகப் போடுவதற்கு ஒப்பாகவே இருக்கிறது என்பதைத்தான் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, மதுரையிலே பெரிய கோயில்; பழனியிலே மிகப் பெரிய கோயில்; இராமேஸ்வரத்திலே மிகப் பெரிய கோயில்; ஆனால் சபரிமலையில் இருப்பது மிகச் சிறிய கோயில்தான். அதற்குத்தான் தமிழ்நாட்டிலிருந்துகூட மக்கள் போய்க் கொண்டிருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, என்னுடைய கருத்து நடைபெற்று இருக்கிற பணிகள் ஓர் அரசு என்ற முறையில் நடத்தி வருகின்ற காரியங்களையொட்டி சொல்ல விரும்புகிறேன். அடுத்து பல்வேறு விஷயங்கள் இங்கே சொல்லப்பட்டு இருக்கின்றன. தந்தை பெரியாரின் சமுதாயக் கண்ணோட்டம், மத நல்லிணக்கம், மனித நேயம் போற்றுதல் பற்றிய விஷயங்கள் எல்லாம் சொல்லப்பட்டிருக்கின்றன. அதில் எனக்கும் மாறுபட்ட கருத்து இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மதச்சார்பற்ற நெறியைப் பின்பற்றுகிறவர் என்பதில் நான் எள்ளளவும் மாறுபாடு கொள்ளவில்லை. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் ஆளுகிற கட்சி என்ற முறையில் அது இப்போது எடுத்திருக்கிற அரசியல் நிலை, தமிழ்நாட்டின் நலன்களைப் பாதிக்கிறது என்பதை வேதனையோடு குறிப்பிட விரும்புகிறேன். அது நிர்பந்தத்தாலா அல்லது அரசியலின் நிகழ்ச்சிப் போக்கில் தவிர்க்க முடியாத விளைவுகளாலா என்ற விவரங்களுக்குள்ளே நான் போக விரும்பவில்லை. ஆனால்...

*பிற்பகல் 12-35*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, எந்த முடிவை திராவிட முன்னேற்றக் கழகம் எடுத்தாலும் அதனுடைய விளைவாக தமிழ்நாட்டு மக்களுக்கு நன்மை ஏற்படும் என்ற அந்த அடிப்படையிலேதான் எடுக்கப்பட்டிருக்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)* எல்லாவற்றையும்விட அந்த முடிவு எடுத்து இந்த இடத்தில் இருக்கிறோம். இந்த இடத்தில் நாங்கள் இல்லாவிட்டால் என்ன ஆகியிருக்கும் என்பதை சுப்பராயன் அவர்கள் நிச்சயமாக உணர்வார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் தொடக்கத்திலேயே குறிப்பிட்டேன். மிகுந்த எச்சரிக்கையோடுதான் சொல்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மதச்சார்பற்றத் தன்மையின்மீது நான் வேறுபாடு



கொள்ளவேயில்லை. ஆனால் என்ன காரணத்தாலோ, கொள்ளப்பட்ட அரசியல் உறவில் பல்வேறு காரணங்களால் இப்போதும் Babri Masjid இடிக்கப்பட்ட அதே இடத்தில் நீதிமன்றம் தடுத்தாலும், அரசு தடையாணை போட்டாலும் நாங்கள் கோயிலைக் கட்டியே தீருவோம் என்ற அந்தப் பிரகடனம் தமிழ்நாட்டின் சமூக வாழ்வில் ஒரு எதிர்மறையான விளைவை ஏற்படுத்தாதா என்பதுதான் என்னுடைய கேள்வி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, அப்படி கோயில் கட்டுகின்ற முயற்சியை யார் எடுத்தாலும் அதை B.J.P. அரசு ஆதரிக்கவில்லை. அதை பகிரங்கமாகவே அறிவித்திருக்கிறது. பிரதமர் வாஜ்பாய் பகிரங்கமாகவே அறிவித்திருக்கிறார். நான் இப்பொழுதும் சொல்கிறேன். யார் எடுத்தாலும் திராவிட முன்னேற்றக் கழகம் அதை வேடிக்கை பார்த்துக்கொண்டு இருக்காது என்பதை மீண்டும் ஒருமுறை சொல்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மகிழ்ச்சி. ஆனால் இந்தியாவின் தலைமைப் பொறுப்பை ஏற்றிருக்கிற, நல்லவர்போல் சொல்லப்படுகிற பெருமதிப்பிற்குரிய பிரதமர் வாஜ்பாய் அவர்கள் இந்த விஷயத்தில் இன்றைக்கு வரைக்கும் கண்டனம் தெரிவிக்கவில்லை. நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து, தடையாணை போட்டாலும் நாங்கள் நிச்சயமாக அந்தக் கோயிலைக் கட்டுவோம் என்று சொல்லியிருப்பதை அனுமதிக்கமாட்டோம், என்ன விலை கொடுத்தும் தடுப்போம் என்று அவர் கருத்து வெளியிடவேயில்லை என்பது சங்பரிவாரின் மூலம் B.J.P. தன்னுடைய தீய செயல்களை அரங்கேற்றத் தொடங்கியிருக்கிற அபாய அடையாளம்தான் என்பதை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். அடுத்து நான் தெரிவிக்க விரும்புவது..

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு போவைத் துணைத் தலைவர் அவர்களே, B.J.P. மட்டுமல்ல, தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருக்கிற அத்தனை பேரும் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். நீதிமன்றத்தின் தீர்ப்பை ஏற்போம் என்று தெளிவாகப் பேசியிருக்கிறார்கள் என்பது மட்டுமல்ல, அட்டல் பிஹாரி வாஜ்பாய் அவர்கள் இதற்கு ஒரு முடிவை நீதிமன்றத்தின் மூலமோ அல்லது இரு

சமுதாய மக்களையும் வைத்து பேசித்தான் தீர்ப்போமே தவிர, மற்றபடி எந்தச் செயலுக்கும் இந்த அரசு ஒத்துழைக்காது என்று தெளிவாகக் கூறியுள்ளார்.

**திரு. கே. சுப்பராயன்:** ஆனால் அம்மணச் சாமியார்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், கோயிலைக் கட்டியே தீருவோம் என்று அவர்கள் அதர்மசபை என்கிற சபையைக் கூட்டி...

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** அம்மண சாமியார்கள் ஏற்றுக்கொள்ளவில்லை; ஒரு காலத்திலே அம்மணி சாமியார் ஏற்றுக் கொண்டிருக்கிறார். (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. கே. சுப்பராயன்:** அவர் திருச்சியிலே பேசுகிறபோது, நான் அப்படிச் செய்யவில்லை என்று மறுத்துவிட்டார் என்பதையும் நினைவுபடுத்த விரும்புகிறேன். (சிரிப்பு)

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** நான் யாரைக் குறிப்பிட்டேன் என்பதை சுப்பராயன் சரியாகப் புரிந்துகொண்டதற்காக மகிழ்ச்சியடைகிறேன். (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. கே. சுப்பராயன்:** நீங்கள் சொல்கிற ஒவ்வொன்றையும் நான் மிகச் சரியாகவே புரிந்துகொள்வேன் என்பதால்தான் இதை நான் பிரதிபலித்தேன்.

அடுத்து நான் இங்கே குறிப்பிட விரும்புவது, B.J.P.-க்குள்ளே போனால், வேலாயுதன் தேவையில்லாமல் புகுந்துவிடுவார். அதனால் இப்பொழுது நான் என்னுடைய நேரத்தை வீணாக்க விரும்பவில்லை என்பதால் அதற்குள்ளே இப்போது போக விரும்பவில்லை. அடுத்து ஒரு முக்கியமான விஷயம். பொருளாதார வளர்ச்சி பற்றி இந்த பட்ஜெட் பேசுகிறது. எப்பொழுதுமே ஒரு பட்ஜெட் போடுவது அந்த மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு உரிய சில வழிமுறைகள் அதில் வெளிப்பட வேண்டும் என்பதற்குத்தான். ஆனால் இந்த பட்ஜெட்டில் நான் இங்கே குறிப்பிட்டுக் காட்ட விரும்புவது, தமிழ்நாட்டில் தொழிற்சாலைகளை எடுத்துக்கொண்டோமானால், 354 பஞ்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. சிறுதொழில், குறுந்தொழில் மூடப்பட்டு வருகின்றன. இவற்றுக்கான காரணங்கள், மத்திய அரசு பின்பற்றுகிற பொருளாதாரக் கொள்கை என்பதை...



**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** 354 பஞ்சாலைகள் முடிப்பட்டிருக்கின்றன என்று சொல்கிறார். எப்பொழுது மூடப்பட்டது? எந்தெந்த ஆலைகள் என்று உறுப்பினர் அவர்கள் தெரிவித்தால் மிக நலமாக இருக்கும். ஏனென்றால், சிலபேர் பொத்தாம் பொதுவாக 300 ஆலைகள், 350 ஆலைகள் என்று ஏதோ இந்த ஆட்சியிலே மூடப்பட்டதைப் போல சொல்லிக் கொண்டிருப்பது தவறான வாதமாகும். அவ்வாறு ஆலைகள் மூடப்பட்டிருக்குமானால், அந்த 354 ஆலைகளைப் பட்டியலிட்டுக் கொடுத்தார்கள் என்று சொன்னால், இந்தக் காலத்திலே மூடப்பட்டிருக்கின்றனவா என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு விளக்க முடியும்.

பிற்பகல் 12-40

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மூடப்பட்டது என்று நான் சொல்லவில்லை. பொதுவாக மூடப்பட்டுள்ளது. மூடப்பட்டிருக்கிற தொழிற்சாலைகள் திறக்கப்பட்டால்தானே பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்கும். நான் ஏன் குறிப்பிட விரும்புகிறேன் என்றால் நான் அந்த இடத்திலே இல்லை. எந்தச் சிக்கலான பிரச்சினைக்கும் மிக எளிதில் தீர்வளிக்கின்ற வல்லமை உண்டு என்ற நம்பிக்கையோடுதான் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மக்கள் வாக்களித்தார்கள். எனவே, தமிழ்நாட்டில் மூடப்பட்டிருக்கின்ற தொழிற்சாலைகளையும் சரி, மூடுகின்ற நிலையிலுள்ள தொழிற்சாலைகளையும் சரி திறந்து வேலைவாய்ப்பை அளிக்கின்ற வாய்ப்பை ஏற்படுத்துகிறபோதுதான் தமிழ்நாட்டில் பொருளாதார வளர்ச்சியும் மலர்ச்சியும் ஏற்படுகிற நம்பிக்கை மக்களுக்கு இருக்கும். அந்த நம்பிக்கைக்கு அவநம்பிக்கையை ஏற்படுத்திவிட்டீர்களே என்பதற்காகச் சொல்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த நம்பிக்கை இருந்த காரணத்தினாலேதான் மூடப்பட்ட ஆலைகளிலே பணியாற்றியவர்களுக்குக்கூட மாதம் 250 ரூபாய் கொடுக்கின்ற ஒரே அரசு தமிழகத்தினுடைய கலைஞர் அவர்களுடைய அரசு. அது மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

**திரு. கே. சுப்பராயன்:** ஒரே அரசு அல்ல. மேற்கு வங்க அரசு 500 ரூபாய் கொடுத்திருக்கிறது. அதைத் தொடர்ந்து நான் வேண்டுகோள் விட்ட அடிப்படையிலேதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்

செய்திருக்கின்றார்கள். அதை நான் பாராட்டுகின்றேன். மறுக்கவே இல்லை. இத்தகைய பிரச்சினைகள் இருக்கின்றன. இவற்றிற்கு இந்த பட்ஜெட் தீர்வளிக்கவில்லை என்பதைத்தான் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல விவசாயிகள் பிரச்சினையிலும் பிரச்சினை இருக்கிறது. விவசாயிகள் பிரச்சினைக்கு தற்போது தீர்வளிப்பதற்குரிய பொருளாதார நிலை வாய்ப்பு அளிக்கிறதா என்கிற விவரங்களுக்குள் இப்போது போவது என்னுடைய வேலையல்ல. நான் எதிர்தரப்பிலே இருக்கிறேன். எனவே, ஆளுகின்ற தரப்பின் நடவடிக்கைகளில் இருக்கின்ற பலவீனங்களைச் சுட்டிக்காட்டுவது என்னுடைய duty என்ற முறையில் நான் அதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த பட்ஜெட் வேறு சில விஷயங்களைச் சொல்லியிருக்கிறது. ஆனால் வெறும் சிறிய சலுகைகள் தீர்வு அளிக்காது. நெருக்கடி புரையோடிக் கிடக்கிறது விவசாயிகளுடைய வாழ்க்கையில். ஏனென்றால் அவர்களுடைய விளைபொருள்களுக்கு விலையில்லை. இடுபொருள் விலை அதிகம். இரட்டைத் தாக்குதல்களுக்கிடையே அவர்கள் திணறுகிறார்கள். இந்தத் திணறலிலிருந்து மீட்டால்தான் பொருளாதார வளர்ச்சி என்ற சொல்லுக்குப் பொருள் இருக்கும். ஆனால் மீட்பதிலே இந்த பட்ஜெட் பயனுள்ள பங்களிப்பைச் செலுத்தவில்லை என்பதைத்தான் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். கடனை இரத்து செய்ய வேண்டாம். கடனுக்குரிய வட்டி முழுவதையும் இரத்து செய்தால்தான் அந்தப் பிரச்சினைக்கு தீர்வு வரும் என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து நான் இங்கே குறிப்பிட விரும்புவது, தமிழகத்தின் நகர்ப்புற வளர்ச்சி பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு மிக முக்கியமான பிரச்சினை அது. நகர்ப்புற வளர்ச்சியை இந்த மாநில அரசு ஏன் கவனிக்கவில்லை என்று எனக்கு தெரியவில்லை. நான் இந்தப் பேரவையில் தொடர்ந்து நான்கு ஆண்டுகளாகப் பேசி வருகின்றேன். நகர்ப்புறத்தின் பிரதான பிரச்சினை Un-approved Lay-out-ல் குடியிருக்கின்ற பொதுமக்கள் பிரச்சினைதான். Un-approved Lay-out-ல் குடியிருக்கிற பொதுமக்களுக்கு சாக்கடையில்லை, சாலையில்லை, விளக்கு இல்லை, அடிப்படைத் தேவை செய்யப்படவில்லை. உள்ளாட்சி அமைப்புக்கள் செய்ய மறுக்கின்றன. எப்படியோ Un-approved Lay-out உருவாகிவிட்டது. அங்கே இருக்கின்றவர்கள்—இப்போது தேர்தலில்



நாளைக்கு, எந்தக் கட்சி போனாலும், ஆளுகின்ற கட்சியா, எதிர்க்கட்சியா என்பதே அல்ல—சாக்கடை இல்லையென்றவுடன் நீங்கள்தானே இருந்தீர்கள் என்ன ஆயிற்று என்று அந்த மக்கள் கேட்டால் என்ன பதில் சொல்ல முடியும்? அதிகாரிகள் வெறும் வெற்றுப் பேப்பர்களுக்குள் ஓர் ஆணையைப் பிறப்பிக்கின்ற அந்தக் கூட்டுப்புழுவாகவே நிர்வாகம் நடத்துகிற அந்த அதிகாரிகள் நம்மை வழி நடத்தக்கூடாது. நான் திரும்பச் சொல்கிறேன். திரும்பத் திரும்பச் சொல்கிறேன். இந்த நகர்ப்புற வளர்ச்சி நிலைக்க வேண்டுமானால் செய்ய வேண்டிய உடனடி வேலை ஒரு Special G.O. போட்டு Un-approved Lay-outs முழுவதையும் அங்கீகரிக்க வேண்டும். இனிமேல் Un-approved Lay-outs உருவாகாதவாறு குறிப்பிட்ட கால வாய்ப்பைக் கொடுத்து சட்டத் திருத்தம் கொண்டுவர வேண்டுமென்ற வேண்டுகோளை நான் வைத்தேன். நடைமுறையில் என்னவென்றால் தலை வலிக்கு தீர்வு கேட்டால் திருகு வலியை ஏற்படுத்திவிட்டார்கள். ஒரு பிரச்சினைக்கு தீர்வு கேட்டால் பிரச்சினையின் நெருக்கடியை ஆழப்படுத்திவிட்டு அரசாணை வெளி வந்ததே தவிர, பிரச்சினைக்குத் தீர்வு தருவதற்கு அந்த அரசாணை தயாராக இல்லை என்பது நடைமுறை அனுபவம் உணர்த்துகிற பாடம். எனவே நான் அனைத்து எம்.எல்.ஏ.க்கள் சார்பாகக் கேட்டுக்கொள்ள விரும்புவது, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு ஸ்பெஷல் ஆணையை பிறப்பித்து தமிழ்நாட்டில் Un-approved Lay-out-ஐ Approve பண்ணுங்கள். Approve செய்துவிட்டால் முனிசிபாலிட்டி, பேரூராட்சி, உள்ளாட்சி அமைப்புகள் அந்த இடத்தில் அவர்களின் நிதியைச் செலவழிக்க சட்ட ரீதியான வாய்ப்பு கிடைக்கும். இல்லையென்றால் வாய்ப்பு கிடைக்காது. பிரச்சினை வந்துவிடும் என்பதை அதனுடைய முக்கியத்துவம் கருதி நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். மிகுந்த serious பிரச்சினை என்பதால் அவற்றின் seriousness-ஐ உணர்ந்து இந்த ஆட்சி உரிய ஆணையைப் பிறப்பிக்க வேண்டுமென்று நான் வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** *துணைத் தலைவர் அவர்களே, நீண்ட காலமாக மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் இந்த கருத்தைச் சொல்லி வருகின்றார்கள். ஏனைய உறுப்பினர்களும், பலரும் என்னைச் சந்தித்தும், இந்த அவையிலும் இந்தக் கருத்தைச் சொல்லி இருக்கின்றார்கள். ஒரு Special Order போடுவதைப் பற்றி அரசு பரிசீலிக்கும் என்பதை மாத்திரம் சொல்கின்றேன். எப்படிப்பட்ட Order என்பது பற்றியெல்லாம் இப்போது நான் commit செய்துகொள்ள*

விரும்பவில்லை. Special Order எப்படிப் போடலாம் என்பதைப் பற்றி அரசு பரிசீலித்து சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-45

**திரு. கே. சுப்பராயன்:** நன்றியையும், மகிழ்ச்சியையும் தெரிவிக்கிறேன். அடுத்து இங்கே நான் குறிப்பிட விரும்புவது இது ஒரு நல்ல தீர்வாக அமையும்; அந்தத் தீர்வை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் தெரிவித்து இருக்கிறார்கள்; அதுபற்றி பரிசீலிக்கப்படும் என்று. ஒரே ஒரு எச்சரிக்கையை நான் உரிமையோடு வெளியிட விரும்புகிறேன். அதிகாரிகளின் மூளை, நம்முடைய மூளையைக் காட்டிலும் வலிமை நிறைந்தது. அவர்கள் நம்முடைய அரசியல் முடிவுகளை அவ்வளவு எளிதில் வெற்றி பெற விட்டுவிடமாட்டார்கள். எனவே இந்த அரசியல் முடிவை எப்படி puncture செய்வது என்பதை மட்டுமே சிந்தித்துப் பழகிய அதிகாரிகள், இது முழு வெற்றி அடையாமல் வழி காட்டிவிடுவார்கள்; நீங்கள் வழி நடக்கமாட்டீர்கள்; ஆனால் அவர்கள் வழி நடத்த முற்படுவார்கள் என்பதை மட்டும் நான் எச்சரிக்க விரும்புகிறேன்.

அடுத்து நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புவது மிக முக்கியமான பிரச்சினை. இந்த மாநிலத்தினுடைய வருமானம் குறைந்துவிட்டது என்பதை மிகுந்த வேதனையோடு முதலமைச்சர் தெரிவித்து இருக்கிறார். அந்த வேதனையில் என்னுடைய வேதனையையும் நான் கலந்துகொள்கிறேன். மாநில நலன்களை B.J.P. தலைமையில் உள்ள ஆட்சி எப்படிப் பறிக்கும் என்பதை இது நிரூபித்து இருக்கிறது. இந்த B.J.P. ஆட்சி சாதாரண ஆட்சி அல்ல. இந்த B.J.P. ஆட்சி அரசியல் நலன்களை, பொருளாதார நலன்களை... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் தெளிவாகச் சொல்லி இருக்கின்றார். நலிந்த மாநிலங்களுக்கு அதிக நிதி உதவி கொடுக்கப்பட்டதால், வளர்ந்த மாநிலங்களுக்கு குறைந்து இருக்கிறது என்று தெளிவாகவே சொல்லி இருக்கின்றார். ஆக நலிந்த பிள்ளையை மேலே கொண்டுவர



வேண்டுமென்ற நோக்கத்தில்தான் செய்யப்பட்டதே தவிர, எந்த மாநிலத்தையும் குறைவாக மதிப்பிடவில்லை; அல்லது மோசப்படுத்த வேண்டுமென்ற உணர்வோடு செய்யப்படவில்லை. நலிந்த குழந்தைகளை மேலே கொண்டுவர வேண்டும்; அதற்காகச் செய்யப்பட்டு இருக்கின்றது.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய வேலாயுதன் அவர்களை ஓட்டப் பந்தயத்திற்கு நடுவராக வைத்தால், முதலில் ஓடியவர்களுக்கு திருவோட்டையும், கடைசியில் வந்தவர்களுக்கு Gold Medal-ஐயும் கொடுத்துவிடுவார். நல்ல சிறப்பாகச் செயல்பட்ட மாநிலங்களுக்கு திருவோடு; சிறப்பாக செயல்பட்ட மாநிலங்களுக்கு நாமக்கட்டி; பொதுவாக நாமத்தைத்தான் எப்போதும் போட்டுக் கொண்டிருப்பார்கள். நாங்கள், வருகிறபோதே சொன்னோம்; இந்த நாட்டை நாமக்கட்டி ஆள வந்துவிட்டது உஷார், உஷார் என்று. அது நிரூபிக்கப்பட்டு விட்டதா, இல்லையா? இப்போது என்ன நடந்து இருக்கிறது? தமிழ்நாட்டின் நலன்களை வாஜ்பாய் பறித்து விட்டார். அதைத் தடுப்பாரா வேலாயுதன்? வேலாயுதன் நல்லவர்தான்; ஆனால், வல்லவர் அல்ல; அவரால் முடியாது. ஆகவே அதை நான் விரிவாகச் சொல்ல விரும்பவில்லை.

அப்படி ஒரு நெருக்கடி இருக்கிறது. கடும் தண்டனை கொடுத்து இருப்பதாக, நிதானத்தோடு வார்த்தையைப் போடுகிற முதலமைச்சர், கடும் தண்டனை அளித்து இருப்பதாகப் போட்டு இருக்கிறார். இதைப் படித்ததற்குப் பின்னராவது, 11-வது நிதி ஆணையத்தினுடைய முடிவை மாற்றி, மாநிலங்களின் நலன்களை அவர்கள் காக்க வேண்டும். நான் இங்கே தெரிவிக்க விரும்புவது... ...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** துணைத் தலைவர் அவர்களே, 11-வது நிதி ஆணையம் என்பது அரசு அல்ல; அது தனி அமைப்பு. நிதி ஆணையத்தினுடைய முடிவுதான் இது. இந்த முடிவு சரியல்ல என்பதை நம்முடைய மாநிலத்தின் சார்பிலும், வேறு பாதிக்கப்பட்ட மாநிலங்களின் சார்பிலும் பிரதமருக்கு எடுத்துரைத்து இருக்கிறோம். அதைப்போலவே நிதி அமைச்சருக்கும் எடுத்துரைத்து இருக்கிறோம்.

ஊக்க நிதி என்கின்ற அளவிலே ஒன்றை நாங்கள் ஏற்படுத்தித் தருகிறோம்; நிதி ஆணையத்தின் முடிவு ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட காரணத்தால் அதற்கு மாற்றாக, ஊக்க நிதி தருவதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறோம் என்று உறுதி அளித்து இருக்கின்றார்கள். அந்த ஊக்க நிதிகூட அண்மையிலே அறிவிக்கப்பட்டு, அதுவும் நமக்கு குறைவாகத்தான் கிடைத்து இருக்கிறது. அது போதாது என்று மறுபடியும் நாம் அவர்களை வலியுறுத்தி இருக்கிறோம்.

**திரு. கே. சுப்பராயன்:** மெத்த சரி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உரையை முடித்துவிடுகிறேன்; மிக விரைவில் முடித்து விடுகிறேன். ஆனால் இதில் விஷயம் என்னவென்றால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது, அரசு அல்ல, இதை 11-வது நிதி ஆணையம் செய்து இருக்கிறது என்று. ஆனால், சாம்பாருக்குள் உப்பு தெரியவில்லை. அந்தமாதிரி நிதி ஆணையத்தினுடைய முடிவுகளில் சாம்பாருக்குள் உப்பு மறைந்து இருப்பதுபோல, மத்திய நிதி மந்திரியினுடைய செல்வாக்கு மறைந்து இருக்கிறது என்பதைத்தான் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். மத்திய நிதி அமைச்சருடைய செல்வாக்கு நமக்கு பாதகமாக அமைந்து இருக்கிறது. தோற்றத்தில் அது எந்தவிதமான அரசியலற்ற ஓர் அமைப்பு போலத் தோன்றினாலும்கூட, உள்ளடக்கத்தில் மத்திய power-ல் இருப்பவருடைய செல்வாக்கு செலுத்தப்பட்டு இருக்கிறது என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். இது குறித்து விவரமான விவாதத்திற்குள் நான் போக விரும்பவில்லை.

அடுத்து இரண்டொரு பிரச்சினைகளை மட்டும் கோரிக்கைகளாகச் சொல்லி நான் முடித்துக்கொள்ள விரும்புகிறேன். இங்கே உள்ளாட்சிகளுக்கு அதிகமாக ஒதுக்கப்பட்டு இருப்பதைப்பற்றி எல்லாம் சொன்னார்கள். ஆனால் கலைஞருடைய கூர்மையான புத்திசாலித்தனம் இந்த இடைக்கால நிதிநிலை அறிக்கையில் வெளிப்பட்டு இருக்கிறது என்பதை நான் மறுக்கவில்லை. 5 ஆண்டுகளுக்கு முன்னர் எவ்வளவு ஒதுக்கப்பட்டது; இப்போது எவ்வளவு ஒதுக்கப்பட்டது என்று சொல்கிறபோது, திடீரென்று படித்தவுடன், அவ்வளவுக்கு இவ்வளவு ஒதுக்கி இருக்கிறபோது, மிக உயர்ந்த ஏற்றம் தெரிகிறது. ஆனால், 5 ஆண்டுகளில் பணத்தின் நிஜ மதிப்பு கரைந்துவிட்டது; அழிந்துவிட்டது.



தேவைகள் அதிகரித்துவிட்டன. தேவைகள் அதிகரித்துவிட்ட நிலையில், பணத்தின் நிஜ மதிப்பு அழிந்துவிட்ட நிலையில், ஒதுக்கீடு என்பது தோற்றம் காட்டுகிறதே தவிர, இது ஒரு பலூன்; ஊசி வைத்தால் உடைந்துவிடும். எனவே, அது தேவைக்கு பொருத்தமானதல்ல என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த பட்ஜெட்டில் ஒரு பிரதான முரண்பாடு இருக்கிறது. மேலே 40% கேட்கிறார்கள். மொத்த வரி வருமானத்தில் மாநிலத்தின் பங்கு என்று கேட்கிறார்கள். வரவேற்கிறேன்; உண்மைதான். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் வலியுறுத்துகிறது. ஆனால் மாநிலத்திற்கான வருமானத்தை, 40% கேட்கிறபோது ஏன் நீங்கள் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதே போன்று மொத்த வரி வருமானத்தில் 40%-ஐ ஒதுக்க சிந்திக்கவில்லை என்பது எனக்குப் புரியவில்லை. இந்த முரண்பாட்டை என்னுடைய சிற்றறிவு புரிந்துகொள்ள இயலவில்லை. எனவே இந்தப் பிரச்சினையை எப்படிப் புரிந்துகொள்வது என்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் வழிகாட்ட வேண்டும். (குறுக்கீடுகள்) அந்தப் பேரறிவை நான் இன்னும் எட்டவில்லை என்பதால்தான் நான் அதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

பிற்பகல் 12-50

அடுத்து ஒரு விஷயம். கடைசியாக என்னுடைய தொகுதி சம்பந்தப்பட்ட விஷயத்தை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். நேரம் கடந்துவிட்ட காரணத்தால் திருப்பூரில்—மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியும். திருப்பூர் தொழில் நகரம். அந்தத் தொழில் நகரத்தில் சாக்கடை இல்லை, சாலை இல்லை. யாராவது அமைச்சரை—மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிலைத்த நலனுடன், நீடித்து வாழ வேண்டுமென்பதில் மிகுந்த அக்கறை கொண்டவன் என்கிற முறையில் தெரிவிப்பதால் அவரைத் தவிர வேறு யாராவது—உங்கள் பிரதிநிதியை அனுப்பிவையுங்கள். திருப்பூரில் எல்லா ரோடுகளிலும் ஒரு முறை போய் வந்து பார்த்தால் புரியும். ஒரு ஆட்டோவில் வைத்து கர்ப்பிணியை அனுப்பினால் 7 மாதத்திலேயே பிரசவமாகிவிடுகிற அளவிற்கு அந்த ரோடுகள் பாழ்பட்டுக் கிடக்கின்றன. ஒரு தொழில் நகரம், பனியன் வாங்குபவர்கள், வெளிநாட்டிலிருந்து வாங்குபவர்கள் வருகிற ஒரு நகரம். அந்த நகரத்தில் அடிப்படைத் தேவைகள் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டுள்ளன. அவற்றை நிறைவேற்றுவதற்கு போடப்பட்ட புதிய மேம்பாட்டுத் திட்டம்

5 ஆண்டுகள் ஆகியும் நிறைவேற்றப்படவே இல்லை. நான் இங்கே குறிப்பிட விரும்புவது கோழி முட்டை போடுகிறது. கோழி முட்டை போட்டவுடன் அடை காக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். அடை காத்தால் குஞ்சு பொரிக்க வேண்டுமா இல்லையா? 5 வருடமாக அடைகாத்தும் குஞ்சு பொரிக்கவில்லையே? குஞ்சு பொரிப்பதற்காகத்தானே அடை காப்பது. அடை காத்தும் குஞ்சு பொரிக்கவில்லையே என்கிற வேதனையால் தெரிவிக்க விரும்புகிறேன். 5 ஆண்டுகளாகியும் அந்தத் திட்டம் இன்னும் அங்கீகரிக்கப்படவில்லை. (மணியடிக்கப்பெற்றது) அவற்றை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, புதிய சார்பு நகரம் தொடங்கப்பட வேண்டும். அதைப்போல மத்திய அரசினுடைய புதிய திட்டத்தின் அடிப்படையில், நொய்யலை தூய்மைப்படுத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்பதை மட்டும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஒரேயொரு விஷயம். ஓய்வூதியம் குறித்து ஒரு பிரச்சினையைச் சொன்னார்கள். நான் இங்கே பேசவில்லையென்றால் என்னை விடவேமாட்டார்கள். தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தோடு இணைந்த தக்கைக்கல் தொழிற்சாலை ஊழியர்களின் ஓய்வூதியப் பிரச்சினை. அண்ணா காலத்தில் தொடங்கப்பட்ட ஒரு தொழிற்சாலை இது. இந்தத் தொழிற்சாலையில் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் முற்றிலும் மறுக்கப்படுகிறது. இது அநியாயம். அநியாயம் என்ற வார்த்தையை தெரிந்தே சொல்கிறேன். தயவுசெய்து தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தோடு இணைத்துக்கொள்ளப்பட்ட தக்கைக்கல் தொழிற்சாலை ஊழியர்களின் ஓய்வூதியக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டு நன்றி கூறி முடிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. செ. இராமலிங்கம்.

**திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வரவு-செலவுத் திட்ட அறிக்கையின்மீது என்னுடைய எண்ணங்களையும் இங்கே நான் பதிவு செய்ய விரும்புகிறேன். 'அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்' என்று ஒரு பழமொழி சொல்வார்கள். இந்த மாமன்றத்தில் பல உறுப்பினர்கள் இந்த அறிக்கையை முழுமையாகக் கேட்டு, பாராட்டியிருந்தாலும், சிலருக்கு இந்த அறிக்கையின்மீது ஏதோ ஒரு கசப்புணர்வு ஏற்பட்டிருக்கிறது.



வதந்திகளை மட்டுமே வைத்து வயிறு வளர்க்கும் கூட்டம் ஒன்று தமிழகத்தில் இருந்து கொண்டிருக்கின்றது. இந்நாட்டு மக்களுக்குத் தேவையானது வதந்தியா, நல்லதா என்பதையெல்லாம்கூட அவர்கள் ஆராய்ந்து பார்ப்பது கிடையாது. நேற்று மாலையில்கூட சென்னையில் ஒரு வதந்தி. திருப்பதி கோயிலில் தாயார் திருமாங்கல்யம் கீழே விழுந்ததாகவும் அதற்குப் பரிகாரம் என்று சொல்லி, தமிழ்நாட்டு தாய்மார்களையெல்லாம் முட்டாளாக்கியிருக்கிறார்கள்.

இந்த வரவு-செலவுத் திட்ட அறிக்கை என்பது ஓர் இடைக்கால வரவு-செலவுத் திட்ட அறிக்கையாகும். இது எந்த வகையில் அமைய வேண்டுமோ அந்த வரையறைகளுக்குட்பட்டு, மிகச்சிறப்பாகத் தயாரிக்கப்பட்டு, இந்த மாமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதை அரசியல் நாகரிகத்தோடு நாகரிகம் தெரிந்தவர்கள் எல்லாம் வரவேற்றிருக்கிறார்கள். இந்த மாமன்ற உறுப்பினர்கள் பலரும் பல்வேறு கருத்துக்களைச் சொல்லியிருந்தாலும், ஒரு ஜனநாயக நாட்டில் தேர்தல் நெருங்கும் நேரத்தில்கூட, எந்தவிதமான அரசியல் இலாபத்தோடும் இதை அணுகாமல் யாரும் குறை சொல்ல முடியாத அளவிற்கு ஒரு நடுநிலையான சிந்தனையோடு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இந்த வரவு-செலவுத் திட்ட அறிக்கையை இம்மாமன்றத்தில் சமர்ப்பித்து இருக்கிறார்கள்.

இங்கே பேசிய தோழர் சுப்பராயன் அவர்கள் சொன்னார்கள். இந்த நிதிநிலை அறிக்கையில் ஏதாவது கொள்கை முடிவுகளை அறிவிக்க முடியுமா என்பதை மட்டும் தயவுசெய்து அவர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். உதாரணத்திற்கு, இந்த நிதிநிலை அறிக்கையில், நாங்கள் 2 இலட்சம் படித்த இளைஞர்களுக்கு வேலை கொடுத்து அமர்த்தப் போகிறோம் என்று சொல்லியிருந்தால், அதுகூட அரசியலில் தேர்தல் நேரத்தில் செய்யப்படுகிற விளம்பரம் என்று சொல்லமாட்டார்களா? எனவே அரசியல் நாகரீகத்தோடு. ஓர் இடைக்கால வரவு-செலவுத் திட்டம் எந்த வரையறைகளுக்குட்பட்டு தயாரிக்க முடியுமோ அந்த வரையறைகளுக்குட்பட்டு இந்த வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் ஒன்றை மட்டும் நான் உறுதியாகக் கூறுவேன். 12-வது சட்டமன்றத்தின் மூலம் இங்கே நடைபெறக்கூடிய முதல் கூட்டத்தில் மீண்டும் 5-வது முறையாக மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான் (மேசையைத் தட்டும் ஒலி) இம்மாமன்றத்தில் பொறுப்பேற்கப் போகிறார்; மீண்டும் நீங்கள் மகிழ்கின்ற அளவுக்கு பல்வேறு

புரட்சிகரமான திட்டங்களை இம்மாமன்றத்தில் அறிவிப்பார் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12-55*

குஜராத் மாநிலத்தில் நில நடுக்கத்தினால் ஏற்பட்ட பேரழிவையொட்டி இன்றையதினம் நாமெல்லாம் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறோம். இருந்தாலும், அந்த மாநிலத்தில்கூட, இப்படிப்பட்ட பரிதாபகரமான நிலையிலும் சிலர் வீடு புகுந்து திருடுவதாக வரும் செய்திகளை நாம் படித்துக்கொண்டிருக்கிறோம். நான் இதைக் குறிப்பிட்டுச் சொல்வதற்குக் காரணம், இந்த இடைக்கால நிதிநிலை அறிக்கையின் மூலமாகக்கூட தமிழகத்தில் இருக்கின்ற ஏழையெளிய விவசாய மக்களுக்குப் பல்வேறு நல்ல சலுகைகளை மாண்புமிகு தமிழக முதல்வர் அறிவித்து இருந்தாலும் அவற்றை வரவேற்க முடியாதவர்கள் குறை சொல்லித் திரிந்துகொண்டிருக்கிறார்கள். தயவுசெய்து நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். கடந்த 5 ஆண்டுகளில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கைகள் மூலமாக இம்மாநிலத்தில் நிறைவேற்றப்பட்ட பணிகளை நீங்கள் தயவுசெய்து திரும்பிப் பார்க்க வேண்டுமென்று நான் உங்களைப் பணிவோடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

எந்தப் புதிய வரியும் போடாமல், ஏற்கெனவே இருந்த அரசு விதித்திருந்த சுமார் 500 கோடி ரூபாய் வரியையும் நீக்கம் செய்து கிஞ்சித்தும் சேதாரம் இன்றி மாநில வருவாயை முறைப்படுத்தி, திட்டமிட்டு செலவு செய்து சாதனை படைத்த நம்முடைய முதல்வரை இன்றையதினம் பொதுமக்கள் அனைவரும் மனதாரப் பாராட்டுகிறார்கள்.

உள்ளாட்சித் துறையை எடுத்துக்கொண்டால், கடந்த கால ஆட்சியில் தேர்தல் என்பதை நடத்தாமலேயே நீண்டகாலம் ஓட்டினார்கள். ஆனால் நம்முடைய ஆட்சி வந்ததற்குப் பிறகு உள்ளாட்சித் தேர்தல் உரிய காலத்தில் நடத்தப்பட்டது. உள்ளாட்சித் தேர்தல் நடத்தியதோடு மட்டுமின்றி, அதிகாரங்கள் தேவைக்கு மேல் வழங்கப்பட்டன. சுமார் 5000 கிலோ மீட்டர் கான்கிரீட் சாலைகள்; 25 ஆயிரம் கிலோமீட்டர் தார்ச்சாலைகள்; ஏழை கிராமப்புற மக்களுக்கு 2,91,551 கான்கிரீட் வீடுகள்; 27,274 ஊரகக் குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட மேல்நிலை நீர்த் தேக்கத்தொட்டி; 812 ஊராட்சி அலுவலகங்கள்; 8,258 நியாயவிலைக் கடைகள், 461 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள், இரவை



பகலாக்கும் சோடியம் ஆவி விளக்குகள்; எந்த கிராமத்தைப் பார்த்தாலும் ஏதாவது ஒரு பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நிலைமை; இவற்றைப் பார்க்கும்போது காந்தி கண்ட உண்மையான கிராம ராஜ்யத்தை நாம் இப்போதுதான் தமிழகத்தில் பார்க்க முடிகிறது.

அதுமட்டுமல்லாமல், இன்றையதினம் வேளாண்மை சிறக்க, சிறந்த பாசன வசதிகளை எல்லாம் இந்த ஆட்சி ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் ஏறத்தாழ 1,330 கோடி ரூபாய்க்கு பாசன வேலைகள் செய்யப்பட்டிருக்கின்றன. வடிகால் தூர் வாரும் பணிகள் ரூபாய் 121 கோடிக்கு நடைபெற்றிருக்கின்றன. வெள்ளக் காலங்களில்கூட சேதம் இல்லை என்று சொல்லக்கூடிய அளவுக்கு சிறப்பாக இந்த மராமத்துப் பணிகள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இவற்றை தயவுசெய்து நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அதேபோன்று மின்சாரத் தட்டுப்பாடு என்பது இன்று மட்டுமல்ல, எதிர்காலத்திலும் இருக்காது என்கின்ற உறுதியை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். வேளாண்மைக்கு இலவச மின்சாரம், தரமான விதைகள், இடுபொருட்கள் வழங்கியதால், அரசின் சிறந்த தொழில்நுட்பத்தோடு இன்றையதினம் தமிழகம் எண்ணெய் வித்து உற்பத்தியிலும், அரிசி, சோளம், கம்பு போன்ற தானியங்களின் உற்பத்தித் திறனிலும், இந்தியாவிலேயே முதலிடம் வகிக்கின்ற ஒரு நிலைமையை நம்மால் பார்க்க முடிகிறது. தரிசு நிலங்கள் எல்லாம் இன்று சாகுபடி நிலங்களாக மேம்படுத்தப்பட்டிருக்கின்றன. விளைந்த கரும்பை, காலத்தில் அறுவடை செய்ய முடியாத ஒரு காலம் இருந்தது. அந்த நிலை மாறி, இன்றையதினம் ஓராண்டு காலத்திற்குள் அறுவடை செய்வதற்கான உத்தரவு அனைத்து விவசாயிகளுக்கும் உரிய நேரத்தில் வழங்கப்படுகிறது. தமிழகம்தான் தொழில்களின் கூடாரம், தொழிலாளர்களின் சரணாலயம், தொழிற்சாலைகளிலே பணிபுரிவோர் மட்டுமின்றி கைவினைத் தொழிலாளர்கள், அமைப்பு சாராத் தொழிலாளர்களுக்கும் வாரியம் ஏற்படுத்திய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களை இன்றையதினம் தொழிலாளர் வர்க்கம் மனதாரப் பாராட்டுகிறது. உடல் உழைப்போருக்கு ஒரு வாரியம்; முடி திருத்துவோருக்கு ஒரு வாரியம்; சலவைத் தொழிலாளர்களுக்கு வாரியம்; மரம் ஏறும் தொழிலாளர்களுக்கு வாரியம்; கலை நயமிக்க கைவினைப் பொருட்கள் உற்பத்தியாளர்களுக்கு ஒரு வாரியம் என

பல்வேறு வாரியங்களை அமைத்து, இன்றையதினம் தொழிலாளர்களுக்கு ஒரு பாதுகாப்பான வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுத்திருப்பது கழக அரசு.

*பிற்பகல் 1-00*

அதுமட்டுமல்லாமல், கல்வி வளர்ச்சியே நாட்டின் எதிர்காலம் என்பதை உணர்ந்த நம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இன்றையதினம் புதிய பல்கலைக் கழகங்கள், பொறியியல் கல்லூரிகள், கலை, அறிவியல் கல்லூரிகள், தொழில் நுட்பப் பயிலகங்கள் என்று எதிர்காலம் வளமாக அமைய எண்ணற்ற கட்டமைப்பு வசதிகளை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள்.

அதுமட்டுமின்றி, ஒற்றைச் சாரள முறையின் வழியாக, ஒளிவு மறைவற்ற தன்மை, எதிலும் நேர்மை, வெளிப்படையான நிர்வாகம், இன்றையதினம் கல்வித் துறையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும் இந்த நேரத்தில் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பெண் குழந்தை பிறந்தாலே சிசுக் கொலை நடந்த காலம் ஒன்று இருந்தது. அந்த நிலை மாறி, இன்றையதினம் மகளிர் மேம்பாட்டிற்காக எண்ணற்ற புரட்சிகரமான திட்டங்களை அறிமுகப்படுத்தி இருக்கிறார், நம் மாண்புமிகு முதல்வர் அவர்கள். இன்றையதினம் அந்த நிலை அடியோடு மாற்றப்பட்டிருக்கிறது. மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின் முதற்கட்டமாகத்தான் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண நிதியுதவித் திட்டம் இன்றையதினம் இலட்சக்கணக்கான பெண்களின் வாழ்க்கையில் ஒளியேற்றி வைத்திருக்கிறது. உள்ளாட்சி நிர்வாகத்தில் பெண்களுக்கெல்லாம் பங்களிக்கப்பட்டிருக்கிறது. பங்காரு அம்மையார் அவர்கள் பெயரால் இன்றையதினம் 10 இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் மகளிர் சுய உதவிக் குழுக்களின் மூலமாக பலன் பெற்று வருகிறார்கள். மகளிர் சிறு வணிகக் கடன், பூமாலை விற்பனை நிலையங்கள், கணினியிலும் காவல் துறையிலும் மகளிர் பங்கேற்பு என பல்வேறு நல்ல திட்டங்கள் மகளிர் மேம்பாட்டிற்காக அறிமுகப்படுத்தப் பட்டிருக்கின்றன.

சமுதாயத்தில் உள்ள பெரும்பான்மையோர் சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்ற பேரறிஞர் அண்ணாவின் அடிச்சுவட்டில் நம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இஸ்லாமிய மக்களின் நெடுநாளைய கோரிக்கைகளான உருது அக்காடமி,



உலமாக்கள் ஓய்வூதியம் அனைவருக்கும் ஹஜ் பயணம் செல்ல வாய்ப்பு, வக்ஃபு வாரியத்திற்கு மானியத் தொகை அதிகரிப்பு என்று பல்வேறு நலத் திட்டங்கள் மூலம் இன்றையதினம் சிறுபான்மை மக்களை அரவணைத்துச் செல்கின்ற நல்ல நடைமுறைகளை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். இதனால் மதங்களைக் கடந்து மனித நேயம் வளர்ந்து சமத்துவமும், சகோதரத்துவமும் தழைக்க பாடுபடும் நம் முதல்வரை பொதுமக்கள் மனதாரப் பாராட்டுகிறார்கள்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழ்வு உயர தனி இயக்குநரகம் கண்டவர் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள். மேலும், ஆதிதிராவிடர் நலம் காக்க தொழிற்பேட்டைகள், மாணவ-மாணவியருக்கான விடுதிகள், பள்ளிக் கட்டடங்கள், பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், மேற்படிப்புக்கான ஊக்கத்தொகை என பல்வேறு நல்ல திட்டங்களை அறிமுகப்படுத்தியவர் நம்முடைய ஒப்பற்ற தலைவர் தமிழக முதல்வர் அவர்கள். அண்ணல் அம்பேத்கர் பெயரால் பல்கலைக் கழகம் கண்டது மட்டுமல்லாமல் அனைவரும் கண்டு வியக்கும் வண்ணம் இன்றையதினம் அண்ணல் அம்பேத்கர் மணி மண்டபம் எழிலோடு கட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டிருப்பதை அனைவரும் பாராட்டுகிறார்கள்.

அதுமட்டுமல்ல. இன்றையதினம் கூட்டுறவுத் துறையின் மூலமாக பல்வேறு நல்ல திட்டங்கள் நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றன. 'கூட்டுறவே நாட்டுயர்வு' என்பதற்கு எடுத்துக்காட்டாக,

"சிறுகச் சிறுக முதலிடு;
உழைத்து உழைத்துப் பெருக்கிடு
பகிர்ந்து பகிர்ந்து வாழ்ந்திடு"

என்ற தாரக மந்திரத்தைத் தனதாக்கிக் கொண்டு, அனைவரும் பங்கேற்கும் அரியதொரு துறையாக இன்றையதினம் கூட்டு முயற்சியால் நாட்டுயர்வு பேணப்படுகிறது. கூட்டுறவுத் துறை மூலமாக அத்தியாவசியப் பொருட்கள் பொது விநியோகம்; அளவு குறையாமல் மண்ணெண்ணெய், மகளிரே நடத்தும் நியாய விலைக் கடைகள் சீராக நடைபெறுகின்றன. கந்து வட்டிக் கடைகள் வழங்கிய கடன்களைப் பெற்று நலிந்துபோன சிறு வணிகர்களுக்கெல்லாம் தொடக்கக் கூட்டுறவு வங்கி, மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலமாக குறைந்த வட்டியில் தொழில் மேம்பாடு செய்வதற்கான கடன்கள்

[திரு. செ. இராமலிங்கம்] [2001 ஜனவரி 30

வழங்கப்பட்டிருக்கின்றன. இப்படி பல்வேறு நல்ல திட்டங்களைக் கூட்டுறவுத் துறை மூலமாக அளித்து இன்றையதினம் தமிழக முதல்வர் அவர்கள் நாட்டிற்கு அரும்பெரும் பணியாற்றி வருகிறார்கள்.

அதுமட்டுமல்ல அரசுப் பணியாளர்களுக்கு, மத்திய அரசுப் பணியாளர்களுக்கு இணையான ஊதியம் வழங்கியது நம்முடைய அரசு. சுமார் 45,000 ஆசிரியர் பணி நியமனங்களை நேர்மையாகச் செய்து முடித்தது நம்முடைய அரசு. காவல் துறையில் பல்லாயிரக்கணக்கான இளைஞர்களை நியமனம் செய்தது இந்த அரசு. அதுமட்டுமல்லாமல், ஓய்வூதியம் பெறுபவர்கள்கூட, மரணமடைந்தால் 25,000 ரூபாய் வழங்குகிற புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியது இந்த அரசு. இப்படி பல்வேறு நல்ல திட்டங்களையும் முற்போக்குத் திட்டங்களையும் இன்றையதினம் அறிமுகப்படுத்திய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மிகச் சிறந்த நிதிநிலை அறிக்கையை இங்கே சமர்ப்பித்திருக்கிறார்கள். இந்த நேரத்தில் இதை விமர்சனம் செய்கிற எதிர்க்கட்சி நண்பர்களைப் பணிவோடு நான் கேட்டுக் கொள்வதெல்லாம்,

"சேராத இடந்தனிலே சேர வேண்டாம்;
நல்லவர்களைப் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்;
வஞ்சனைகள் செய்வாரோடு இணங்க வேண்டாம்"

என்று கூறி முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 1-05*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ப. கோவிந்தன்.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையிலே பேச வாய்ப்பு அளித்த இந்த மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி வேதனையிலே வாழ்ந்து கொண்டிருந்த தமிழகத்து மக்களுக்கு, இந்த நிதிநிலை அறிக்கையை ஒரு சாதனையாகப் படைத்திருக்கின்ற முதல்வர் அவர்களுக்கு நன்றி கூறி என்னுடைய உரையை ஆரம்பிக்கின்றேன்.

தமிழகத்து மக்களுக்கு இந்த நிதிநிலை அறிக்கை மூலமாக பல நல்ல திட்டங்களை அறிவித்திருக்கின்றார்கள். அதே வேளையிலே விவசாயிகளுக்கு என்று இந்த நிதிநிலை அறிக்கையிலே கூறப் பட்டிருப்பது மிகவும் வேதனைக்குரிய ஒன்றாக இருக்கிறது. இந்த



2001 ஜனவரி 30] [திரு. ப. கோவிந்தன்]

நாட்டினுடைய முதுகெலும்பு என்று சொல்லப்படுகின்றார்கள் விவசாயிகள். அனைத்துக் கட்சித் தலைவர்களும், அனைத்துத் தலைவர்களும், விவசாயிகள்தான் இந்த நாட்டினுடைய முதுகெலும்பு என்று சொல்கிறார்கள். அப்படிப்பட்ட விவசாயிகள் வாழ்வதற்கு வழி என்ன? அவர்கள் வாழ்வு வளம் பெற வழி என்ன என்பதை, இந்த நிதிநிலை அறிக்கையிலே நீங்கள் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கலாம். அந்த விவசாயிகள் நிலை எவ்வாறு இருக்கிறது என்பதை நானும் ஒரு விவசாயி என்ற முறையிலே எடுத்துக்கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். விவசாயிகள் போன வருடம் நெல் பயிர் உற்பத்தி செய்து 400, 420 ரூபாய்க்கு, குறுவை நெல்லை விற்றார்கள். இந்த ஆண்டு 300 ரூபாய்க்கு கேட்பதற்கே நாதியற்ற நிலையிலே விவசாயிகள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பயிர்க் கடனைப் பெற்ற பின்னர் அதை அடைப்பதற்கு வக்கு இல்லாத ஒரு நிலையிலே விவசாயிகள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அனைத்து மக்களுக்கும் சோறு போடுகின்ற விவசாயி, இப்போது தனக்குச் சோறு கிடைக்குமா என்ற அவல நிலையிலே வாழ்ந்து கொண்டிருக்கிறான். அந்த மக்களை நீங்கள் காப்பாற்றுவதற்கு வழிவகை செய்ய இந்த நிதிநிலை அறிக்கையிலே மீண்டும் பரிசீலனை செய்து அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்பதை இந்த மாமன்றத்தின் மூலமாக உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இன்றைக்கு சட்டமன்ற உறுப்பினர்களாக, நாங்கள் பாட்டாளி மக்கள் கட்சியிலே மூவர் இருக்கின்றோம். இந்த மூன்று சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் ஆளுகின்ற அரசாங்கம் எதைக் கேட்டாலும் கொடுப்பதாக தமிழகத்தில் பரவலாகப் பேசப்படுகிறது ஆனால் இப்போது நிலை எவ்வாறு இருக்கிறது என்று சொன்னால், தாரமங்கலம் சட்டப்பேரவைத் தொகுதியிலே கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்திலே, இந்த நான்கரை ஆண்டுகாலமாக எனக்குச் செய்து கொடுத்திருக்கின்ற பணி மூன்று கிலோமீட்டர்தான். அதுவும் தலைமைப் பொறியாளர் அவர்களிடத்திலே வாதிட்டு, உங்களுடைய அலுவலகத்தின் முன்னாலே உண்ணாவிரதப் போராட்டம் நடத்துவேன் என்று வலியுறுத்தியதால் அந்த மூன்று கிலோமீட்டரைச் செய்து இருக்கின்றார்கள். நம்முடைய நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் இதைக் கருத்திலேகொண்டு இந்த ஆண்டாவது எங்களுக்கு அதிகப்படியான கிராமச் சாலைகளைச் செய்து கொடுக்க வேண்டும். எங்களுடைய எடப்பாடி சட்டமன்றப் பேரவை உறுப்பினர் ஆவேசமாக இதைத் தெளிவுபடுத்தியிருக்கின்றார். நம்முடைய..

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய ஐ. கணேசன் அவர்கள் நிரம்ப வாங்கிக்கொண்டு போய் இருக்கிறார். நீங்கள் இன்றைக்குத்தான் சொல்கிறீர்கள், சட்டமன்றம் முடியப் போகிற நேரத்திலே. ஏற்கனெவே சொல்லி வாங்கிக் கொண்டிருக்கக்கூடாதா? இருந்தாலும் பரவாயில்லை. உங்களுடைய கோரிக்கை ஏற்கப்படும். விரைவில் உங்களுடைய கிராமப்புறச் சாலைகள் போடப்படும்.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, போன ஆண்டு நிதிநிலை அறிக்கையின்போது ஒரு பட்டியலை நம்முடைய நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களிடம் கொடுத்தேன். என்ன காரணமோ தெரியவில்லை. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் மூலமாக பணிகள் நடைபெறவில்லை.

அதைப்போலவே நம்முடைய பொதுப் பணித் துறையிலே எங்களுக்கென்று 4 ஆண்டுகாலமாக திட்டங்கள் எழுதிக் கொடுத்து, எங்களுக்கு சிறிய அளவுக்காவது செய்து கொடுங்கள் என்று கேட்டால், அவர் உறுதியாக இந்தப் பாட்டாளி மக்கள் கட்சிக்குச் செய்யக்கூடாது என்று கருதினாரோ என்னவோ தெரியவில்லை அவர் ஒரு பணிகூட செய்யவில்லை. இந்த ஆண்டுகூட 3 ஏரிகளுக்கான பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, tenders விடப்பட்டு, Tenders Approve செய்யப்பட்டு, அதற்கு இப்போது நிதியை திரும்பப் பெற்றுக் கொண்டுவிட்டார்கள் என்று சேலத்திலே இருக்கின்ற பொறியாளர்கள் கூறுகின்றார்கள். கடிதம் மூலமாகவும் தலைமைப் பொறியாளருக்கு எழுதியிருக்கின்றார்கள். ஒரு பணியை எடுக்காமல் இருந்துவிட்டாலும் அது மக்களுக்குத் தெரியாது. டெண்டர் விடப்பப்பட்ட பின்னால் அந்தப் பணி செய்யப்படவில்லை என்று சொன்னால் அந்தத் தொகுதியிலே இருக்கிற மக்கள் எவ்வாறு நினைப்பார்கள் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-10

நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இந்த 4 ஆண்டு காலமாக எண்ணற்ற பணிகளை எனக்குச் செய்ததற்கு என்னுடைய தொகுதியின் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றி கூறுகிறேன். அதே சமயத்திலே இந்த ஆண்டு 2000-2001-லே சேலம் மாவட்டத்திலே இருக்கின்ற எல்லாத் தொகுதிகளிலும் கிராமக் குடிநீர் திட்டம் மூலம் 25 மேல்நிலைத் தொட்டிகள் கட்டும் பணிகள் எடுத்துக்கொள்ளப்



பட்டிருக்கின்றன. ஆனால் என்னுடைய தாரமங்கலம் சட்டப் பேரவைத் தொகுதியிலே ஒரு பணிகூட இந்த ஆண்டு எடுக்கப்படவில்லை. அதற்கு என்ன காரணம் என்று எனக்குப் புரியவில்லை. நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடத்திலே அதைத் தெளிவுப்படுத்தி இருக்கின்றேன். எழுதியும் கொடுத்திருக்கின்றேன். தாங்கள் இந்த ஆண்டு மற்றவர்களுக்கு எடுத்திருக்கின்ற பணியைப் போல என்னுடைய தொகுதிக்கும் செய்து கொடுக்குமாறு உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். கிராமக் குடிநீர்த் திட்டத்திலே மற்ற ஊர்களுக்கு எல்லாம் நிறைய பணிகள்....

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போலவே சேலம் மாவட்டத்தில் 10 ஊராட்சி ஒன்றியங்களில் தாரமங்கலம் உட்பட, 118 கோடி ரூபாய்க்கு புளோரைடு திட்டம் அனுமதிக்கப்பட்டு, அந்தப் பணிகளுக்கு Tender எல்லாம் விடப்பட்டு, இப்போது தொடங்கப்பட்டிருக்கிறது. அது தாரமங்கலத்திற்கும் உண்டு. எல்லா குக்கிராமங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட காவிரித் தண்ணீர் வழங்கப்படக்கூடிய அந்தத் திட்டம் செயல்படவிருக்கிறது என்பது மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும். தெரிந்தும், அதை மறைத்துப் பேச வேண்டாம்.

**திரு. ப. கோவிந்தன்:** காவிரி குடிநீர்த் திட்டம் கொடுத்த நம்முடைய தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியையும், பாராட்டையும் என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக தெரிவித்துக்கொள்கின்றேன். கிராமக் குடிநீர்த் திட்டத்திலே இந்த வருடம் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. இன்னும் காவிரி திட்டம் முடிவதற்கு 2,3 ஆண்டுகள் ஆகும். மற்ற....

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** இல்லை. தெளிவுக்காகத் தான் சொல்கின்றேன். 2,3 வருடங்கள் ஆகாது. ஓர் ஆண்டிற்குள் முடிவு பெறும்.

**திரு. ப. கோவிந்தன்:** நன்றி. என்னுடைய தொகுதியிலே சரபங்கா நதியின் குறுக்கே இரண்டு தடுப்புச் சுவர் கட்டி அதன் மூலம் அந்த நீரை விவசாயிகள் பெறும் அளவிற்கு பொதுப் பணித் துறை அமைச்சரிடத்திலே விண்ணப்பம் கொடுத்தும் 4 ஆண்டு காலமாக அது நடைபெறவில்லை. அதை இந்த ஆண்டில் செய்து கொடுக்குமாறு அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சமத்துவபுரம் திட்டத்தை தமிழகத்திலே நிறைய இடங்களிலே நீங்கள் செய்து முடித்திருக்கிறீர்கள். அதை பாட்டாளி மக்கள் கட்சி சார்பாக மனமார நாங்கள் வரவேற்கின்றோம். எங்கள் கட்சியிலுள்ள 3 சட்டமன்ற உறுப்பினர்களில், ஒருவர் தொகுதியிலாவது ஒரு சமத்துவ புரத்தை வழங்கி அவர்களுடைய தொகுதிக்கும் சமத்துவத்தை ஏற்படுத்தி இருந்தால் இன்னும் நன்றாக இருந்திருக்கும் என்பதை நம்முடைய முதல்வர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்கின்றோம்.

அதேபோல்தான் உழவர் சந்தையினுடைய நிலையும் உள்ளது. நம்முடைய சேலம் மாவட்ட அமைச்சராக இருக்கின்ற விவசாயத் துறை அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி பேரூராட்சியிலே ஓர் உழவர் சந்தை திறக்க வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடத்திலே ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன். காவிரி குடிநீர் வழங்குவதற்காக 19 மேல்நிலைத் தொட்டிகளும் கட்டி முடிக்கப்பட்டு, 3 ஆண்டு காலமாக அதற்கு நீரேற்றம் செய்யாமல் உள்ளதால் அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்கள் நாளை சாலை மறியல் செய்யப்போவதாக ஒரு Notice அடித்திருக்கின்றார்கள். என்னுடைய தொகுதிக்கு மட்டும் இவ்வளவு பெரிய நல்ல குடிநீர்த் திட்டத்தை பெருமளவிலே வாரி வழங்கிய உங்களுக்கு நன்றி கூறும் வேளையிலே நடக்கவிருக்கும் சாலை மறியலைத் தவிர்த்து, மக்களுக்குள்ள குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று உங்களிடத்தில் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-15

இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள் வேண்டுமென்று கோரியிருந்தேன். ஓமலூர் ஊராட்சி ஒன்றியத்திலே ஊர்மாரமங்கலத்திலும், மேச்சேரி ஊராட்சி ஒன்றியத்திலே பள்ளிப்பட்டியிலும். அதேபோல 110 K.V. துணை மின் நிலையத்திற்கு Estimates தயார் செய்யப்பட்டு-மேச்சேரி மல்லிகுண்டத்திற்கு 110 K.V. துணை மின் நிலையமும், தாரமங்கலத்திற்கு 110 K.V. துணை மின் நிலையத்திற்கும் Tenders விடும் நிலையிலே இருந்து தற்போது நிதி இல்லாது நிறுத்தப்பட்டிருக்கிறது என்று கூறப்படுகிறது. நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் அதை கருத்தில் கொண்டு அவற்றை வழங்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்றத்திலே இருக்கக்கூடிய பா.ம. கட்சியினுடைய தலைவர் மணி, நம்முடைய எடப்பாடி கணேசன், திரு. கோவிந்தன் அனைவரும் சேர்ந்து முதலமைச்சரை சந்தித்து கொடுத்த மனுவைப் பார்த்தவுடன் உடனடியாக முதலமைச்சர் என்னை அழைத்து எப்படியாவது கோவிந்தன் தொகுதிக்குத் தேவையான எல்லாவற்றையும் செய்து கொடுங்கள் என்று சொல்லியிருக்கிறார். நான் மின் வாரியத்திலேயும் சொல்லிவிட்டேன். நிச்சயமாக தேர்தலுக்கு முன்னாலே அடிக்கல் நாட்டுவிழா நடைபெறும்.

**திரு. ப. கோவிந்தன்:** என்னுடைய தொகுதிக்கு அத்தனை வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும் என்று சொல்லிய தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களுக்கும் அதை அறிவித்த நமது மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய தொகுதியினுடைய மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியா சுதந்திரம் அடைந்து 48 ஆண்டுகளுக்குப் பின்னால் இந்த 5 ஆண்டிலேதான் என்னுடைய தொகுதியிலே எண்ணற்ற பணிகளைச் செய்து மக்களுக்குப் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்திய நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களுக்கும் மற்றும் இருக்கின்ற அமைச்சர் பெருமக்கள் அத்தனை பேர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய கல்வி அமைச்சர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோள் வைக்கிறேன். என்னுடைய கொட்டாம்பட்டி ஊராட்சிக்கு நடுநிலைப் பள்ளியை நீங்கள் வழங்கினீர்கள் போன ஆண்டு. அதற்கு நன்றி. 700 மாணவர்கள் அதிலே படிக்கின்றார்கள். 6 ஆசிரியர்கள்தான் இருக்கின்றார்கள். நீங்கள் அதைக் கருத்தில்கொண்டு அதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். இந்த அளவிற்கு பேச வாய்ப்பு அளித்த நம்முடைய துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எ. தெய்வநாயகம்.

**திரு. எ. தெய்வநாயகம்:** வணக்கத்திற்குரிய பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, 2001-2002ஆம் ஆண்டுக்கான இடைக்கால நிதி நிலை அறிக்கையில் சில அறிவிப்புகளைச் செய்திருந்தாலும்கூட நான் சார்ந்திருக்கின்ற தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக சில கோரிக்கைகளை

[திரு. எ. தெய்வநாயகம்] [2001 ஜனவரி 30

வைக்க விழைகிறேன். பேச சந்தர்ப்பம் அளித்த உங்களுக்கு முதற்கண் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். உள்ளபடியே இந்த இடைக்கால நிதிநிலை அறிக்கையைப் பார்த்தபோது ஒருபுறம் மகிழ்ச்சியாக இருந்தாலும் மறுபுறம் மக்களுக்குத் தேவையான வசதிகளையும் வாய்ப்புகளையும் எடுத்துச்சொல்லி அவற்றைப் பெற வேண்டிய கட்டத்திலே நாங்கள் இருக்கின்றோம்.

எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தமட்டிலும் பெரிய மாவட்டம். மதுரையில் விவசாயம்தான் அவர்களுடைய முன்னேற்றத்திற்கு வழி வகுக்கின்றது. அடுத்தபடியாக நெசவுத் தொழில். நெசவுத் தொழிலும் அங்கே சிறப்பாக நடைபெறுகின்றது. கிட்டத்தட்ட 50,000 பேர் நெசவுத் தொழிலிலே ஈடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். இப்போது விவசாயத்தைப் பொறுத்தமட்டிலும் கட்டுப்படியில்லாத விவசாயமாக நடந்து கொண்டிருக்கிறது. முல்லை பெரியார் அணை பிரச்சினை ஓரளவிற்குச் சிக்கலாக இருந்துகொண்டே இருக்கிறது. விவசாயிகள், முல்லை பெரியார் அணையின் உயரத்தை 152 அடிக்கு உயர்த்த முடியுமா என்ற ஒரு கேள்விக் கணையைத் தொடுத்துக்கொண்டே இருக்கிறார்கள். அதற்காக போராட்டங்கள் பல நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதிலும் கேரள அரசு சின்னச் சின்ன விவகாரங்களை பெரிதாக்கி 152 அடி உயர்வை நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்றெல்லாம் வெளிப்படையாக அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

*பிற்பகல் 1-20*

நமது அரசின் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள் அவ்வப்போது அவர்களுக்கு பதில் சொன்னாலும்கூட, விவசாயிகள் அது நடைமுறைப்படுத்தப்படுமா என்ற ஒரு கேள்விக் கணையைப் பல கோணங்களிலும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஏன் என்றால் இது கிட்டத்தட்ட 5 மாவட்டங்களை உள்ளடக்கிய பிரச்சினை. அந்த 5 மாவட்டங்களுக்கும் உள்ள தண்ணீர்ப் பிரச்சினை. 152 அடி உயர்வு செய்தால்தான் இருபோக விவசாயிகளுக்கும், ஒரு போக விவசாயிகளுக்கும் நல்லது. குறிப்பாக எனது தொகுதியான மதுரை மாவட்ட விவசாய மக்களுக்கும் குடிநீர் வசதிக்கும் ஒரு நிரந்தரத் தீர்வாக அமையும் என்பதிலேதான் எல்லோரும் நாட்டமாக இருந்து கொண்டிருக்கிறார்கள். இப்பிரச்சினையில் இந்த அரசு எந்தக் கட்டத்திலேயுள்ளது, என்ன செய்து கொண்டிருக்கிறது, தற்போது என்ன நிலைமையிலே இருந்து கொண்டிருக்கிறது என்பதைப்பற்றி எங்களுக்குச் சொல்ல வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.



2001 ஜனவரி 30] [திரு. எ. தெய்வநாயகம்]

அடுத்தபடியாக நமது வீட்டு வசதி வாரியம் எனது தொகுதியைச் சேர்ந்த எல்லிஸ் நகர்ப் பகுதியிலே உள்ள வீடுகளுக்கு Sale Deed கொடுக்க வேண்டுமென்று சென்ற கூட்டத்திலும் பேசியிருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு குழுவை அமைத்து அதற்குத் தக்க பரிகாரம் காண முடியுமென்று சொன்னார்கள். அதுவும் எந்த நிலைமையில் இருக்கின்றது என்று தெரியவில்லை. இருந்தாலும்...

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தக் குழு தனது அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறது. அதன்மீது இப்போது அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எ. தெய்வநாயகம்:** சமீபத்திலே அமைச்சரவைக் கூட்டத்திலே ஒரு முடிவை எடுத்திருக்கின்றார்கள். ஒரு வீடு வாங்கினால், அதற்கு தரை மதிப்பைப் பொறுத்து Registration செய்திருந்தால் அவர்களுக்கு உடனடியாக Deed கொடுக்கப்படும் என்ற அறிவிப்பும் வந்திருக்கிறது. இதற்கு முன்னாலே வீட்டை வாங்கியவர்களுக்கும் அது பொருந்துமா, இல்லை பொருந்தாதா? (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** இல்லை, 10 வருடம் பணம் கட்டி—யார் யார் அந்த வீட்டிற்காகப் பணம் கட்டி—Registration செய்யாமல் இருக்கிறார்களோ அவர்கள் அனைவருக்கும் பொருந்தும்.

**திரு. எ. தெய்வநாயகம்:** முன்னாலே வாங்கியிருந்தவர்களுக்கும் அது பொருந்துமா என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே வாங்கி இதுவரையிலே பதிவு செய்யாமலிருந்தால் அவர்களுக்குப் பொருந்தும். ஏற்கெனவே வாங்கி பதிவு செய்திருந்தால் அவர்களுக்கு இது பொருந்தாது.

**திரு. எ. தெய்வநாயகம்:** அடுத்தபடியாக மதுரையிலே பட்டா வழங்குகிற விஷயமாக மாவட்ட ஆட்சித் தலைவரை அணுகி, எங்கள் தொகுதியிலே புறம்போக்கு நிலங்களுக்குப் பட்டா வழங்குவதற்கு அரசாணை பிறப்பித்திருக்கிறது என்று சொன்னோம். ஆனால் சர்வே செய்வதிலும் பட்டா வழங்குவதிலும் முறைகேடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. காரணம் என்னவென்றால், சிலருக்குப் பட்டா வழங்கலாம் என்று சொல்கிறார்கள். சிலருக்கு அந்த valuation தவிர

பணம் கட்ட வேண்டுமென்று சொல்கிறார்கள். பணம் கட்ட வேண்டுமென்று ஒரு சாராரிடம் கேட்கும்போது, பணம் கட்ட வேண்டாம் என்று ஒரு சாரார் சொல்லும்போது இரண்டு பேருக்கும் இடையில் கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. அவர்களுக்கு மட்டும் பணம் கட்ட வேண்டாம் என்று சொல்கிறார்கள்; எங்களுக்கு மட்டும் பணம் கட்ட வேண்டுமென்று சொல்கிறார்களே, அது ஏன் என்கிற வகையில் இரண்டு விதமான கருத்துக்கள் ஊசலாடிக் கொண்டிருக்கின்றன. இதற்கு நிரந்தரமான ஒரே விதத்தைப் பிரதிபலிக்கின்ற அளவிற்கு நீங்கள் அதைச் சரிசெய்து ஏழை மக்களுக்கும் புறம்போக்கிலே குடியிருக்கின்றவர்களுக்கும் பட்டா வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மதுரையிலே சென்ற இருபத்தி மூன்றாம் தேதியன்று தலித் மாணவர்கள் தங்களுக்கு வரவேண்டிய Scholarship மற்றும் தங்கும் விடுதிகளுக்கான பணங்களைக் கட்டவில்லை, அதை அரசுத் தரப்பிலேயிருந்து கொடுக்க வேண்டுமென்று சொல்லி ஒரு போராட்டத்தை நடத்தினார்கள். அதிலே 5 மாணவர்கள் அடித்துத் துன்புறுத்தப்பட்டு, 100 பேர்களைச் சிறைக்கு அனுப்பி இருக்கின்றார்கள். அது கண்டிக்கத்தக்கது. அதற்கு அந்தத் துறையின் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்திருக்கின்றார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. அதையும் கவனித்து...

***மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதே மாணவர்கள் பிரச்சினை குறித்து சட்டமன்றத்தில் நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் விளக்கமாக, விரிவாக பதில் சொல்லியிருக்கின்றார்கள். அன்றையதினம் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அவைக்கு வரவில்லை என்று நினைக்கிறேன். மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் மூலமாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வது, கல்விக் கடன் உதவித் தொகை அந்தத் திட்டம் மாண்புமிகு முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்ட திட்டம். அந்தத் திட்டத்தின் மூலமாக தலைவர் கலைஞர் அவர்கள் இதுநாள் வரையிலும் 9 கோடி ரூபாய் வழங்கியிருக்கின்றார்கள். இப்போதுகூட அந்த மாணவர்களுக்கு 5 கோடி ரூபாய் வழங்க ஆணையிடப் பட்டிருக்கிறது. மாணவர்களுக்காக அதிகமான உதவிகளைச் செய்வது தமிழக அரசுதான்; தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசுதான்.



மாணவர்களுக்கு ஊக்கத் தொகை, உதவித் தொகை, பரிசுத் தொகை, முதலமைச்சர் தகுதிப் பரிசு, காந்தி நினைவுப் பரிசு போன்ற இப்படிப்பட்ட பரிசுகளையெல்லாம் வழங்குவதோடு மட்டுமல்லாமல் எல்லாவிதமான உதவிகளையும் வழங்குகின்ற ஓர் அருமையான திட்டத்தையும் வழங்குகிறது தமிழக அரசு. இது மதுரையிலே நடந்த ஒரு பிரச்சினை. மாணவர்கள் ஊர்வலம் வந்தார்கள். கல்விக் கடன், உதவித் தொகை வேண்டும் என்றார்கள். ஆனால் அவர்கள் கோரிக்கையோடு வரும்போதே கையில் பெட்ரோல் கேனோடு வந்தார்கள். பெட்ரோல் கேனோடு வந்தது மட்டுமல்லாமல் அடுத்தவர் தலையில் ஊற்றி எரிப்பதற்கு முயற்சி செய்தார்கள். அவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டு அரசு சும்மா இருக்கவில்லை. அப்படிப்பட்ட மாணவர்களையும் அழைத்துப் பேசி அவர்களுக்கும் ஒரு முடிவெடுத்து 5 கோடி ரூபாய் வழங்கப்பட்டு இருக்கிறது; அவர்களுடைய பிரச்சினை தீர்த்து வைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-25*

**திரு. எ. தெய்வநாயகம்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மதுரையைச் சேர்ந்தவர்தான். அதனாலே விளக்கமாகச் சொல்லிவிட்டார். நன்றி. இருந்தாலும்கூட அத்தகைய நடவடிக்கையெல்லாம் நடந்ததா, என்ன என்பது...

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது மாணவர்களுக்கெல்லாம் அந்தக் கடன் உதவி வழங்கப்பட்டதாகச் சொல்கிறார்கள். ஆனால் தமிழ்நாடு முற்றிலும் வழங்கப்படவில்லை. இந்தப் பிரச்சினை மதுரையிலே மட்டும் அல்லாது தமிழ்நாடு முற்றிலும் இருக்கிறது. அந்த மாணவர்கள், பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள் மூலமாக கோரிக்கை வைத்து சட்டமன்றத்திலே உரையாற்றுங்கள் என்றும் அந்த உதவிகளை எங்களுக்குப் பெற்றுத் தரவேண்டும் என்றும் மனு கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இது தமிழ்நாடு முழுவதும் உள்ள பிரச்சினை. ஏதோ மதுரையில் மட்டும் நடக்கின்றது என்று சொல்லி நீங்கள் தட்டிக்கழித்து, எல்லாம் கொடுத்து விட்டோம், ஏதோ ஊர்வலத்திற்காக அடிதடிக்கு வந்துவிட்டார்கள் என்கிறமாதிரி சொல்வது சரியல்ல.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது தமிழ்நாடு முழுவதும் உள்ள பிரச்சினை என்ற காரணத்தினால்தான் மதுரைக்கு மட்டும் அல்லாமல் முதலமைச்சர் அவர்கள் 5 கோடி ரூபாயை சிறப்பு நிதியாக 4 தினங்களுக்கு முன்னாலேயே ஒதுக்கீடு செய்து அனைத்து மாணவர்களுக்கும் அந்த நிவாரணம் அளிக்க வேண்டும் என்று ஆணை பிறப்பித்திருக்கிறார்கள்.

**திரு. எ. தெய்வநாயகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அடுத்தபடியாக நெசவாளர்கள் பிரச்சினை. நெசவாளர்கள் எங்கள் மதுரை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 50,000 பேர் இருக்கிறார்கள். அந்த 50 ஆயிரம் பேருமே இப்போது வேலையில்லாமல் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். முதலாளிகள் நூல் விலை ஏறிவிட்ட காரணத்தினால் எங்களால் தொழில் செய்ய முடியவில்லை என்கிறார்கள். இரண்டு தரப்பிலுமே உண்ணாவிரதம் எல்லாம் இருந்திருக்கிறார்கள். ஆகவே, நெசவாளர்களைப் பொறுத்தமட்டிலும் அவர்களுடைய வேலைப் பிரச்சினைக்குத் தீர்வு காண அங்கே நூல் bank ஒன்று நியமித்து, உற்பத்தியாளர்களுக்கு நூல் வழங்கி.... (மணியடிக்கப்பெற்றது).

***மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கத்திலே இணையாத நெசவாளர்களுக்குத்தான் அந்தப் பிரச்சினை இருக்கிறது. அவர்கள் கூட்டுறவுச் சங்கம் உருவாக்கிக்கொள்ளவோ அல்லது உடனடியாக மற்றச் சங்கங்களோடு இணைந்துகொள்ளவோ நல்ல வழிமுறையை ஏற்படுத்தித்தர இந்த அரசு இன்றும் தயாராக இருக்கிறது. அப்படிப்பட்ட நெசவாளர்கள் சங்கத்தின் மூலம் இணைந்தால் வருடம் முழுமைக்கும் அவர்களுக்கு என்ன தேவையோ அந்தப் பொருளை உற்பத்தி செய்கிற வாய்ப்பும் அரசினுடைய திட்டத்திலே இருக்கிறது.

**திரு. எ. தெய்வநாயகம்:** இல்லை, தனியார் நெசவாளர்களுக்கும் நூல் விலை உயர்வால் வேலை கொடுக்க முடியவில்லை என்று சொல்கிறார்கள் முதலாளிகள். நெசவாளர்களுக்கு வேலை கொடுக்க முடியாமல் அவர்கள் வேலையில்லாமல் நின்று கொண்டிருக்கிறார்கள். அதைத்தான் நான் சுட்டிக்காட்டுகிறேன்...

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நானும் சொல்கிறேன்.



அவர்களுக்கு வேலையில்லை என்றால் நீங்கள் சங்கம் அமைத்துக் கொள்ளுங்கள். நாங்கள் சங்கத்திலே 365 நாட்களுக்கும் வேலை கொடுத்துவிடுகிறோம்.

**திரு. எ. தெய்வநாயகம்:** ஏற்கெனவே நிறைய சங்கங்கள் அங்கே இருக்கின்றன. தனித்தனிச் சங்கங்கள் எல்லாம் நிறைய இருந்து செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. தனியாருக்கு உள்ள வாய்ப்பை நான் சொல்கிறேன்.

மதுரை மாநகராட்சியைப் பொறுத்தமட்டிலும் வரவிற்கும், செலவிற்கும் தகுந்தமாதிரி அங்கே நிர்வாகம் நடந்து கொண்டிருக்கிறது. அப்படியிருக்கும் பட்சத்தில் அங்கே வருமானத்தைக் கூட்டுவதற்கு எந்தச் சந்தர்ப்பமும் கிடையாது. அப்படி இருக்கும்போது—நம்முடைய கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்—ஏற்கெனவே 1998-லே சில வாத்தியார்களை selection பண்ணினார்கள் Interview வைத்து selection பண்ணினார்கள். இன்று வரைக்கும் அவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கவில்லை. அதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. கமிஷனரைக் கேட்டால் எங்களுக்கு உத்தரவு வந்தால்தான் வாத்தியார்களை எடுப்போம் என்கிறார்கள். வாத்தியார்களுக்கு Interview வைத்து அதில் தேர்ந்தெடுக்கப்பட்டும் அவர்களுக்கு இன்னும் வேலைவாய்ப்பே கொடுக்கவில்லை, மதுரை மாநகராட்சியிலே. அதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. அவர்கள் Court-க்கும் போகவில்லை. உங்களுடைய உத்தரவு வரும், வரும் என்று 2 வருடமாக அப்படியே உட்கார்ந்திருக்கிறார்கள். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்து...

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் தேர்ந்தெடுத்த அந்தப் பணிகள் ஏற்கெனவே அரசு ஏற்றுக்கொண்டு அனுமதித்த பணியிடங்களாக இருக்குமானால், உடனே அனுமதி வழங்கிவிடலாம். ஏற்கெனவே அரசு ஏற்றுக்கொண்டு அதற்காக நிதி தரப்பட்ட பணியிடங்களாக இல்லாமல் மாநகராட்சி மன்றம் தேவை என்ற அடிப்படையிலே அவர்களாலே தெரிவு செய்யப்பட்டிருப்பார்களேயானால் நிதி கிடைக்கின்ற வரையில் கல்வித் துறை, நிதித் துறையினுடைய இசைவைப் பெறவேண்டிய நிலைமை இருக்கலாம். இதை நான் கருத்தளவிலேதான் தெரிவிக்கிறேன். விவரங்கள் துறையிடமிருந்து கேட்டுத்தான் நான் தெரிவிக்க வேண்டும்.

[2001 ஜனவரி 30

பிற்பகல் 1-30

**திரு. எ. தெய்வநாயகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அடுத்ததாக...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் இன்று மாலை 4.00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-30 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

பிற்பகல் 4.00

பேரவை மீண்டும் பிற்பகல் 4-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் **திரு. பரிதி இளம்வழுதி** அவர்கள் தலைமையில் கூடியது.

## 6. இடைக்கால வரவு–செலவுத் திட்டம், 2001-2002, பொது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 2001-2002 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு செலவுத் திட்டத்தின் மீதான விவாதம் தொடர்கிறது. திரு. பெ.சு. திருவேங்கடம்.

**திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழகத்தினுடைய தலைவர், டாக்டர் கலைஞர் முதலமைச்சர் அவர்கள் இந்தப் பேரவையில் அளித்துள்ள இடைக்கால நிதிநிலை அறிக்கையை வரவேற்று அதன்மீது நான் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர்கள் வெளியிலே பல்வேறு வகையான விமர்சனங்களைச் செய்கின்றார்கள். தேர்தலை மனதில் வைத்துக்கொண்டு இந்த நிதிநிலை அறிக்கையை நம்முடைய முதல்வர் அவர்கள் தாக்கல் செய்தார்கள் என்று ஒருவர் சொல்கிறார்; இன்னொருவர் இதிலே ஒன்றுமே இல்லை என்றும் சொல்கின்றார். நாம் எல்லோருடைய கருத்துக்களையும் பார்க்கும்போது, எதிர்க்கட்சியிலே இருக்கின்ற நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள்தான் தேர்தலை மனதிலே வைத்துக்கொண்டு, இதை எப்படிக் குறை கூறுவது, எப்படி இதிலே குற்றம் கண்டுபிடிப்பது என்கிற



2001 ஜனவரி 30] [திரு. பெ.சு. திருவேங்கடம்]

நிலையிலே இருக்கிறார்களே தவிர, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தேர்தல் அருகிலே வந்தாலும், எந்த ஒரு தேர்தல் ஆணையரும் குறை கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு, நேர்மையாக, ஒரு நல்ல இடைக்கால நிதிநிலை அறிக்கையைத் தந்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த மாமன்றத்திற்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய எதிர்க்கட்சியினர் ஒன்றைச் சொல்லிக்கொண்டிருப்பார்கள். உள்ளாட்சி அமைப்புகளுக்குப் போதிய நிதியை இந்த அரசாங்கம் தருவதில்லை என்ற கோரிக்கையை பல இடங்களிலே சொல்லிக்கொண்டிருந்தார்கள். இந்த நிதிநிலை அறிக்கையைப் பார்க்கின்றபோது 1995-96-ல் 787 கோடியை அளித்த தமிழக அரசு இந்த ஆண்டுக்கு 2,400 கோடியைத் தரப்போகிறோம் என்று அறிவித்திருக்கிறது. இது வரவேற்க வேண்டிய ஒன்றாகும். காலையிலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் "நீங்கள் மத்திய அரசாங்கத்தைப் பார்த்து 40 சதவிகிதம் கேட்கிறீர்கள், அந்த 40 சதவிகிதத்தை நீங்கள் உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தருகின்றீர்களா" என்ற ஒரு கேள்வியை எழுப்பினார்கள். நான் அவருக்கு ஒன்றை நினைவுபடுத்த விரும்புகின்றேன். இந்த அரசாங்கம் ஊராட்சிகளுக்கு அல்லது ஒன்றியங்களுக்குத் தருகின்ற நிதியல்லாமல், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், சென்ற ஆண்டு நம்முடைய ஒன்றியங்களுடைய தலைவர்கள் ஊர்தி வேண்டுமென்று கேட்டபோது, அரசாங்கச் செலவிலே எல்லா ஒன்றியங்களுக்கும் ஊர்திகள் வாங்கி வழங்கப்பட்டன. அதேபோல ஒன்றியங்களிலே பணியாற்றுகின்ற அலுவலர்கள் மற்றும் ஊழியர்களில் பெரும்பாலானவர்கள் அரசு ஊழியர்கள்; அரசாங்கம்தான் அந்தச் செலவுகளை ஏற்றுக் கொண்டிருக்கிறது.

உள்ளாட்சி அமைப்புகளுக்குக் குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பிலே ஏறக்குறைய—இங்கேகூட அதனுடைய கணக்கை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்—85 விழுக்காடு அளவுக்கு, கிராமங்கள் தன்னிறைவு பெறுகின்ற அளவுக்கு ஒன்றியங்களுக்கு/ஊராட்சிகளுக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டிருக்கின்றன. ஒருகால், நகராட்சிகளுக்கு, பேரூராட்சிகளுக்கு வேண்டுமானால், அது கடனாக இருக்கலாம். ஆனால் கிராம ஊராட்சிகளுக்கு வடிகால் வாரியத்தின் செலவில்தான் தொட்டிகள் கட்டப்படுகின்றன. இன்னும் கேட்டால் மின் இணைப்பு

பெறுவதற்கான deposit பணத்தையும் குடிநீர் வடிகால் வாரியமே கட்டி, இந்த இணைப்புப் பெறுகின்ற படிவத்திலே மட்டும் ஊராட்சித் தலைவரிடத்திலே கையொப்பத்தைப் பெற்று, அந்த வாரியம் ஊராட்சித் தலைவர்களிடத்திலே மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி திட்டத்திற்கான சாவியை வழங்குகின்ற ஒரு நிலை இருந்து வருகிறது. இவற்றையெல்லாம் கணக்கிட்டுப் பார்த்தால், நம்முடைய தமிழக அரசு, உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்தல் நடத்தியது மட்டுமல்ல, ஊராட்சிகள், ஒன்றியங்கள் மேன்மை பெறுகின்ற வகையில், மேம்பாடு அடைகின்ற வகையில், அதனுடைய பணிகள் சீரான முறையில் நடைபெற பல்வேறு உதவிகளைச் செய்து கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 4-05*

அதேபோல ஊரக வளர்ச்சியும் வேலைவாய்ப்பும் என்று எடுத்துக் கொண்டால், நமக்கு நாமே திட்டம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், பெரியார் சமத்துவபுரத் திட்டம், உழவர் சந்தை, வருமுன் காப்போம் திட்டம், கால்நடைகள் பாதுகாப்புத் திட்டம், ஊரகச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், கிராமங்களிலே தெருக்களுக்கு சிமெண்ட் சாலைகள் அமைக்கின்ற திட்டம், கணினித் திட்டம், எம்.எல்.ஏ.-க்களுக்குத் தரப்படுகின்ற தொகுதி மேம்பாட்டு நிதி என ஏராளமான திட்டங்களை நம்முடைய முதலமைச்சர் அவர்கள், தமிழகத்தினுடைய வளர்ச்சிக்காகச் செயல்படுத்துகிறார்கள்.

நான் ஒன்றை இங்கு உதாரணத்திற்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் ஜவ்வாது மலையில் கோயிலூர் என்கின்ற ஊராட்சி இருக்கிறது. அந்த ஒரே ஊராட்சியில் 40-க்கும் மேற்பட்ட மதுரா கிராமங்கள் உள்ளன. நாம் 1947-லே சுதந்திரம் பெற்றாலும், கலைஞர் அவர்கள் முதலமைச்சராகி, 1996-ல் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் வருகின்ற வரையில், பெரும்பாலான கிராமங்களில் உள்ள மலைவாழ் மக்கள் மழைக் காலங்களிலே ஓடைகளில் ஓடுகின்ற தண்ணீரைத்தான் குடிதண்ணீராகப் பயன்படுத்தி, அதனால் பல்வேறு வியாதிகளுக்கு ஆட்படுகின்ற ஒரு நிலைமை இருந்து வந்தது. ஆனால் நான் என்னுடைய தொகுதியிலேயுள்ள அந்த ஊராட்சிக்கு அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை எழுதித் தந்தேன். இன்றையதினம் 40-க்கும் மேற்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைத்து அனைத்து மலைவாழ் மக்களும், பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீரைப் பருகுகின்ற ஒரு நிலை





அந்த ஊராட்சியில் உள்ள மலைவாழ் மக்களுக்குக் கிடைத்திருக்கிறது என்று சொன்னால், அந்த மலைவாழ் மக்கள் பெற்றிருக்கின்ற அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்கிற இந்தத் திட்டம் சாதாரணத் திட்டமா? போற்றுதற்குரிய திட்டம் அல்லவா!

உடனே அங்கே ஒரு நிலை ஏற்பட்டது. மின்சாரம், சரியான voltage-ல்—மின் அழுத்தம்—வரவில்லை என்று சொன்னார்கள். நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே நாங்கள் முறையிட்டோம். முதல்வருடைய அனுமதியைப் பெற்று, அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் கட்டிய அந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் நல்ல முறையில் செயல்பட வேண்டுமென்று சொன்னால், சரியான மின் அழுத்தம் தேவை எனக் கருதி உடனடியாக, ஜமுனா மருதூர் பக்கத்திலே உள்ள அத்திப்பட்டிலே இன்றையதினம் துணை மின் நிலையம் அமைத்து நம்முடைய அமைச்சர் அவர்கள் வந்து தொடங்க வேண்டியிருந்தாலும், 10 ஆம் தேதி அதனுடைய வெள்ளோட்டத்தை அந்த மின்சாரத் துறையைச் சார்ந்த பொறியாளர்கள் செய்திருக்கிறார்கள். இப்படி, இந்த அரசினுடைய, எத்தனையோ சாதனைகளை நாம் சொல்லிக்கொள்ளலாம்.

இங்கே சிலபேர்கள்கூடச் சொன்னார்கள். உழவர் சந்தையை எல்லா மக்களும் வரவேற்கிறார்கள். அது போற்றப்பட வேண்டிய ஒரு திட்டம். நாங்கள் திருவண்ணாமலையில் நம்முடைய வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களுடைய தலைமையிலே ஓராண்டு விழாவிற்குப் போனோம்.

எனது தொகுதியைச் சேர்ந்த, அ.இ.அ.தி.மு.க.வைச் சேர்ந்த முன்னாள் ஊராட்சி மன்றத்தினுடைய தலைவர் அங்கே பேசினார். கலைஞரை மிகவும் பாராட்டிப் பேசினார்கள். என்னுடைய தோட்டங்களிலே பயிரிடுகின்ற காய்கள் ஆனாலும், பழ வகைகள் ஆனாலும், இன்றையதினம் உழவர் சந்தை மூலமாக விற்பதால் நல்ல பலன் பெறுகிறேன் என்று சொல்லி அவர்கள் பாராட்டினார்கள், எங்களையெல்லாம் வைத்துக்கொண்டு. சில நேரங்களிலே அது மூடித்தான் இருக்கும். இப்போது கிராமங்களிலே பார்த்தீர்களென்றால், எல்லாக் காலங்களிலும் எல்லாப் பயிர்களும் வருவதில்லை. நெல் என்று சொன்னால் எல்லாக் காலங்களிலும் அது பயிரிடப்படுவதில்லை அதேபோல, பல வகையான காய்கள் இருக்கின்றன என்று சொன்னாலும், அவை season-ல் அதிகம் வரும்; இன்னொரு season-ல் அது குறையலாம். ஒரு season-ல் வரத்து அதிகமாக இருக்கும். ஒரு

[திரு. பெ.சு. திருவேங்கடம்] [2001 ஜனவரி 30

season-ல் வரத்துக் குறைய வாய்ப்பு உண்டு. உழவர் சந்தை என்று சொன்னால், 12 மாதங்களும் ஒரே அளவிலே இருக்க வேண்டுமென்று நாம் நினைக்க முடியாது. அந்த வகையிலே இப்படி பல்வேறு திட்டங்களை இன்றையதினம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தினுடைய மக்களுக்குத் தந்திருக்கிறார்கள். அவை சீரான. முறையிலே சிறப்பான முறையிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கிராமங்களிலே இருக்கின்ற மக்கள் பெரிதும் பாராட்டுகின்ற ஒரு நிலை இன்றையதினம் இருந்துகொண்டிருக்கிறது.

*பிற்பகல் 4-00*

அதுபோல இந்த நிதிநிலை அறிக்கையில் 7,038 தொடக்கப் பள்ளிகள், 1,320-க்கும் மேற்பட்ட மேல்நிலைப் பள்ளிகள், 8,000-க்கும் மேற்பட்ட நியாயவிலைக் கடைகளுக்குக் கட்டடங்கள், 1,501 சத்துணவுக் கூடங்கள்; 613 ஆரம்ப சுகாதார நிலையங்கள், ஊராட்சி அலுவலகங்கள், தொகுப்பு வீடுகள்; குடிநீர்த் தொட்டிகள்—ஏற்கெனவே சொன்னேன்—இப்படி ஏராளமான கட்டடங்களை இன்றையதினம் கட்டித் தந்திருக்கிறார்கள் என்று சொன்னால் இது பாராட்டப்பட வேண்டிய காரியம் அல்லவா? ஒரு காலத்திலே என்னுடைய தொகுதியிலே எனக்கு முன் சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர், அன்றிருந்த அரசிலே ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டடம் வாங்குவதற்கு, நாங்கள், நடந்து, நடந்து கடைசியிலே அந்த முதலமைச்சர் சொன்னார், நல்ல காலம் வரும்போது, கட்டிக்கொள்ளலாம் என்ற உத்தரவை கையிலே கொடுத்தார்கள். ஆனால், இன்றையதினம், யாருமே, சட்டமன்ற உறுப்பினர்கூட கேட்கவில்லை என்று சொன்னாலும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே, அவர்கள் அதற்கான பட்டியலைப் பெற்று எல்லா ஆரம்ப சுகாதார நிலையங்களும், கட்டடங்கள் பெறுகின்ற ஒரு நிலையை ஏற்படுத்திக் கொடுத்து இருக்கிறார்கள் என்று சொன்னால் அவை எல்லாம் பாராட்டப்பட வேண்டிய காரியம் அல்லவா? (மணியடிக்கப்பெற்றது) இரண்டு நிமிடங்கள் கொடுங்கள்.

அதேபோன்று வேளாண்மைத் துறையை எடுத்துக் கொண்டால், இப்பொழுது, விவசாயிகளுடைய பிரச்சினையைப் பெரிதாகப் பேசுகிறார்கள். நானும் ஒரு விவசாயிதான். வேறு எந்தத் தொழிலும் எனக்கு இல்லை. விவசாயம் செய்தாலன்றி, என்னுடைய குடும்பத்திற்கு



2001 ஜனவரி 30] [திரு. பெ.சு. திருவேங்கடம்]

எந்தவிதமான வருவாயும் வருகிற தொழிலும் என்னிடத்திலே இல்லை. ஆனால், விவசாயினுடைய நிலை என்ன? அதிகமான மழை பெய்தாலும் விவசாயத்திற்கு நஷ்டம்தான். மழையே இல்லையென்றாலும் விவசாயத்திற்கு நஷ்டம்தான். அதேபோல அதிகமான விளைச்சல் வந்துவிட்டாலும் விவசாயிக்கு நஷ்டம்தான். ஆனால், இப்போது கலைஞர் அவர்களுடைய ஆட்சியில், அதிகமான மழை இருந்த பகுதிகளிலே விளைச்சல் அதிகமாக வந்துவிட்டது. அதனால் ஓரளவிற்கு நெல் விலை குறைகிறது. அதைத்தான் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்கூட அன்றையதினம் சொன்னார்கள். ஆந்திராவிலிருந்து நெல் வருகிறது, கேரளாவிற்கு நெல் அனுப்பலாமே என்று சொன்னார். இதிலே தனிப்பட்ட முறையிலே என்னுடைய கருத்தைக் கேட்டால், எதிர்க்கட்சித் தலைவருடைய கருத்தை நான்கூட, ஆதரிப்பேன். அதிலே எனக்குக் கருத்து வேறுபாடு இல்லை. ஆனால், இதை உணர்ந்த நம்முடைய உணவுத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதல்வர் அவர்களும், இன்றையதினம் எல்லா இடங்களிலும் நெல்லைக் கொள்முதல் செய்ய வேண்டும், விவசாயி நஷ்டப்படக்கூடாது என்பதற்காக, கொள்முதல் நிலையங்களை ஏற்படுத்தி, அதற்கான நிதியையும் தருகிறார்கள்.

அடுத்து கரும்பு. அந்தக் கரும்பைப் பார்த்தீர்கள் என்றால், இன்றைய தினம் நம்முடைய, மத்திய அரசு ஒரு விலையைச் சொல்கிறது. S.A.P. விலை; மாநில அரசு பரிந்துரை S.A.P. என்கிற அளவில் அவர்கள் ஒரு விலையை நிர்ணயிக்கிறார்கள். தனியார் ஆலைகள், இந்த S.M.P. தான் மத்திய அரசினுடைய S.A.P. என்று சொல்ல மாநில அரசுக்கு உரிமையில்லை என்ற நிலையில்தான் இன்றையதினம் உயர் நீதிமன்றத்திலேயிருந்து, உச்ச நீதிமன்றம் வரையிலும் போய்க் கொண்டிருக்கிறார்கள். அது நீதிமன்றத்திலே இருக்கிறது. ஆனால், இன்றையதினம் சர்க்கரைச் சத்து என்கின்ற அந்த நிலையை நம்முடைய முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதன்படி தனியார் ஆலைகள் இலாபத்தில் சரிபாதியை இலாபக் கணக்கு முடிந்தவுடன் மத்திய அரசினுடைய 5ஏ என்று சொல்கிற கூடுதல் விலையை அறிவிக்க வேண்டும். ஆனால் இதுவரையிலே அறிவிக்காமல் இருக்கிறார்கள். 1997-98, 1998-99 மற்றும் 1999-2000 ஆகிய இந்த மூன்று வருடங்களுக்கு இந்த 5ஏ விலையை மத்திய அரசு அறிவிக்காமல் உள்ளது. நம்முடைய அரசு, இந்த நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு ஒரு பக்கத்திலே

[திரு. பெ.சு. திருவேங்கடம்] [2001 ஜனவரி 30

வந்துகொண்டிருந்தாலும், அதற்கு முன்னதாக இந்த விலையை மத்திய அரசு அறிவிக்க ஏற்பாடு செய்து, அதை விவசாயிகள் பெறுகின்ற ஒரு நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று முயற்சி செய்துகொண்டிருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) விவசாயிகள் பிரச்சினையைச் சொல்லி விடுகிறேன். தமிழகத்திலே வரும் தேர்தலுக்கு, நம்முடைய எதிர்க்கட்சிகள் வைத்திருக்கும் ஒரே ஆயுதம் விவசாயிகள் பிரச்சினைதான். இந்தப் பிரச்சினையில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கவனம் செலுத்திட—விவசாயிகள் உங்களை நம்புகிறார்கள், உங்களைவிட விவசாயிகளுக்கு இதுவரையிலே எந்த ஓர் அரசாங்கமும் செய்துவிடவில்லை. ஆனாலும், அவர்கள் இப்போது எடுத்துக் கொண்டிருக்கிற இந்தப் பிரச்சினையிலும் நீங்கள் கவனம் செலுத்திட—வேண்டுமென்று நான் இந்த அரசாங்கத்தை வேண்டிக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல கூட்டுறவுக் கடன்கள். யாரும் தள்ள முடியாது என்பதை எல்லோரும் ஒத்துக்கொள்கிறார்கள். நேரத்தைக் கருதி சுருக்கமாகச் சொல்கிறேன். இரண்டு நிமிடங்கள் கொடுங்கள். சென்ற ஆண்டு அபராத வட்டிச் சலுகையால் மூன்றரை இலட்சம் பேர் பயன்பெற்று இருக்கிறார்கள். இந்த ஆண்டு அதே நிலை வந்தால் ஆறு இலட்சம் பேர் பயன்பெற வாய்ப்பு உள்ளது. அதேநேரத்திலே மிகப் பெரிய வரப்பிரசாதமாக இந்த அபராத வட்டியை மூன்று சதவிகிதத்திலிருந்து ஒரு சதவிகிதமாகக் குறைத்து இருக்கிற நம்முடைய முதல்வர் அவர்களை நான் விவசாயிகள் சார்பாக பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல பாசனம். என்னுடைய நேரத்தினைக் கருதி சுருக்கமாகச் சொல்கிறேன். என்னுடைய மாவட்டத்திலே மூன்று அணைகள் உள்ளன. என்னுடைய தொகுதியிலேகூட ஒரு அணையைக் கொடுத்திருக்கிறார்கள். அது பாராட்டுக்குரிய ஒன்று. அதேபோல சாலைப் பணிகளில் நம்முடைய நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களும், முதலமைச்சர் அவர்களும், என்னுடைய தொகுதியிலே 5 பாலங்கள் கொடுத்து, வேலை நடைபெறுகின்றன. அதை இந்த நேரத்திலே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



2001 ஜனவரி 30] [திரு. பெ.சு. திருவேங்கடம்]

பிற்பகல் 4-15

அதேபோல உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் எல்லாம் கட்டப்பட்டிருக்கின்றன. (மணியடிக்கப்பெற்றது) துணைத் தலைவர் அவர்களே ஒரே ஒரு நிமிடம். அதைச் சொல்லி என்னுடைய உரையை முடித்துக்கொள்ள விரும்புகிறேன். இங்கே நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்கூட சொன்னார்கள். இதே சட்டமன்றத்தில் ஒரு நாள் சொன்னார்கள். நான் எப்பொழுதுமே எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை ரொம்பவும் மதிப்பவன். காரணம், 1977-லே அவர் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது, நானும் சட்டமன்ற உறுப்பினராக இருந்தேன். திடீரென்று பொதுப் பணித் துறை அமைச்சர்மீது ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார். நான்கூட அயர்ந்துவிட்டேன். அவர் மிக உஷாரான பேர்வழி, நான் ஏதாவது போய்ச் சொன்னால்கூட என்ன சொல்வார் என்றால் நீங்கள் வேண்டுமானால் முதலமைச்சரிடம் சொல்லி மந்திரி வேலையை எடுத்துவிடுங்கள், இதை என்னால் செய்ய முடியாது என்பார். அவர்மேல் எப்படி இவர் தவறு சொல்கிறார் என்று பார்த்தால், திடீரென்று ஒரு நாள் இந்த அவையிலே பெருந்தன்மையாக நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். பொதுப் பணித் துறை அமைச்சர் அப்படியெல்லாம் செய்யவில்லை, இருந்தாலும் அவர் ஏதோ ஒன்றை வேடிக்கையாகச் சொல்லிவிட்டார், அந்தக் கோபத்திலேதான் நான் சொன்னேன் என்று இதே அவையிலே சொன்னார். அதுதான் இன்றைய நிலை. எதிர்க்கட்சிகள் தேர்தலை மனதில் வைத்துக் கொண்டோ, வேறு காழ்ப்புணர்ச்சியின் காரணமாக...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சொ. கருப்பசாமி, (குறுக்கீடு) இறுதியாகவும் இல்லை, உறுதியாகவும் இல்லை. (குறுக்கீடு) திரு. சொ. கருப்பசாமி.

***திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு சட்டப் பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, இடைக்கால நிதிநிலை அறிக்கையில் புதிய திட்டங்கள் என்று விளம்பர நோக்கில் அலங்காரம் செய்து மக்களை ஏமாற்றுகிற மாயாஜால கண்கட்டி வித்தைபோல இந்த இடைக்கால பட்ஜெட் அமைந்திருக்கிறது. இந்த மாயாஜால கண்கட்டி வித்தையெல்லாம் வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் எடுபடாது என்பதை உங்களுக்குச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இதே

[திரு. சொ. கருப்பசாமி] [2001 ஜனவரி 30

மாமன்றத்தில் முதல்வர் அவர்கள் கள்ளச்சாராய பானைகள்மீது காவல் துறையினுடைய குண்டுகள் பாயும் என்று சொன்னார்கள். ஆனால் சாதாரண மக்கள்மீது திருநெல்வேலியில் கொக்கிரகுளத்தில் துப்பாக்கிச் சூடு நடந்தது. குறிப்பாக கடந்த 17ஆம் தேதி வ.உ.சி. மாவட்டத்தில் காவல் துறையால் சேகர் என்ற வாலிபர் சுட்டுத்தள்ளப்பட்டு, பாளையங்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சரியான முறையில் மருத்துவம் செய்யாமல் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிற நிலை உள்ளது. இந்த ஆட்சியில் கொலை, கொள்ளை, துப்பாக்கிச் சூடு என்று சொல்லி, தற்போது குழந்தைகளை எல்லாம் கடத்திக் கொண்டு போகும் கடத்தல் தொழில் அதிகமாக நடந்து வருகிறது.

என்னுடைய சங்கரன்கோயில் ஒன்றியத்தைச் சேர்ந்த பெருமாள்வெட்டி வேலுச்சாமி என்பவருடைய 10 வயது மகள் செல்வி சரண்யா, வீரசிகாமணியைச் சேர்ந்த செல்லையா என்பவருடைய மகள் மாடத்தி, ஆகியோர் சென்னையிலே வியாசர்பாடி பகுதியில் தொழில் செய்து பிழைப்பதற்காக வந்தவர்கள்; சமீபத்தில் 3 ஆம் தேதி அந்தக் குழந்தைகள் காணாமல் போனார்கள். இதுவரையில் காவல் துறையால் கண்டுபிடிக்க முடியவில்லை. இந்த நிலைதான் இருந்து கொண்டு வருகிறது.

அதேபோல ஆசிரியர் நியமனங்களைப் பெயரளவில் செய்தாலும் தேவையான இடங்களில் ஆசிரியர்கள் மிகக் குறைவாக உள்ளார்கள். குறிப்பாக என்னுடைய சங்கரன்கோயில் தொகுதியில் பாண்டியாபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் கிட்டத்தட்ட 300 மாணவர்கள் இருந்தும் 8 ஆசிரியர்கள் பணியாற்றிய அந்தப் பள்ளியில் தற்போது 2 ஆசிரியர்கள்தான் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களும் சில நேரத்தில் விடுமுறையில் சென்று விடுகிறார்கள். பள்ளிக்கு ஆசிரியரே இல்லாத நிலைமை எங்களுடைய தொகுதியில் இன்னும் நீடித்துக் கொண்டிருக்கிறது.

அதுபோல, விவசாயத்திற்கு மின்சாரம் பகலில் 6 மணி நேரமும், இரவில் 8 மணி நேரமும் தடையின்றி வழங்கப்படும் என்று ஓர் உண்மைக்கு மாறான செய்தி சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், பல நேரங்களில் மின்சாரம் விநியோகிப்பதில் கோளாறு ஏற்பட்டு பாதிப்பான முறையில் மின்சாரம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. மின்சார இணைப்பு கேட்டு பல வருடங்களாக...



2001 ஜனவரி 30]

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தியா சுதந்திரம் அடைந்து, இந்த ஆண்டுதான் முதல் தடவையாக—எங்கள் ஆட்சியை சேர்த்துச் சொல்கிறேன், முதல் தடவையாக—விவசாயிகளுக்கு முறையாக மின்சாரம் கிடைக்கிறது. சுதந்திரம் கிடைத்த காலத்திலேயிருந்து கோடைக்காலத்திலே 4 மணி நேரம்தான் தமிழ்நாட்டிலே மின்சாரம் கிடைத்தது. இந்த ஆட்சியில்தான் தொடர்ந்து எப்போதும்போல கோடைக்காலத்திலே பகலிலே 6 மணி நேரமும் இரவிலே 8 மணி நேரமும் மின்சாரம் கிடைக்கும் என்பதை நம்முடைய முதல்வர் அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

பிற்பகல் 4-20

**திரு. சொ. கருப்பசாமி:** விவசாயிகள் நன்கு உணர்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். விவசாயத்திற்காக மின் இணைப்பு கேட்டு கிட்டத்தட்ட 10, 12 வருடங்களாக காத்திருப்போர் பெயர்ப் பட்டியல் நீண்டு கொண்டே இருக்கிறது. கடந்த ஆண்டும், இந்த ஆண்டும் இலவச மின்சார இணைப்பு விவசாயிகளுக்குக் கொடுக்கப்படவே இல்லை. ஆகையினால் இது, இலவச மின்சாரத் திட்டத்தை இரத்து செய்யும் திட்டமாக மாறி வருகிறது என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல சங்கரன்கோயிலில் வருமுன்காப்போம் என்ற திட்டம் ஒன்று ஆரம்பித்து அதில் மருத்துவர்கள் 4 பேர்கள்தான் வந்தார்கள். ஆண்களும் பெண்களும் என நோயாளிகள் பல பேர் வந்தாலும் அந்த நோயாளிகளுக்குத் தகுந்த சிகிச்சை அளிக்கப்பெறாததால் ஆர்ப்பாட்டமாக மாறி, போராட்டமாக மாறி கடைசியில் காவல் துறையினர் வந்து விரட்டி அடித்தனர். இப்படிப்பட்ட திட்டத்திற்கு பல ஆயிரம் ரூபாய் செலவு செய்தும் முறைகேடுகள் நடந்துள்ளன என்பதை நான் இந்தநேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** துணைத் தலைவர் அவர்களே, இதுவரையிலே கிட்டத்தட்ட 8,000-க்கு மேற்பட்ட முகாம்கள் நடந்திருக்கின்றன. எங்கேயும் போலீஸ் தடியடி நடத்தி முகாமைக் கலைத்ததாக எந்தத் தகவலும் அரசுக்குக் கிடைக்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர் சொல்வது உண்மையாக இருந்து, அதைப்பற்றி எழுதிக் கொடுத்தால் விசாரிக்க அரசாங்கம் தடையாக இருக்காது.

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [2001 ஜனவரி 30

இன்னொன்றையும் சொல்கிறேன். ஏதோ முறையாக நடக்கவில்லை, மருந்துகள் கிடைக்கவில்லை, நோயாளிகளைப் பார்க்கவில்லை என்றெல்லாம் விளம்பரத்திற்காகச் சொல்லுங்கள். ஆனால் வருமுன் காப்போம் திட்டம் மிகச் சிறப்பாக நடைபெற்றிருக்கிறது என்று நாங்கள்கூட அல்ல இன்றையதினம் மத்திய திட்டக் குழு சொல்கிறது. அகில இந்தியாவில் இருக்கக்கூடிய முதலமைச்சர்களும் வந்து பார்த்துவிட்டு அவரவர்களுடைய மாநிலத்திலே அமல்படுத்த இருக்கிறார்கள். மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் திரு. தாக்கூர் அவர்களே, 'ஒரு வரும்முன் காப்போம் திட்டத்தைத் தொடங்கி வைக்க நானே வருகிறேன்; இதைப் பார்த்து அகில இந்திய அளவிலே மத்திய அரசாங்கமே அதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று விரும்புகிறேன்' என்று சொல்லியிருக்கிறார். நீங்கள் விளம்பரத்திற்கு எதைப் பேசினாலும் நாங்கள் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சங்கரன்கோயிலில் நடந்த அந்த முகாமைத்தான் நான் சொல்கிறேன். நான் எனது தொகுதியிலே நடந்ததைக் குறிப்பிட்டுச் சொல்கிறேன். முறைகேடுகள் நடந்துள்ளன என்று. அதேபோல சங்கரன்கோயில் அரசு பொது மருத்துவமனையில் உள் நோயாளிகளாக இருந்து வருகின்ற...

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு பொறுப்புள்ள சட்டமன்ற உறுப்பினர் இங்கே பேசுகிறார் என்ற முறையில் சங்கரன்கோயிலில் நடைபெற்ற வரும்முன் காப்போம் திட்டத்தில் இப்படி ஒரு குறை ஏற்பட்டது என்று நீங்கள் ஏதாவது புகார் எழுதி இருக்கிறீர்களா? அமைச்சருக்கோ அந்தத் துறைச் செயலாளருக்கோ, இயக்குநருக்கோ நீங்கள் ஏதாவது எழுதின கடிதத்தினுடைய பிரதியாவது தங்களிடம் இருக்கிறதா?

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் நடந்ததை நான் இந்த அவையில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு பொதுக்கூட்டம் நடந்தால்கூட ஆளுக்கு ஒரு கருத்தைத்தான் சொல்கிறார்கள். அந்தக் கூட்டம் சரியாக இல்லை என்று ஒருத்தர் சொல்கிறோம். ஒருத்தர் கலவரம் நடந்தது என்று சொல்கிறோம். ஒருத்தர் காலிப்பசங்கள் கூட்டினார்கள் என்று



2001 ஜனவரி 30] [பேராசிரியர் க. அன்பழகன்]

சொல்கிறோம். ஒருத்தர் ஊழல்பேர்வழி கூட்டம் என்கிறோம். ஆளுக்கு ஒன்று சொல்கிறோம். ஆகவே அதற்கு விளக்கம் சொல்ல முடியாது. ஏதாவது திட்டவட்டமான குற்றம் இருந்தால் இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் விசாரித்து தவறு ஏற்பட்டால் அந்தத் தவறை திருத்துகிறோம்.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய சங்கரன்கோயில் அரசு பொது மருத்துவமனையில் உள்நோயாளிகள் இருந்து வருகின்ற வார்டில் மின் விளக்குகள் எரியவில்லை; மின் விசிறி சுற்றுவதில்லை என்று குளிர்கால கூட்டத் தொடர் நடக்கும்போது மாண்புமிகு அமைச்சரிடத்தில் நான் மனு கொடுத்தேன். வேண்டுமானால் நீங்கள் இங்கிருந்தே தொலைபேசியில் கேளுங்கள், அந்த மின் விசிறி ஓடுகிறதா, மின் விளக்கு எரிகிறதா என்று. அப்படி மின் விளக்கு எரிந்தால், மின் விசிறி ஓடினால் நான் இந்த எம்.எல்.ஏ., பதவியை ராஜினாமா செய்யத் தயாராக இருக்கிறேன். நீங்கள் தயாராக இருக்கிறீர்களா? ஏனென்றால் உண்மைச் சம்பவம். நான் குளிர்கால கூட்டத் தொடர் நடக்கும்போது அங்குள்ள ஆஸ்பத்திரி குறித்து கொடுத்த மனுவின்மீது எந்த நடவடிக்கையும் இல்லை.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்தக் குறையும் சொல்ல முடியாமல் மின் விளக்கு எரியவில்லை, மின் விசிறி இல்லை என்கிறார்கள். அங்கே இருக்கக்கூடிய பொது நிறுவனங்களிடத்திலே சொல்லியிருந்தால்கூட ஒரு மின் விசிறியையும், ஒரு மின் விளக்கையும் வாங்கிக் கொடுத்திருப்பார்கள். சட்டமன்ற உறுப்பினருக்கு அவ்வளவு அக்கறை அந்த மருத்துவமனைமீது இருந்தால் அவருடைய நிதியிலேயிருந்துகூட அதை வாங்கிக்கொடுத்திருக்கலாம். அது ஒன்றும் இலட்சக் கணக்கிலே செலவாகக்கூடிய ஒன்று அல்ல. ஒரு Bulb அதிகபட்சம் போனால் 10 ரூபாய் 15 ரூபாய் இருக்கும்; ஒரு மின் விசிறி அதிகப் பட்சம் போனால் 600 ரூபாய் இருக்கும். இதை பொது மக்களுடைய நன்மையைக் கருதி சட்டமன்ற உறுப்பினரேகூட செய்திருக்கலாம். அவராலே முடியாத காரணத்தினாலே நாங்கள் இப்போது செய்யத் தயாராக இருக்கிறோம்.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எழுத்து மூலமாகக் கொடுத்த அந்தச் செய்தியை நான் இந்த அவைக்குத் தெரியப்படுத்தியிருக்கிறேன்.

பிற்பகல் 4-25

அடுத்தபடியாக எங்களுடைய சங்கரன்கோயில் நகரத்திற்குத் தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம் தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. இப்போது மழை பொய்த்ததன் காரணமாகவும், மின்சாரக் கோளாறு ஏற்பட்டு ஜெனரேட்டர் இல்லாத நிலைமை காரணமாகவும் குழாய்களில் பழுது ஏற்பட்டு மாதத்திற்கு இரு முறைதான் தண்ணீர் இப்போது விநியோகிக்கப்பட்டு வருகிறது. அதேபோல நகராட்சிப் பகுதிகளை ஒட்டியிருக்கும் பாரதியார் நகர், திருப்பூர் குமரன் நகர், முல்லை நகர், எழில் நகர் போன்ற பல்வேறு பகுதிகளுக்குக்கூட தாமிரபரணி தண்ணீர் வழங்கப்படவில்லை என்று அந்தப் பகுதி மக்களெல்லாம் பல போராட்டங்களைச் செய்திருக்கின்றார்கள். ஆனால் எந்தப் பலனும் ஏற்படவில்லை.

தற்போது போக்குவரத்துத் துறையைப் பொறுத்தவரையில் குறிப்பாக எங்களுடைய சங்கரன்கோயில்-திருநெல்வேலி சாலையில் ஓடுகின்ற பேருந்துகள் மிகவும் மோசமாக இருந்து வருகின்றன. காரணம், சாலைகள் மிகவும் பழுதடைந்த சாலைகளாக இருக்கின்றன. குறிப்பாக நகரப் பேருந்துகள் ஓடிக்கொண்டிருந்த சாலைகளான வேப்பங்குளம் சாலை, ஆட்கொண்டார் குளம் சாலை, கே.வி. ஆலங்குளம் சாலை, ஆண்டார்குளம் சாலை, சின்ன கோவிலாங்குளம் சாலை, போன்ற சாலைகளிலும் ஊத்தாங்குளம், செவல்குளம், மலையாண்குளம், கள்ளிக்குளம், கரிசல்குளம், வெள்ளாளங்குளம், வாகைக் குளம், குருவிக் குளம், இலந்தைக்குளம், தேவர்குளம் போன்ற பல்வேறு கிராமங்களுக்கும் சென்றுகொண்டிருந்த நகரப் பேருந்துகள் எல்லாம் தற்போது நிறுத்தப்பட்டுவிட்டன. காரணம், சாலைகள் மிகவும் பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. கிட்டத்தட்ட இந்த 4½ ஆண்டு காலமாக எந்தச் சாலையும் சரி செய்யப்படவில்லை. அதுபோல தற்போது....

***மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தவறான தகவலையே இந்தச் சட்டமன்றத்திலே தெரிவித்துக் கொண்டேயிருக்கிறார். வேறு ஒன்றும் இல்லாததனாலே சொல்கிறார் என்று நினைக்கிறேன். அண்மையிலே நான் அந்தத் தொகுதிக்குப் போயிருந்தேன். கிட்டத்தட்ட 40 கிராமங்களுக்குப் போயிருந்தேன். சட்டமன்ற உறுப்பினரைத் தேடினேன். அவரைக் காணவில்லை. மக்களிடமும் சொல்லிவிட்டு வந்தேன். தேவர்குளம் சாலையெல்லாம் சிறப்பாகவே இருக்கிறது.



**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேருந்துகளைப் பற்றிக்கூடச் சொன்னார்கள். எந்தப் பேருந்து ஓடவில்லை என்றால் அவற்றை ஓட்டுவதற்குத் தயாராக இருக்கிறோம். ஏனென்றால் நேற்றுகூட முன்னாள் முதல்வர் ஓர் அறிக்கை கொடுக்கிறார். கிராமப்புறங்களிலே கிட்டத்தட்ட 3,300 Mini Bus விட்டிருக்கிறோம். Mini Bus என்றாலே கிராமத்திலே இருப்பதுதான். 4 கிலோமீட்டர்தான் அந்தப் பேருந்துகள், பேருந்துகள் ஓடுகிற இடத்திலே ஓட்டலாம். மீதியெல்லாம் கிராமப்புறத்திலே இதுவரை பேருந்துகளே ஓடாத இடத்திலேதான் ஓட்டியிருக்கிறோம். நேற்று அந்த அறிக்கையிலேகூட சொல்லியிருக்கிறார்கள், கிராமங்களுக்கு ஓட்டவில்லை என்று. Mini Bus என்றால் எங்கே ஓடுகிறது என்பதையாவது முதலிலே உங்கள் தலைவருக்கு நீங்கள் சொன்னீர்கள் என்றால் நன்றாக இருக்கும். அதோடு ஒரு எம்.எல்.ஏ.வுக்கு இரண்டு புதிய வழித்தடங்கள் என்று சொல்லி உங்கள் முதற்கொண்டு நாங்கள் எல்லோருக்கும் கொடுத்திருக்கிறோம். இதிலே 500 வழித்தடங்கள், புதிய Route கொடுத்திருக்கிறோம். கிட்டத்தட்ட 1,500 புதிய வழித்தடங்களில் இந்தப் பேருந்துகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தங்களுடைய அனுமதியோடு இந்தப் புகைப் படங்களைக் கொண்டு வந்துள்ளேன். சரியாக ஓடாமல் இழுத்துச் செல்கின்ற...

*(இரண்டு புகைப் படங்களை அவையில் காட்டினார்)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** என்னிடம் காட்டாமல் அப்புறம் தங்களுடைய அனுமதியோடு என்றால் என்ன அர்த்தம்? முன்கூட்டியே காட்டி நான் அனுமதி கொடுத்திருந்தால்தான், தங்கள் அனுமதியோடு என்று சொல்ல முடியும்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் போகிற அரசாங்க கார்கூட ஓரிடத்திலே நின்றுபோய், அதற்கப்புறம் அந்தக் காரை இது மாதிரிதான் ஏதோ தள்ளிக் கொண்டு போனார்கள். அதனாலே கார் தள்ளிக் கொண்டு போகிற இடத்தில் நாம் போய் நிற்கக்கூடாது. (சிரிப்பு).

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேருந்துகள் மிகவும் மோசமான அளவில், நலிந்து

[திரு. சொ. கருப்பசாமி] [2001 ஜனவரி 30

பரிதாபமான நிலையில் ஓடிக்கொண்டிருப்பதைத்தான் நான் ஆதாரத்தோடு தெரிவித்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** எவ்வளவு புது வண்டியாக இருந்தாலும்கூட, அமைச்சர் வண்டியாக இருந்தால்கூட சமயத்தில் Repair ஆகும். அது ஏன் Repair ஆகிவிட்டது என்று அங்கே நின்று கொண்டு பேசிக்கொண்டிருக்கக்கூடாது. அதேமாதிரி, இப்படி ஏதோ ஒரு புகைப் படத்தினை எடுத்து வைத்துக்கொண்டு குறை பேசுவது பொருந்தாது. தமிழ்நாட்டிலே எத்தனை ஆயிரம் பஸ்கள் ஓடுகின்றன, எவ்வளவு புதிய Bus-போடப்பட்டிருக்கின்றன, எந்த அளவிற்கு முந்தைய நிலைமை சீரடைந்திருக்கிறது, எந்த அளவிற்கு ஏற்கெனவே பஸ்-சிலேயே கை வைத்து அதிலேயிருந்து பணம் எடுத்தார்கள், இப்போது எந்த அளவிற்கு நேர்மையாக நடக்கிறது என்பதையெல்லாம் பார்க்க வேண்டும். எங்காவது குறை இருந்தால் நீங்கள் சொல்லுங்கள், அந்தக் குறையைப் போக்கலாமே தவிர, இதையே வைத்துக்கொண்டு அதுவேதான் நாடு பூராவும் என்றால், ஆயிரக்கணக்கில் மிச்சம் ஓடுகிற பஸ்சை எல்லாம் யார் படம் எடுக்கிறது?

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதேபோல Ration Card முழுமையாகக் கொடுக்கப்படவில்லை.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** துணைத் தலைவர் அவர்களே, கொடுக்கப்படுகிற Cards எல்லாம் முழு முழு Card-ஆகக் கொடுத்திருக்கிறார்கள்.

பிற்பகல் 4-30

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்வது அத்தியாவசிய அடிப்படைப் பொருட்களை வாங்குவதற்கு, ஒரு குடும்பத்திற்குத் தேவையான அனைத்துப் பொருட்களும் முறையாகக் கிடைக்க வேண்டும் என்பதற்காக அந்த அட்டை வழங்கப்பட்டு வருகிறது. அந்த அட்டைகள் முழுமையாகக் கொடுக்கப்படவில்லை. இந்த நாலே முக்கால் ஆண்டில் இன்னும் இந்த Ration Card-களைக்கூட கொடுத்து முடிக்கப்படவில்லையே என்கிற அந்த எண்ணத்தில் நான் சொல்கிறேன். எனது தொகுதியில் மண்ணெண்ணெய் சரியான முறையில் எரியவில்லை. அந்த அளவுக்கு...



2001 ஜனவரி 30]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மண்ணெண்ணெய் தீக்குச்சி வைத்துக் கொளுத்தினால்தான் எரியும். சரியான முறையில் கொளுத்த வேண்டும். (சிரிப்பு)

**திரு. சொ. கருப்பசாமி:** மண்ணெண்ணெய்.....

***மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) உங்களுக்கு எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் வாங்கித் தருகிறேன். உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர், மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போல குறிப்பிட்டுச் சொல்லவேண்டும். மத்திய அரசினுடைய கணக்குப்படி குடும்பங்களுடைய எண்ணிக்கை 1 கோடியே 46 இலட்சம்தான் தமிழ்நாட்டில். ஆனால் ஒரு கோடியே 59 இலட்சம் குடும்ப அட்டைகள் இதுவரை வழங்கப்பட்டிருக்கின்றன. மொத்தம் கடந்த மாதம் வரை வந்திருந்த மனுக்களின்மீது முழுமையாக ஆய்வு செய்யப்பட்டு, 5 இலட்சம் அட்டைகள் புதிதாகவே வழங்கப்பட்டிருக்கின்றன. இன்னும் எங்களிடம் இந்த மாதம் 30 ஆயிரம் மனுக்கள் புதிதாக வந்திருக்கின்றன. மீதமிருக்கிற மனுக்களே 1 இலட்சத்து 5 ஆயிரம் மனுக்கள்தான், இன்னும் நாங்கள் சரிபார்க்க வேண்டிய மனுக்களே. பாக்கி அத்தனை பேருக்கும் கேட்ட இடத்திலே கொடுத்திருக்கிறோம். இது ஒரு தொடர் நடவடிக்கையாக இருக்கிறது. இந்த மாதம் கொடுத்துவிட்டோம் என்றால் அடுத்த மாதம் இல்லை என்று சொல்லமுடியாது. தினமும் புதிய மனுக்கள் வருவதும், அதைச் சரிபார்ப்பதும், போலி Card-களை அழிப்பதும் என்று அது தொடர் நடவடிக்கையாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்; சங்கரன்கோயில் பகுதியிலே எவ்வளவு மனுக்கள் வந்திருக்கின்றன என்று பார்த்து அவை ஆய்வு செய்யப்பட்டு, அப்படித் தரப்படாமல் இருந்தால் தரச் செய்வோம், நிச்சயமாக நாங்கள் செய்வோம்.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சங்கரன்கோயில் தாலுகாவிலே 5000-க்கும் மேற்பட்ட Ration அட்டைகள் கேட்டு விண்ணப்பங்கள் கொடுக்கப்பட்டு அதை முறையாகப் பரிசீலனை செய்து தற்போது 2000-க்கும் மேலாக Card-கள் வந்ததாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்களே தவிர இன்னும் அந்த விண்ணப்பதாரருக்கு Ration அட்டைகள் வழங்கப்படவில்லை. மேலும் அந்த Ration கடைகளில் வழங்கப்படுகின்ற மண்ணெண்ணெய்

[திரு. சொ. கருப்பசாமி] [2001 ஜனவரி 30

மிகவும் கலப்படமாக கருப்பாகவும், சிவப்பாகவும் இருந்து கொண்டிருக்கிறது. அந்த மண்ணெண்ணெய் அரிக்கன் விளக்கில் விட்டு எரிய வைக்கும்போது..

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதை மேலேயிருந்து ஊற்றிப் பார்க்கும்போது, பார்த்தால் இடையிலே வெள்ளையாகக்கூட வரும் (சிரிப்பு)

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த மண்ணெண்ணெய்யை அரிக்கன் விளக்கில் விட்டு அந்த விளக்கு எரியும்போது பார்த்தால்தான் தெரியும். கிராமவாசிகள் அதுவும் குறிப்பாக ஏழையெளிய மக்கள் இல்லங்களில்தான் மின் விளக்கு இல்லாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. நீங்கள் பல வண்ண விளக்குகளில் இருந்துவிடலாம். ஆனால், ஏழையெளிய மக்கள் அந்த அரிக்கன் விளக்கில் அந்த எண்ணெய்யை விட்டு வெளிச்சத்திற்காக எரியவைக்கும்போது எரிகிற அந்த விளக்கு வெளிச்சமில்லாமல் புகை மண்டலமாக, அந்த விளக்கிற்குள் புகை மண்டலமாகத்தான் ஒளி வருகிறதே தவிர வேறு ஒன்றுமில்லை...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அந்தப் புகை எந்தக் கலரில் வருகிறது என்பதையும் சொல்லிவிடுங்கள். (சிரிப்பு)

**திரு. சொ. கருப்பசாமி:** அந்த அளவிற்கு இப்போது நிலைமை இருக்கிறது. அந்த மண்ணெண்ணெய் மிகவும் தரமில்லாத எண்ணெய்யாக Ration கடைகளிலே வழங்கப்பட்டு வருகிறது.

அடுத்து விசைத்தறி. எங்களுடைய சங்கரன்கோயில் தொகுதியில் விசைத் தறியை நம்பி இருக்கின்ற 15,000 குடும்பங்களும் இப்போது நலிவடைந்து அந்தத் தொழிலையே செய்ய முடியாத அளவிற்கு உரிமையாளர்களும் சரி, தொழிலாளர்களும் சரி மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக சங்கரன்கோயிலில் அரசு நடத்தி வந்த விசைத் தறிக்கூடத்தைப் பொறுத்தவரையில் 3 வருடங்களாக மூடு விழா நடந்துகொண்டிருக்கிறது. நான் பல முறை அமைச்சரிடத்தில் மனு கொடுத்தும் அதைத் திறப்பதற்கான எண்ணமே இல்லை. காரணம் அது எதிர்க்கட்சித் தொகுதி என்கிற காரணத்தால் இப்போது திறக்கப்படாமல் உள்ளதால் அந்தத் தொழிலாளர்கள் எல்லாம் பாதிக்கப்பட்டு வருகிறார்கள்.



2001 ஜனவரி 30] [திரு. சொ. கருப்பசாமி]

மேலும் தாழ்த்தப்பட்ட-பழங்குடியினர்களுக்கான காலியிடங்களை நிரப்புவதற்கு உச்ச நீதிமன்றத் தீர்ப்பை ஏற்று இந்த அரசு தீர்மானம் நிறைவேற்றி அரசாணை 44-ஐ இயற்றியது. இப்போது அந்த ஆணையை இரத்து செய்துவிட்டதாக ஆதிதிராவிட நலத்துறைச் செயலாளர் மூலமாக மற்ற அரசுச் செயலாளர்கள் அனைவருக்கும்—அரசாணை 44-ஐ இரத்து செய்யப்பட்டதாக—தாக்கீதுகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன. இது உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பை எதிர்க்கும் செயலாக இருந்துள்ளது என்பதை ...

பிற்பகல் 4-35

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே இதுகுறித்து இந்த அவையிலே சொல்லியிருக்கிறேன். உச்ச நீதிமன்றத் தீர்ப்பு குறித்து, முழுமையாகப் படிக்காமல், தெரிந்து கொள்ளாமல் ஓர் உறுப்பினர் இப்படி சொல்வது முறையல்ல. 9 நீதிபதிகள் அடங்கிய ஒரு நீதிமன்றத்தில் 8 பேர் ஒரு மாதிரியாகத் தீர்ப்பு அளித்தார்கள். ஒரேயொரு நீதிபதி கொடுத்த தீர்ப்பை வைத்து, ஏற்கெனவே இருந்த செயலாளர் அரசுக்கு அதை அனுப்பி, இப்படி அரசு உத்தரவு பிறப்பிக்கலாம் என்று சொன்னார். நாங்கள் உண்மையிலேயே அரிசனங்களுக்கு நல்லது செய்வதாக இருக்கிறது என்று எண்ணித்தான் அந்த ஆணையைப் பிறப்பித்தோம். பிறகுதான், 8 நீதிபதிகள் அதற்கு எதிராகத் தீர்ப்பு அளித்திருக்கிறார்கள் என்பது தெரிய வந்தது. அதன்படி பார்த்தால் Supreme Court Order-க்கு நாம் தவறாக ஆணை பிறப்பித்திருக்கிறோம் என்று தெரிந்து, அந்த ஆணையை மறுபரிசீலனை செய்து, G.O. எண் 33-ஐப் பிறப்பித்தோம். நான் அன்றைக்கே சொன்னேன். உங்களுடைய தலைவியும் வெளியிலே பேசுகிறார்கள். நம்முடைய தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்களும் சொல்கிறார்கள். எங்களுக்கு இதிலே கௌரவப் பிரச்சினையே கிடையாது. எங்களுடைய பிரச்சினை எல்லாம் தாழ்த்தப்பட்ட மக்கள், அரிசன மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள், இவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்பதுதான். அந்த அரசாணை 33 தவறு, 44-தான் வேண்டும் என்று சொன்னால், இந்த அவையிலே இருக்கக்கூடிய எல்லாக் கட்சித் தலைவர்களும் எழுதிக்கொடுத்தால் அதை மறுபரிசீலனை செய்து—அரசாங்க ஊழியர்களோடு கலந்து பேசி, ஒரு குழு அமைத்து—அரசு ஆணை பிறப்பிப்பதற்குத் தயாராக இருக்கிறது. எங்களுக்கு எந்தவிதமான கௌரவப் பிரச்சினையும் இதிலே இல்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நீண்டதொரு விளக்கத்தை அளித்தார்கள். நம்முடைய தமிழகத்திலே இருக்கக்கூடிய தாழ்த்தப்பட்ட மக்கள் அத்தனை பேரும் தங்களுக்கு அந்த G.O. 44 அப்படியே அமல்படுத்தப்பட வேண்டும் என்றும் A, B, C, மற்றும் D ஆகிய எல்லா Category-யில் உள்ளவர்களும் தங்களுக்குப் பதவி உயர்வு கிடைக்கக்கூடிய வாய்ப்பு அதிலே இருக்கிறது என்றும் ஆகவே, அதுதான் தங்களுக்கு வேண்டும் என்றும் கேட்கிறார்கள். அதேபோல எதிர்க்கட்சியிலே இருக்கக்கூடிய நாங்கள் எல்லாம்கூட ஒருமித்த கருத்தோடு அதையேதான் சொல்கிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எழுதிக் கொடுக்க வேண்டும் என்று சொல்கிறார். சட்டமன்றத்திலே பேசுவதே நிச்சயமாக எழுதிக்கொடுப்பதைவிட மிக முக்கியமான ஒன்றுதான். ஆகவே, இந்தச் சட்டமன்றத்தின் வாயிலாக நான் தங்களைக் கேட்டுக்கொள்வது எல்லாம், ஆதிதிராவிட மக்கள் வேண்டுகோளை ஏற்கெனவே விடுத்திருக்கிறார்கள், ஆகவே, மீண்டும் அதே G.O. 44-ஐ, A,B,C மற்றும் D என்கிற அந்த நான்கு Category-யிலே உள்ள எல்லோருக்கும் வாய்ப்பு கிடைக்கக்கூடிய அளவிற்கு நீங்கள் ஆவன செய்வீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** முதலாவது அரசாணை 33-லே A, B, C, மற்றும் D என்கிற இந்த 4 Category-யிலே உள்ளவர்களுக்கு இப்போது பாதுகாப்பு இல்லையா? இரண்டாவது, எழுதிக் கொடுங்கள் என்று கேட்பது எங்களுக்காக அல்ல. நாளைக்கு வெளியிலே எப்படி வேண்டுமானாலும் திசை திருப்பிப் பேசலாம். நாங்கள் எதை வைத்துக் கொண்டு அரசாணையை மறுபடியும் புதியதாகப் போடுவது? எதிர்க்கட்சிகள் அரசுக்கு ஒரு வேண்டுகோளை வைத்திருக்கின்றன. அதை நாங்கள் பரிசீலித்தோம். இந்த அரசுக்கு எந்தவிதமான கௌரவப் பிரச்சினையும் இல்லை. எனவேதான், 33-ஐ மாற்றி 44 பிறப்பிக்க எதிர்க்கட்சிகளைக் கொண்ட ஒரு குழுவை அமைத்து, அந்தக் குழு அரசு ஊழியர்களோடு கலந்து பேசி, சம்பந்தப்பட்டவர்களோடு கலந்து பேசி ஓர் அறிக்கை தந்தால் அதை நிறைவேற்ற நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று இப்போதும் சொல்கிறோம். இல்லை, இல்லை, நாங்கள் எழுதி கொடுக்க வேண்டியதில்லை. இங்கு பேசியதே ஓர் ஆதாரம்தான் என்று சொன்னால், எல்லாக் கட்சித் தலைவரும் சொன்னால், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதைப் பரிசீலிப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள்.



**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அனைத்துக் கட்சிக் கூட்டத்தை நடத்துவதைவிட ஆதிதிராவிடர் நலத் துறையினுடைய செயலாளரைக் கொண்டு சட்டமன்ற எதிர்க்கட்சிகளை அழைத்து விவாதித்தால் அதிலே இந்தக் கருத்துக்களைச் சொல்லி, வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். G.O. என்று சொல்லும்போது அதிலே குழப்பங்கள் இருக்கின்றன. அதை இப்போது இந்த மன்றத்திலே விவாதிப்பதற்கு நேரம் கிடையாது. அமைச்சருடைய வாக்குறுதியை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆகையினால், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைச் செயலாளரைக் கொண்டிருக்கிற அந்தக் கூட்டத்தை உடனடியாகக் கூட்டச் சொன்னால், அதிலே விவாதிப்பதற்குத் தயாராக இருக்கிறோம். அந்தக் கூட்டத்தைக் கூட்ட ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** போதும். அதைத்தான் அவர் ஒத்துக்கொண்டாரல்லவா? திரு. சொ. கருப்பசாமியினுடைய நேரம் போகிறது. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள், நாம் என்ன முடிவு எடுக்கிறோம் என்பது வேறு. முதலமைச்சர் அவர்களே அனைத்துக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் கருதினால், அதை நாம் ஏற்கலாம் என்ற எண்ணத்தைத் தெரிவித்தார்கள். அது வேறு. Supreme Court தீர்ப்பில் நீதிபதிகள் 8 பேர் சொன்ன தீர்ப்பிற்கு மாறாக ஒருவர் சொன்ன தீர்ப்பை நடைமுறைப்படுத்துகிறபோது அதிலே மாறுபாடு கொள்பவர்கள், 8 பேர் சொன்ன தீர்ப்பிற்கு மாறாக இந்த அரசு செயல்படுவதாகக் குற்றம்சாட்டுவர். 8 பேர் சொன்ன தீர்ப்புதான் கட்டுப்படுத்தக்கூடிய வலிமை உடையது. Supreme Court Bench தீர்ப்பு என்பது ஒருவர் சொன்னது ஆகாது. பெரும்பாலோர் சொன்னதே ஆகும். எனவே, அதற்கு மாறாகச் செய்கிறபோது அரசாங்கம் Supreme Court தீர்ப்பிற்கு மாறாகச் செய்கிறது என்று யாரும் வழக்குத் தொடர வாய்ப்பு இருக்கிறது. அதையும் கருதிப்பார்த்து ஆலோசனை சொல்லக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. இரா. விசுவநாதன்:** *மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அடிப்படையிலேயே அதிலே அரசு செய்திருக்கிற தவறை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அரசமைப்புச் சட்டம் 16-ஏ,* Article *16-ஏ-வின்படி ஆதிதிராவிட மக்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற அடிப்படை உரிமையாகக் கருதப்படுகிற, அவர்கள் பயன்படுத்தி வந்த அந்த உரிமையை* Supreme Court *தீர்ப்பைக் காரணம் காட்டி, ஒரு சாதாரணக் கடிதம் மூலம்—அரசாணை என்றுகூட சொல்ல முடியாது—அரசாணைக்குரிய அந்தஸ்துகூட அதற்குக் கிடையாது—ஆதிதிராவிடர் நலத் துறையினுடைய உதவி இயக்குநர் அந்தஸ்தில் இருக்கிற ஒரு அதிகாரி, கடிதம் மூலம் இரத்து செய்வது என்பது அரசமைப்புச் சட்டத்திற்கு முரணானதா இல்லையா என்பதுதான் என்னுடைய கேள்வி.*

*பிற்பகல் 4-40*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** *மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஓர் அதிகாரி* Supreme Court*-ல் சொல்லப்பட்ட தீர்ப்பிலே, ஒரு நீதிபதி சொன்னதை, அதுதான் ஆணை என்று அரசாங்கத்தையே அவர் வேண்டுமென்று செய்தார் என்று கூட நான் கருதமாட்டேன். அதுதான் தீர்ப்பு என்று நினைத்து அவர் செய்துவிட்டார். அது தீர்ப்பு அல்ல. தீர்ப்பு அல்லாத ஒன்றின் அடிப்படையில் ஓர் ஆணை வெளியிட்ட காரணத்தால்,* Contempt of Court *வரக்கூடிய அளவிற்கு நாம் அதைப் பயன்படுத்தக் கூடாது என்ற முறையில் அந்தக் குற்றச்சாட்டுக்கு ஆளாகாமல் இருக்க* Supreme Court *நீதிபதிகள் 8 பேர் சொன்ன தீர்ப்பை அடிப்படையாக வைத்தே இரண்டாவது ஆணை வெளியிடப்பட்டது.*

மற்றொன்று. ஏற்கெனவே ஆதிதிராவிட மக்கள் அனுபவித்துக் கொண்டிருந்ததாகச் சொல்வது தவறு. அனுபவிக்கவேயில்லை. நாம் ஆணை பிறப்பித்தோம். அது அப்போது செயல்படுத்தப்படவில்லை. செயல்படுத்துவதற்கு முற்பட்ட கட்டத்தில்தான் பல இடங்களில் 2,500 பேர் அளவுக்கு ஆதிதிராவிடர்கள் அல்லது எஸ்.சி. என்று சொல்வது தான் மரியாதை. எஸ்.சி./எஸ்.டி.க்களுக்கு வேலை வழங்கப்பட்டிருக்கிறது. அது தொடரும். வழங்குவதற்குத் தடையில்லை. எந்த முறையை வைத்துக்கொள்கிறோமோ அந்த முறைக்குத்தான் Supreme Court தீர்ப்பு ஒத்துவரவில்லை என்பதால் இந்த மாற்றம் ஏற்பட்டது. Supreme Court



தீர்ப்பை மதிக்கிறோமா, இல்லையா என்கிற கேள்விதான் இதில் எழும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி, (குறுக்கீடு) திரு. ஞானசேகரன், உட்காருங்கள். அப்புறம் வாய்ப்பு தருகிறேன். டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அரசாணை எண் 44 உருவாவதற்கு ஏறக்குறைய இரண்டு வருடங்களுக்கு மேலாக, தொடர்ச்சியாக வெள்ளை அறிக்கையை வலியுறுத்தி போராடிப் பெற்ற நான் சில கருத்துக்களை முன்வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்பொழுது அரசாணை 44-ஆ, 33-ஆ என்பது முக்கியம் அல்ல. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அனைத்து அரசுத் துறைகளிலும் அனைத்து மட்டங்களிலும் அவர்களுக்குரிய பங்கு கிடைக்க வேண்டுமென்பதே மிக முக்கியம். அந்த அடிப்படையிலே 44-ஓ, 33-ஓ என்ற விவாதம் முக்கியம் அல்ல. இவர்களுக்குண்டான பங்கு கிடைப்பதற்கு மீண்டும் எல்லோருடைய கருத்துக்களையும் பெற்று—ஏற்கெனவே 11 பேர் கொண்ட ஒரு கமிட்டி, அது ஸ்டாண்டிங் கமிட்டியாக இருக்கிறது—அந்தக் கமிட்டியை உடனடியாக அழைத்து அதன் மூலமாக முடிவெடுப்பதுதான் சரி என்று நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கருப்பசாமி, சீக்கிரம் பேசி முடியுங்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அரசாணை பற்றியோ அல்லது அரசாணை வெளியிட்டது பற்றியோ பிரச்சினையல்ல. ஆதிதிராவிட மக்களுடைய நலன்தான் பிரச்சினை. அந்த அடிப்படையிலேதான் அது கருதப்படவேண்டுமென்ற ஆலோசனையை இந்த அரசு மனதார ஏற்றுக் கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் முதலமைச்சர் அவர்களும் ஏற்கெனவே அந்தக் கருத்தைத் தெரிவித்தார்கள்.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த அரசாணை 44 முறையாக நீடிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக என்னுடைய சங்கரன்கோயில் தொகுதியில் கடந்த ஆண்டு ஏழை எளிய மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய இலவச வேட்டி சேலை வழங்கப்படவில்லை.

முந்தைய ஆண்டு கொடுக்கப்படாமல் இருந்த, தாலுகா அலுவலகத்திலிருந்த அந்த இலவச வேட்டி சேலையோடு இதையும் சேர்த்து கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். காரணம் இந்த ஆண்டு எங்கள் சங்கரன்கோயில் தொகுதிக்குக் குறைவாக வந்ததன் காரணமாக இன்னும் அனைத்து ஏழை எளிய மக்களுக்கும் கொடுக்கப்படவில்லை என்பதை நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கால்நடைத் துறையில் மருத்துவச் செலவுக்காக ஒதுக்கப்படும் நிதி அனைத்து மாவட்டங்களுக்கும் சமமாகப் பிரித்துக் கொடுக்கப்படுகிறது. இதன் காரணமாக சில மாவட்டங்களில் அதிகமாக கால்நடைகள் இருந்து அந்தக் கால்நடைகள் நோயுற்ற நேரத்தில் மருந்துகள் கிடைக்காமல் போனதால்—மிகவும் தாமதமாக மருந்துகள் வாங்கியதில் ஏற்பட்ட விளைவாக—கால்நடைகளெல்லாம் இறந்து போய்விட்டன. காரணம், இந்த 4¾ ஆண்டுக் காலத்தில்....

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எல்லா மாவட்டங்களுக்கும் சம நிலையில்தான் மருந்துகள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. அதுவும் தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்தின் மூலமாக அது விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எந்தக் குறைபாடும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமமாகக் கொடுப்பதன் காரணமாகத்தான் சில மாவட்டங்களில் அதிகமாக இருந்து கொண்டிருக்கிற கால்நடைகளுக்கு மருந்து கொடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டு, கால்நடைகள் பாதிப்புக்கு உள்ளாகின்றன என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 4-45*

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** தேவைப்பட்டால் அதிகமாகக் கொடுக்கவும் ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சொ. கருப்பசாமி:** அடுத்தபடியாக சங்கரன்கோயில் பகுதியில் இருக்கின்ற விவசாயிகள் கறவை மாடு மூலமாக பால் உற்பத்தி செய்து



வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் உற்பத்தி செய்கின்ற பாலை வாங்காமல் திருப்பி அனுப்புகிறார்கள். இதனால் பல பிரச்சினைகள் ஏற்பட்டுவிட்டன. மேலும் பால் உற்பத்தியாளர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய பணப் பட்டுவாடா, கொள்முதல் பணம் பல மாதங்களாக நிலுவையில் இருந்துகொண்டிருக்கிறது. இதனால் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். இப்படி கரும்பு விவசாயிகளாக இருந்தாலும் சரி, தேயிலை விவசாயிகளாக இருந்தாலும் சரி, தென்னை விவசாயிகளாக இருந்தாலும் சரி, விவசாயிகள் மிகவும் துன்பப்பட்டு, துயரப்பட்டு பரிதாப நிலையில் இருந்துகொண்டிருக்கிறார்கள். இந்தியாவிலே தமிழ்நாட்டில்தான் இந்த நிலைமை இப்போது விவசாயிகள் மத்தியிலே இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. சொ. கருப்பசாமி:** முடித்து விடுகிறேன். இந்த 4¾ ஆண்டு ஆட்சிக் காலத்தில் தமிழ்நாட்டு மக்கள் இந்த ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டார்கள். மு.க. ஆட்சிக்கு முற்றுபுள்ளி வைத்துவிட்டு, அடுத்து வருவது அண்ணா தி.மு.க. ஆட்சி, அம்மா ஆட்சி என்று சொல்லி, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** துணைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்களும், கிருஷ்ணசாமி அவர்களும், கருப்பசாமி அவர்களும் மற்ற மாண்புமிகு உறுப்பினர் விசுவநாதன் போன்றவர்கள் எல்லாம் ஒரு கருத்தைச் சொன்ன காரணத்தாலே, ஒரு விளக்கத்தை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசாணை 44, மற்றும் 33-ஐப் பற்றி இங்கே விவாதித்தார்கள். உண்மை என்னவென்றால், உச்சநீதிமன்றத் தீர்ப்பு 16-11-1992 அன்று வெளி வந்தது. இரண்டு மாதங்கள் முடிவதற்கு முன்பே இதைத்தான் நான் வலியுறுத்த விரும்புகிறேன்—பதவி உயர்வில் இட ஒதுக்கீடு கூடாது என்ற முடிவையும், சில பதவிகளுக்கு திறமை வேண்டுமென்ற காரணத்தைக் காட்டி, அந்தப் பதவிகளுக்கு இட ஒதுக்கீட்டுக் கொள்கையிலிருந்து விலக்கு அளிக்கலாம் என்ற முடிவை எடுத்தது ஏற்கெனவே இருந்த அம்மா ஆட்சி. ஆகவே, நாங்கள் அந்தப் பதவி உயர்விலேயோ, அல்லது வேறு எதிலேயும் தலையிடவில்லை. அது ஒன்று. இரண்டாவதாக, இந்த அரசு பொறுப்பேற்றுக்

கொண்டதற்குப் பிறகு 44 மற்றும் 33-ஐ மறுபடியும் ஆராய்ந்துதான்—மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணசாமி அவர்கள் இங்கே தெரிவித்ததைப்போல—அரிசன மக்களுக்கும், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் எது நல்லதோ அதைச் செய்ய நாங்கள் முடிவு செய்தோம். இப்பொழுதும் சொல்கிறேன். அரசியல் ரீதியாகவும் இதனை அணுகாமல், ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் ஆகியோருக்கு நாம் எடுக்கும் முடிவுகளால் எந்தத் தீங்கும் ஏற்பட்டுவிடாமல் எச்சரிக்கையாக இருப்பது மிக மிக அவசியம் என்ற அடிப்படையில் கருத்து அறிவிக்கப்படுமானால் அதை நடைமுறைப்படுத்த இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதை மீண்டும் இந்த அவையிலே தெரிவிக்கிறேன்.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கத்தைச் சொன்னார்கள். அரசமைப்புச் சட்டம் 16(ஏ)-ன்படி ஆதிதிராவிடர்களுக்குரிய உரிமையில் பணி மூப்பிற்கு ஒதுக்கீடு பொருந்தாது, பதவி உயர்விற்கு ஒதுக்கீடு பொருந்தாது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியதன் அடிப்படையில், உச்ச நீதிமன்றத்திற்கு எதிரான கருத்தை ஓர் அரசு செயல்படுத்த முடியாது என்ற காரணத்தினால் Court-ஐ மதிக்க வேண்டுமென்ற காரணத்திற்காக, அன்றைக்கு இருந்த புரட்சித் தலைவி அவர்கள் அரசு, தற்காலிகமாக அந்த Court உத்தரவுக்கு எதிரான முடிவை எடுக்கக் கூடாது என்பதற்காக, அதை ஒத்துக்கொண்டது. ஆனால், அதற்குப் பின்பாக இந்த அரசமைப்பு சட்டம் 16(ஏ)-ல் ஒரு திருத்தம் கொண்டு வந்து, இந்த Supreme Court தீர்ப்புக்கு எதிராக இன்றைக்கு அரசமைப்புச் சட்டத்திலேயே மாற்றம் கொண்டு வந்து பதவி உயர்விற்கும், பணி மூப்பிற்கும் இது பொருந்தும் என்று அந்த Supreme Court தீர்ப்பை ஒதுக்கிவிட்டு அதற்கு அரசமைப்புச் சட்ட பாதுகாப்பு கொடுத்திருக்கிறது மத்திய அரசு. அந்த Supreme Court தீர்ப்புக்கு ஒரு பாதுகாப்பு கொடுத்ததற்குப் பின்பாகவும்—நீங்கள் இப்போது இந்த அரசாணை 44-ஐ, பாதுகாப்பு கொடுத்ததற்குப் பின்பாக—நீங்கள் அதற்கு எதிராக உத்தரவு வழங்கியிருக்கிறீர்கள் என்பதுதான் பிரச்சினை. முழுமையாக, சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். Supreme Court-னுடைய தீர்ப்புக்கு எதிராக மாநில அரசு நடந்துகொள்ள முடியாது என்ற இக்கட்டான நிலையில் அன்றைக்கு அதை ஏற்றுக்கொள்ள வேண்டிய சூழ்நிலை இருந்தது. இப்போது



அரசமைப்புச் சட்டத்திலே பாதுகாப்பு வழங்கியதற்குப் பின்பும், அந்த Supreme Court தீர்ப்புக்கு ஒரு பாதுகாப்பு கொடுத்ததற்குப் பின்பாகவும், இந்த மாநில ஆதிதிராவிடர்களுக்கு எதிரான நிலையை எடுத்திருக்கிறது என்பதுதான் எங்களுடைய குற்றச்சாட்டு.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்படித் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருக்கின்ற காரணத்தாலே ஏதோ ஆதிதிராவிடர்களுக்கு இந்த அரசு எதிராக இருக்கிறது என்று அவர்கள் நம்பப் போவதில்லை. விசுவநாதன் போன்றவர்கள் பேசிக் கொண்டிருக்கலாம். நான் அதைத்தான் சொல்கிறேன். உச்ச நீதிமன்றம் கொடுத்த ஒரு தீர்ப்பை அவசர அவசரமாக 2 மாதத்தில் அரிசனங்களுக்கு பதவி உயர்விலே இட ஒதுக்கீடு கிடையாது என்று உத்தரவு போடத் தெரிந்தவர்கள், 1996 மார்ச் வரையிலே ஆட்சியிலே இருந்தீர்களே, அந்த அரசியல் சட்டம் திருத்தப்பட்டதற்குப் பிறகு, இந்த அரிசன மக்களுக்காக ஏதாவது நீங்கள் செய்தீர்களா? இப்போது திராவிட முன்னேற்றக் கழக அரசு, அரசு ஆணை 33, 44-ஐப் பிறப்பித்ததற்குப் பிறகு, அதிலே ஓட்டையைக் கண்டுபிடிக்கின்றவர்கள், ஏன் அந்த மக்களுக்காக அப்போது ஓர் உத்தரவு பிறப்பிக்கவில்லை? இது ஒன்று.

*பிற்பகல் 4-50*

இப்போதும் நான் என்ன சொல்கிறேன் என்றால் எங்களுக்கு இதிலே கௌரவப் பிரச்சினை இல்லை. திரு. கிருஷ்ணசாமி சொன்னதைப் போல, இதனால் பாதிக்கப்படுகின்ற மக்கள் யாரோ, அவர்கள் விரும்புவதைப்போல, இந்த அரசு எந்தவித நடவடிக்கை எடுப்பதற்கும் தயாராக இருக்கிறது என்று சொல்கிறோமே தவிர, இல்லை, இல்லை, நாங்கள் 33-ஐக் கடைப்பிடித்தே தீருவோம் என்று சொல்லவில்லை. கடந்த கால ஆட்சியிலே அப்படியெல்லாம் சொல்லிப் பழக்கம்; ஆனால் எங்களுக்கு அப்படிப்பட்ட பழக்கம் இல்லை.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சிறிய விளக்கம்,......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** போதும். திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த இடைக்கால நிதிநிலை அறிக்கையிலே பேச வாய்ப்பு அளித்ததற்காக எனது நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்து, இந்த மாமன்றத்தின் சார்பாகவும், என் சார்பாகவும் எங்களுடைய அன்புத் தலைவர் திரு. மூப்பனார் அவர்களும் இன்றைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களும் உடல் நலத்தோடு இருக்க இறைவனைப் பிரார்த்திப்பதோடு, குஜராத்திலே இருக்கக்கூடிய மக்களுக்கு மீண்டும் இப்படிப்பட்ட இயற்கைச் சீற்றத்தினால் எந்தவித பாதிப்பும் ஏற்படாத வண்ணம் இருக்கவும் எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிய வேண்டுமென்று பிரார்த்தித்து எனது சிறிய உரையை, எனது கருத்துக்களை இந்த மாமன்றத்திலே வைக்க விரும்புகிறேன்.

குறிப்பாக நீதியரசர் இராமானுஜம் தலைமையில் ஏற்படுத்திய குழுவின் மூலமாக சில பரிந்துரைகளை எல்லாம் ஏற்று அரசு நடத்துவதாக கொள்கை விளக்கக் குறிப்பிலே கூறி இருந்தாலும்கூட இன்று ஊழலை ஒழிக்க வேண்டும்; நேர்மையாக அரசு நடக்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலே அதைச் செய்திருந்தாலும்கூட, இன்று முழுமையாக கீழ்நிலையிலே இருக்கக்கூடிய வட்டாட்சியர் அலுவலகத்திலே, ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலே, கிராம நிர்வாக அலுவலகத்திலே இருக்கக்கூடிய— செயல்பாடுகள் எல்லாம் முழுக்க முழுக்க கிராமப் பகுதியிலே இருக்கக்கூடிய மக்களுக்கு முழுமையாகப் பயன்படாமல் இருக்கக்கூடிய சூழ்நிலையை, அந்த உண்மை நிலையை இங்கே நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், அரசு ஒரு கொள்கை முடிவு எடுக்கின்ற நேரத்தில், அந்தக் கொள்கை முடிவை அமல்படுத்த வேண்டிய பொறுப்பில் இருக்கக்கூடிய அலுவலர்கள், அதிகாரிகள் அத்தனைபேரும் முழுமையாக, நேர்மையாக, சமுதாயத்திற்காக, மக்களுக்காக சேவை செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில் செயல்பட்டார்களேயானால்தான், கண்டிப்பாக அந்தக் கொள்கை திட்டங்கள் எல்லாம் முழுமையாக நிறைவேறி அவற்றின் மூலம் ஏழை எளியவர்கள் பயன் அடையமுடியும். ஆனால், இன்று பல்வேறு நலத் திட்டங்கள் மூலம் ஏழை எளியவர்கள் பயனடைய வேண்டுமென்று அரசு நினைத்தால்கூட, கீழ்நிலையிலே இருக்கக்கூடிய அலுவலர்கள், அதிகாரிகளுடைய முழு ஒத்துழைப்பு இல்லாத காரணத்தாலே முழுமையாக ஏழை எளியவர்களுக்கு பலன் கிடைக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



இன்று ஒப்பந்தப் புள்ளிகள் விஷயத்தில் எல்லாம் நேர்மையாக, உண்மையாக நியாயமாக நடப்பதாகக் கூறினாலும்கூட, கிராம நெடுஞ்சாலைத் துறையிலே Tender விடக்கூடிய நேரத்தில், குறிப்பாக சேலம் போன்ற பகுதிகளிலே எல்லாம் பெரியவர்களுடைய தலையீட்டின் காரணமாக அங்கே முழுமையாக நேர்மையாக Tender விடப்படுவதில்லை என்பதை நான் இந்த நேரத்திலே வருத்தத்தோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அது மாத்திரமல்ல, குறிப்பாக,.....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இப்படி பொத்தாம் பொதுவாகப் பேசக்கூடாது. நான் சொல்கிறேன், Tender முறை வெளிப்படையாக, சிறப்பாக, ஒழுங்காகத்தான் நடைபெறுகிறது. பொத்தாம் பொதுவாக சரியாக நடைபெறவில்லை என்று சொல்வது தவறு. குறிப்பிட்டு அவர்கள் சொல்வார்களேயானால், அதுகுறித்து நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயாராக இருக்கிறது.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் உண்மையைச் சொல்கிறேன். அதைப்பற்றி வேண்டுமானால் நேரில் எழுத்து மூலமாகக் கொடுப்பதற்கு நான் தயாராக இருக்கிறேன். இது நானே நேரில் அங்கு போய்ப் பார்த்தது. ஆகவே நூற்றுக்கு நூறு உண்மை என்ற நிலையிலேதான் இதைப்பற்றி நான் பேசுகிறேன்; நான் உண்மையைப் பேசக்கூடியவன். சேலத்தில், கிராம நெடுஞ்சாலைத் துறையிலே நடந்த Tender-ல் யாரும் அதிலே கலந்துகொள்ள முடியாத சூழ்நிலையை நானே நேரில் பார்த்தேன். நானே தலையிட்டும்கூட அங்கே ஒழுங்காக பிரச்சினையைத் தீர்க்க முடியவில்லை என்பதையும் இந்த நேரத்திலே வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நேரில் எழுத்து மூலமாக நான் தருவதற்கும், சொல்வதற்கும் தயாராக இருக்கிறேன் என்பதையும் அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

*பிற்பகல் 4-55*

பட்டா வழங்குவதைப் பொறுத்தவரையிலும் 10 ஆண்டுகளுக்கு மேலாக சாலையோரங்களிலே—நெடுஞ்சாலையாக இருந்தாலும்,

[திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்] [2001 ஜனவரி 30

சாலையாக இருந்தாலும்—ஓடைப் புறம்போக்கிலே, நத்தம் புறம்போக்கிலே குடியிருப்பவர்களுக்கு எல்லாம் பட்டா உடனடியாக வழங்க வேண்டுமென்று அரசு நினைத்தாலும்கூட, இன்னும் முழுமையாகக் கொடுக்க முடியவில்லை. ஈரோடு மாவட்டம், பவானி தொகுதியிலே, தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கக்கூடிய பகுதிகளிலே குறிப்பாக, கவுந்தப்பாடி ஊராட்சியிலே வேலம்பாளையத்திலே 10, 15 முறைக்கு மேலாக அவர்கள் விண்ணப்பித்தும் எங்களைப் போன்றவர்கள் சொல்லியும்கூட தாழ்த்தப்பட்ட மக்கள் 10 பேர்களுக்கு நத்தம் புறம்போக்கிலே இன்னும் பட்டா வழங்கப்படவில்லை.

அது மாத்திரமல்ல. கொரப்பநாயக்கன் பாளையம் ஊராட்சியிலே, ஓடைப் புறம்போக்கின் சுற்றுப் பகுதிகளில் இருக்கக்கூடிய 35 பேருக்கு பட்டா கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் நடுவிலே இருக்கிற 15 பேருக்கு இன்னும் பட்டா கொடுக்கப்படவில்லை. அதற்காக பல முறை முயற்சித்தேன். இன்னும் அதிலே நான் வெற்றி பெறவில்லை. இதுபோல பல்வேறு நேர்வுகள் உள்ளன. நான் உதாரணத்திற்காக ஒன்றைச் சொன்னேன். தமிழகத்திலே உள்ள அனைத்துப் பகுதிகளிலேயும் இது மாதிரி உள்ளது. இங்கே அனைவருக்கும் பட்டா வழங்கிவிட்டது என்று அரசு கூறினாலும்கூட, என் தொகுதியிலே இருக்கக்கூடிய நிலைதான் தமிழகம் முழுவதும் இருக்கும். ஆகவே, அரசு வேகமாக நடவடிக்கை எடுத்து எந்தவித பாதிப்பும் இல்லாமல் நத்தம் புறம்போக்கிலே, ஓடைப் புறம்போக்கிலே சாலைப் புறம்போக்கிலே குடியிருக்கிறவர்களுக்கு உடனடியாக பட்டா கிடைப்பதற்குண்டான ஏற்பாட்டைச் செய்து கொடுக்க வேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக் கொள்கின்றேன்.

நவம்பர் மாதம் 4 ஆம் தேதி நடந்த மின் துறை நிதி நிலை அறிக்கை விவாதத்தின்போது, 31-3-2001-க்குள்ளாக தமிழகத்தில் 979 மெகாவாட் மின்சாரம் அதிகமாக உற்பத்தியாகக்கூடிய நிலை உள்ளது என்றும் ஆகவே தமிழ்நாட்டினுடைய் தேவை போக 400 மெகாவாட் மின்சாரம் மீதமாகும் என்றும் கொள்கை விளக்கக் குறிப்பிலே தெள்ளத்தெளிவாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விவரத்தைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இங்கே சட்டமன்றத்திலேயும் உரைத்தார்கள். ஆனால் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தன்னுடைய நிதிநிலை அறிக்கையிலே இன்னும் 6 மாதத்திற்குள்ளாக 547 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு, தமிழகம் தன்னிறைவு பெறும் என்ற நிலையைச்



2001 ஜனவரி 30] [திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்]

சொல்லியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட முரண்பாடான கருத்துக்களை, ஏன், எதற்காக, எப்படிப்பட்ட சூழ்நிலையில் தெரிவித்தார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. இருந்தாலும் இனி வரப்போகின்ற காலங்களிலே எந்தத் திட்டங்களை நிறைவேற்ற முடியுமோ அதைப் பற்றி மட்டும் கொள்கை விளக்கக் குறிப்பிலே, சட்டமன்றத்திலே தெளிவுபடுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள், கீழ்பவானி பாசன விவசாயிகளின் வேண்டுகோளுக்கிணங்க ஏக்கருடைய அடிப்படையிலே தீர்வை விதித்தார்கள். அதற்காக மிக்க மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி. அதேபோல பாதை வரியையெல்லாம் முழுமையாக நீக்கிக் கொடுத்ததற்காகவும் நன்றி. ஈரோடு மாவட்டத்திலே உள்ள கீழ்பவானி பாசன விவசாயிகளுக்கு மாத்திரம் வைக்கப்பட்ட கோரிக்கை அல்ல அது. தமிழகம் முழுவதும் எங்கெல்லாம் பாசன வாய்க்கால்களை விவசாயிகள் பயன்படுத்துகின்றார்களோ அங்கெல்லாம்—தமிழகத்திலே இருக்கின்ற அனைத்துக் கால்வாய்ப் பாசனங்களுக்கும்—பயிர்வாரியாக இல்லாமல், ஏக்கருடைய அடிப்படையிலே தீர்வையை விதிக்க வேண்டுமென்று தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாக இந்த நேரத்திலே நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அருமையான திட்டம் நமக்கு நாமே திட்டம். மக்களும் அரசும் சேர்ந்து பங்கைச் செலுத்தி அதன் மூலம் தமிழகத்திலே பல்வேறு பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. பவானி சட்டமன்றத் தொகுதியிலே 3 கோடி ரூபாய் திட்டத்திற்கு, அரசினுடைய பங்காக ரூ. 2.20 கோடியும், மக்களுடைய பங்காக 80 இலட்சம் ரூபாயும் பெற்று பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றன. இன்னும் 40 இலட்சம் ரூபாய் வர வேண்டும். 31-7-2000-க்கு முன்பாக அரசின் பங்கு இன்னும் வராத சூழ்நிலையிலே மக்களுடைய பங்காக ஈரோடு மாவட்டத்திலே சுமார் 40 இலட்சம் ரூபாய் கட்டப்பட்டு உள்ளது. அரசின் பங்காக 1 கோடியே 60 இலட்சம் ரூபாய் வரவேண்டியது இன்னும் வராத சூழ்நிலையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிதிநிலை அறிக்கைக்கு பதில் சொல்கிற வெள்ளிக்கிழமையன்று, கண்டிப்பாக முழுமையாக இதற்கு நிதியை ஒதுக்கித் தந்து இந்தத் திட்டத்தை முழுமையாக நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்] [2001 ஜனவரி 30

அடுத்து நெசவாளர் பிரச்சினை. நெசவாளர்கள் மகிழ்ச்சியோடு வாழ்வதாக இங்கே சொல்லிக் கொண்டிருந்தாலும்கூட, அனைத்து நெசவாளர் சங்கங்களும் கோ-ஆப்டெக்ஸில்தான் நூல் வாங்க வேண்டுமென்ற நிபந்தனை உள்ளது. கோ-ஆப்டெக்ஸின் மூலமாக நூல் வாங்க வேண்டுமென்கிற குறிக்கோள் அரசின் மூலமாக எய்தப்படுகின்றபோது அங்கே....(மணியடிக்கப்பெற்றது)

***மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட நிபந்தனை இல்லை. அவர்களிடம் அப்படிப்பட்ட நூல் இல்லாமல் இருக்கும்பட்சத்தில் உடனடியாக வெளியே வாங்கிக்கொள்ளக்கூடிய தகுதியை சம்பந்தப்பட்ட A.D. அந்தப் பகுதியிலேயே அதை சட்ட ரீதியாகத் தெரிவிக்க அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது.

*பிற்பகல் 5-00*

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. என்னிடத்திலே நூற்றுக்கணக்கானவர்கள் கையெழுத்திட்டு கோ-ஆப்டெக்சில்தான் வாங்கச் சொல்கின்றார்கள். கட்டுக்கு 25, 30 ரூபாய் அதிகம். ஆகவே தனியாரோடு நாங்கள் போட்டிபோட முடியவில்லை. இந்த நிலையை சட்டமன்றத்தில் சொல்லி, அமைச்சரிடத்திலே சொல்லி தெளிவுபடுத்த வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். அந்தக் கருத்தின் அடிப்படையில் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டத்தில் இதுவரையில் ஏற்றுமதிக்கு என்றே 44 கோடி ரூபாய் அளவுக்கு உற்பத்தி செய்து அனுப்பப்பட்டுவிட்டது. இன்னும் 32 கோடி ரூபாய் அளவுக்கு ஏற்றுமதி 3 மாத காலத்திற்குள் நடக்க இருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் எந்தப் பகுதி தறியில் இந்தப் பிரச்சினை வந்தது; ஏன் அந்த நூல் தேவைப்பட்டது என்பதை எல்லாம் முறையாகத் தெரிவித்தால் உரிய பதிலைச் சொல்ல முடியும். ஏனென்றால், ஏற்றுமதிக்கென்ற நூல் எங்களிடம் இல்லை. வெளியேதான் வாங்கப்பட வேண்டும். எப்.டி.எஸ்.-க்கான நூலை எங்களுடைய ஆலையிலிருந்து எடுத்துக்கொள்கிறோம். இப்படிப்பட்ட பல அணுகுமுறைகளை நூலிலே கடைப்பிடித்துக் கொண்டிருக்கிறபோது, 10 ஆயிரம், 15 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டார்கள் என்ற நிலை ஈரோடு மாவட்டத்தில் இருக்கிறது



2001 ஜனவரி 30] [திரு. என்.கே.கே. பெரியசாமி]

என்றால் அது உண்மைக்குப் புறம்பானது. காரணம் இன்று நெசவாளர் சங்கங்களைத் தவிர, வேறு எதிலேயும் உறுப்பினர்களாக அல்லாத தனியார் நெசவாளர்கள் அனைவருமே சென்னிமலைப் பகுதியிலே கூட்டுறவு நெசவாளர் சங்கங்களிலே உறுப்பினர்களாக ஆகிவிட்டார்கள். ஒருவர்கூட தனியார் நெசவாளர் இல்லை.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய குறுக்கீட்டினால் என்னுடைய நேரம் போய்விடப் போகிறது. தயவுசெய்து எனக்கு நேரத்தை அதிகமாக ஒதுக்கீடு செய்து கொடுக்கவேண்டும். 1996-97-லே அங்கே இருக்கக்கூடிய நெசவாளர் சங்கங்களுக்கு 8 கோடியே 40 இலட்ச ரூபாய் தள்ளுபடி மானியம் இன்னும் வரவில்லை என்ற புகார் இருக்கிறது. அதன் காரணமாக அந்தச் சங்கங்களால் செயல்பட முடியவில்லை, மிகக் கடுமையான பிரச்சினை இருக்கிறது; போனஸ் கொடுக்க முடியவில்லை என்றெல்லாம் புகார் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு, ஈரோட்டுக்காரர் இப்படி பேசிக் கொண்டிருக்கிறாரே என்கிற வருத்தம் ஏதாவது இருக்கும். உண்மையான நிலையை, பொம்மன்பட்டியிலே இருக்கக்கூடிய நெசவாளர் பிரச்சினை....

**மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கைவிடமாட்டேன் என்கிறார். வேறு வழியில்லை. எனக்கு வழி இருந்தால்தான் சொல்ல முடியும். நிச்சயமாக அப்படிப்பட்ட நிலை இல்லாதபோது ஏன் திட்டமிட்டு இப்படிப்பட்ட ஒரு பிரச்சினையை உருவாக்க வேண்டும் என்றுதான் நான் உறுப்பினரைக் கேட்கிறேன். அதற்கு அவர்தான் இப்போது பதில் சொல்ல வேண்டும். ஏனென்றால், சென்னிமலைப் பகுதியிலே ஒரு நெசவாளர்கூட Master Weaver-ரிடம் இல்லை. ஈரோடு மாவட்டத்தில் 44 கோடி ரூபாய்க்கு ஏற்றுமதி உற்பத்திதான் நடைபெற்றிருக்கிறது. இன்னும் 3 மாத காலத்தில் மேலும் 32 கோடி ரூபாய் ஏற்றுமதிக்கு ஒப்பந்தம் போடப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையிலே பொம்மன்பட்டியையோ, மற்றவற்றையோ இதில் எடுத்துக்காட்டுவதற்கு என்ன நியாயம் இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. பழைய தள்ளுபடித் தொகை என்பது, இந்த அரசு வந்ததற்குப் பிறகு, இந்த அரசாங்கம் அறிவிப்பை வெளியிட்டதற்குப் பின்பு, ஒவ்வொரு சங்கத்திற்கும் இவ்வளவுதான் என்று அளவுகோல் வடிவமைக்கப்பட்ட பிறகு, அதற்கு

மேலும் அவர்கள் கோரிய காரணத்தால்தான் இது நின்றது. ஆனால் கடந்த ஆட்சியிலே நடைபெற்ற தவறுகள் காரணமாக, இந்த அரசு ஒரு குழுவை நியமித்து 41 கோடி ரூபாயைக் கொடுத்திருக்கிறது. ஆனால் கழக அரசு பொறுப்பேற்ற பின்பு, தெரிவித்திருந்தும் அதை முறைகேடாகப் பயன்படுத்தியதை இந்த அரசு ஏற்றுக்கொள்ள மறுத்த காரணத்தால்தான் அது ஈரோடு மாவட்டத்தை பாதித்து இருக்கிறது. ஆனால் கரூர் மாவட்டத்தில் அந்த பாதிப்பு இல்லை. அண்டையிலே இருக்கின்ற சேலம் மாவட்டம் பள்ளிப்பாளையத்தில் அந்தத் தவறுகள் நடக்கவில்லை. தொலைபேசி இருக்கிறது. தொலைபேசியிலே கேட்டாலே தெரியும். யாருக்கு எவ்வளவு கொடுக்கப்பட்டிருக்கிறது, எவ்வளவு தகுதி அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிந்திருக்கும்போதே, பள்ளிப்பாளையத்திலே அந்தத் தகுதிக்குள்ளேயே அவர்களுடைய தள்ளுபடி மானியம் அடங்கிவிட்டது. ஆனால் ஈரோடு மாவட்டத்தில் மட்டும் ஏன் தள்ளுபடி மானியம் அந்த அளவுக்குள் அடங்கவில்லை? சட்டத்தை மீறி நடந்தது ஏன் என்பதுதான் இப்போது கேள்வி.

***திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1996 ஆம் ஆண்டிலேதான் கூட்டுறவு அமைப்புகளுக்குத் தேர்தல் நடைபெற்றது. தேர்தல் நடைபெற்று பொறுப்பு ஏற்றுக்கொள்வதற்கு முன்பாக நடைபெற்ற விற்பனையில் தள்ளுபடி மானியம் தரவேண்டிய பாக்கி இருக்கிறது. அந்த பாக்கியைக் கொடுப்பதற்கான அரசு உத்தரவுகளில் காலதாமதம் உறுதியாக இருக்கிறது. அது குறித்து அரசு பரிசீலனை செய்து ஈரோடு மாவட்ட நெசவாளர்களுக்கு வழங்கவேண்டிய தள்ளுபடி மானிய பாக்கியை வழங்கவில்லை என்பது இன்று வரையில் இருக்கின்ற பிரச்சினை. இது குறித்து அமைச்சர் சொல்ல வேண்டும்.

பிற்பகல் 5-05

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அறிவித்ததில் தாமதம் என்று அவர்கள் தெரிவிக்கிறார்கள். தாமதம் என்பது உண்மையாக இருந்தால் நான் அதற்கு முழுப்பொறுப்பேற்றுக் கொள்கிறேன். இப்படித்தான் பல தலைவர்கள் என்னிடம் இந்தப் பிரச்சினையைக் கொண்டுவந்தார்கள். அதைத் தெரிந்துகொள்வதற்காக ஓர் ஆய்வுக் குழுவை அனுப்பியபோது உரிய நேரத்திலேதான் அவர்கள் ஆணையைப் பெற்றிருக்கிறார்கள்



என்று பதிவாக்கப்பட்டிருக்கிறது. அது பதிவாக்கப்பட்ட காரணத்தால்தான், ஈரோட்டைச் சேர்ந்த சுத்தானந்தம் போன்றவர்கள்கூட என்னிடம் வந்து, அதைப் பெரிய பிரச்சினையாக உருவாக்கியவர்கள்—ஆம், தவறு இங்கேதான் நடந்துவிட்டது என்று அவர்களே ஒத்துக்கொண்டு சென்றிருக்கிறார்கள். ஒத்துக்கொண்டது மட்டுமல்ல; அதனால் ஏற்படுகின்ற நட்டத்தை ஐந்தாண்டு காலத்திலோ, ஆறாண்டு காலத்திலோ நாங்கள் ஈடுகட்டிக் கொள்கிறோம் என்பதையும் அந்த சங்கத் தலைவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். அதற்குப் பின்பும், நாம் அதைப்பற்றித் தொடர்ந்தால் சம்பந்தப்பட்ட தவறு செய்தவர்களை வேறு அணுகுமுறைகளிலே Criminal குற்றத்திற்குத்தான் ஆளாக்க வேண்டும். அதற்கு சங்கத் தலைவர்கள் தயாராக இருந்தால், சங்கம் தயாராக இருந்தால், அந்த நடவடிக்கையையும் எடுப்பதற்கு நான் தயாராக இருக்கிறேன். ஆனால் குறித்த காலத்திலே ஆணை பெறப்பட்டு, ஆணை முத்திரையிடப்பட்டு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அப்படி இல்லையென்றால், ஈரோடெக்ஸ்ஸிலே பார்க்கலாம்; அண்ணா டெக்ஸ்ஸிலே பார்க்காலம். சென்டெக்ஸ்ஸிலே பார்க்கலாம்; சென்கோ-ஆப்டெக்ஸ்ஸிலே பார்க்கலாம். அந்த ஆணை அங்கே உரிய காலத்திலே வந்திருக்கிறது. ஆனால், அவர்களுக்கு எல்லாம் என்ன யோசனை என்றால், கடந்த காலத்திலே இப்படிக் கேட்பார்கள்; நாமும் கொஞ்சம் கேட்டுக் கொண்டேயிருந்தால், சிறிது கிடைக்கும். கிடைக்கும் என்று நினைத்துக்கொண்டு கேட்டது. ஏன், பள்ளிப்பாளையத்தில் கேட்கவில்லை? ஏன் ஈரோட்டிற்கு மட்டுமா அந்தச் சட்டம்? சேலம் மாவட்டத்திலே பண்ணவில்லை; கரூர் மாவட்டத்திலே பண்ணவில்லை; கோயம்புத்தூர் மாவட்டத்திலே பண்ணவில்லை; ஈரோடு மாவட்டத்தில் மட்டும், ஏன் அவர்கள் தகுதிக்கு மீறி, சொன்னதற்கு மீறி, வரம்பிற்கு மீறி ஏன் அவர்கள் தள்ளுபடி மானியக் கோரிக்கை கேட்கிறார்கள்? அது தவறு அல்லவா? ஆனால் குறிப்பிட்ட காலத்தில் வரவில்லையென்றால், அதற்கு நானே பொறுப்பேற்றுக் கொள்கிறேன்.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்றகால ஆட்சியிலேயிருந்த தள்ளுபடி நிலுவையைக்கூடக் கொடுத்தது இந்த ஆட்சி. யாரும் மறுக்கவில்லை. ஆனால், அதிலேயும் 7 கோடி ரூபாயை பாக்கிவைத்துவிட்டு, நெசவாளர்களுக்கு எந்த முயற்சி செய்தாலும் அது முழுமையான முயற்சியாக இருக்காது; பலனாக இருக்காது. இது குறித்து

திட்டவட்டமாக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கோப்புகளை மறுபரிசீலனை செய்தால் உண்மை நிலையைப் புரிந்துகொள்ள முடியும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொடுத்ததே இவர்தானுங்க. 43 கோடி ரூபாயைக் கொடுக்க வேண்டும் என்று பரிந்துரை செய்ததே இவர்கள்தான். ஆனால், அந்த நேரத்தில் இந்த 8 கோடியை இவர்கள் ஏன் பரிந்துரை செய்யவில்லை? நீங்கள்தானே அந்தக் குழுவிலே இருந்தீர்கள்? நீங்கள்தானே தலைவரிடம் வந்தீர்கள்? தலைவர் கேட்டார்; 24 demands அதிலே வைக்கப்பட்டிருந்தன. இந்த 24-ஐயும் நிறைவேற்றிவிட்டால் நெசவாளர்கள் பிரச்சினை தீர்ந்துவிடுமா என்று கலைஞர் கேட்டார்கள். தீர்ந்துவிடும் என்று நீங்கள் சொன்னீர்கள். வருடம் முழுவதும் rebate கொடுத்தால்தான் நியாயம் என்றீர்கள். அதையும் ஒத்துக்கொண்டார்கள். ஆனால் அந்த 8 கோடி அன்றைக்குத் தள்ளுபடி இருந்ததுதானே? அதை ஏன் இந்தக் குழு கேட்கவில்லை? அதிலே நீங்களும் உறுப்பினர்களாக இருந்தீர்களே; நீங்கள் அதைத் தெரிவித்திருந்தால், அந்தப் பிரச்சினை முடிந்திருக்கும் அல்லவா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன். (குறுக்கீடு) அவர் பேசட்டும். நேரம் ஆகிறது. (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உயர்மட்டக் குழுவில் உறுப்பினர் என்ற முறையில் இந்தப் பிரச்சினையை அந்தக் குழுவின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதைத்தானே அமைச்சர் சொல்கிறார்; அப்பொழுதே அந்த 8 கோடியையும் சேர்த்துச் சொல்லியிருக்கலாமே என்கிறார். திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், பேசுங்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளிகள் தொழில் செய்வதற்காக தள்ளுபடித் தொகையைத் தருவது என்பது கைத்தறி நெசவாளர்களுடைய வாழ்க்கை பாதிக்கப்படாமல் கைத்தறி விற்பனைக்கு ஒரு வாய்ப்பு கிடைக்க வேண்டும் என்பதற்காக. அந்தக் கைத்தறி நெசவாளர்களுடைய பெயரால் அந்தத் தள்ளுபடித்



தொகையை வாங்குவதற்கு என்றே கணக்கு வைக்கக்கூடிய நிலைமை. அது கடந்த கால ஆட்சியிலே வளர்ந்து, அதிலே ரேட்டெல்லாம் இருந்தது. எவ்வளவு தள்ளுபடியோ, அதற்குள்ளே ஒரு ரேட். அதெல்லாம் கடந்து அந்தக் கணக்கைத் தீர்ப்பதற்காகத்தான், அமைச்சர் பெரியசாமி அவர்கள், அமைச்சர் என்ற முறையில் பலரையும் அழைத்துப் பேசி, முதலமைச்சரிடத்திலே சொல்லி, மொத்தமாக தள்ளுபடித் தொகையிலே வருகிற கணக்குத் தகராறுக்காக, அந்தத் தள்ளுபடித் தொகையை அரசாங்கம் தருவதை நிறுத்தி வைப்பதால் நான்கு, ஐந்து ஆண்டுகாலம் ஆகுமானால் கைத்தறி நெசவாளர்கள் கண்ணீர் விடுவார்கள் என்பதற்காகத்தான் அந்த ஒரு காலம் வரையில் தீர்மானித்து அந்த நிதி வழங்கப்பட்டது. செய்யப்பட்ட காரியம் நெசவாளர் சமூகத்திற்கு மிகவும் பாதுகாப்பான காரியம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எப்படியோ, ஈரோடு மாவட்டத்திலே இருக்கக்கூடிய நெசவாளர்கள் மகிழ்ச்சிகரமாக இல்லை என்பதை மாத்திரம் தெரிவித்துக் கொண்டு, அடுத்து....

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் இரண்டு பேரும் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்த காரணத்தாலா? (சிரிப்பு) அல்லது வேறு ஏதாவது காரணம் உண்டா?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, அந்த ஆட்சியிலே இருந்த நிலை மாறி, இந்த அரசிலே அவர் பெண் எடுத்திருக்கின்ற காஞ்சி கோவிலிலே, 54 இலட்சம் ரூபாய் சி.சி. இருக்கிறது. அவர்கள் எடுப்பதில்லை. ஏற்றுமதிக்குச் சென்ற காரணத்தால் ஒரு கோடி ரூபாய் இலாபம் பெற்று, எஃப்.டி.யாகப் போட்டிருக்கிறார்கள். 54 இலட்சத்தையும் எடுக்காமல், ஒரு கோடி ரூபாயை எஃப்.டி.யாகப் போட்டு, கையிலே ஐந்து இலட்சம் ரூபாயை வைத்துக்கொண்டு, இன்று உற்பத்தி, ஏற்றுமதி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்தச் சங்கம் அங்கே இருக்கின்றபோது, ஏன் அங்கேபோய் பாதிப்பு வரும்? எப்படி அந்த பாதிப்பு வரும்? காஞ்சி கோவில் என்பது நண்பர் பெரியசாமி அவர்களுடைய தொகுதி அது. அவர்களுக்கே தெரியும். இலாபம்

[திரு. என்.கே.கே. பெரியசாமி] [2001 ஜனவரி 30

எவ்வளவு வந்திருக்கிறது என்பது தெரியும். சி. சி. எடுக்காமலேயே இந்தப் பணி நடந்திருக்கிறது என்பது தெரியும். எடுக்காமலேயே இலாபம் கிடைக்கின்ற அளவிற்கு tie-up, ஏற்றுமதி நடைபெறுகின்றது என்பது தெரியும்.

இவை எல்லாம் transparency புறக்கடையல்ல, பின்வழியல்ல. எல்லாமே நேரடியாக நாணயமான infrastructure. அடிப்படைக் கட்டமைப்பு வலுவாக இருக்கின்ற காரணத்தால் ஏற்றுமதியாளர்கள் எங்களை நம்புகிறார்கள். நூற்றுக்கு நூறு சதவிகிதம் அவர்களுடைய நூலை தரம் குறையாமல் நாங்கள் நெய்து கொடுக்கிறோம். அதற்கே, எங்களுக்கு 25 சதவிகிதம் இலாபம் அளிக்கிறார்கள் என்பதையும் இந்த அவையிலே சொல்லியாக வேண்டும். ஒரு ரூபாய்கூட செலவு இல்லாமல், cash credit-ஐ கையில் தொடாமல் இன்று ஒரு கோடி ரூபாய்க்கு உற்பத்தி செய்கின்ற அந்த சங்கம், ஒரு மாதத்திற்கு 25 இலட்சம் ரூபாய் இலாபம் சம்பாதிக்கிறது. 11 கோடி ரூபாய் உற்பத்தியிலே ஒரு கோடியே 84 இலட்சம் ரூபாய் சென்கோ-ஆப்டெக்ஸ் இலாபம் சம்பாதிக்கிறது. அதுபோல சின்ன சங்கங்கள்கூட 48 பைசா போனஸ் கொடுத்திருக்கிறது. இதைவிட நெசவாளர்களுக்கு எப்படிப் பிரச்சினை பெரிதாக வரும்?

*பிற்பகல் 5-10*

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்றுமதி இரகங்களை உற்பத்தி செய்யக்கூடிய சங்கங்களில் அமைச்சர் அவர்கள் சொல்கிற நிலவரம் இருப்பது உண்மை. அது இன்றைய நிகழ்வு. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் எஸ்.என். பாலசுப்பிரமணியன் வலியுறுத்தக்கூடிய கோரிக்கை, 1996-97-ல் விழுந்துவிட்ட சுமை. அந்தச் சுமையை இறக்கவில்லையென்றால், நெசவாளர்களுடைய துயரம் நீங்காது.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இல்லை, இல்லை இதைச் சொல்லியாக வேண்டும். இது பிரச்சினைக்குரியது. அதாவது, ஜெயலலிதா செய்த தப்பிற்கு பணத்தைக் கொடுத்துவிட்டோம். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தி.மு.க. ஆட்சி. (குறுக்கீடு)

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...



2001 ஜனவரி 30]

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பெயரைத்தான் சொன்னார்கள். அவர்கள் வேறு ஒன்றும் சொல்லவில்லை.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** தி.மு.க. ஆட்சி வந்த பிறகு அவர்கள் தவறு செய்தார்கள். அதை நாங்கள் மறுக்கிறோம். (குறுக்கீடு) சரி, கடந்த கால ஆட்சி என்று வைத்துக்கொள்ளுங்கள். கடந்த கால ஆட்சி, கடந்த கால ஆட்சியிலே 43 கோடி ரூபாய்; அந்த 43 கோடி ரூபாயைப் பொறுத்தவரையிலும் குழு ஏற்றுக்கொண்டதைக் கொடுத்துவிட்டோம். எங்கள் ஆட்சியில் 1996-97-ல் நடந்த, அந்த முறைகேடு மறுபடியும் நடக்கக்கூடாது என்பதற்காகத்தான், இந்த 8 கோடி கொடுக்க இயலாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இது சேலத்திலே இருந்திருந்தால், கரூரிலேயும் இருந்திருந்தால், எல்லாப் பகுதியிலும் இருந்திருந்தால், அவர்களுக்குத் தெரிந்திருக்கும். ஆனால், திட்டமிட்டு ஒரு கூட்டம் இப்படி தள்ளுபடி மானியத்திலே சற்று அதிகமாகப் பெறுவதும், அதற்கேற்றபடி வழிவகைகளை அமைத்துக் கொள்வதும், அதையொட்டி வங்கியிலே C.C.A. ஆப்பரேட் செய்வதும் அதனால் ஏற்படுகிற வட்டிச் சுமையை நெசவாளர் சங்கங்களே ஏற்றுக்கொள்கிற நிலையும், எதிர்காலத்திலே இருக்கக்கூடாது என்பதற்காக எடுத்த முடிவுதான் அந்தத் தள்ளுபடி மானியத்தைக் கொடுக்க இயலாத முடிவு. இன்று கலைஞர் அவர்கள் அறிவித்த 30 சதவிகித ரிபேட்டிலே தவறு நடக்காமல், வேறு ஆட்சியாக இருந்தால் 40 கோடி ரூபாய் என்று வந்திருக்கும் ரிபேட்டே. ஆனால், இந்த ஆட்சியிலே லகான் கையிலே இருக்கிற காரணத்தால், தலைவர் என்ன நினைத்தாரோ, அதைப்போல நெசவாளர்களுக்கு நேரிடையாக இன்று 30 சதவிகிதம், அந்த இலாபம் இன்று சென்றடையக்கூடிய வாய்ப்பை இந்த அரசு உருவாக்கிவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்காலத்திலே ஒரு பிரச்சினை நெசவாளர் சம்பந்தமாக நமக்கு ஏற்பட்டாலும் நெசவாளரைக் காப்பாற்றக்கூடிய வல்லமையை, அணுகுமுறையை இந்த அரசு கடைப்பிடித்திருக்கின்ற காரணத்தினால், தவறு நடைபெறாமல் அது நெசவாளர்களுக்குச் செல்லும் என்ற காரணத்தால்தான் இந்த லிட்மஸ் டெஸ்ட். தலைவர் வைத்த, முதல்வர் வைத்த அந்த லிட்மஸ் டெஸ்ட்டிலே மிகச்சிறப்பாக இந்தப் பணி முழுமையாக ஒரு தவறும் ஏற்படாமல், இன்று ஏறத்தாழ 4 கோடி ரூபாய் அளவிற்குத்தான், ஒழுங்கான விற்பனைக்குத்தான் ரிபேட் வந்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், நீங்கள் தறியில் மாட்டிக்கொண்டு அவதிப்படாதீர்கள். அடுத்த subject-க்கு வாருங்கள்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** subject-க்கு வரவில்லை. ஆனால் இப்போது நான் இரண்டு நிமிடம்தான் பேசியிருக்கிறேன். அதைக் கணக்கிலே வையுங்கள்.

அடுத்ததாக, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வருடாவருடம் ஓர் ஏரியைத் தூர் வாருவதற்கு ஒதுக்கீடு செய்வதாக, ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் கடிதத்தின் வாயிலாக ஓர் ஏரியை, உங்களுக்குத் தேவையான ஏரிகளை எல்லாம் எழுதிக்கொடுங்கள் என்று கூறினார்கள். கடந்த மூன்று ஆண்டு காலத்திலே என்னுடைய தொகுதியிலே ஒரே ஒரு ஏரி தான் தூர் வாரப்பட்டிருக்கிறது. என்ன காரணம், ஏன், என்ன என்பதைச் சொல்லவேண்டும். அதேபோல, எனது தொகுதியிலே இருக்கக்கூடிய சிற்றாறிலே அணை கட்டுவதற்காக 5 கோடியே 30 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து நீதிமன்றத்திலே உள்ள வழக்கின் காரணமாக, அது நிறுத்தப்பட்ட காரணத்தினாலே, 4 இடங்களிலே தடுப்பு அணைகள் கட்ட வேண்டுமென்று மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களிடத்திலே பல முறை கேட்டு, தற்போது, ஒரே ஒரு தடுப்பு அணைக்கு மட்டும் அங்கீகாரம் கொடுத்து இருக்கின்றீர்கள். ஆகவே, பரிசீலித்து உடனடியாக ஏரியைத் தூர் வாருவதற்கு ஏற்ற வகையிலேயும் தடுப்பு அணை கட்டுவதற்கும் நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, இன்று மேட்டூர் அணையிலே . . . (மணியடிக்கப்பெற்றது) இரண்டு நிமிடங்கள்தான் பேசியிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 25 நிமிடங்கள் ஆகியிருக்கின்றன.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** ஆகவே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களை நான் அன்போடு கேட்டுக்கொள்வதெல்லாம் மேட்டூர் அணையிலே 95 அடிக்கு மேலாக நீர் இருக்கக்கூடிய நிலையில், அந்தப் பகுதிகளிலே விவசாயிகளுடைய அன்பான கோரிக்கையை ஏற்று புஞ்சைப் பயிருக்குத் தண்ணீர் விடவேண்டுமென்று இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக் கொள்கிறேன். அதேபோல, பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள் கவன



ஈர்ப்பு மற்றும் ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மூலமாகக் கேட்டுக் கொண்டார்கள். ஏற்கெனவே வீட்டுமனைகளாகப் பிரிக்கப்பட்டதில் சில வீட்டுமனைகள் பதிவு செய்யப்பட்டுவிட்டன. பல வீட்டுமனைகள் பதிவு செய்யப்படாமல் விடுபட்டுள்ளன. அவற்றை எல்லாம் பதிவு செய்வதற்கு கண்டிப்பாக ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், இன்று நிலத்தைப் பிரித்துப் போட்டவர்கள் எல்லாம் அவற்றை விற்க முடியாத சூழ்நிலையிலே, பரிதவித்துக் கொண்டிருக்கிற அந்தச் சூழ்நிலையை மாற்றுவதற்கு ஏற்பாடு செய்துவிட்டு, இனி புதிதாக வீட்டுமனைகளை ஆரம்பித்து விற்கக்கூடியவர்களுக்கு, முழுமையாக சட்டத்தை நிறைவேற்றுவதற்கு எந்தவித ஆட்சேபணையும், கருத்து வேறுபாடும் யாருக்கும் கிடையாது. ஆனால், ஏற்கெனவே, பதிவு செய்தவர்கள், மீதி agreement போட்டு நிறுத்தி வைக்கப்பட்டவர்களுக்கு கண்டிப்பாக நீங்கள் பரிசீலனை செய்து அரசாங்கத்திற்கு நல்ல பெயரை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமாய் இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 5-15

அதுமாத்திரமல்ல. இன்று எங்கு பார்த்தாலும் மயானங்கள் தனியார்களால் ஆக்கிரமிக்கப்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய நிலை உள்ளது. அப்படி மயானங்கள் இல்லாத பகுதியிலே எல்லாம் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு, கொடுக்கப்பட வேண்டும். அதேபோல ஓடைப் புறம்போக்குகள், சாலைப் புறம்போக்குகள் எல்லாம் நிறைய பகுதியிலே இருந்தாலும்கூட, ஆதிதிராவிட மக்களுக்கு, ஏழை எளியவர்களுக்கு எல்லாம் மயானம் இல்லாத சூழ்நிலை எல்லாம் உள்ளது. அதை விரைவாகச் செயல்படுத்துவதாக கடந்த கூட்டத் தொடரிலே மாண்புமிகு முதல்வர் அவர்களே அறிவித்தார்கள். அதைச் செயல்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, கடந்த சனிக்கிழமை அன்று மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் ஈரோட்டுக்கு வந்திருந்தார்கள். தோல் பதனிடும் மற்றும் நெசவாளர் தொழிலாளிகளுடைய நல வாரியத்தைத் தொடங்கி வைத்துப் பேசுகின்றபோது விவசாயிகள் உட்பட 64 அமைப்புச்சாரா தொழிலாளர்கள் அத்தனை பேருக்கும் 12 வாரியங்கள் அமைக்கப்பட்டு,

- [திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்] [2001 ஜனவரி 30

அவை எதிர்காலத்திலே செயல்படும் என்று தெள்ளத் தெளிவாகக் கூறினார்கள். அன்று அங்கே பேசினாலும்கூட, இங்கே சட்டமன்றத்திலே நான் பதிவு செய்ய வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலே சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக விவசாயத் தொழிலாளர்களுக்கு, 1 கோடி பேருக்கு மேலாக உள்ள அந்தத் தொழிலாளர்களுக்கு, முழுமையாகப் பயன்படுவதற்கு ஏற்றவகையில் தொழிலாளர் நலத் துறையிலே இருக்கக்கூடிய அலுவலர்களும், அதிகாரிகளும், வருவாய்த் துறையின் வட்ட அலுவலகத்திலே இருக்கக்கூடிய அதிகாரிகளும் முழுமையாக கிராமங்களுக்குச் சென்று 100 ரூபாயை வாங்கி, பதிவு செய்வதற்கு ஏற்பாடு செய்தால்தான் இந்தத் திட்டம் முழுமையாக நிறைவேறும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுறுசுறுப்பாகச் செயல்படக்கூடியவர்; இதைச் செயல்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கு அடுத்து, சமத்துவபுரம். 100 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டு அவற்றிற்கு பள்ளிக்கூடங்கள், தொலைக்காட்சிப் பெட்டி அறை போன்ற பல்வேறு வசதிகளைச் செய்து கொடுத்தால் மாத்திரம் சமத்துவம் ஏற்பட்டுவிட முடியாது. ஜாதி மத பேதம் இல்லாமல் எல்லோரும் ஒற்றுமையாக இருக்கக்கூடிய நிலையை எய்துவதற்கு, அனைத்து மக்களும் கல்வி வசதி பெற்றாக வேண்டும்; அனைத்து மக்களும் பொருளாதார வசதியிலே முன்னேறியாக வேண்டும். அப்பொழுதுதான் சமத்துவம் என்பது இயற்கையாக நிகழ முடியுமேயொழிய இத்தகைய வீடுகளைக் கட்டிக் கொடுப்பதால், சில வேலைகளைச் செய்து கொடுப்பதால் மாத்திரம் சமத்துவத்தை ஏற்படுத்த முடியாது. ஆகவே, கல்வியிலே, பொருளாதாரத்திலே முன்னேறிச் செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நேற்று அளித்த நிதிநிலை அறிக்கையிலேகூட, 6.05 என்ற நிலையை மாற்றி 7.04 என்ற அளவிலே் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டதாகக் கூறியிருக்கிறார்கள். பொருளாதாரத்தில் அதிக அளவில் முன்னேறினால்தான் கண்டிப்பாக எதிர்காலத்திலே நிறைய திட்டங்களைச் செயல்படுத்த முடியும் என்று அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) சார், 7 நிமிடங்கள்தான் பேசியிருக்கிறேன்.

அடுத்து, பல்வேறு தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், ஆரம்பிக்கப்பட்டதாகக் கொள்கைக் குறிப்பிலே கூறியிருக்கிறார்கள். அதிலே எவ்வித கருத்து வேறுபாடும் இல்லை. இன்று மக்கள் தொகை அதிகமாகிக் கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையிலே தொடக்கப்



2001 ஜனவரி 30] [திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்]

பள்ளிகள் எல்லாம் நிறைய இன்னும் ஆரம்பிக்க வேண்டியிருக்கின்றன; நடுநிலைப் பள்ளிகள் ஆரம்பிக்க வேண்டியிருக்கின்றன. நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும், தரம் உயர்த்த வேண்டிய சூழ்நிலையிலே நாம் இருக்கிறோம். ஆகவே, கடந்த ஆண்டிலே தொடக்கப் பள்ளிகளை எல்லாம் ஆரம்பிக்க முடியாத சூழ்நிலை நிறைய பகுதியிலே இருந்தது. அந்தச் சூழ்நிலையை வருங்காலத்திலே மாற்றி தொடக்கப் பள்ளிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த 9 மாதங்களுக்கு முன்பாகவே ஒவ்வொரு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலேயிருந்தும் பிரதமர் சாலை மேம்பாட்டுத் திட்டத்திற்குரிய திட்ட மதிப்பீட்டை உடனடியாக அனுப்பச் சொன்னார்கள். அந்த அடிப்படையிலே ஒவ்வொரு மாவட்டத்திலேயும் திட்ட மதிப்பீடுகள் எல்லாம் அனுப்பப்பட்டு, 9 மாதங்களுக்கு மேல் ஆகின்றன. ஆனால், இன்றுதான் 17 மாவட்டங்களுக்கு 78 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டதாகக் கூறியிருக்கிறார்கள். 78 கோடியாக இருந்தாலும்கூட அதுவும் வந்து சேராத நிலை உள்ளது. டெல்லியிலே பாரதிய ஜனதா கட்சியோடு கூட்டணியில் இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழக அரசு அங்கே ஒரு பிரதிநிதியை அமர்த்திக் கொடுக்கக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தியிருப்பார்களேயானால், அவர் மூலமாக டெல்லியில் இருக்கக்கூடியவர்களை சரியான முறையில் அணுகி இருப்பார்களேயானால், 2,500 கோடி ரூபாய் சாலை மேம்பாட்டு நிதியிலேயிருந்து ரூபாய் 200 கோடியை 6 மாதத்திற்கு முன்பாகவே கண்டிப்பாகப் பெற்று, செயல்படுத்தி இருக்க முடியும் என்று அன்போடு இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல மக்கள் நல்வாழ்வுத் துறையின்கீழ் 64 வட்ட அரசு மருத்துவமனைகளில் இரத்த சேமிப்புக் கிடங்குகள், குளிர் சாதனக் கிடங்கு வசதிகள் மற்றும் பல்வேறு வசதிகள் செய்யப்பட்டும்கூட, இன்னும் மத்திய அரசிடமிருந்து அனுமதி கிடைக்கவில்லை என்பதால் கடந்த 2 ஆண்டுகளாக, 64 வட்ட அரசு மருத்துவமனைகளில் ஏற்படுத்தப்பட்ட இரத்த வங்கிகள் எல்லாம் வீணாய்க் கிடக்கின்ற சூழ்நிலை உள்ளது. இந்நிலையை மாற்றி உடனடியாக மத்திய அரசினிடத்திலே அனுமதியைப் பெற்று 64 வட்ட இரத்த வங்கிகளையும் உடனடியாகச் செயல்படுத்துவதற்கு ஆவன செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 5-20*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மா. இராமச்சந்திரன்.

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இடைக்கால நிதிநிலை அறிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்பு அளித்த உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எங்களுடைய தலைவர் முதல்வர் அவர்கள் பல்லாண்டுகாலம் வாழ்ந்து இந்தத் தமிழகத்திற்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். இந்த இடைக்கால நிதி நிலை அறிக்கையை 100 பாராக்களிலே மிகச் சிறப்பாகத் தெள்ளத் தெளிவாகச் சமர்ப்பித்திருக்கிறார்கள். இதிலே குறை இருக்கிறது, வருகிற ஆட்சிக்கு இது தொந்தரவு தருகிற பட்ஜெட்டாக இருக்கிறது என்று எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்கிறார்கள். வருகிற ஆட்சியில் கலைஞர் அவர்கள் முதல்வராக வந்து எத்தனை சுமையை வேண்டுமானாலும் இந்தத் தமிழகத்திற்காகத் தாங்க இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தினுடைய சொத்தே, தமிழகத்தினுடைய மூலதனமே நம்முடைய தலைவர் கலைஞர்தான். இன்றைக்குச் சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கிறவர்கள் எல்லாம் கிராமத்திற்குப் போக முடியும் என்று சொன்னால் இந்த ஆட்சி செய்திருக்கிற காரியங்கள்தான் காரணம். பட்டா வழங்குவதிலே தாமதம் இருக்கிறது, பிரச்சினை இருக்கிறது என்று சொன்னால், பட்டா வழங்குகிற இடத்தை உன்னால் சொல்ல முடியவில்லை, சட்டமன்ற உறுப்பினர்கள் சரியாகச் செயல்படவில்லை என்பதுதான் கருத்தே தவிர, அரசு சொல்கிற கருத்திலே, அரசு சொல்கிற அந்த முறையிலே எந்தத் தவறும் இல்லை. நீங்கள் சரியாக கிராமங்களுக்குச் சென்று யார் யாருக்குப் பட்டா இல்லை என்பது உங்களுக்குத் தெரிந்திருந்தால் நீங்கள் முறையாக அதை மாவட்ட ஆட்சித் தலைவரிடம், வருவாய் அலுவலரிடம் சொல்லியிருந்தால் பட்டாக்களைத் தருவதற்கு மாவட்ட நிர்வாகம் தயாராக இருக்கிறது. ஆனால் உங்களால் அதைச் சரியாகச் செய்ய முடியவில்லை என்பதுதான் என்னுடைய கருத்தே தவிர (குறுக்கீடு) இதிலே உங்களுக்கு ஒன்றும் சொல்வதற்கில்லை. நீங்கள் எழுந்திருந்தால், நீங்கள் சரியாகப் போகவில்லை என்று அர்த்தம்.

**(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. எஸ்.என். ராஜ்குமார் மன்றாடியார் தலைமை)**



**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இராமச்சந்திரன் அவர்கள், எதிர்க்கட்சியில் இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள் சரியாக கிராமத்திற்குப் போகவில்லையென்றும், அவர்களுக்கு எங்கே பட்டா இருக்கிறது என்று தெரியவில்லையென்றும், மாவட்ட நிர்வாகத்தைக் கேட்டால் கொடுப்பார்கள் என்றும் சொல்கிறார்கள். எடுத்துக்காட்டாக, என்னுடைய வேலூரை எடுத்தாலும் வேலூர் தொகுதிக்குள்ளே இதுவரை ஒரு பட்டாவைக்கூட மாவட்ட ஆட்சித் தலைவர் கொடுக்கவில்லை. உள்ளூர் திட்டக் குழுமத்திலிருந்து 8 கிலோமீட்டர் வரை நாங்கள் பட்டா கொடுக்க இயலாது என்ற ஒரு கருத்தைச் சொல்கிறார்கள். இரண்டாவது கருத்து, அங்கே நில மதிப்பு என்பது பல இலட்சங்களுக்குச் செல்கிறது, ஆகவே நாங்கள் கொடுக்க இயலாது என்று சொல்லி திருவண்ணாமலை ஆனாலும் சரி, வேலூர் ஆனாலும் சரி கொடுக்காமல் இன்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முழுக்க முழுக்க நிறுத்தி வைத்திருக்கிறார்கள். இது தெரியாமல் சட்டமன்ற உறுப்பினர், ஆளும் கட்சியைச் சார்ந்தவர் பொத்தாம் பொதுவாக எதிர்க்கட்சியில் இருக்கக்கூடியவர்களை சகட்டுமேனிக்கு இப்படிச் சொல்வது சரியல்ல. மாவட்ட நிர்வாகத்தை, அவருக்குத் துணிவு இருந்தால் அமைச்சர் மூலம் கேட்டுப் பார்க்கட்டும். நகரப் பகுதிக்குள்ளே அந்த நில மதிப்பு என்பது அதிகமாக இருக்கிற காரணத்தினாலே கொடுக்க முடியாமல் இருக்கிறது. அரசே ஒரு முடிவு எடுத்து, அதை இலவசமாகக் கொடுத்துவிடலாம் என்று அமைச்சரவையிலே முடிவு எடுத்தால் நகர்ப் பகுதியிலே எல்லோருக்கும் பட்டா கொடுக்க முடியும், இல்லையென்றால் கொடுக்க முடியாது.

**திரு. மா. இராமச்சந்திரன்:** நான் சொல்வது ஏழைகளுக்கு, ஒரு காலத்திலே மணலி கந்தசாமி அவர்கள்....

**திரு. சி. ஞானசேகரன்:** நான் பேசுவதும் ஏழைகளுக்குத்தான்.

**திரு. மா. இராமச்சந்திரன்:** இல்லை. மாடி வீடு கட்டியிருக்கிறவனைச் சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள். நகரத்தில் இருக்கிற மனைகளின் விலை கூடுதலாக இருக்கிறது என்பது உண்மைதான். அதை முறைப்படுத்தி, பட்டா வழங்க வேண்டும் என்கிறபோது நடைமுறையிலே ஒரு பிரச்சினை இருக்கிறது. அதற்குத் தீர்வு கண்ட பின்னாலே செய்யப்படும். அது வேறு விஷயம். மணலி கந்தசாமி அவர்கள் இங்கே சட்டசபையில் இருந்த காலத்தில் நடந்ததைச் நான் சொல்கிறேன்.

கலைஞர் அவர்கள் முதல்வராக அப்போது இருந்தபோது அன்றைக்கு இருந்த நடைமுறையிலே பட்டாக்கள் வாங்காமலேயே குடியிருந்து வருகிற ஏழைகளுக்குப் பட்டா கொடுக்கப்படும் என்ற தீர்மானத்தை இந்தச் சபையிலே முதல்வராக கலைஞர் அவர்கள் நிறைவேற்றியபொழுது மணலி கந்தசாமி அவர்கள், 'இன்றைக்குத்தான் சொந்த இடத்திலே தூங்குகிற நிலையை ஏழைகளுக்கு உருவாக்கித் தந்திருக்கிறீர்கள்' என்று சொன்னார். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட நிலைமையை இப்போது உருவாக்கித் தந்திருக்கிறார்கள். நாங்கள் எல்லாம் பட்டா கொடுக்கிற நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு பட்டாக்களைக் கொடுக்கிற போது பட்டாக்களை வாங்கிச் செல்கிற தாய்மார்கள்—பெரும்பகுதி பெண்களுக்குத்தான் பட்டாக்களைத் தருகிறார்கள். பெண்களுக்குக் கொடுக்கிறபோது அந்தப் பட்டாக்களை வாங்கிக்கொண்டு அந்தத் தாய்மார்கள்—பட்டாக்களைக் கொடுக்கிற மாவட்ட ஆட்சித் தலைவர், தாசில்தார் காலிலேகூட விழுந்து எழுந்து செல்கிறார்கள். இப்போது சொந்த இடம், தன்னுடைய இடம், தன்னுடைய நிலம், என்னுடைய இடத்திலே நான் தூங்குகிறேன் என்று சொல்கிற வாய்ப்பை இப்போது கலைஞர் அவர்கள் தமிழக மக்களுக்குத் தந்திருக்கிறார்கள். இது மிகச் சிறப்பான அம்சம். நிறைவேற்றப்படாமல் இருந்தால் அது யாருடைய தவறு என்பதை நான் சொல்லித் தெரிய வேண்டிய அவசியம் இல்லை. நம்முடைய சட்டமன்றப் பேரவை உறுப்பினர், வழக்கறிஞர் ஞானசேகரன் அவர்களுக்குச் சொல்வது, நகரத்திலே இருக்கிற மக்களைப் பொறுத்தவரையில் அந்த நிலத்திலே பெரிய பிரச்சினை இருக்கிறது; அதை மதிப்பீடு செய்ய வேண்டுமென்ற சூழ்நிலை இருக்கிறது. அது வேறு விஷயம். அதேபோல இப்போது பல்வேறு காரியங்கள்.....

*பிற்பகல் 5-25*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே....

**திரு. மா. இராமச்சந்திரன்:** நான் yield ஆகவில்லை. இதிலே ஒன்றும் இல்லையே?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அது வேறு விஷயம், அது வேறு விஷயம் என்று தள்ளிப் போடுகிற விஷயம் அல்ல. அரசு ஒரு திட்டத்தை அறிவிக்கிறது; அறிவித்த பிறகு வேலூரிலே ஒரு பட்டா கொடுத்திருக்கிறார்கள் என்கிற விவரம் அவர்களிடம் ஏதாவது இருந்தால் சொல்லட்டும். நம்முடைய





மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எல்லாம் கொடுத்தாகிவிட்டது என்கிற முறையிலே சொல்லிவிட்டு, பொதுவாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கிராமத்திற்கே போவதில்லை என்கிற அடிப்படையிலே சொல்லலாமா? வேலூர் நகரம் மட்டுமல்ல; வேலூர் நகரத்தைச் சுற்றி 8 கிலோமீட்டர் வரை இருக்கக்கூடிய கிராமங்களிலே ஒரு பட்டாகூட கொடுக்க முடியவில்லை. காரணம், விலை அதிகம் என்று சொல்கிறார்கள். ஆகவே அமைச்சரவை இன்றேகூடக் கூடி, இலவசமாகக் கொடுப்பதற்கு முடிவெடுத்தால்தான் இந்தப் பிரச்சினை தீருமேயொழிய, நீங்கள் வேறு விஷயம் என்று சொல்வது பிரச்சினையைத் தள்ளிப் போடுவதற்கு இணையாகும்.

**திரு. மா. இராமச்சந்திரன்:** இல்லை. நான் அதற்காகச் சொல்லவில்லை. நீங்கள் சொல்வது வேறு விஷயம். ஆனால், பட்டா வழங்குகிற நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கிறது. வேண்டுமென்றால் நேரில் போய் நீங்கள் பார்த்துக் கொள்ளுங்கள். ஆக, இப்போது பல்வேறு காரியங்களை இந்த ஆட்சி சிறப்பாகச் செய்து கொண்டிருக்கிறது.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

உள்ளாட்சித் துறை மிகச் சிறப்பாகச் செயல்படுகிற காரணத்தினால்தான்—இந்த ஆட்சியினுடைய பெருமையால் நாங்கள் மட்டும் பயன்பெறவில்லை—எதிர்க்கட்சியிலே இருக்கிற நீங்களும் பயன் பெற்றிருக்கிறீர்கள். நீங்களும் கிராமங்களுக்குச் செல்கிற வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. 1996-க்கு முன்னாலே இருந்த ஆட்சிக் காலத்திலே சட்டமன்ற உறுப்பினர்கள் கிராமத்திற்குச் செல்லவே முடியாது.

குடிதண்ணீர் இல்லை; குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்க்க முடியாத சட்டமன்ற உறுப்பினர் இங்கே வரவேண்டாம் என்று சொன்னார்கள். எங்களுடைய மாவட்டங்களிலே பல்வேறு இடங்களுக்குச் சட்டமன்ற உறுப்பினர்கள் போகாமல் இருந்த காலங்கள் உண்டு. அப்படிப்பட்ட சூழ்நிலைகளெல்லாம் இப்போது இல்லை. எந்த ஊருக்கு வேண்டுமானாலும் எந்தச் சட்டமன்ற உறுப்பினர் வேண்டுமானாலும், போகாதவர்கள்கூடப் போகலாம். அப்படிப்பட்ட சூழ்நிலையைத்தான் இப்போது இந்த ஆட்சிக் காலத்திலே உருவாக்கியிருக்கிறார்கள். அதுவும் எங்களுடைய உள்ளாட்சித் துறை அமைச்சராக இருக்கின்ற அண்ணன் திரு. கோ.சி. மணி அவர்கள் செல்லாத கிராமமே இல்லை. அத்தனை கிராமங்களுக்கும் சென்று

[திரு. மா. இராமச்சந்திரன்] [2001 ஜனவரி 30

என்னென்ன காரியங்கள் நிறைவேற்றப்பட வேண்டுமென்பதைக் கேட்டு, அத்தனைப் பணிகளையும் செய்து முடித்திருக்கிறார்கள். கிராமங்களுக்குக் குடிநீர் குடிக்க மட்டுமல்ல, குளிப்பதற்கும், தோட்டங்கள்கூடப் போட்டுக்கொள்ளும் அளவிற்கு இப்போது கிராமங்களிலே குடிநீர் வடிகால் வாரியம் மிகச் சிறப்பாகப் பணியாற்றி, ஒரு நல்ல தன்மையை இந்த நாட்டிலேயுள்ள அத்தனை பேருக்கும் ஏற்படுத்தித் தந்திருக்கிறது.

அதுமட்டுமல்ல. பல்வேறு காரியங்கள் செய்யப்பட்டுள்ளன. கல்வித் துறையை எடுத்துக் கொண்டால், கிராமத்திலே இருக்கிற எந்தப் பள்ளிக்குக் கட்டடங்கள் இல்லை? அது தொடக்கப்பள்ளியாக இருந்தாலும் சரி, நடுநிலைப்பள்ளியாக இருந்தாலும் சரி, மேல்நிலைப்பள்ளியாக இருந்தாலும் சரி, அத்தனை பள்ளிகளுக்கும் இப்போது கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன.

இப்போது ஒரு பணிகூட நடைபெறவில்லை என்று சிலர் சொல்கிறார்கள். உங்களுக்குக் கொடுத்த ஒரு கோடி சொச்சம் ரூபாயை, சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி வளர்ச்சிக்காகக் கொடுத்ததை என்ன செய்தீர்கள்? இந்த முதலமைச்சர்தானே சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கிட்டத்தட்ட ஒரு கோடியே 15 இலட்சம், 25 இலட்சம், 20 இலட்சம் என்று ரூபாயைக் கொடுத்திருக்கிறார்கள். இப்போது 77 இலட்சம்; இதற்கு முன்னாலே 35 இலட்சம், அதற்கு முன்னாலே 25 இலட்சம்; இப்படியாக அந்தப் பணத்தை வாங்கிக் கொண்ட நீங்கள் உங்கள் தொகுதிகளிலேயுள்ள கிராமங்களுக்குப் பயன்படுத்தினீர்களா இல்லையா? அந்தப் பணத்தை எங்கேயிருந்து கொடுத்தார்கள்? காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன; அல்லது முடிந்திருக்கின்றன; அல்லது செயல்பட்டிருக்கின்றன என்பதை நீங்கள் போய்ப் பார்த்தீர்களா? அப்படிப்பட்ட காரியங்களைச் செய்கிற நம் முதலமைச்சர்தான் இந்த நாட்டிலே உள்ள எல்லா முதலமைச்சர்களுக்கும் எடுத்துக்காட்டான முதலமைச்சராக இருக்கிறார்.

அதுமட்டுமல்ல. இப்போது பேருந்து வசதிகளைப் பற்றிச் சொல்கிறார்கள். என்னுடைய தொகுதியிலே எந்தக் கிராமத்திலும், பேருந்து வசதி இல்லை என்று சொன்னவர்கள், தற்போது Mini bus வந்து போகிறது என்கிறார்கள். சில பேருந்துகள் கிராமங்களுக்கு அடிக்கடி வருவதனாலே எங்களுக்குத் தொல்லையாக இருக்கிறது என்று



2001 ஜனவரி 30] [திரு. மா. இராமச்சந்திரன்]

சொல்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையை இப்போது உருவாக்கித் தந்திருக்கிற முதல்வர் அவர்கள், 'உறவுக்குக் கை கொடுப்போம், உரிமைக்குக் குரல் கொடுப்போம்' என்கிற தாரக மந்திரத்தை இந்தியாவிலே முதன்முதலாகச் சொன்னவர் ஆவார். ஆகையினால்தான் மத்திய நிதியிலிருந்து 40 சதவிகிதம் வேண்டுமென்று கேட்கிறார்கள். ஆனால் 29 சதவிகிதம்தான் மத்திய அமைச்சரவை தருகிறது. 4700 கோடிக்குமேல் மிச்சப்படுகிறது; மாநில அரசுகள் சிரமப்படுகின்றன என்று சொல்கிறார்கள். 'உறவுக்குக் கை கொடுப்போம், உரிமைக்குக் குரல் கொடுப்போம்' என்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தாரக மந்திரம் ஆகும்.

பிற்பகல் 5-30

சிலர் சொல்கிறார்கள், நாம் மதவாதிகள் என்று. மதவாதிகளுடன் சேருகிறவர்களோடு நாங்கள் சேரவில்லை என்று சொல்கிறார்கள். அது வேறு விஷயம். அரசியல் காரணங்களுக்காக எது வேண்டுமானாலும் சொல்லலாம். நம்முடைய முதல்வர் அவர்கள் இடைக்கால நிதிநிலை அறிக்கையை உட்கார்ந்து படித்த உடனேயே நாட்டிலே இருக்கிற அத்தனை மக்களும், உட்கார்ந்து நிதிநிலையைப் படிக்கிறாரா? இப்படிப்பட்டச் சூழ்நிலை எப்படி வந்தது? தமிழகத்தினுடைய காவலர், இந்தத் தமிழகத்தினுடைய சொத்து—இதுதான் மூலதனம்—தமிழக மக்களின் நலனை தினம் தினம் எண்ணிப் பார்க்கிற முதலமைச்சரின் உடலிலே கோளாறு வந்துவிட்டதா என்று தமிழகத்து மக்கள் எல்லாம், கிராமத்தில் இருப்பவர்கள் அத்தனை பேர்களும், தொடர்ந்து கேட்கின்ற சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. எங்களுக்குச் செய்தி வந்துகொண்டே இருக்கிறது. ஏனென்று சொன்னால், இந்த நாட்டினுடைய நிலைமையை எண்ணிப் பார்க்கிற முதல்வர், சீரழிந்து போன தமிழகத்தை மறுபடியும் சீர்செய்த முதல்வர் அவர். எத்தனையோ காரியங்கள் இப்போது நடைபெற்றிருக்கின்றன. ஒவ்வொரு காரியமாக எடுத்துச் சொல்வோமே யானால் முதலில்—சொன்னதைச் செய்வோம்; செய்வதைத்தான் சொல்வோம் என்று சொன்னார். இதையெல்லாம் தேர்தல் அறிக்கையிலும் சொல்லவில்லை. முதன்முதலில் நிதிநிலை அறிக்கையிலும் சொல்லவில்லை—வருமுன் காப்போம் திட்டம் கொண்டு வந்தார். கிராமத்திற்கு அத்தனை டாக்டர்களும் போனார்கள். ஏன் ஸ்கேனைக்கூட அங்கே வைத்திருந்தார்கள். ஸ்கேனை கிராமத்திற்குத் தூக்கிக் கொண்டு போனார்கள். ஒருமுறை நம்முடைய

[திரு. மா. இராமச்சந்திரன்] [2001 ஜனவரி 30

மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் வந்தார்கள். தஞ்சையிலே இருக்கிறபோது வருமுன் காப்போம் திட்டத்திற்கு நீங்கள் ஸ்கேன் கொண்டு போகவில்லையா என்று கேட்டார். அவர்கள் கொண்டு போகவில்லை என்று சொன்னார்கள். அவசியம் கொண்டு போக வேண்டும் என்று சொன்னார். இப்போது வருமுன் காப்பதற்கு ஸ்கேனே அந்தக் கிராமத்திற்குப் போகிறது. பல்வேறு மருத்துவ நிபுணர்கள் இருந்து பார்க்கிற அந்த நிகழ்ச்சியை நாம் பார்க்கிறோம். ஏன் சட்டமன்ற உறுப்பினரே அங்கேதான் B.P. எவ்வளவு இருக்கிறது என்பதைப் பார்த்துக் கொள்கிறார்கள். இப்படி எல்லாம் ஒரு நல்ல நிகழ்ச்சியை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். சென்னை மருத்துவமனையிலே அறுவைச் சிகிச்சை செய்ய வேண்டும் என்று சொல்லி எத்தனையோ பேர்களை இங்கு கொண்டு வந்து சேர்க்கின்ற சூழ்நிலையை உருவாக்கித் தந்தோம்.

அதுமட்டுமல்ல. கால்நடைப் பாதுகாப்பு. இதைத் தொடங்கி வைத்த பின்பு எத்தனையோ இடங்களில் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எங்களுடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் நாங்களும் கால்நடைப் பாதுகாப்பு துவக்க விழாவை நடத்துவதற்காகச் சென்றோம். அப்போது ஆயிரக்கணக்கான மாடுகள் போட்ட சத்தம்—அவற்றைப் பார்ப்பதற்கு—எவ்வளவு ரம்மியமாக இருக்கிறது. இது அல்லவா நல்ல திட்டம். இந்த கால்நடைப் பாதுகாப்புத் திட்டம், வாயில்லா ஜீவன்களுக்கு செய்கிற பெரிய காரியம் என்று சொல்லி அதைப் பாராட்டாதவர்கள் உண்டா? இப்படி எத்தனையோ திட்டங்கள்.

சமத்துவபுரம். தஞ்சை ஜில்லாவிலேதான் முதன்முதலிலே தலைவர் அவர்கள் திறந்தார்கள். கலைஞர் முதலமைச்சர் அவர்கள் அதுவும், என்னுடைய தொகுதியிலே. அதற்கு முன்னாலே மதுரையிலே திறந்தார். பின்னாலே எங்கள் தஞ்சை ஜில்லாவுக்கு வந்தார். இப்போது இந்த சமத்துவபுரம் திட்டம் எப்படிப்பட்ட பலனைப் பெறுகிறது. இருக்கிற ஏழைகள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து பல்வேறு காரியங்களைச் செய்து பலன் பெறுகின்ற நிலை ஏற்பட்டுள்ளது. அங்கு இருக்கிறவர்கள் சாதி, மத பேதமற்ற வாழ்க்கையை நடத்துவதைப் பார்க்கிறபோது எவ்வளவு சிறப்பாக அது மனக்கண்முன் வருகிறது என்பதைத்தான் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.



2001 ஜனவரி 30] [திரு. மா. இராமச்சந்திரன்]

உழவர் சந்தையைப் பற்றிக் குறை கூறலாம். உழவர் சந்தைக்கு உழவர்கள் அன்றாடம் வந்து வியாபாரம் செய்கின்றார்கள். அதைவிட வாங்கிச் செல்பவர்களுக்குக் கிடைக்கிற மகிழ்ச்சிதான் முக்கியம். உழவர் சந்தைக்குப் போனால் ஒரு கிலோவிற்கு கிட்டத்தட்ட 2 ரூபாய், 3 ரூபாய் பலன் கிடைக்கிறது. தனித் தனியே குடித்தனம் நடத்துகிறவர்கள், காலை வேளையிலே வந்து உழவர் சந்தையிலே காய்கறிகளை வாங்கிவிட்டு மனம் மகிழ்ந்து போகிற காட்சியை நாங்கள் பார்க்கிறோம். தன்னுடைய தொகுதியிலே என்ன நடக்கிறது என்பது கூடத் தெரியாமல் எதையாவது குறை சொல்ல வேண்டும் என்பதற்காக, இந்த அரசிலே ஒரு காரியமும் நடைபெறவில்லை என்று நான்கே முக்கால் ஆண்டுகளுக்குப் பின்னாலே சொல்கிறார்கள் என்றால், இவை எல்லாம் நெஞ்சிலே கை வைத்துச் சொல்கிற காரியமா? எத்தனை காரியங்கள் இந்த நாட்டிலே உள்ள கிராமங்களில் நகரங்களில் நடந்திருக்கின்றன. சிமெண்ட் சாலைகள், தார்ச் சாலைகள் போடப்பட்டுள்ளன. Mini bus போகாத இடமில்லை. இந்தியாவிலே குறைந்த கட்டணத்தில் அதிக அளவிலே பேருந்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இப்போது திருவண்ணாமலையில் Gas cylinder வாங்கக் கடன் கொடுக்கிற திட்டம் போல் ஒவ்வொரு கிராமத்திற்கும் கடன் கொடுக்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இதை எல்லாம் நீங்கள் சொன்னீர்களா? இல்லை, எதிர்க்கட்சிக்காரர்களாகிய நீங்கள் வருமுன் காப்போம் திட்டத்தை இப்படிச் செய்யுங்கள் என்றாவது சொன்னீர்களா? உழவர் சந்தை ஆரம்பியுங்கள், விவசாயிகளுக்கு நல்லது என்று சொன்னீர்களா, அல்லது கால்நடையைப் பாதுகாக்க வேண்டுமென்று நீங்கள் சொன்னீர்களா? நீங்கள் சொல்லாததை எல்லாம் 24 மணி நேரமும் தமிழகத்தைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கிற இந்த முதல்வர் அவர்கள் செய்கிற காரியம் (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட மாமனிதர் தோற்பாரா? எப்படித் தோற்கமுடியும்? தமிழகம் அவரைத் தோற்கடித்தால் இந்த நாட்டிலே விடிவு ஏது? (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் வேண்டுமானால் சொல்லலாம். ஊழலா, மதமா என்று சொன்னால் ஊழல்தான் பெரியது. தவறான ஒரு மனிதன் நாட்டின் முதல்வராக வருவது என்பது எந்த நாட்டிலேயும் நடக்க இயலாத காரியம். ஒரு சாதாரண காரியம் அல்ல. வழக்கு மன்றத்திலே, நீதிமன்றங்களிலே தண்டிக்கப்பட்டவர்கள், மறுபடியும் நாங்கள் ஆட்சிக்கு வருவோம், அவர்களோடு கை கோர்த்துச் செல்வோம் என்று சொல்வதை நடைமுறையில் இந்த மக்கள் ஏற்றுக் கொள்கிறார்களா? நீங்கள் எல்லாம் கிராமங்களுக்குப் போகவில்லை என்று நினைக்கிறேன்.

[திரு. மா. இராமச்சந்திரன்] [2001 ஜனவரி 30

தினம் தினம் போகிற பாக்கியத்தைப் பெற்றவன் நான். எனக்கு மட்டும் திருவோணத்தில் 87 ஊராட்சிகள் உள்ளன. அத்தனையும் கிராமங்கள். கிராமங்கள் அத்தனைக்கும் போகிறபோது மக்கள் நீங்கள்தான் செய்ய வேண்டும், உங்கள் தலைவர்தான் செய்வார்கள், மற்றவர்கள் செய்ய மாட்டார்கள், (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் இதைச் செய்யுங்கள், நீங்கள் இதைச் செய்யுங்கள் என்று கேட்கிறார்கள். எதிர்பார்ப்புகளும் செய்ய வேண்டிய காரியங்களும் இந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால்தான் செய்ய முடியும், செய்ய முடியும் என்று சொல்லி பேச்சை முடிக்கிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 5-35

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் அ. மணி.

**டாக்டர் அ. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நல்ல வாய்ப்புக்கு உங்களுக்கு முதலிலே எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஓய்வு என்ற வார்த்தையையே உச்சரிக்க விரும்பாத
உன்னதமான தலைவா;
நீ இல்லாத இந்த மாமன்றம் ஓர் ஐந்து நாட்களாக
காற்றில்லாத உலகமாக;
கரையில்லாத கடலாக; சுருதியில்லாத ஸ்வரமாக;
மதியில்லாத மனிதனாக; தந்தி இல்லாத
வீணையாக; (மேசையைத் தட்டும் ஒலி)
தாயில்லாத பிள்ளையாக இருந்ததே!
முக்காலமும் உணர்ந்த முதல்வா,
சுந்தரமாக இருக்க வேண்டிய இந்த மாமன்றம்
அசுந்தரமாக ஆகப்போவதை முன்கூட்டியே அறிந்து நீ வரவில்லையா?

நான் இந்த இடைக்கால நிதிநிலை அறிக்கையைப் படித்தபோது—

"சுந்தரமாக இருக்க வேண்டிய இந்த அவை
அசுந்தரமாக ஆகப் போவதை நினைத்து
நீ வரவில்லையா? உதயசூரியனே...



2001 ஜனவரி 30]

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** கவிதையிலே பேசுகிறபோது அந்தக் கவிதை சொல்கிறவருக்கு விளங்குகிற பொருள் மற்றவர்களுக்கு விளங்குவது இல்லை. அதனால் ஏற்படக்கூடிய இழுக்கினால் இந்த அவை என்றைக்கும் அசுந்தரமாகாது. சுந்தரமாகவே இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் அ. மணி, அடுத்த subject-க்குப் போங்கள்.

**டாக்டர் அ. மணி:** உதயசூரியனே, உன் வரவால் நாங்கள் தாயைக் கண்ட சேயைப் போல மகிழ்ச்சியடைந்து தங்களை வணங்கி என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன்.

இந்த இடைக்கால நிதிநிலை அறிக்கையை நான் படித்தபோது தமிழகம் ஒரு குட்டி ஜப்பானாக மாறியுள்ளதை என்னால் உணர முடிந்தது. ஜப்பான்மீது அன்று குண்டு வீசப்பட்டது. அதேபோல, 1996-க்கு முன்னால், 1991-லே ஒரு குண்டு வீசப்பட்டது. அங்கே வீசிய குண்டு அயல் நாட்டவரால் வீசப்பட்ட குண்டு. இங்கே வீசிய குண்டு தமிழக மக்கள் தங்களால், தாங்கள் மீதே வீசிக் கொண்ட குண்டு. இந்தக் குண்டினாலே தமிழகம் என்ற அழகான இந்தப் பூங்கா முற்றிலும் சிதைக்கப்பட்டு, சோதனைக்குள்ளாகி, வேதனையின் விளிம்பில் இருந்தபோது, சோதனைகளை எல்லாம் சாதனையாக்கி, சரித்திரத்தைப் படைத்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், சிதைந்த தமிழகத்தை அழகான ஓவியமாகத் தீட்ட ஆரம்பித்தார். அவர் வரைந்த ஓவியங்கள் சாதாரண ஓவியங்கள் அல்ல. வரலாற்றுச் சிறப்புமிக்க பிரசித்தி பெற்ற ஓவியங்கள். Masterpiece என்று சொல்லக்கூடிய ஓவியங்கள். நான் சிறு வயதிலே படித்த ஒரு நாவல் எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது. ஒரு ஓவியன், மிக அழகாக ஓவியம் தீட்டக்கூடியவன்; திறமைமிக்கவன். அந்த ஓவியன் சந்தர்ப்பம் கிடைக்காத காரணத்தினால் தன்னுடைய திறமையைக் காட்டுவதற்கு வாய்ப்பு இல்லாமல் இருந்து கொண்டிருந்த சமயத்திலே அவனுடைய நண்பன் மிகவும் நோய்வாய்ப்பட்டு, அந்த நோயிலே வீழ்ந்த அவன்—அதாவது மூடநம்பிக்கையிலே மிகவும் மூழ்கியிருந்த அவன்—இந்த நோயிலேயிருந்து தான் மீளமுடியாது என்றும், நிச்சயமாக தான் இறப்பது உறுதி என்றும், அவன் நினைத்துக் கொண்டு ஓர் அறையிலே படுத்துக் கொண்டிருந்தான். அந்த அறையிலே ஒரு ஜன்னல் இருந்தது. அந்த ஜன்னலுக்கு வெளியே ஒரு செடி; அந்த செடியையே அவன்

உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். அப்போது காற்று பலமாக வீசியது. அந்தச் செடியிலேயிருந்த இலைகள் ஒவ்வொன்றாகக் கீழே விழுந்து கொண்டிருந்தன. அதைப் பார்த்து அவன், இந்தச் செடியில் இருக்கின்ற இலைகள் ஒவ்வொன்றாக விழுந்து கொண்டிருக்கின்றபோது கடைசியாக உள்ள அந்த இலை விழும்போது தான் இறப்பது உறுதி என்ற உச்சகட்டப் புலம்பலிலே தன்னுடைய ஓவிய நண்பனிடத்திலே புலம்பிவிட்டு அசதியிலே தூங்கிவிட்டான். காலையிலே தான் இறப்பது உறுதி, நிச்சயமாக அந்தக் கடைசி இலையும் காலையில் உதிர்வது உறுதி என்ற நிலையிலே அவன் உறங்கினான். ஆனால் காலையிலே கண்விழித்தபோது, அங்கே இலை விழாமல், அதற்கு மாறாக அந்த இலை அங்கே மிகப் பிரகாசமாகக் காற்றிலே வீசிக்கொண்டிருந்தது. அதைப்பார்த்த அந்த நண்பன் அந்த இலை விழாத காரணத்தினால் தான் முழுமையாகக் குணம் அடைந்துவிட்டதாக எண்ணி எழுந்து நடக்கலானான். அதைப்போலத்தான், 1996-க்கு முன்னாலே இந்தத் தமிழகம் என்ற பூங்கா முற்றிலும் சிதைக்கப்பட்டு, அதாவது நம்பிக்கையை இழந்து, மக்கள் வேதனையுற்றிருந்த காலத்திலே 1996-லே சிதைந்த இந்தத் தமிழகம் கலைஞர் என்ற அந்த ஓவியனிடத்தில் கொடுக்கப்பட்டது. அந்த ஓவியன் மிக அழகாக வரைந்த Masterpiece. கலைஞர் என்ற அந்த உத்தமத் தலைவன் வரைந்த பல Master pieces அதாவது பெரியார் நினைவு சமத்துவபுரம், நமக்கு நாமே திட்டம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், வருமுன் காப்போம் திட்டம், உழவர் சந்தை, மாணவருக்கான கணினிக் கல்வித் திட்டம், சட்டமன்ற உறுப்பினருக்கான தொகுதி மேம்பாட்டுத் திட்டம், மேம்பாலங்கள் திட்டம், சாலைகள், பூமாலை திட்டம் என்று இப்படி பல அழகான வரலாற்றுச் சிறப்புமிக்க பிரசித்திபெற்ற ஓவியங்கள். அதாவது Master piece என்று சொல்லக்கூடிய இந்த ஓவியங்களை வரைந்த காரணத்தால் தமிழகத்தை அழிவிலிருந்து இப்போது காப்பாற்றி பூத்துக் குலுங்கும் சோலையாக ஆக்கியிருக்கிற இந்தக் கலைஞன் ஐந்தாண்டுகளில் கடைசியாகத் தீட்டியிருக்கின்ற ஓவியம்தான், அந்தக் கலைஞன் மூச்சாக நினைக்கக்கூடிய தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட அந்த ஓவியம், அதுதான் அமைப்பு சாராத் தொழிலாளர்கள். இந்த அமைப்பு சாராத் தொழிலாளர் ஓவியத்திற்கு கண்கள் எப்படி முக்கியமோ அதேபோன்று கலைஞர் தீட்டிருக்கின்ற ஓவியத்திலே கலைஞர் மூச்சாகக் கருதக்கூடிய அந்த அமைப்பு சாரா ஓவியத்தை எங்களது மாவட்டத்தைச் சேர்ந்த கலைஞரது மூச்சை கலைஞரது அரிச்சுவட்டைப் பின்பற்றி அல்லும் பகலும் தேனீக்களைப் போல, சுறுசுறுப்பாக இயங்கக்கூடிய எங்களது



மாவட்ட அமைச்சரான டாக்டர் பொன்முடி அவர்களுக்கு அளித்திருப்பதிலே நாங்கள் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம்.

பிற்பகல் 5-40

கலைஞர் தமிழகத்தை இந்தியாவிலேயே மிகச் சிறந்த ஒரு மாநிலமாக முதலிடத்திற்குக் கொண்டு வந்து, மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தி மறைந்த பாரத ரத்னா, ஜே.ஆர்.டி. டாடா அவர்களுடைய பரிசைப் பெறுகிறார். இன்னொரு புறத்திலே புலிக்குப் பிறந்தது பூனையாகுமா என்பதுபோல, எங்களது அன்பு அண்ணன், வணக்கத்திற்குரிய சென்னை மாநகர மேயர் அவர்கள், சென்னை மாநகரை பூத்துக் குலுங்குகின்ற சோலையாக, சிங்காரச் சென்னையாக்கி இன்று இந்தியாவிலேயே சென்னையை ஒரு சுகாதாரம் மிக்க மாநகரமாக உருவாக்கி அங்கே பரிசைப் பெறுகிறார். இப்படி எத்தனையோ படைப்புகள் தந்தாலும், கலைஞருக்கு இதிலெல்லாம் திருப்தி இருக்குமா என்றால், நிச்சயமாக இல்லை. படைப்பாளி பல படைப்புகளைப் படைக்கலாம். ஆனாலும் எந்தவொரு படைப்பு மக்களைச் சென்று அடைகிறதோ, எந்த நோக்கத்திற்காக படைக்கப்படுகிறதோ அந்த நோக்கத்தை அது அடைகின்றபொழுது அந்தப் படைப்பு முழுமை பெறுகிறது. அந்தப் படைப்பாளி முழுமை அடைகிறான். அந்த வகையிலே பார்க்கிறபோது, கலைஞர் படைத்த படைப்புக்கள் எத்தனை இருந்தாலும் ஒரே ஒரு படைப்பு மகளிருக்காக அவர் தீட்டிய படைப்பு, மகளிருக்கான வாழ்ந்து காட்டுவோம் என்ற திட்டமாகும்.

இன்றைக்கு மதுரையிலே எங்கோ ஒரு குக்கிராமத்திலே பிறந்து ஏழ்மையில் வாடி, படிப்பறிவு இல்லாத சின்னப்பிள்ளை என்ற அந்த அம்மையார் சக்தி புரஸ்கார் விருது பெற்றபோது அவருடைய காலிலே பாரதப் பிரதமர் விழுகிறார் என்றால் நிச்சயமாக ஒரு படைப்பாளிக்கு இதைவிட பெருமை சேர்க்கக் கூடியது வேறு ஒன்றும் இருக்க முடியாது. அந்த ஏழையினுடைய காலிலே பாரதப் பிரதமர் விழுகிற அந்தப் படத்தை நான் செய்தித்தாளிலே பார்த்தபோது, நினைத்தேன். பாரதப் பிரதமர் ஏழையின் காலிலே விழவில்லை. டாக்டர் கலைஞருடைய படைப்பிலே விழுகிறார் என்பது போன்ற தோற்றம் ஏற்பட்டது. இதுதான் ஒரு படைப்பாளிக்கு பெருமை சேர்க்கக் கூடியதாகும். இப்படிப் பல சாதனைகளைப் புரிந்து கொண்டிருக்கிற டாக்டர் கலைஞர் அவர்கள் ஒருபுறம். ஆனால், இப்போது நாம் பத்திரிகையை

எடுத்துப் பார்த்தால், அடுத்த முதலமைச்சர் நான்தான், நான்தான் என்று சிலர் கொக்கரித்துக் கொண்டு அறிக்கை விட்டுக் கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். அதைப் பார்க்கிறபோது எனக்கு ஒரு கதை ஞாபகம் வருகிறது. ஒரு காட்டில் ஒரு நரிக் கூட்டம். நரிக் கூட்டங்களையெல்லாம் ஒரு நரி ஏமாற்றி கிட்டத்தட்ட ஐந்தாண்டு காலம் நன்றாகச் சாப்பிட்டு, அந்த நரிக் கூட்டத்தினுடைய உழைப்பிலே வாழ்ந்து கொண்டு கொழுத்தது. இது இப்படியே ஐந்தாண்டுக் காலம் நடந்தது. இந்த நரிக் கூட்டங்களெல்லாம் ஒரு சமயத்தில் இந்த நரி நம்மையெல்லாம் ஏமாற்றிச் சாப்பிடுகிறது என்ற உண்மையைத் தெரிந்து கொண்டபோது, அந்த நரிகளெல்லாம் ஒன்று சேர்ந்து அந்த நரியை அடித்து காட்டைவிட்டே துரத்திவிட்டது. காட்டை விட்டே துரத்தப்பட்ட அந்த நரி, நகர்ப்புறத்திலே சென்று பல இடங்களிலே சுற்றித் திரிந்தது. சோர்வடைந்து தாகம் மேலெழும்ப தண்ணீர் குடிப்பதற்காக ஒரு தொட்டியை அடைந்தது. அந்தத் தொட்டியை அடைந்தபொழுது அங்கே தண்ணீர் குடிப்பதற்காகக் கீழே குனிந்தபோது, தொட்டியில் தண்ணீர் இல்லை. அது ஒரு சாயப் பட்டறை. சாயம் கலக்கப்பட்ட தண்ணீர்தான் தொட்டியில் இருந்தது. கீழே குனிந்து தண்ணீரைக் குடிக்கும் சமயத்தில்—ஏற்கெனவே பசி மயக்கம், தண்ணீர் தாகம் வேறு—கண் அப்படியே மங்கிய நிலையில் தொட்டியில் விழுந்தது. விழுந்த அந்த நரி தட்டுத் தடுமாறி மேலே ஏறி வந்தபோது திரும்ப தண்ணீரில் பார்ப்பதற்கு அதற்கே பயமாக இருந்தது. பெரிய ஒரு விகாரமான, பயங்கரமான மிருகமாக அது மாறியிருந்தது. அதையே அது தன்னுடைய ஒரு மூலதனமாக வைத்து மீண்டும் காட்டுக்குச் சென்று, மீண்டும் அந்த நரிகளை ஏமாற்றலாம் என்று திட்டம் போட்டது. திரும்ப காட்டுக்குப் போனது. காட்டுக்குப் போனபோது, மற்ற நரிகளெல்லாம் இதைப் பார்த்தவுடன் ஏதோ ஒரு விசித்திரமான பிராணி காட்டுக்குள் வந்திருக்கிறது என்பதுபோல எல்லா நரிகளும் பயந்து நடுங்கின. அப்போது இந்த நரி என்ன செய்தது. 'நான் கடவுளால் அனுப்பப்பட்ட தூதன், நானே விலங்களுக்கு அரசன், காட்டிலுள்ள விலங்குகளுக்கு எல்லாம் நானே அரசன்' என்று கர்ஜித்தது. அறிக்கையிட்டு கர்ஜித்தது. இதையெல்லாம் பார்த்த நரிகள் எல்லாம் திரும்பவும் பயந்து, திரும்பவும் அந்த நரி சொல்கிற மாதிரி கேட்டு, திரும்பவும் அது உழைக்காமல் சாப்பிட ஆரம்பித்தது. இப்படியே பல நாட்கள் கடந்தது. பிறகு....



பிற்பகல் 5-45

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அப்புறம் மழை பெய்தது. சாயம் கலைந்தது. கதையை முடியுங்கள். அடுத்த உறுப்பினர் பேச வேண்டும்.

**டாக்டர் அ. மணி:** நரியினுடைய வேஷம் தெரிந்த மற்ற நரிகள் மீண்டும் அந்த நரியை அடித்து வெளியே துரத்தியது. நேராக அந்த நரி ஓடியது. அது எங்கே ஓடும்? நிச்சயமாக வருகிற April last week அல்லது May first week-ல் நிச்சயம் தெரியும். அது ஓடினால் ஐதராபாத் திராட்சை தோட்டத்திற்கு ஓடும்; இல்லையென்றால் அமெரிக்கா ஓடும். வேறு எங்கும் ஓடாது. இதைச் செய்வதற்கு மக்கள் Ready; பார்ப்பதற்கு இவர்களும் Ready-ஆக இருக்கிறார்கள் என்பதைக் கூறி ஒரே ஒரு நிமிடத்தில் என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி. கலைஞர் காலத்திலே எல்லா அடிப்படைத் தேவைகளையும் பெற்றிருக்கிற தொகுதி. இருந்தாலும்கூட, என்னுடைய வேண்டுகோளை ஏற்று ஒரு SIDCO தொழிற்பேட்டையைக்கூட டாக்டர் கலைஞர் அவர்கள் அளித்திருக்கிறார்கள். அதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதேநேரத்தில் மிகவும் பின்தங்கிய தொகுதியாக இருக்கின்ற காரணத்தினாலே அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்களுக்கு எல்லாம் பிழைப்புக்கு வழியில்லாத ஒரு நிலை இருக்கிறது. நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு உளுந்தூர்பேட்டை தொகுதி பற்றி மிக நன்றாகத் தெரியும். எனவே, அந்தப் பகுதியிலே ஒரு தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். நிச்சயமாக, இப்போது தேவையில்லை, நீங்கள்தான் ஐந்தாவது முறையாக முதலமைச்சராக ஆகப்போகிறீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தச் சமயத்திலே அந்தத் தொழிற்சாலையை ஆரம்பித்தால் போதும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய மாவட்டத்திலே சென்ற ஆண்டு ஒரு மருத்துவக் கல்லூரி தொடங்கப்பட்டது. அந்த மருத்துவக் கல்லூரியைத் தொடங்குவதற்கு அங்கேயிருந்த ஆக்கிரமிப்புகளை எல்லாம் அகற்றுவதற்கு எங்களுடைய மாவட்ட அமைச்சர் எந்த அளவிற்குப்

[டாக்டர் அ. மணி] [2001 ஜனவரி 30

பாடுபட்டார் என்பது எனக்குத் தெரியும். அந்த ஆக்கிரமிப்புகளை எல்லாம் அகற்றியதோடு மட்டுமல்லாமல், ஆக்கிரமிப்பைச் செய்தவர்களுக்கெல்லாம் வேறு இடங்களைக் கொடுத்து, அந்த இடத்தை எல்லாம் சீர் செய்து இப்போது அங்கே ஒரு மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்கின்ற அளவுக்கு மிகச் சிறப்பாக அந்த இடம் இருக்கிறது. அவ்வாறு கொடுத்த அந்த மருத்துவக் கல்லூரி திருவண்ணாமலைக்கு மாற்றப்பட்டது. மீண்டும், அந்த மருத்துவக் கல்லூரியை அந்தப் பகுதிக்குத் தர வேண்டுமென்று மற்றொரு கோரிக்கையை வைத்து, இந்த அளவிற்கு....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த இடைக்கால நிதிநிலை அறிக்கையிலே பேசுகின்ற வாய்ப்பை நல்கிய தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்"

என்ற காரணத்தினாலே, நாங்களே விட்டாலும்கூட முதல்வர் அவர்கள் நிச்சயமாக அதைச் சொல்லுங்கள் என்றுதான் சொல்வார்கள் என்ற வகையில், இருக்கக்கூடிய குறைகளைச் சுட்டிக்காட்ட வேண்டியது எதிர்க்கட்சியினுடைய கடமை என்கிற காரணத்தால், சிலவற்றை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். பிரச்சினைக்குள்ளே போவதற்கு முன்னாலே எங்களுடைய வேலூர் பகுதியினுடைய சில திட்டங்கள், அவற்றை நிறைவேற்றுவதிலுள்ள குறைகளை முதலிலே பேசிவிட்டு பிறகு அதற்கடுத்த பிரச்சினைகளுக்கு நான் செல்ல விரும்புகிறேன்.

என்னுடைய நெடுநாளைய கோரிக்கையாக இருக்கின்ற பாதாள சாக்கடைத் திட்டத்தை வேலூர் நகராட்சிக்கு அமல்படுத்த வேண்டும். குடிநீர்த் திட்டத்திற்கு, இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலேயே மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஓர் அரசாணையைப் பிறப்பித்து நிதியை ஒதுக்கினார்கள். ஆனால், அந்தப் பெண்ணையாற்றுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படாமலேயே போய்விட்டது. மீண்டும் வலியுறுத்தியதால் இப்போது வேறு ஒரு G.O. போட்டு ரூ. 19½ கோடிக்கு பெண்ணையாற்றுத் திட்டத்திற்கு Tender வைக்கப்பட்டிருக்கிறது.



2001 ஜனவரி 30] [திரு. சி. ஞானசேகரன்]

இன்னும் Tender finalise ஆகவில்லை. எனவே, உடனடியாக Tender-ஐ finalise செய்து அடிக்கல் நாட்டுகின்ற நிகழ்ச்சியை வைத்து, பணியைத் தொடங்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 5-50

சென்ற ஆண்டே, வேலூரில் புதிய பேருந்து நிலையம் ஒன்றை அமைப்பதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள்—என்னுடைய கோரிக்கையை ஏற்று சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து பணம் கொடுப்பதாக நான் உறுதியளித்த பின்னால் அவர்கள் ஓர் அரசாணை வழங்கினார்கள். ஆனால், அந்த இடம் கூட்டுறவுத் துறைக்குச் சொந்தமான இடம் என்கிற காரணத்தாலே, இன்னும் நுழைவு அனுமதியை கூட்டுறவுத் துறை கொடுக்காமல் இருந்து கொண்டிருக்கிறது. இதே அவையில் ஒத்திவைப்புத் தீர்மானம் ஒன்று வந்தபோது, நான் பேசினேன். அப்போது, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களோடு கலந்து பேசி உடனடியாகப் பெற்றுத் தருவதாகச் சொல்லி இருக்கிறார்கள். முதல்வர் அவர்களும் இங்கே அவையில் இருக்கிறார்கள். உடனடியாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூட்டுறவுத் துறை அமைச்சரை அழைத்துப் பேசி, என்ன சிக்கல் இருக்கிறது என்பதைக் கண்டறிந்து, நுழைவு அனுமதியை அளித்து வேலூரில் பேருந்து நிலையத்தை உடனடியாக அமைக்கின்ற பணியைத் தொடங்க வேண்டும்; அதற்கான அடிக்கல் நாட்டுகிற நிகழ்ச்சியை உடனடியாக வைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, நம்முடைய முதல்வர் அவர்கள் நமது உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடம் சொல்லி, அதற்காக பணம் நிர்ணயிக்கப்பட்டு ஓர் அரசாணை வெளியிடப்பட்டு இருக்கிறது. 3 ஆண்டு காலத்திற்குள்ளாக நகராட்சியிடம் இருந்து அந்த இடத்திற்கான பணத்தை கூட்டுறவுத் துறை பெற்றுக்கொள்வது என்று சொல்லி அரசாணை வெளியிடப்பட்டது. இடையிலே ஒரு சதுர அடி 530 ரூபாய் என்று D.R.O. அவர்கள் நிர்ணயித்து, அந்த விலைக்கு வாங்க வேண்டும் என்றும், 3 ஆண்டுகளில் பணத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் அரசாணை வெளியிடப்பட்டது. அங்கு இருக்கின்ற மொத்த விற்பனை பண்டகசாலைக்குச் சொந்தமான அந்த

இடம் குறித்து—அந்தப் பண்டகசாலை மிகவும் கடனில் இருக்கின்ற பண்டகசாலை—அதிலே இருக்கின்ற உறுப்பினர்கள் 4,5 பேர் சேர்ந்து நீதிமன்றத்திலே 4,5 வழக்குகளைப் போட்டிருக்கிறார்கள். நீதிமன்றத்திலே stay பெறப்பட்டு இருக்கிறது. நேற்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன பிறகு, அதனுடைய நிலையை எடுத்துப் பார்த்திருக்கிறேன். மீண்டும் நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய தலைமையிலே, எங்களுடைய துறைச் செயலாளர், உள்ளாட்சித் துறையினுடைய செயலாளர் எல்லாம் அமர்ந்து இந்தப் பிரச்சினையை மாண்புமிகு திரு. துரைமுருகன் அவர்கள் 30 நாட்களுக்கு முன்பே உடனே முடித்துத் தர வேண்டுமென்று சொல்லி, அன்றைக்கே அது செய்யப்பட்டிருக்கிறது. அந்தப் பணியை விரைவிலே முடித்து, நீதிமன்றத்திலே வழக்குப் போட்ட அந்த உறுப்பினரை நிச்சயமாக அழைத்துப் பேசி, அந்த இடம் உங்களுக்கு ஒப்படைக்கப்படும்; அதற்கான முயற்சியை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். நிச்சயமாக அதில் stay இல்லை. தவறாக நம்முடைய அமைச்சர் அவர்களுடைய கோப்புகளிலே stay இருப்பதாகக் கூறப்பட்டு இருக்கிறது; stay கிடையாது. இரண்டாவது, value fix செய்வதிலே உங்களுக்குள் பிரச்சினை இருந்தால், அதை மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் சொல்லி—உங்களுக்கு அது paper adjustment-தான்—அதை நீங்கள் எப்படியாவது செய்துகொண்டு, உடனடியாக நுழைவு அனுமதியைக் கொடுத்து பேருந்து நிலையத்தைத் தொடங்குவதற்கு ஆவன செய்ய வேண்டும். அதிலே உறுப்பினர் வழக்குத் தொடரவில்லை; ஏற்கெனவே மூடப்பட்டிருந்த கற்பகம் Super Market-னுடைய தொழிலாளர் Union வழக்கு போட்டு இருக்கிறார்கள்; உறுப்பினர் யாரும் போடவில்லை. ஆகவே, இதிலே stay இல்லாத காரணத்தால், உடனடியாகப் பணியைத் தொடங்குவதற்கு நீங்கள் அனுமதி வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் இந்த அவையில் கடந்த 2 ஆண்டுகளாக அறிவிக்கப்பட்டு வந்த வேலூர் அரசு மருத்துவக் கல்லூரி இந்த ஆண்டே வரும் என்று நாங்கள் ஆவலோடு காத்திருந்தோம். ஆனால் முடிந்துவிட்டது, டிசம்பருக்குள் எப்படியாவது வந்துவிடும் என்று சொல்லி இப்பொழுது அதற்காக Dean-ஐப் போட்டுவிட்டார்கள். Dean



வேலூரில் இருந்து கொண்டிருக்கிறார். ஆனால், இன்னும் கல்லூரி தொடங்கப்படவில்லை. அங்கு இந்த ஒரு மாத காலத்தில் நீங்கள் Students-ஐ admit செய்ய முடியுமா என்று எனக்குத் தெரியவில்லை....

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரி மாணவர்கள் எப்போதும் ஜூன் மாதத்திற்குப் பிறகுதான் சேர்க்கப்படுவார்கள். அரசாணை பிறப்பிக்கப்பட்டு ஏற்கெனவே அங்கே இருக்கக்கூடிய பழைய கட்டடத்தை பழுதுபார்த்து, மத்திய அரசுக்கு நாங்கள் பரிந்துரையும் செய்துவிட்டோம். Medical Council of India-விலேயிருந்து அனுமதி வர வேண்டும். அவர்கள் மார்ச் மாதத்திலே Inspection-க்கு வருகிறோம் என்று சொல்லி இருக்கிறார்கள். உறுதியாகச் சொல்கிறேன். இந்த ஆண்டு ஜூன் மாதம் அங்கே மருத்துவக் கல்லூரி நடக்கும்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு ஜூன் மாதமே அது வந்து இருக்க வேண்டும். அடுத்த ஜூன் மாதத்திற்குள் வந்தால் சரி. அதற்கு நீங்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல் அரசு சட்டக் கல்லூரி ஒன்று வேலூரிலே தொடங்கப்படும் என்று சென்ற ஆண்டு பட்ஜெட்டிலே சொல்லப்பட்டது. இன்னும் அதற்கான அரசு ஆணை வரவில்லை; அது தொடங்கப்படவும் இல்லை. அதையும் தாங்கள் உடனடியாக வேலூரில் தொடங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்களுடைய காட்பாடியையும், வேலூரையும் இணைக்கக்கூடிய பாலாற்றில் இருந்த Bridge விழுந்து ரொம்ப நாளாகிவிட்டது. 4 ஆண்டுகளாக நாங்கள் வலியுறுத்தி வருகிறோம். 1½ கோடி ரூபாய் அதற்குச் செலவாகும். பழுது பார்க்க முடியவில்லையென்றால், புது Bridge-ஐயாவது கட்டிக் கொடுத்தால் நல்லது. இப்போது இருக்கக்கூடிய Bridge ஆட்டம் கண்டுகொண்டிருக்கிறது. அது இல்லை என்று சொன்னால் காட்பாடி தனித் தீவாகச் சென்றுவிடும் என்ற காரணத்தினாலே, அந்த Bridge-ஐ உடனடியாகக் கட்டிக் கொடுப்பதற்கு நீங்கள் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களோடு நான் வேலூருக்கே சென்று அந்தப் பாலத்தையும், பாலம் கட்ட வேண்டிய இடத்தையும் பார்வையிட்டு இருக்கிறோம். மத்திய அரசிலேயிருந்து E & I Scheme (பொருளாதாரம் மற்றும் பன்மாநில திட்டம்) மூலமாக அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டு, மத்திய அரசுக்குக் கருத்துரு அனுப்பப் பட்டிருக்கிறது. அந்தப் பாலம் நம்முடைய அரசால், கழக அரசால் கட்டப்படும்.

*பிற்பகல் 5-55*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அடுத்து ஒரு கோரிக்கை. நான் வழக்கறிஞர் என்கிற காரணத்தினாலே சொல்கிறேன். ஏற்கெனவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் எங்களுடைய வேலூரில் நீதிமன்ற வளாகத்தைத் திறந்துவைக்க வருகை தந்தபோது—இப்போது B Block-தான் கட்டப்பட்டிருக்கிறது; A Block இன்னும் கட்டப்படவில்லை—A Block கட்டப்பட வேண்டுமென்கிற கோரிக்கையை அப்போது வைத்தோம். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதைக் கட்டித் தருவதாகச் சொன்னார்கள். அதற்கும் கொஞ்சம் நிதியொதுக்கீடு செய்து, உடனடியாக ஆவன செய்ய வேண்டுமென்கிற என்னுடைய வேலூரைச் சார்ந்த கோரிக்கைகளை வைத்துவிட்டு இப்போது நான் அடுத்த பொருளுக்கு வருகிறேன்.

இந்த ஆட்சி அமைந்த பின்னாலும்கூட, மீண்டும் சுடுகாட்டுக் கூரை ஊழல் தலை தூக்கியிருக்கிற ஒரு நிகழ்ச்சியை நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன். சென்னையை ஒட்டியிருக்கக்கூடிய திருவள்ளூர் மாவட்டத்தில், புழல் ஊராட்சி ஒன்றியத்தில், கிரான்லைன் என்கிற ஊராட்சி, அதேபோல சோழவரம் ஒன்றியத்திலே பாடியநல்லூர், சோழவரம், காரனோடை ஊராட்சிகள் கும்மிடிப்பூண்டி ஒன்றியத்திலே புது கும்மிடிப்பூண்டி, சின்னம்பேடு ஊராட்சிகள், மீஞ்சூர் ஒன்றியத்திலே பல ஊராட்சிகளில் கான்கிரீட் கூரைகள்தான் சுடுகாடுகளிலே அமைக்கப்பட வேண்டுமென்று இப்போது அரசாணை இருந்தாலும்கூட, Cement Sheet-களாலே கூரைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. கடந்த கால ஆட்சியிலே எந்த ஒப்பந்தக்காரர் அந்த தவறை அப்போது செய்தாரோ, அதே ஒப்பந்தக்காரர் இங்கெல்லாம் இந்தப் பணிகளைச் செய்து கொண்டிருக்கிறார். இப்படிப்பட்ட ஒரு நிலை உள்ளது. இந்தத் தவறைக் கண்டுபிடித்து, அவர்கள்மீது வழக்கெல்லாம் தொடுத்து, நீதிமன்றத்திலே வழக்கு நிலுவையில் இருக்கிறபோதும்கூட, அதே ஒப்பந்தக்காரர் தனக்கு இருக்கக்கூடிய மகன்கள் பெயர்களில் எல்லாம் சில கம்பெனிகளை வைத்துக் கொண்டு, அந்த நிறுவனத்தின் பெயரால் இப்போது இதுபோன்ற வேலைகளைச் செய்துகொண்டு இருக்கிறார். அரசாணைக்கு எதிராக Cement sheet-களைப் போட்டு கட்டிக் கொண்டிருக்கிறார்களே, ஏன் அரசு இன்னும் அவற்றையெல்லாம் அனுமதித்துக் கொண்டிருக்கிறது என்பதுதான் எங்களுக்குப் புரியாத புதிராக இருந்து கொண்டிருக்கிறது.



**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** துணைத் தலைவர் அவர்களே, இந்தச் செய்தி பத்திரிகையிலே வந்த 5,6 மணி நேரத்திலேயே மாவட்ட ஆட்சித் தலைவர் அந்தப் பத்திரிகையிலே குறிப்பிட்டிருக்கிற அத்தனை கிராமங்களுக்கும் சென்று, அரசாங்கத்தினுடைய அனுமதியும் இல்லாமல், மாவட்ட ஆட்சித் தலைவருடைய அனுமதியும் இல்லாமல் ஊராட்சி மன்றத் தலைவரோடு சேர்ந்து கட்டப்பட்ட அந்தக் கட்டடங்களை, அந்தப் பணிகளை உடனடியாக நிறுத்தி வைத்துவிட்டேன் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார். அதுவும் பத்திரிகைகளிலே வந்திருக்கின்றது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்படி தவறு செய்த அந்த அதிகாரிகள் மீதும் அல்லது நிருவாகத்தின் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும். பணிகளை நிறுத்தி வைத்தால் மட்டும் போதாது. எந்த ஒப்பந்தக்காரர் கடந்த கால ஆட்சியிலே செய்துகொண்டிருந்தாரோ அவரே இப்பொழுதும் செய்கிறாரே, ஏன்?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** துணைத் தலைவர் அவர்களே, நிறுத்தி வைத்துவிட்டு, விசாரணை செய்து, அந்த விசாரணையின் முடிவிற்குப் பிறகுதான் நடவடிக்கை முற்றுப்பெறுமே தவிர, இடையில் செய்துவிட்டு, அவர்கள் நீதிமன்றத்திற்குப் போய் தடையாணை பெறுகிற அளவிற்கு இந்த அரசு இளிச்சவாய்த்தனமாக நடவடிக்கை எடுக்காது. எடுத்தால் உறுதியான நடவடிக்கை எடுக்கும்; எடுத்துக் கொண்டிருக்கிறது.

**திரு. சி. ஞானசேகரன்:** இதுவரை யாரையாவது நீங்கள் Suspend செய்திருக்கிறீர்களா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதுதான் நிறுத்தி வைத்திருக்கிறார்களே, அப்புறம் விசாரித்து நடவடிக்கை எடுப்போம் என்று சொல்கிறார்களே!

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது என்று சொன்னால், அதில் என்ன முடிவு என்பதை அதனுடைய விசாரணை முடிவுற்ற பின்னர்தானே அறிவிக்க முடியும்? இடையிலே சொல்லி, அவர்கள் கோர்ட்டுக்குப் போவதற்கு உரிய வழிவகைகளையெல்லாம் காட்டிக் கொண்டிருப்பதற்கு இந்த அரசு விரும்பவில்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நடவடிக்கை எடுத்து, நீங்கள் தவறைச் சீர்செய்தால் நாங்கள் அதை நிச்சயமாக பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆனால், அதே ஒப்பந்ததாரரே இப்படிச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார் என்பதை உங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவரக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து, விவசாயிகளுடைய பிரச்சினை. பல ஆளுங்கட்சி உறுப்பினர்கள் இந்த மன்றத்தில் சொல்கிறபோது, இந்த அரசு விவசாயிகளுக்காக நிறைய செய்துவிட்டது என்றெல்லாம் இங்கே பட்டியல் போட்டுக் காட்டினார்கள். ஒன்றை மட்டும் நான் மாண்புமிகு முதல்வருடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த 4, 5 ஆண்டுகளாக விவசாயிகள் 8.5 சதவீதம் பிழிதிறன் இருக்கக்கூடிய—பொதுவாக அதை Standard-ஆக வைத்துக் கொண்டு—கரும்புக்கு டன் ஒன்றுக்கு 1,000 ரூபாய் வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் 10 சதவிகிதம் என்று அறிவித்துவிட்டீர்கள். நெல், தேயிலே, மஞ்சள், தேங்காய் போன்ற உற்பத்திப் பொருட்களுக்கு சரியான கொள்முதல் விலை இல்லை. தேங்காயை எடுத்துக்கொண்டால் அவை சிலந்தி நோய் கண்டு, மரங்கள் எல்லாம் உலர்ந்து வந்து கொண்டிருக்கின்றன. காய்கள் எல்லாம் சிறுத்துவிட்டன. 10 தேங்காய்கள் 6 ரூபாய் என்று கத்திரிக்காயைப்போல் குவித்து விற்கக்கூடிய ஒரு நிலை பல கிராமங்களிலே வந்திருக்கிறது. ஈரோடு போன்ற பகுதிகளிலே மஞ்சளுக்கு விலை இல்லை. நீலகிரி மாவட்டம் போன்ற பகுதிகளிலே 15 ரூபாய்க்கு விற்ற பச்சைத்



தேயிலையை இன்று 4 ரூபாய்க்குக்கூட விற்க முடியாமல் திணறிக் கொண்டிருக்கிறார்கள். பலமுறை நாங்கள் இந்தச் சட்டமன்றத்திலே சொல்லிவிட்டோம். ஆனால் இன்னும் இந்த விவசாயப் பொருட்களுக்கு...(குறுக்கீடு)

பிற்பகல் 6-00

**திரு. பா.மு. முபாரக்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தேயிலை விலை 4 ரூபாய், 4 ரூபாய் என்று தவறான தகவலைத் தருகிறார்கள். இப்போது நீலகிரியில் கோத்தகிரி பகுதியிலே பச்சைத் தேயிலை 8 ரூபாய்க்கும், குன்னூர் பகுதியிலே 9 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. மாத விலை என்று இப்போது 1ஆம் தேதி போடுகிறபோது கூடலூர் பகுதியிலே எல்லாம் அரசு எடுத்த நடவடிக்கைகளால் 10 ரூபாய் என்ற அளவுக்கு விலை உயரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு கிலோ 15 ரூபாய் என்ற அளவுக்கு ஏற்கெனவே விற்றிருக்கிறது. இப்போது இடுபொருட்கள் விலையெல்லாம் உயர்ந்துவிட்டது. மற்ற பொருட்களின் விலைவாசி எல்லாம் உயர்ந்து கொண்டே போய்க் கொண்டிருக்கின்றது. நாம் பயன்படுத்தக்கூடிய மற்ற பொருட்களின் விலையெல்லாம் உயர்ந்து கொண்டிருக்கிறபோது, கட்டுப்படியாகக்கூடிய விலை கரும்புக்கும், தேயிலைக்கும், நெல்லுக்கும், மஞ்சளுக்கும், தேங்காய்க்கும் இல்லையென்று சொன்னால் அந்த விவசாயி எங்கே போவான் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகவே நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்வதெல்லாம், அனைத்துக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுவைப் போட்டாவது, கட்டுப்படியாகக் கூடிய அளவில்—ஏனென்றால் நீங்கள் 10 சதவிகிதம் என்று அறிவித்துவிட்டீர்கள்—8.5 சதவிகிதம் இருந்தாலும் கரும்புக்கு டன் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் கொடுப்பதற்கு உடனடியாக ஓர் ஆணையைப் பிறப்பித்து விவசாயிகளுடைய வாழ்விலே ஒளியேற்ற வேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, Mini Bus திட்டம் ஒரு நல்ல திட்டம் அதை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் அந்த Mini Bus-கள Service Road-களில் 4 கிலோ மீட்டர்தான் போகலாம் என்று வைத்திருக்கிறீர்கள். இப்படி 4 கிலோ மீட்டர் என்று இருக்கின்ற காரணத்தால் பல Mini Bus-கள்

நகரத்தை எட்டிப் பிடிக்க முடிவதில்லை. Service Road-லே 4 கிலோ மீட்டரும், Unserved sector-லே 16 கிலோ மீட்டரும் அனுமதித்திருக்கிறீர்கள். 10 கிலோ மீட்டராவது Service Road-லே Mini Bus-கள் போவதற்கு அனுமதித்தால்தான் இந்த Mini Bus திட்டம் வெற்றிபெறும். இப்போது யாரெல்லாம் இதிலே ஈடுபட்டு இருக்கிறார்களோ, அவர்கள் ஒரு நாளைக்கு 200, 300 ரூபாய் அளவுக்கு எங்கள் கையைக் கடிக்கிறது, டீசலுக்குக்கூட நாங்கள் கையிலிருந்து போட்டு அனுப்பிவைக்கிறோம் என்று சொல்கிற நிலையில் இன்று பல Mini Bus Operators இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கேட்டுக் கொள்வதெல்லாம், நீங்கள் இதை revise செய்து, பக்கத்தில் இருக்கக்கூடிய நகரத்தை எட்டிப் பிடிக்கக்கூடிய அளவுக்கு 10 கிலோ மீட்டர் அளவுக்கு அனுமதித்தால் இந்தத் திட்டம் வெற்றி பெறும் என்ற ஆலோசனையை இந்த மன்றத்தின் மூலமாக வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்போதுதான் Mini Bus-களை இயக்குபவர்களுக்கு கையைக் கடிக்காமல், நட்டத்தில் இயங்காமல், அவர்கள் ஓரளவுக்கு இலாபம் பெற முடியும். இப்போதெல்லாம் அவர்கள் எதிர்காலத்தில் எப்படியாவது இந்த அரசு அந்த route-ஐ Extend செய்து கொடுக்கும் என்ற நம்பிக்கையில் நட்டம் வந்தாலும் பரவாயில்லை என்று ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, 10 கிலோ மீட்டர் அளவுக்கு அதைச் செய்து கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து குடிநீர்ப் பிரச்சினை. கிராமங்களில் எல்லாம் தலைக்கு 40 லிட்டர் தண்ணீர் கிடைக்கக்கூடிய அளவுக்கு குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம் என்று ஏற்கெனவே பலமுறை இந்த மன்றத்தில் அரசால் சொல்லப்பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதியை எடுத்துக் கொண்டால் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலம் எடுக்கப்பட்டிருக்கின்ற கிராமங்களிலேகூட, ஒரு கிராமத்திற்கு ஒரு கோடி ரூபாய் அல்லது 60, 70 இலட்சம் ரூபாய் என்று 4 கிராமங்களை எடுத்து தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறோம். என்னுடைய தொகுதியிலே அலமேலுமங்காபுரத்தை அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் எடுத்தும் அந்த ஊருக்கு தண்ணீர் போதிய அளவுக்கு வரவில்லை. அதேபோல என்னுடைய தொகுதியிலுள்ள பனவட்டம், சதுப்பேரி போன்ற கிராமங்களில்—அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் மூலமாக நிறைவேற்றப்பட்ட கிராமங்களில்—தலைக்கு 40 லிட்டர் தண்ணீர் கொடுக்க முடியாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. நான்





பிறந்த ஊரான, வாணியம்பாடி பக்கத்தில் இருக்கக்கூடிய ஆலங்காயம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள வெள்ளக்குட்டை கிராமத்தை அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் எடுக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்களிடம் கேட்டு, அவர்களும் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கேட்டு, பிறகு எடுத்தார்கள். என்னுடைய தாயார் 3 தெருக்கள் சென்று, 3 நாளைக்கு ஒரு முறை, 3 குடம் தண்ணீரைப் பெறுகிறார். என்னுடைய கிராமத்திலேயே இன்னும் தண்ணீர்ப் பிரச்சினை தீரவில்லை. கண்காணிப்புப் பொறியாளரிடமும், மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் ஏற்கெனவே இதைப் பற்றிச் சொல்லிவிட்டேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கிராமப்புற பகுதிகளில் சில இடங்களில் நீர் ஆதாரம் கிடைக்காத காரணத்தால், கிடைக்கின்ற தண்ணீரை கொடுத்துக் கொண்டு இருக்கிறோம். அடுத்த திட்டத்தில் முழுமைப்படுத்துவதற்கு, 40 லிட்டர் அளவுக்குக் கொடுப்பதற்கு, நடவடிக்கை எடுத்து வருகிறோம். வேறு நீர் ஆதாரம் தேடிக் கொண்டிருக்கின்ற பகுதிகளை உள்ளடக்கியதுதான் மாண்புமிகு உறுப்பினர் சொல்லிய அந்த கிராமங்கள். அந்த கிராமங்களைப் பொறுத்தவரையில், இப்போது மறுபடியும் ஆய்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த ஆய்வில் நீராதாரம் கிடைத்தால், கொஞ்சம் கூடுதலான செலவு ஆனாலும்கூட, புதிய நிதிநிலை அறிக்கையில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தண்ணீர் தரப்படும் என்ற செய்தியை நான் தெரிவிக்கிறேன்.

பிற்பகல் 6-05

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய விளக்கத்திற்கு நன்றி. எங்களுடைய வேலூர் நகராட்சியிலேகூட, சலவன்பேட்டை, கஸ்பா, இராமநாயக்கன் பாளையம் போன்ற பகுதிகளிலே நான்கு நாளைக்கு ஒருமுறைதான் தண்ணீரைக் கொடுக்க முடிகிறது. தண்ணீர் எங்களுக்குப் போதிய அளவு கிடைக்கவில்லை. பாலாற்றிலே நீராதாரம் முழுக்க முழுக்கப் போய்விட்டிருக்கிறது. பொன்னை ஆற்றுத் திட்டம் வந்தாலும்கூட, ஐந்து ஆண்டுகளுக்குத்தான் அது கை கொடுக்கும் என்கிறார்கள். ஆகவே, நான்....

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவரே குறிப்பிட்டார். முதலிலே ஒரு திட்டம் போடப்பட்டு, அது சரியாக இல்லாமல், அதற்குப் பிறகு 19 கோடிக்கு ஒரு திட்டம் போடப்பட்டதாகவும், அது நிலுவையில் இருப்பதாகவும், காலமதாமதம் இருக்கிறது என்றும் தெரிவித்தார். இவ்வளவிற்கும் அடிப்படைக் காரணம், வேலூர் பகுதிகளில் நீராதாரம் கிடைக்கவில்லை என்பதும், கிடைத்த நீராதாரமும் சரியில்லாமல், இடையிலே தவறான தண்ணீர் வந்து சேர்வதும் வாடிக்கையாகி விட்டது. எனவே நிரந்தரமாக ஒரு திட்டத்தை நோக்கி, நீராதாரம் தேடி இப்போது ஆய்வு முடிவுற்றிருக்கிறது. நிச்சயமாக இந்தத் திட்டத்தில் விரைவாக வேலை நடைபெறும்.

**திரு. சி. ஞானசேகரன்:** எனவே, நான் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் மூலமாக சொல்லிக் கொள்வதெல்லாம், பாலாற்றில் இருக்கக்கூடிய நீர் எவ்வளவு நாட்களுக்கு வரும் என்று எங்களாலே சொல்ல முடியாது. இன்னும் நம்முடைய துறையினுடைய அதிகாரிகள் சொல்கிறார்கள்; 5 ஆண்டுகளுக்குத்தான் தண்ணீர் அந்தப் பகுதியிலே வரும் என்று. நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்கூட எங்களுடைய மாவட்டத்திலே ஏலகிரி மலைக்கு ஒரு குழுக் கூட்டத்திற்கு வந்தபோது ஒகேனக்கல் தண்ணீரை, காவிரி ஆற்றுத் தண்ணீரை எங்களது மாவட்டத்திலுள்ள திருப்பத்தூர், வாணியம்பாடி, ஆம்பூர், குடியாத்தம், வேலூர் போன்ற பகுதிகளுக்குக் கொடுப்பதற்கு ஒரு திட்டம் இருக்கிறது என்று சொன்னார்கள். நம்முடைய துறையிலே ஆய்வு செய்து அவர்கள் ஒரு rough estimate-ஐப் போட்டு, 350 கோடி ரூபாய் ஆகிறது என்றும் அவர்கள் சொன்னார்கள். நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களிடம் நான் இதுகுறித்து கலந்து பேசினேன். அதைவிட கிருஷ்ணகிரி அணையிலிருந்தோ அல்லது சாத்தனூர் அணையிலிருந்தோ தண்ணீர் எடுக்கலாம் ஏன்று அவர்கள் சொன்னார்கள். ஆனால் ஒகேனக்கல் தண்ணீரை—மேட்டூருக்குப் போகின்ற இடத்திலிருந்து தண்ணீரை எப்படியாவது—எங்களுடைய மாவட்டத்திற்குக் கொண்டு வருவதற்கு எதிர்காலத்தில் 500 கோடி ரூபாய் அளவிற்கு ஒரு பெரிய திட்டத்தைப் போட்டு, இப்பொழுதே நிறைவேற்ற ஆரம்பித்தால்தான் ஐந்தாண்டுக் காலம் கழித்து வரக்கூடிய பிரச்சினைக்கு நாம் தீர்வு காண முடியும். எனவே நான் அரசையும், மாண்புமிகு முதல்வர் அவர்களையும் மெத்தப் பணிவன்போடு கேட்டுக் கொள்வதெல்லாம், ஒகேனக்கல் தண்ணீரை எங்களுடைய வேலூர் பகுதிக்குக் கொண்டு வருவதற்கு நீங்கள் ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

---



அடுத்து Bus கட்டண உயர்வு. 2001ஆம் ஆண்டு வரை Bus கட்டண உயர்வு இருக்காது என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே அறிவித்தார்கள். ஆனால் சத்தமே இல்லாமல், எல்லா மாவட்டத்திலேயும், இருக்கக்கூடிய நம்முடைய அரசு போக்குவரத்துக் கழகங்கள் Express என்கிற Board-ஐப் போட்டுக் கொண்டு, 100 கிலோமீட்டருக்கு ஐந்து ரூபாய் என்று கட்டணத்தை திடீரென்று உயர்த்திவிட்டிருக்கின்றன. இது எல்லா மாவட்டங்களிலேயும் இருக்கிறது. பஸ் கட்டண உயர்வே இருக்காது என்று நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருந்தபோதிலும் அந்த அறிவிப்பிற்கு எதிராக இன்று இந்தத் துறை, திடீரென்று Express என்று மறைமுகமாக Bus கட்டணத்தில் உயர்வை ஏற்படுத்தியிருப்பது என்பது...

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Express கட்டணம் என்பது வேறு. அந்தக் கட்டணத்தைத்தான் வசூலிக்கிறார்களே தவிர, அதற்காக Express கட்டணத்தை நாங்கள் ஏற்றவும் இல்லை. பல பேருந்துகள் Express பேருந்துகளாக உயர்த்தப்பட்டிருக்கின்றன. அவ்வளவுதான்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ரொம்ப simple example. எங்களுடைய வேலூரிலிருந்து Point to point Bus-க்கு 31 ரூபாய் கட்டணம். Express Bus-ஐ விட Point to point Bus வேகமாக வந்துவிடுகிறது. பேரணாம்பட்டிலேயிலிருந்து வரக்கூடிய Bus-லே நாங்கள் வேலூரிலே ஏறினால், Point to point Bus-சிலே வந்தால், 31 ரூபாய்க்கு வந்து விடலாம். அ்தை...

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 31 ரூபாய்க்கு அந்த Bus ஓடுகிறது. அதிலே எந்தவிதமான தவறும் இல்லை. 31 ரூபாய் வைத்திருப்பவர்கள் Point to Point Bus-லே வரலாம். Express Bus-சிலே போக வேண்டுமென்று நினைப்பவர்கள் பணம் அதிகமாகக் கொடுத்துவிட்டு, Express Bus-சிலே வரலாம். Point to Point Bus-ஐ நிறுத்திவிட்டு, சாதாரண Bus-ஐ நிறுத்திவிட்டு வெறும் Express Bus-ஐ விட்டோம் என்று சொன்னால், நீங்கள் சொல்கிற குற்றச்சாட்டை ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் அவ்வாறு இல்லை. ஓடிக் கொண்டிருக்கிற பேருந்துகளுக்குக் கூடுதலாக விடும்போது, Express Bus என்று சொல்லி, சில பேருந்துகள் விடப்படுகின்றன. அதிலே மட்டும் Express Bus-க்கு உரிய கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய ஊர்—அமைச்சர் சொல்வதுதான் எனக்கு விந்தையாக இருக்கிறது. வேலூரிலேயிருந்து சென்னைக்கு வந்து கொண்டிருந்த அத்தனை பேருந்துகளையும் Point to Point என்று ஓடிக்கொண்டிருந்த பேருந்துகளைத் திடீரென்று இவர்கள் **Express என்று மாற்றி விட்டால் எப்படி? மாறிப்போச்சா என்ன? எல்லாப் பேருந்துகளையும் இவர்கள் திடீரென்று மாற்றிவிட்டார்கள். ஏற்கெனவே Point to Point என்று ஓடிக் கொண்டிருந்த 11 பேருந்துகளையும் இவர்கள் Express என்று போட்டு ஓட்டுகிறார்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி** ** என்றால், இந்த ஆட்சி எதையுமே ** வெளிப்படையாகத்தான் செய்கிறது. சில Bus-கள் சாதாரண Bus-ஆக இருந்தால், சென்னைக்கு 3½ மணி நேரம், 4 மணி நேரம் ஆகும். Express Bus என்றால் 2½ மணி நேரத்தில் வருவார்கள். ஆக விரைவில் வர வேண்டும் என்பவர்கள் கொஞ்சம் அதிகமாகக் கட்டணம் கொடுத்துத்தான் ஆக வேண்டும். எத்தனை முறை ஞானசேகரன் அவர்கள் Taxi-யிலே வந்திருப்பார், எவ்வளவு காசு கொடுத்து வந்திருப்பார்? அதை ஒப்பிடும்போது, Express Bus-சிலே அதிகக் கட்டணம் கிடையாது. Express Bus-க்குத் தேவையான கட்டணத்தைத்தான் வசூலிக்கிறார்கள்.

*பிற்பகல் 6-10*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இருக்கிற Bus ஓடிக்கொண்டிருக்கிறது, Express என்று புதியதாக சில பேருந்துகள் ஓடுகின்றன என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். என்னுடைய point என்னவென்று சொன்னால், ஏற்கெனவே Point to Point, Vellore to Chennai என்று ஓடிக் கொண்டிருந்த பேருந்துகளை எல்லாம் நீங்கள் Express என்று சொல்லி, அதாவது எல்லாப் பேருந்துகளையுமே Express என்றாக்கிவிட்டீர்கள். Point to Point, Vellore to Chennai வருகிற Bus ஒன்றைக்கூட வைக்கவில்லை. ** என்ற வார்த்தையை வேண்டுமானால் எடுத்து விடலாம். மறைமுகமாக

---

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



ஏன் மக்கள் மீது இப்படி ஒரு திணிப்பை ஏற்படுத்தி, Bus கட்டண உயர்வை நீங்கள் ஏற்படுத்தி இருக்கிறீர்கள்? இது நிச்சயமாக கண்டிக்கத்தக்க ஒன்று. ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதைக் கருத்தில் கொண்டு வாபஸ் பெற வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரியூர் நூற்பாலை பற்றி நான் பலமுறை இந்த அவையிலே கேட்டு கேட்டு சலித்துப் போய்விட்டேன். நம்முடைய அமைச்சர் நேற்றுகூட, அவர்களிடம் மிசோரம் மில் மற்றும் மேலூர் மில்லைச் சார்ந்த எங்களுடைய ஆலைகளை எல்லாம் போய் பார்த்துவிட்டு வாருங்கள் என்றேன்; போய் பார்த்துவிட்டு வந்தார்கள். என்ன சொன்னார்கள் என்றால், எதிர்க்கட்சி என்றால் அப்படித்தான் கேட்பார்கள் என்று... *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முந்தைய நாள் இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். மறுநாள் நான் வேலூருக்குச் சென்றிருந்தேன். உள்ள நிலையை விளக்கி, அதில் சம்பந்தப்பட்ட காவல்காரர்களுக்கு சம்பளம் அளிக்காமல் இருப்பதையும் அங்கே சுட்டிக் காட்டினார்கள். விரைவில் அதற்குரிய உத்தரவைப் பிறப்பிக்கிறேன் என்று நான் தெரிவித்துவிட்டு வந்திருக்கிறேன். இன்னொன்றையும் நான் சொல்ல வேண்டும். V.R.S. முடிந்துவிட்டது. ஆனால் கடந்த காலத்திலே பல கடன் வாங்கிய அணுகுமுறைகளைப் பார்த்தால் ஒன்றோடு ஒன்று இணைத்து, இணைத்து, இணைத்து வாங்கியிருக்கிறார்கள். எந்த ஒரு தனி மில்லையும் நாம் எடுத்துச் செயல்படுத்துவதற்கு பெரும் சிரமம் உள்ளது. அதுதான். I.C.I.C.I.-யிலே புதுக்கோட்டையையும், அரியூரையும் இணைத்து வாங்கியிருக்கிறார்கள். புதுக்கோட்டை கடன் வேறு. இது 72 இலட்சம் ரூபாய். அரியூர் கடன் இருக்கிறது. இந்த 72 இலட்சம் ரூபாய்க்கு வட்டி மட்டும் ஒரு கோடியே 25 இலட்சம் ரூபாய். இதற்கு மும்பையிலே போய் பேசி, இந்த 72 இலட்சம் ரூபாய், அரியூர் மில்லுக்கு கட்டியாகிவிட்டது. வட்டியையும் அவர்கள் waive பண்ணிவிட்டார்கள். இப்படி, ஒன்றுக்கு ஒன்று இணைத்து இணைத்துக் கொண்டு போகிறபோது, எப்படி ஒரு மில்லைத் திறப்பது? ஆயிரெத்தெட்டு பிரச்சினை வருகிறது. V.R.S. பண்ணிவிட்டோம். கடன்காரர்களிடமிருந்து திரும்ப முடியவில்லை. அசலைக் கொடுத்தால் போதும் என்றார்கள். அசலையும் கொடுத்தோம். இப்போது P.F.-இலே தகராறு. இப்படி, மாறி மாறி பிரச்சினைகள்

[திரு. என்.கே.கே. பெரியசாமி] [2001 ஜனவரி 30

நிர்வாகத்திலே கோளாறு பண்ணியபிறகு, அந்தச் சிக்கலை எடுத்துத்தானே கொண்டு வரவேண்டும். புதுக்கோட்டையிலே ஓடுகிறது. 6000 Spindles-ஐ 8000-ஆக பண்ணிவிட்டோம். காரணம் இலாபத்திலே வரவேண்டுமென்ற அடிப்படையிலே செய்தோம். இதற்கும் அப்படிப்பட்ட சட்டச் சிக்கல், அனுகுமுறைச் சிக்கல் உள்ளது. இவற்றை ஒழுங்குபடுத்தியபின் நிச்சயமாக ஓடத்தான் போகிறது. நீங்கள் அதை மகிழ்ச்சியாக ஏற்றுக் கொள்ளத்தான் போகிறீர்கள். ஆனால் இது ஓட்டிற்கு பயன்படாது. அங்கே இப்போது 105 பேர்தான் இருக்கிறார்கள். அதனாலே ஆலை ஓடவேண்டுமென்பதற்கும், உற்பத்தி ஒழுங்காக வரவேண்டுமென்பதற்கும் இந்த அரசு நிச்சயமாக, சிறப்பாக அந்தப் பணியைச் செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (31-1-2001) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை மாலை 6-12 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

23. 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான (உரிமம் மற்றும் அனுமதி) விதிகளில் திருத்தங்கள் செய்யப்பட்டது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 9-10-2000 ஆம் நாளிட்ட 188 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3). பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

24. 1999-2000ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (மதுரைக் கோட்டம்-2) இருபத்து ஆறாவது ஆண்டறிக்கை. [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

25. 1999-2000ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (மதுரைக் கோட்டம்-4) பதினான்காவது ஆண்டறிக்கை. [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)



2001 ஜனவரி 30]

26. 1999-2000ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (மதுரைக் கோட்டம்-5) நான்காவது ஆண்டறிக்கை. [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

27. 1999-2000ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (கும்பகோணம் கோட்டம்-1) இருபத்து ஒன்பதாவது ஆண்டறிக்கை. [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

28. 1999-2000ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (கும்பகோணம் கோட்டம்-2) பதினைந்தாவது ஆண்டறிக்கை. [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

29. 1999-2000ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (கும்பகோணம் கோட்டம்-3) பதினெட்டாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

30. 1999-2000ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (கோயம்புத்தூர் கோட்டம்-2) பதினேழாவது ஆண்டறிக்கை. [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

31. 1999-2000ஆம் ஆண்டிற்கான பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக் குழுவின் பதினாறாவது ஆண்டறிக்கை. [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

32. 1999-2000ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (விழுப்புரம் கோட்டம்-2) பதினெட்டாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

33. 1999-2000-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (சேலம் கோட்டம்-2) பதிமூன்றாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

[2001 ஜனவரி 30

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

17. 2001-2002ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 1 முதல் 61 வரையிலான விரிவான மானியக் கோரிக்கைகள் (61 புத்தகங்கள்)

18. 2001-2002ஆம் ஆண்டிற்கான கடன் செலவுகள் குறித்த விரிவான மானியக் கோரிக்கை.

19. 2001-2002ஆம் ஆண்டிற்கான பொதுக் கடன் - திருப்பிச் செலுத்துதல் குறித்த விரிவான மானியக் கோரிக்கை.

20. 2001-2002ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண் 36 பொதுப்பணிகள் – கட்டடங்கள் குறித்த விவரங்கள் (ஆங்கிலம்)

21. 2001-2002ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண் 38 - சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்துப் பணிகள் குறித்த விவரங்கள் (ஆங்கிலம்)

22. 2001-2002ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண் 55 - பொதுப்பணிகள் - கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு மற்றும் பணிகள் குறித்த விவரங்கள். (ஆங்கிலம்)

23. 2001-2002ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண் 56 - சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு மற்றும் பணிகள் குறித்த விவரங்கள் (ஆங்கிலம்)

24. 2001-2002ஆம் ஆண்டில் வருவாய் குறித்த விரிவான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள்.

25. 2001-2002ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை.

26. 2001-2002ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட வெள்ளை அறிக்கை.

27. 2001-2002ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட வெள்ளை அறிக்கையின் இணைப்புகள்.

28. 2001-2002ஆம் ஆண்டில் உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி. (தமிழ், ஆங்கிலம்)

29. 2001-2002ஆம் ஆண்டிற்கான ``உடனடிச் செலவுக்கான`` மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்)



2001 ஜனவரி 30]

30. 2001-2002ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

31. 2001-2002ஆம் ஆண்டு இடைக்கால நிதி நிலை அறிக்கை குறித்து மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)

32. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று முப்பத்து ஒன்பதாவது அறிக்கை. (2000-2001)

33. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று நாற்பதாவது அறிக்கை. (2000-2001)

34. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று நாற்பத்து ஒன்றாவது அறிக்கை. (2000-2001)

35. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று நாற்பத்து இரண்டாவது அறிக்கை. (2000-2001)

36. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று நாற்பத்து மூன்றாவது அறிக்கை. (2000-2001)

37. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று நாற்பத்து நான்காவது அறிக்கை. (2000-2001)

38. இந்தியாவில் புவியியல் மற்றும் வேளாண்மை உற்பத்தித் திறன் தமிழ்நாட்டிற்கு உணர்த்தும் கருத்துக்கள் குறித்த அமெரிக்க நாட்டிலுள்ள ஹார்வர்டு பல்கலைக்கழகம் அளித்த அறிக்கை. (ஹார்வர்டு ஆராய்வு - 2) (ஆங்கிலம்)

39. தமிழ்நாட்டில் அண்மைக்கால வருவாயின் போக்குகளும் அதன் நீடித்த நிலைகளும் குறித்த அமெரிக்க நாட்டிலுள்ள ஹார்வர்டு பல்கலைக்கழகம் அளித்த அறிக்கை. (ஹார்வர்டு ஆராய்வு-3 ) (ஆங்கிலம்)

40. இந்தியாவில் மாநில அரசின் நிதி நிலைமை குறித்த அமெரிக்க நாட்டிலுள்ள ஹார்வர்டு பல்கலைக்கழகம் அளித்த அறிக்கை. (ஹார்வர்டு ஆராய்வு-4) (ஆங்கிலம்)

41. தமிழ்நாட்டில் துறைமுக மேம்பாடு: சீன மாநிலங்களிலிருந்து கிடைக்கப்பெற்ற பட்டறிவு குறித்த அமெரிக்க நாட்டிலுள்ள ஹார்வர்டு பல்கலைக்கழகம் அளித்த அறிக்கை. (ஹார்வர்டு ஆராய்வு-5) (ஆங்கிலம்)

[2001 ஜனவரி 30

42. பொருளாதார வளர்ச்சிக்கான இந்தியாவின் உத்தியை வலுப்படுத்துதல் குறித்த அமெரிக்க நாட்டிலுள்ள ஹார்வர்டு பல்கலைக்கழகம் அளித்த அறிக்கை. (ஹார்வர்டு ஆராய்வு-6) (ஆங்கிலம்)

43. ஏற்றுமதியில் போட்டியிடும் மனப்பான்மையும் துணிநூலுக்கான விற்பனை வாய்ப்பும், அண்மைக்கால ஆதாரத்தின் சுருக்கக் குறிப்பு குறித்த அமெரிக்க நாட்டிலுள்ள ஹார்வர்டு பல்கலைக்கழகம் அளித்த அறிக்கை. (ஹார்வர்டு ஆராய்வு-7) (ஆங்கிலம்)

44. தமிழ்நாட்டில் ஒருங்கிணைக்கவும் முறைப்படுத்தவும் இயலாத மின்சக்தி குறித்த அமெரிக்க நாட்டிலுள்ள ஹார்வர்டு பல்கலைக்கழகம் அளித்த அறிக்கை. (ஹார்வர்டு ஆராய்வு - 8) (ஆங்கிலம்)

45. கொள்கைச் சீர்திருத்த மேம்பாடும் இந்தியாவில் தேசிய அளவிலும் அதற்குக் கீழ் மட்டத்திலும் அதன் செயல்பாட்டில் உள்ள வேறுபாடுகளும் குறித்த அமெரிக்க நாட்டிலுள்ள ஹார்வர்டு பல்கலைக்கழகம் அளித்த அறிக்கை. (ஹார்வர்டு ஆராய்வு - 9) (ஆங்கிலம்)

46. ஏற்றுமதி செய்முறை மண்டலங்களும் ஏற்றுமதியும் - வெளிநாடுகளிலிருந்து கிடைத்த சில அனுபவங்களும் தமிழ்நாட்டிற்கான அவற்றின் பட்டறிவுகளும் குறித்த அமெரிக்க நாட்டிலுள்ள ஹார்வர்டு பல்கலைக்கழகம் அளித்த அறிக்கை. (ஹார்வர்டு ஆராய்வு - 10) (ஆங்கிலம்)

47. தமிழ்நாடு - நடுத்தரகால செலவு குறித்த திட்டத்தை செயல்படுத்துவதற்கான பரிந்துரைகள் குறித்த அமெரிக்க நாட்டிலுள்ள ஹார்வர்டு பல்கலைக்கழகம் அளித்த அறிக்கை (ஹார்வர்டு ஆராய்வு - 11) (ஆங்கிலம்)

48. தமிழ்நாட்டில் மக்கள் நல்வாழ்வுத் துறையில் சீர்திருத்தம் - பொதுத் துறையின் பங்கு பற்றி புரிந்து கொள்ளுதல் குறித்த அமெரிக்க நாட்டிலுள்ள ஹார்வர்டு பல்கலைக்கழகம் அளித்த அறிக்கை. (ஹார்வர்டு ஆராய்வு - 12) (ஆங்கிலம்)

49. தமிழ்நாட்டிற்கான மதிப்பு கூட்டப்பட்ட வரிவிதிப்பு அமைப்பை தயாரித்தல் குறித்த அமெரிக்க நாட்டிலுள்ள ஹார்வர்டு பல்கலைக்கழகம் அளித்த அறிக்கை. (ஹார்வர்டு ஆராய்வு - 13) (ஆங்கிலம்)



2001 ஜனவரி 30]

50. உலக அளவிலான மோட்டார் பாகம் தயாரிப்பு தொழில் ஒருங்கிணைத்தலும் ஏனைய போக்குகளும் குறித்த அமெரிக்க நாட்டிலுள்ள ஹார்வர்டு பல்கலைக்கழகம் அளித்த அறிக்கை. (ஹார்வர்டு ஆராய்வு - 14) (ஆங்கிலம்)

51. ஒரு புதிய உற்பத்தித் திறனை நோக்கி தாராளமயமாக்கும் பொருளாதாரக் கொள்கையினால் வட்டாரத் தொழில்களில் ஏற்படும் தாக்கம் - தமிழ்நாடு குறித்த ஓர் ஆய்வு குறித்த அமெரிக்க நாட்டிலுள்ள ஹார்வர்டு பல்கலைக்கழகம் அளித்த அறிக்கை. (ஹார்வர்டு ஆராய்வு - 15) (ஆங்கிலம்)

52. உடுக்குறியிடாத வினாக்கள் - விடைகள் பட்டியல் (ஐந்தாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

53. உடுக்குறியிடாத வினாக்கள் - விடைகள் பட்டியல் (ஆறாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

54. உடுக்குறியிடாத வினாக்கள் - விடைகள் பட்டியல் (ஏழாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

55 உடுக்குறியிடாத வினாக்கள் - விடைகள் பட்டியல் (எட்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

☆

184812

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**816, Anna Salai,**
**Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.